# இந்துமத சங்கிரகம்

பசுமலை

ஐக்ய வேத வித்யாசாலை

மதச்சரித்திர உபந்நியாசகர்

**ஜே. எஸ். மாசிலாமணி ஐயர்**

இயற்றியது

# HINDUISM

BY


REV. J. S. MASILLAMONY, B.D.

*Lecturer in History of Religion*
*Union Theological Seminary*
*Pasumalai, Madura*


WITH A FOREWORD

BY

DR. L. P. LARSEN


THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD COLOMBO

1934

தமிழ்நாட்டுப் பிரபல மிஷனெரியும்
இந்நூலாசிரியரின் வித்யா குருவுமாகிய
பிரஹ்மஸ்ரீ எல். பி. லார்சன் சாஸ்திரியார்
எழுதிய

# பாயிரம்.

சங்கை மாசிலாமணி ஐயரவர்கள் எழுதிய ஹிந்துமத சங்கிரகம் போன்ற ஒரு புஸ்தகம் இப்பொழுது பிரசுரமாயிருப்பதுபற்றி அநேகர் மகிழ்ச்சி கொள்ளவேண்டும்.

இத்தகைய இரண்டு புஸ்தகங்கள் ஆங்கில பாஷையில் உள. அவற்றில் ஒன்று கனம் பார்க்குஹார் பண்டிதர் இயற்றியது. மற்றொன்று கனம் சர்மா அவர்கள் எழுதியது. முந்தியது சரித்திரமுறையை அனுசரித்தது, பிந்தியது மதசம்பிரதாய முறையைத் தழுவியது. உலகத்தின் பலவேறு மதங்களைக் கற்றறிய விரும்பும் மாணவர்களுக்கு இவ்விரண்டு முறைகளில் எது விசேஷம் என்று தீர்மானிப்பது அவசியம் அன்று. ஆயினும் எந்த மதம் ஆராய்ச்சி செய்யப்படுகின்றதோ அந்த மதத்தினுள்ளேயே வளர்ந்து வருகிறவர்களுக்கேயன்றி ஏனையோருக்கு அம்மதத்தைப்பற்றிய உண்மையான அறிவும் சம்பூர்ண ஞானமும் உண்டாவது இயலாத விஷயம் என்பதை அநேகர் ஒப்புக்கொள்ளுகின்றனர். இந்த அபிப்பிராயத்தை இன்னும் எல்லாரும் ஒப்புக்கொள்ளாவிடினும் அநேகர் இதை ஏற்றுக்கொண்டு வருகின்றனர். மேற்கூறிய பிரமாணமானது மதசம்பந்தமான விஷயங்களுக்குமட்டும் அல்ல, மானிட அனுபவவார்த்தமான சகல விஷயங்களுக்கும் பொருந்தும். பிறமதங்களைப்பற்றியும் குடும்பஜீவிய முதலான ஜனசமுதாய விஷயங்களைப்பற்றியும் எழுதுகிற யாவரும் இதை மனதிற் கொள்ளல்வேண்டும். இந்நூலாசிரியரைப்

போலவே இவ்விஷயத்தை நன்குணர்ந்திருப்போர் புறம்பேயிருந்து மேற்கூறிய விஷயங்களின் சார்பாக நூலியற்றும்பொழுது, அவர்களைப்போலவே அதே பார்வையும் சிந்தனையும் உடையவர்களுக்கு ஆரம்பத்தில் உண்மையான உதவிபுரியக்கூடும். அந்நிய பாஷைகளைப் படிக்கும்பொழுது இப்பிரமாணத்தை அடிக்கடி பார்க்கின்றோம். நம்முடைய பாஷையல்லாத பிறபாஷையில் நாம் எல்லாம் அறிந்த சம்பூரண வித்வான்களாவது கூடாத காரியம். ஆயினும் நமது சொந்த பாஷைக்காரருக்கு நாம் பிரயோஜனமுள்ளவர்களாய் இருக்கலாம். அவர்களுடைய கஷ்டங்கள் என்னவென்று நமக்குத் தெரியும். அந்நியர்களைக்காட்டிலும் அநேக விஷயங்களை நாம் அவர்களுக்கு நன்றாய் விளக்கிக்காட்டலாம்.

கிறிஸ்தவர் ஒருவர் ஹிந்துமதத்தைப்பற்றி ஒரு புஸ்தகம் எழுதும்பொழுது, அவர் நன்மனதுடன் எழுதல் வேண்டும். எதிர்க்கட்சிக்கு விரோதமாகத் தன் கட்சியை எடுத்து வாதித்துப் பேசுகின்ற வக்கீலைப்போல் எழுதாமல், விஷயங்களை அறிந்துகொள்ளுவதையும், அவற்றை விளங்கிக்கொள்ளுவதையும், சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுது பிறர் அவற்றை விளங்கிக்கொள்ள உதவிசெய்வதையுமே தனது ஒரே விருப்பமாகக் கொண்ட மாணக்கனைப்போல எழுதவேண்டும். இவ்விதமாய் எழுதப்பட்ட புஸ்தகமே இதர கிறிஸ்தவர்களுக்கு மிகவும் பயன்படுவதாகும். கனம் மாசிலாமணி ஐயர் கொண்ட விருப்பம் இது ஒன்றே. இத்தகைய உதவி அநேக தமிழ்க் கிறிஸ்தவர்களுக்குப் பெரிதுந் தேவை.

ஹிந்துமதத்தைக் கற்றுவருகின்ற தமிழ்க் கிறிஸ்தவ மாணக்கராகிய இந்நூலாசிரியர் தமிழ்நாட்டில் அபிவிர்த்தி அடைந்த சைவ வைஷ்ணவாதி சமயங்களைக் குறித்து விரிவாக எழுதுவது சகஜமே. சைவ சமயத்தினரிடம் சிவஞானபோதம் முதலான சித்தாந்த சாஸ்திரங்களும் தேவாரம் திருவாசகம் முதலான பக்திநூல்களும் தமிழ் பாஷையில் ஏராளமாய் இருக்கின்றன. அவ்வாறே நாலாயிர திவ்யப்பிரபந்தம் முதலான வைஷ்

ணவ சம்பிரதாய நூல்களும் மஹாவியாக்கியானங்களும்
தமிழில் மிகுந்துகிடக்கின்றன. இத்தகைய சமயநூல்
களின்மேல் மதச்சரித்திர மாணுக்கரான கிறிஸ்தவருக்
குள்ள சிரத்தையானது அந்நூல்களிலுள்ள பல கருத்
துக்கள் கிறிஸ்துமத சித்தாந்தத்துக்கு இசைந்து வருவ
தினால் அல்ல; தர்க்கத்துக்கு ஆதாரமான நியாயங்களைக்
கண்டுபிடிப்பது நல்மாணுக்கனுடைய விருப்பமாகாது.
விஷயங்களை நன்றாய் விளங்கிக்கொள்வதற்கு எதுவான
உதவிபுரிவதே அவனுடைய விருப்பமாகும். பலவேறு
விதங்களாக நம்முடன் சம்பந்தப்பட்டிருக்கின்ற ஜனங்க
ளிடத்தில் நமக்கு விகற்பமானதும் விளங்காததுமான
விஷயங்கள் இருக்குமேயானால், அவற்றை நன்றாக
அறிந்துகொள்ளவும், சரியாக விளங்கிக்கொள்ளவும்
நமக்கு உதவி தேவை.

எவ்வித உதவிபுரியும் ஒரு நூலாகும கனம் மாசிலா
மணி ஐயர் இயற்றிய ஹிந்துமத சங்கிரகம். ஹந்துமதத்
தின் பலவேறு ரூபங்களை, விசேஷமாக, தமிழ்நாட்டி
லுள்ள சைவ வைஷ்ணவாதி சமய சம்பிரதாயங்களை,
அறிந்துகொள்ளவும், அவற்றை விளங்கிக்கொள்ளவும்,
கனம் மாசிலாமணி ஐயர் எழுதிய இப்புஸ்தகம் அவரது
நாட்டாருக்கு, அதிலும் விசேஷமாக கிறிஸ்தவர்களுக்கு
இவ்வித உதவியைத் தருகின்றது.

பெங்களூர்
15-11-1930

எல். பி. லார்சன்.

# PART I

# THE GROWTH OF HINDUISM

# ஹிந்துமத சங்கிரகம்

முதல் பாகம்

# ஹிந்துமத வளர்ச்சி

# பரமான்மாவின் நிலையைநாடி ஜீவான்மா கலக்கமுறுதல்

அண்டமுடி தன்னிலோ! பகிரண்ட மதனிலோ!
அலரிமண் டலநடு விலோ!
அனல் நடுவிலோ! அமிர்த மதி நடுவிலோ! அன்பர்
அகமுருகி மலர்கள் தூவி
தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ! திக்குத்
திகந்தத்திலோ! வெளியிலோ!
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ! வேதாந்த
சித்தாந்த நிலைதன் னிலோ!
கண்டபல பொருளிலோ! காணாத நிலையெனக்
கண்டசூ னியமத னிலோ!
காலமொரு மூன்றிலோ! பிறவிநிலை தன்னிலோ
கருவிகர ணங்க ளோய்ந்த
தொண்டர்க ளிடத்திலோ! நீவீற் றிருப்பது
தொழும்ப னேற்குளவு புகலாய்!
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுக வாரியே

(தாயுமான ஸ்வாமிகள்)

# ஹிந்துமத சங்கிரகம்

## முதல் பாகம்

---

## முகவுரை

உலகத்தின் மேல்மாடி என்று சொல்லலாம்படியான ஹிமால்ய மலைப்பிரதேசத்தினின்று தெற்குநோக்கி முக்கோண வடிவாகச் செல்லும் பூப்பரப்பே இந்தியா என்னப்படும் புராதன தேசமாகும். இதைத் தேசம் என்று சாதாரணமாய்ச் சொன்னாலும், உண்மையில் இது அநேக தேசங்களைத் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கும் ஒரு கண்டமேயாகும். பூர்வத்திலேயே அங்கம் வங்கம் கலிங்கம் முதலிய ஐம்பத்தாறு தேசங்கள் இதனுள் அடங்கியிருந்தமையால், இதற்கு பரதகண்டம் என்னும் பெயர் வழங்கலாயிற்று. இது மஹா விஸ்தீரணமான தேசம். தெற்குவடக்காக இதன் நீளம் இரண்டாயிரம் மைல், கீழ்மேலாக இதன் அகலம் ஆயிரத்து எண்ணூறு மைல், மொத்தம் விஸ்தீரணம் 17,66,600 சதுரமைல். இந்தியாவின் விஸ்தீரணம் ருஷியா தேசத்தைத் தவிர்த்து ஐரோப்பாக்கண்டம் முழுவதற்கும் சமம். கடைசி ஜனசங்கையின் பிரகாரம் உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பாகத்தினர் இந்தியாவில் இருக்கின்றனர்.

> கோது மல்குமா யாபுரி நகரிடை குழுமி
> ஓத ரும்பல பாக்கங்க ளுள்ளன அவற்றுள்
> ஆதி யாயதும் அரும்பொருள் சுரப்பதும் அங்கங்கு
> ஏதி லார்விழைந் திடுவதும் இந்திய பாக்கம்.
>
> குன்றி டாதுயர் கல்வியும் கொழுநிதிக் குவையும்
> மன்று தொக்கவை வகைத்திர வியங்களும் மலிந்து
> தோன்று தொட்டில வாநில வளங்களும் துதைத்தே
> பொன்றி ணிந்தபொற் பேழையில் பொலியுமற் றதுவே.

என்று மஹாவித்வான் ஹென்றி அல்பிரட் கிருஷ்ணபிள்ளையவர்கள் சிறப்பித்தோதிய வண்ணம் இந்தியாசேதம்

உலகத்துப் புராதன தேசங்களில் ஆதியாயது, அரும் பொருள் சுரப்பது, அங்கங்கு அந்நியநாட்டார் யாவரும் விரும்பித் தேடுவது, குறையாது வளரும் கல்வியையும் குவியல் குவியலாகவுள்ள திரவியத்தையும் உடையது.

இத்தகைய புராதன சிறப்புவாய்ந்த இந்தியா தேசத்தின் பெரும்பாலோருடைய மதமே ஹிந்துமதம்.

| | |
|---|---|
| இந்தியாவின் ஜனத்தொகை......... | 32,34,40,116 |
| இதில் ஹிந்துக்கள்.................. | 23,27,23,000 |
| மகமதியர்.......................... | 6,87,35,000 |
| கிறிஸ்தவர்.......................... | 47,54,000 |

உலகத்தின் ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பாகத்தினராகிய ஹிந்துக்களின் மதசித்தாந்தத்தை ஆராய்ச்சி செய்யப்புகும் மாணவர்களுக்கு இன்றியமையாமல் இருக்கவேண்டிய லக்ஷணங்கள் சிலவுள. அவை மனத்தாழ்மையும் அனுதாபமும் ஆகும். ஒருவன் தன் மதத்தைப்பற்றி எத்துணை உயர்ந்த எண்ணமுள்ளவனாயிருப்பினும், பிறமதங்களை இகழ்ந்து நோக்குவது அழகல்ல. இவ்விஷயத்தில் மனத்தாழ்மை வேண்டும். மேலும் பிற மதங்களை ஆராய்ச்சி செய்பவர்களுக்கு அனுதாப சிந்தை மெத்த அவசியம். இவ்விரண்டு குணங்களையும் உடையவரே இவ்வித மத ஆராய்ச்சியால் பெரிதும் பயன்பெறுவர்.

இவ்வித மத ஆராய்ச்சி இந்தியாவில் அதிபுராதன காலத்திலேயே நடைபெற்று வந்ததாகத் தோன்றுகின்றது. இன்றைக்கு 2200 வருஷங்களுக்கு முன்னே இந்தியாவில் சக்கிரவர்த்தியாயிருந்த அசோக மஹாராஜன் தான் பௌத்த மதானுஷ்டியாயிருந்தாலும், அக்காலத்தில் இருந்த ஹிந்துமதம், ஜைனமதம், பௌத்தமதம் முதலிய மதங்களை சிநேகமேரையாய் ஆராய்ச்சி செய்யும்படி தன் அரண்மனையில் மதச்சங்கம் ஒன்று கூட்டி வைத்திருந்தார். அவ்வாறே நானூறு வருஷங்களுக்கு முன்னே டில்லியில் அரசாண்ட மொகலாயச் சக்கிரவர்த்தியாகிய அக்பர் அரசன் தனது அரண்மனையில் மதச்

சங்கம் கூட்டுவித்து, அக்காலத்தில் இருந்த ஹிந்துமதம், இஸ்லாம்மதம், கிறிஸ்துமதம் முதலிய மதங்களை ஆராய்ச்சி செய்வித்தார். வெகு சமீபகாலத்தில்தான் மேற்குத்திய கல்விமான்கள் இவ்விதமுறையில் மத ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டிருக்கின்றனர்.

ஒரு மதத்தை ஆராய்ச்சி செய்வதற்குப் பல முறைகளிருப்பினும் சரித்திரமுறையில் அதைக் கற்பதே மிகச் சிறந்த முறையென்று தற்கால ஆசிரியர்கள் கருதுகின்றனர். ஹிந்துமதத்தையும் சரித்திரமுறையில் உற்று நோக்கி அதன் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் அறிந்து கொள்ளுதல் பெரிதும் பயன்படுமெனக் கருதி, இந்த முதலாம் பாகத்தைப் பத்துப் பருவங்களாகப் பிரித்து, இவற்றின் மூலமாக ஹிந்துமதத்தின் வளர்ச்சியை தெரிவிப்போம். பருவம் என்பது மூங்கில் கரும்பு முதலிய தாபரங்களின் தண்டுகளில் உள்ள பிரிவுகள். இது தனக்கு முந்தினதினின்று தோன்றி, தன்னிடத்தினின்று இன்னொன்று தோன்றுவதற்கு இடமாய் நிற்றல்போல், இந்நூலின் ஒவ்வொரு பருவமும் தனக்கு முந்திய சரித்திரத்தினின்று தோன்றி, தன்னிடத்தினின்றும் வேறு காரியங்கள் தோன்றுதற்கு இடமாய் நிற்பதினால், பருவம் என்னும் பிரிவுகள் இந்நூலுக்குச் செவ்வனே பொருந்தும். இவ்வாறு பத்துப் பருவங்கள் உள. அவை வருமாறு:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| I | சரித்திராதீத பருவம் | ... ... ... | | கி.மு. 2000 | வரை. |
| II | வேத சங்கீத பருவம் | ... | கி.மு. 2000–கி.மு. | 1000 | ,, |
| III | பிராஹ்மணாரணியக பருவம் | கி.மு. | 1000–கி.மு. | 750 | ,, |
| IV | உபநிஷத்தத்வஞான பருவம் | கி.மு. | 750-கி.மு. | 550 | ,, |
| V | ஜைன பௌத்த மத பருவம் | கி.மு. | 550–கி.மு. | 200 | ,, |
| VI | ஸ்மிருதி பருவம் | ... கி. பி. | 200–கி. பி. | 300 | ,, |
| VII | க்ஷீண பருவம் | ... கி. பி. | 300–கி. பி. | 700 | ,, |
| VIII | புனர்நிர்மாண பருவம்... | கி. பி. | 700–கி. பி. | 1200 | ,, |
| IX | பக்திமத பருவம்... | ... கி. பி. | 1200–கி. பி. | 1700 | ,, |
| X | ஐரோப்பிய சம்பந்த பருவம் | கி. பி. | 1700–தற்காலம் | | வரை |

# ஹிந்துமத சங்கிரகம்

## நூன் முகம்

*துன்று தொண்டிரைத் தொல்கடல் பாரினுட்*
*கன்ன மற்றக ருத்துமெய்ஞ் ஞானிகள்*
*வள்ள லென்றுவ மூத்துமொ ருபொருள்*
*உள்ள முற்றென்னு ணர்வினு ணிற்பதே*

உலகத்தில் தோன்றிய அதிபூர்வீக மதங்களில் ஒன்றாகிய ஹிந்து மதத்தைப்பற்றிய அநேக புஸ்தகங்கள் ஆங்கிலத்தில் இருப்பினும், தமிழ்பாஷையில் இவ்வித புஸ்தகம் ஒன்றுமே இல்லை என்ற குறைவை நீக்கவேண்டும் என்னும் அவாவினாலேயே ஹிந்துமதசங்கிர கம் என்னும் இந்நூலை எழுதினோம். இக்காரணம்பற்றியே தென் இந்தியாவிலுள்ள பல கிறிஸ்தவ சங்கங்களும் இத்தகைய ஒரு நூலை எழுதும்படி எம்மைக் கேட்டிருந்தன.

*தன்னாசிரியன் தன்மாணாக்கன்*
*தன்னொடு கற்றோன் தகுமுரைக் காரனென்*
*றின்னோர் பாயிரம் இயம்புதல் கெறியே*

என்ற வண்ணம், எமது ஆசிரியருள் ஒருவரும், மதச் சரித்திர ஆராய்ச்சியில் யாம் முதல்முதல் ஈடுபடும்படி செய்வித்தவருமாகிய சங்கை எல். பி. லார்சன் சாஸ்திரியார் அவர்கள் இந்நூலுக்குப் பாயிரம் எழுதியது எமது பாக்கியம் என்றே கருதுகின்றோம்.

இந்தியாவின் அரிய மிஷனெரிகளில் ஒருவரும், சிறந்த மதச் சரித் திர ஆசிரியருமான கனம். ஜே. என். பார்க்குஹார் பண்டிதர் ஹிந்து மதத்தைப்பற்றித் தமிழில் ஒரு நூல் எழுதும்படியாக எம்மைத் தூண்டியும், இந்நூலின் பொருளடக்கத்தை ஆராய்ச்சி செய்து சில அறிய ஆலோசனைகளைக் கூறியும், ம-ா-ா-ஸ்ரீ ஜே. எம். நல்லசாமி பிள்ளை முதலிய சைவ சிந்தாந்தப் பெயர்களுடன் எம்மையும் சேர்த்துச் சங்கம் கூட்டி ஹிந்துமத ஆராய்ச்சியை நடத்துவித்தும், தாம் இந்தியாவைவிட்டுச் சென்று மான்செஸ்டர் சர்வ கலாசாலையில் மதச் சரித்திர ஆசிரியர் ஸ்தானத்தை வகித்துவந்த காலத்திலும் ஹிந்து மத சம்பந்தமாக எம்முடன் பல கடிதப் போக்குவரத்துக்கள் நடாத்தி யும், இவ்வாறு இந்த முயற்சியில் எம்மை மிகவும் உற்சாகப்படுத்தி வந்த பெரும் நண்பை யாம் ஒருபோதும் மறவோம்.

இந்நூலின் தொடர்ச்சியாக, ஹிந்துமத கிறிஸ்துமத சம்பந்தம் (Hinduism and Christianity in Contact) என்னும் பெயரிய நூலை எழுதிவருகின்றோம். இது கூடிய சீக்கிரம் வெளிவரும்.

பசுமலை
20-11-30

ஜே. எஸ். மாசிலாமணி.

மேற்கூறிய பத்துப் பருவங்களையும் சாதாரணமாய் மும்மூன்று பாகமாகப் பிரித்திருக்கின்றது. அவை சரித்திரம், மதம், புஸ்தகம் என்பன. முதல்பருவமும் கடைசிப்பருவமும் ஒழிந்த மற்றைப் பருவங்களிலெல்லாம் முதலாவது அந்தக்காலத்துச் சரித்திரத்தைச் சுருக்கமாய்ச் சொல்லி, அப்பால் அக்காலத்து மதத்தையும் மதசம்பந்தமாய் உண்டான வளர்ச்சியையும் விவரித்து, கடைசியில் அக்காலத்தில் தோன்றிய விசேஷமான மத நூல்களைப்பற்றிக் குறிப்புரை எழுதியிருக்கின்றது.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅர் எனின் (குறள்)

# I

# THE PRE-HISTORIC PERIOD.

முதலாவது

## சரித்திராதீத பருவம்.

அதிபூர்வீக காலமுதல்—கி. மு. 2000 வரை.

# முதலாவது

## சரித்திராதீத பருவம்.

### அதிபூர்வீக காலமுதல்—கி. மு. **2000** வரை.

அதிபூர்வீக காலமுதல் கி. மு. 2000 வருஷம் வரையிலுமுள்ள மிக மங்கலான இக்காலத்தைப்பற்றிச் சொல்லும் இப்பாகத்தைச் சரித்திராதீத பருவம் என்றது இது சரித்திரத்துக்கு எட்டாமை பற்றியே. சரித்திர + அதீதம் என்று பிரிக்க. அதீதம் என்பது எட்டாமை. இக்காலத்து விஷயங்களைப்பற்றிய சரித்திரக் குறிப்புகள் கிடையாமையின் இப்பெயர் பெற்றது. இது காரணம் பற்றித்தான் மற்றப் பருவங்களைப்போல இதைச் சரித்திரம் மார்க்கம் புஸ்தகம் என்னும் மூன்று பகுதிகளாக உரைக்காமல் ஒரேபகுதியாகக் கூறியது.

பூர்வ இந்திய ஆரியரும், தற்கால ஐரோப்பிய ஜாதிகளின் முன்னோரும், மிகப் புராதன காலத்தில் ஒரே இடத்தில் வசித்து, ஒரே பாஷையைப் பேசி, ஒரேவிதமான மதானுஷ்டானத்தை உடையராய் இருந்தனர் என்பதே பலகலை பயின்ற சாஸ்திரிகளின் அபிப்பிராயம். பூர்வ கிரேக்கர், ரோமர், ஜெர்மானியர், ஆங்கிலேயர், சிலாவானியர், தூத்தானியர் முதலிய ஐரோப்பிய ஜாதிகளின் பூர்வ பிதாக்களும், பெர்சிய ஜாதியாரின் பூர்வ பிதாக்களும், இந்திய ஆரியர்களுடைய பூர்வ பிதாக்களும் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னே யாதோ ஒரு இடத்தில் ஒன்றாய் வசித்துவந்தனர். அவ்விடம் யாது என்பதைப்பற்றி அபிப்பிராய பேதம் உளது. ஆயினும் இவர்கள் பூர்வ உலகத்தின் வடமேற்கு மூலைக்கு அருகாமையிலிருக்கையில் இவர்களில் ஒரு பகுதியார் புறப்பட்டு மத்திய ஆசியாவுக்கு வந்து அங்கே அநேககாலம் தங்கிய பிறகு ஈரான் என்ற பெர்சிய தேசத்துக்கு இவர்களில் ஒரு பகுதியார் வந்து குடி-

யேற, மற்றப் பகுதியார் கிழக்கு முகமாய்ப் புறப்பட்டு, ஆப்கானிஸ்தானம் வழியாய் பாஞ்சாலம் என்ற பஞ்சாப் தேசத்துக்கு வந்து, இந்தியாவுக்குள் பிரவேசித்து நமது இந்திய ஆரியர்களுக்குப் பூர்வ பிதாக்களாயினர் என்பது சரித்திராசிரியர் கோட்பாடு.

தற்காலத்தில் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் உள்ள பலவேறு ஜாதிகளின் பூர்வ பிதாக்களாகிய புராதன ஆரியர்களின் மதம் இத்தன்மையது என்பதை நமக்குக் காட்டத்தகுந்த புஸ்தகங்களாவது சரித்திரக் குறிப்புகளாவது இல்லை. பலவேறு வகைப்பட்ட இந்த ஜாதியினரிடத்தில் பிற்காலங்களில் அனுஷ்டானத்திலிருந்த மதநூல்கள் மதானுஷ்டானங்கள் வழக்க பழக்கங்கள் முதலியவற்றை ஒன்றுடனொன்று ஒப்பிட்டுப்பார்த்து ஆராய்ச்சி செய்வதினாலேயே இவர்களுடைய பூர்வ பிதாக்களினுடைய மதம் இத்தன்மையாக இருக்கலாம் என்பதை யூகித்தறியலாம். மேலும் இவர்களுடைய பாஷைகளை ஒப்பிட்டு அவற்றின் ஒற்றுமையை ஆராய்ச்சி செய்யும் கலையாகிய பதசாஸ்திரமும் (Philology) இவ்விஷயத்தில் உதவியாயிருக்கின்றது.

பூர்வ ஆரியர்களுடைய மதத்தின் முக்கிய அம்சம் யாதெனில் அது இயற்கை சத்துவ வணக்கமே. உதயம், சூரியன், சந்திரன், அக்கினி, வாயு, ஜலம் இவைகளையே பூர்வ ஆரியர் வணங்கிவந்தனர். இவைகள் மிகுதியாய் வானலோகத்திலிருந்தமையால் இவற்றிற்கு வான ஜோதிகள் என்று அர்த்தங்கொள்ளும் தேவர் என்னும் பெயர் உண்டாயிற்று. (வானத்துக்கு ஐரோப்பிய பாஷைகளில் தையூஸ் என்றும் தைவோஸ் என்றும் பெயர்). எவர்க்கும் எட்டாத தெய்வங்களை யாவர்க்கும் எட்டும்படியாகச் செய்வதற்கு இரண்டு முறைகள் பூர்வ ஆரியர்களிடத்தில் நடைபெற்றதாகத் தெரிகின்றது. (1) பலியும் ஜெபமும். (2) மந்திரம். இவை இரண்டையும் நடப்பித்து வந்த வகுப்பினருக்கு சமஸ்கிருத பாஷையில் பிராமண் என்றும் லத்தீன் முதலிய ஐரோப்பிய பாஷையில் பிளாமண் என்றும் பெயர்.

சூரியன், சந்திரன், வாயு, அக்கினி முதலான இயற்கையின் சத்துவங்களுக்கு அடுத்தாற்போல் பூர்வ ஆரிய மதத்தில் விசேஷ அம்சமாயிருந்தது பிதிர் வணக்கமே. காலஞ்சென்றுபோன பிதிர்களுக்குச் செய்யப்பட்ட சடங்காச்சாரங்கள் பூர்வ ஐரோப்பிய ஜாதிகளிடத்திலும் பூர்வ பெர்சியர் இந்துக்கள் என்பவரிடத்திலும், பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. இறந்துபோன பிதிர்களுக்கு சாப்பாடும் தண்ணீரும் அவர்கள் இனத்தவரால் படைக்கப்பட்டன. மேலும் மறுமையில் அவர்களுக்குப் பிரயோஜனமா யிருக்கத்தக்கதாக அவர்களுடைய ஆயுதங்கள் உடுப்புகள் முதலியனவும் அவர்களுடனேயே புதைக்கப்பட்டன அல்லது தகிக்கப்பட்டன. சில சமயங்களில் இறந்தவனுடைய மனைவிக்கும் இதேகதி நேர்ந்தது. இதனால்தான் 'சத்தி' என்றும் 'உடன்கட்டை யேறுதல்' என்றும் பெயர்பெறும் வழக்கமானது சகல ஆரியர்களுக்கும் பொதுவாயிருந்ததென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றார்கள். பிதிரர்களுக்கென்று விசேஷ தினங்களும் பண்டிகைகளும் நடைபெற்றன.

மேற்கூறியவைகளெல்லாம் ஐரோப்பிய ஆரியர்களும் ஆசிய ஆரியர்களும் ஒன்றாய் வசித்த காலத்தில் இருந்த ஆரிய பூர்வ பிதாக்களின் மதமாகும். ஆசிய ஆரியர் மற்றையோரை விட்டுப் பிரிந்து, மத்திய ஆசியாவில் வசித்துவந்த காலத்தில் இவர்கள் அனுஷ்டித்துவந்த மதம் இத்தன்மையாக இருந்திருக்கவேண்டும் என்பதை பெர்சிய ஆரியருடைய மதத்தையும் இந்திய ஆரியருடைய மதத்தையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்வதால் தெரியவரும். ஐரானியர் என்ற பெர்சிய ஆரியர்களுடைய வேதத்துக்கு அவஸ்தா என்று பெயர். இதற்கும் இந்திய ஆரியர்களுடைய வேதத்துக்கும் அநேக ஒன்றுமைகளுண்டு. இவற்றை ஆராய்ச்சி செய்வதால் இவர்களுடைய பூர்வீக மதத்தைப்பற்றிப் பல விஷயங்களை அறிந்துகொள்ளலாம். முன்கால ஆரியர் வணங்கிவந்த இயற்கைச் சத்துவங்கள் இப்பொழுது ஆத்மசக்தி பெற்று விளங்கி ஒவ்வொன்

றும் வித்தியாசமான பெயர்களைப் பெற்றன. ஈரானிய இந்திய தேவர்களில் வருணன், மித்திரன், அரியமான், இந்திரன், யமன், சோமன் முதலியவர்கள் விசேஷித்தவர். வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற வருணன்—மித்திரன் என்னும் இருவருக்கும் பெர்சிய அவஸ்தாவில் அஹுரான்—மித்திரன் என்று கண்டிருக்கிறது. மேற்கூறிய தேவர்களுக்கெல்லாம் வேதங்களில் என்னென்ன குணங்களும் தொழில்களும் கூறப்பட்டிருக்கின்றனவோ அதே குணஞ் செயல்கள்தான் அவஸ்தா வேதத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த அவஸ்தா வேதத்தை அஸ்திபாரமாகக் கொண்டெழுந்தது ஜோராஷ்ர மதம். வேதத்தை அஸ்திபாரமாகக் கொண்டெழுந்தது வேத மார்க்கம் என்ற பிராஹ்மண மதம். ஆயினும் இவ்விரு வேதங்களும் தோன்றியது இதற்குப் பிந்திய காலத்தில் தான். அவற்றில் சிற்சில கவிகள் இக்காலத்திலும் இதற்கு முந்திய காலத்திலுங்கூட ஆக்கப்பட்டிருக்கலாம்.

# II

# THE VEDIC PERIOD.

---

## இரண்டாவது

# வேத சங்கீத பருவம்.

கி. மு. 2000—கி. மு. 1000.

இரண்டாவது

## வேத சங்கீத பருவம்.

### கி. மு. 2000—கி. மு. 1000.

## I. சரித்திரம்

இக்காலத்தில் ஆரியர்கள் சிந்துநதிக்கு இருகரையிலுமுள்ள நாடுகளாகிய கீழ் காபூலிஸ்தானம் பஞ்சாபு என்னும் தேசங்களில் குடியிருந்தார்கள். இந்நாடுகளுக்கு சப்த சிந்து (ஏழுநதிகள்) தேசம் என்று பெயர். காலாகாலத்தில் ஆரியர்கள் சிந்துநதிக்குக் கிழக்கேயுள்ள பூமியில் பரவ ஆரம்பித்தார்கள்.

இக்காலத்தில் ஆக்கப்பட்ட வேதங்களிலிருந்து ஆரியர்களுடைய வழக்க பழக்கங்களையும் அவர்களுடைய அன்றாடக ஜீவியத்தையும் பற்றிப் பல குறிப்புகளைக் காணலாம். இவர்களுடைய சாதாரண தொழில் ஆடுமாடுகளை மேய்த்தலும் விவசாயமுமே. இவர்களுக்குள்ளே தச்சரும், தோல்வேலைக்காரரும், கன்னரும் இருந்தனர். ஸ்திரீகள் கம்பளி நெய்தார்கள். நகை நட்டுகளும் கொஞ்சம் உபயோகமானது. குடும்பத்துக்குத் தலைவன் தகப்பன், தகப்பனுக்குப் பிள்ளைகள்மேல் சர்வாதிகாரம் உண்டு. கல்யாணங்கள் ஏறக்குறைய இப்பொழுது நடக்கிறது போலவே நடந்தன. ஒவ்வொருவனுக்கும் சாதாரணமாய் ஒரு மனைவிதான் உண்டு. ஆயினும் ராஜாக்களும் பிரபுக்களும் அநேக மனைவிகளை உடைத்தாயிருந்தார்கள். விதவைகள் உடன்கட்டையேற வேண்டுமென்ற கட்டளை வேதத்தில் இல்லை. ஒரு விதவை திரும்பவும் விவாகம் பண்ணிக் கொள்ளலாம். ஸ்திரீகளுடைய நிலைமை கூடியவரை சிறந்தது. ஆயினும் அவர்கள் தாழ்வாகவே மதிக்கப்பட்டார்கள்.

ஆரியர்களுக்குள்ளே அரசர்கள் இருந்தார்கள். யுத்தங்களை நடத்துவதும், ஜனங்களை நியாயம் விசாரிப்பதும் ராஜாக்களுடைய விசேஷ வேலை.

பூர்வ ஆரியர்களுக்குள்ளே சூதாட்டம் அதிகமாயிருந்தது. இந்த சூதாட்டம் ஆரியர்களுக்கு ஓர் சாபம் என்று சொல்லக்கூடியதாக அவ்வளவுதூரம் பூர்வ ஆரியர் சூதாட்டத்தை விரும்பி அனுஷ்டித்து வந்தார்கள்.

ஆரியர் யுத்தம் பண்ணவேண்டியது அவசியமாய் இருந்தது. இந்தியாவின் பூர்வகுடிகள் அவர்களை எதிர்த்து அவர்களுடைய ஆடுமாடுகளைத் திருடிக் கொண்டு போகும் காலத்தில், அவர்களைப் பின் தொடர்ந்து தங்களுடைய மிருகங்களைக் கைப்பற்றி மீட்டுக்கொண்டுவருவதே பூர்வ ஆரியர் செய்த யுத்தங்கள்.

## II. மார்க்கம்

பூர்வ ஆரியர்கள் மிக்க தேவதாபக்தியுள்ளவர்கள் என்பதை ஆரிய ரிஷிகள் இயற்றியிருக்கிற வேத சங்கீதங்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளுகிறோம். பூர்வ ஆரியர்களுடைய மதத்துக்கு என்ன பெயரிடலாம் என்று தீர்ப்பது சற்றே கஷ்டமான விஷயம். ஹிந்து மார்க்கம் என்னும் பெயர் பொருந்தாது. இதற்கு வேத மார்க்கம் என்று பெயரிடலாம். ஏனெனில், இக்காலத்து மார்க்கத்தினுடைய சகல அம்சங்களையும் வேதங்களிலிருந்தே நாம் அறிந்துகொள்ளுகிறோம். இவ்வேதங்களை ஆராய்ச்சி செய்யும்பொழுது, பூர்வ ஆரியர்களுடைய மதத்தைப்பற்றியும், அவர்கள் வணங்கிவந்த தேவர்களைப்பற்றியும், பலி முதலியவற்றைப்பற்றியும் அநேக காரியங்களை அறிகிறோம். ஆகவே வேதமார்க்கத்தினுடைய விசேஷ அம்சங்களை கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் சிறிது நோக்குவோம்.

### I. வேத தேவர்கள்.

ஆரிய தெய்வங்களுக்கு தேவர்கள் என்னும் பெயர் வந்ததற்குக் காரணம் என்ன? தேவ என்னும் பதத்துக்கு 'பிரகாசமான' என்று அர்த்தம். இப்பதம் ஐரோப்பாவிலுள்ள பல பாஷைகளிலேயும் காணப்படுகிறது. முதலாவது பிரகாசம் என்று அர்த்தம் கொண்ட இப்பதம் ஆகுபெயராய் வானத்துக்கு பெய

ராகி, அப்பால் வானஜோதிகளுக்குப் பெயராகி, கடைசியில் தெய்வங்களைக் குறித்தது.

பூர்வ ஆரியர்களுடைய மனதைக் கவர்ந்தது இயற்கையின் அமைப்பும் அதன் சத்துவங்களுமே. உலகத்தின் தோற்றம் ஒடுக்கம் முதலிய பல காரியங்கள் மனுஷ சக்திக்கு எட்டாத சத்துவங்களால் நடக்கிறது என்று அவர்கள் நினைத்தார்கள். வேதங்களில் சொல்லப்பட்ட மிகுதியான தேவர்கள் இயற்கை சத்துவங்களோடு சம்பந்தப்பட்டவர்களே. உதாரணமாக இந்திரன் (மழை), வருணன் (வானம்), வாயு, சூரியன், அக்கினி.

பூர்வ ஆரியர் வணங்கிவந்த தேவர்களுள் இவர் பெரியவர் இவர் சிறியவர் என்ற பேதாபேதங்கள் இல்லை. சில சங்கீதங்களிலே ஒரு தெய்வத்தை விசேஷமாயும் இன்னொரு சங்கீதத்திலே வேறொரு தெய்வத்தை விசேஷமாயும் கூறியிருக்கின்றது. இவ்வாறு சந்தர்ப்பத்துக்கேற்க தான் எடுத்துக்கொண்ட தெய்வத்தை மற்றெல்லா தெய்வங்களையும்விட மேலானதாகப் பாராட்டல் வேதங்களுக்கு மட்டுமே உரிய ஓர் கொள்கை. பிரபல சமஸ்கிருத ஆசிரியரும் வேதங்களை முதல் அச்சில் ஏற்றிப் பிரசுரம் செய்தவருமாகிய ஆசிரியர் மாக்ஸ் மூலர் இவ்வித ஏற்பாட்டிற்கு ஹெனோதீசம் (Henotheism) என்று பெயரிடுவார்.

வேதங்களில் 33 தேவர்கள் விசேஷமாய்க் கூறப்பட்டிருக்கின்றனர். இவர்களுள் பதினொருவர் வானத்திலும், பதினொருவர் ஆகாசத்திலும், பதினொருவர் பூமியிலும் உளர். இனி வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற தேவர்களில் விசேஷித்த சிலரைப்பற்றிச் சிறிது பார்ப்போம்.

i. வானலோகத்திலுள்ள தேவர்கள்.

**தையவுஸ்.**—ஆரியர்களுடைய அதிபூர்வ தேவதை தையவுஸ்தான். ஆரியர் இந்தியாவுக்குள் வருகிறதற்கு முன்னேயே இத்தெய்வத்தை வணங்கிவந்தார்கள். பூர்வ கிரேக்கர் வணங்கிவந்த சூஸ் (Jues) என்ற தெய்வமும் தையவுஸ் என்ற தெய்வமும் ஒன்றே. தையவுஸ் என்

னும் பதத்துக்கு வானம் என்று பொருள். எனவே தையவுஸ் பிதார் என்னும் தொடருக்கு வானபிதா என்று அர்த்தம். ஹிந்து ஆரியர்கள் வணங்கிவந்த தையவுஸ் பிதார் என்ற தெய்வமும் சூஸ் பாதர் என்ற தெய்வமும், ரோமர்கள் வணங்கிவந்த ஜுப்பித்தர் (Jupiter) என்ற தெய்வமும் ஒரேதெய்வம் என்பது நிச்சயம். ஆரிய ஜாதியின் வெவ்வேறு பிரிவுகளான இவர்கள் தாங்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிகிறதற்கு முன்னே இதே தெய்வத்தை விசேஷமாய் வணங்கிவந்தார்கள் என்று நினைக்க இடமிருக்கிறது. ஆகவே பூர்வகால ஆரியர்களுடைய விசேஷ தெய்வம் பரமண்டலங்களிலிருக்கிற வான பிதா என்று காண்கிறோம். இயேசுநாதஸ்வாமி தமது சீஷர்களுக்குக் கற்பித்த ஜெபத்திலும் கடவுளுக்கு இட்ட பெயர் இதுவே என்பது இங்கு நோக்கத்தக்கது.

சில சங்கீதங்களிலே பிருதிவியாகிய உலகத்தை தையவுஸ் என்ற தெய்வத்துக்கு மனைவி என்றும் கூறப்பட்டிருக்கிறது.

வருணன்.—ஆரியர்களுடைய விசேஷ தேவர்களில் வருணன் ஒருவன். வருணன் என்னும் பதத்துக்கு நம்மைச்சூழ உள்ள வானம் என்பது பொருள். வருணன் என்னும் சமஸ்கிருதபதமும் ஔரானஸ் (Ouranas) என்ற கிரேக்கபதமும் ஒரே உற்பத்தியுடையன என்பது பல பண்டிதர்களின் அபிப்பிராயம். இந்திரனுக்கு அடுத்தாற்போல் வருணதேவனே பூர்வ ஆரியர்களுக்கு விசேஷ தெய்வம் என்று சொல்லலாம். வருணனுடைய குணம் மிகவும் சன்மார்க்கத்துக்குரியது. உலகத்துக்குரியதும் சன்மார்க்கத்துக்குரியதுமான சகலமும் வருணன் கையிலிருக்கிறது. சர்வ லோகங்களையும் அவரே ஆளுகிறவர். இரவையும் பகலையும் உண்டாக்குகிறவர் அவரே. சமுத்திரத்தின் எல்லையைக் குறிப்பிக்கிறவர் அவரே. அவரே லோக காவலர். அவரே சூரியனுக்கு ஒரு வழியை உண்டுபண்ணினார். அவருடைய ஆஞ்ஞையால் சந்திரன் ஆகாசத்தில் உலாவுகின்றது. அவரே ஆறுகளைப் பெருகச் செய்கிறவர். அவரே மழையை வருஷிக்கின்றவர்.

அவருக்கு சர்வஞானம் உண்டு. ஆகாசத்து பறவைகளின் ஓட்டமும், சமுத்திரத்தில் கப்பல்கள் செல்லும் மார்க்கமும் அவருக்குத் தெரியும். செய்யப்படுகின்றவையும் செய்யப்படுபவையுமாகிய சகல ரகசியங்களும் அவருக்குத் தெரியும்.

மனிதருடைய உண்மையையும் பொய்மையையும் அவர் காண்கிறார். பாவத்தைக்கண்டு அவர் கோபங்கொள்ளுகிறார். அவருடைய கட்டளையை மீறுவதே பாவம். பாவத்துக்காக அவர் மனுஷனைத் தண்டிக்கிறார். தீமை செய்கிறவர்களைத் தண்டித்து, தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு மன்னிப்பருளுகிறார். உண்மையாய்ப் பாவத்துக்காக மனஸ்தாபப்படுகிறவர்களிடத்தில் அவர் இரக்கம் காண்பிக்கிறார். தாங்கள் செய்த பாவங்களிலிருந்து மாத்திரமல்ல, தங்கள் முன்னோர்கள் செய்த பாவங்களிலிருந்தும் அவர் மனிதரை ரக்ஷிக்கின்றார்.

வருணனைக் குறித்துக் கூறும் சங்கீதங்கள் எல்லாம் அவனுடைய சன்மார்க்க லக்ஷணங்களை மிகுதியாய் எடுத்துக் கூறுகின்றன. வேறெந்த வேத தெய்வத்தைக் காட்டிலும் சன்மார்க்க விஷயத்தில் வருண தேவனுக்கு அதி உன்னத ஸ்தானம் கொடுக்கப்படவேண்டும். மற்ற தேவர்களிடத்தில் நீண்ட ஜீவியம் ஐஸ்வரியம் வல்லமை ஆகிய இவைகள் பிரார்த்திக்கப்படுகின்றன. பாபமன்னிப்பு பாவஞ் செய்யாமலிருப்பதற்கு வரம் முதலிய ஆவிக்குரிய வரங்களே வருணனிடத்தில் வேண்டிக் கொள்ளப்படுகின்றன. வருணதேவனைப்பற்றிக் கூறும் ஒவ்வொரு சங்கீதத்திலும் பாபமன்னிப்புக்காகச் செய்யப்படும் மன்றாடுதல் சொல்லப்பட்டிருக்கின்றது.

எபிரெய சங்கீதங்களைப்போல மிக்க உயர்வான ஆவிக்குரிய கருத்துக்களை உடைய ஆரிய சங்கீதங்களால் ஸ்தோத்திரிக்கப்பட்ட இந்த வருணதேவன் பிந்திய காலத்தில் தனது மேலான பதவியை இழந்து சாதாரண சமுத்திர தேவனானான். இதற்குக் காரணம் பிரஜாபதி என்ற தெய்வத்தைப்பற்றிய எண்ணம் பிரபலிய

மானதுதான். லோக சிருஷ்டிகரான பிரஜாபதியைப் பற்றிய கோட்பாடு அதிகப்பட அதிகப்பட, வருணதேவனுடைய புகழ் மங்கி, நாலாம் வேதம் இயற்றப்பட்ட காலத்திலேயே ஓர் சாதாரண சமுத்திர தேவனாய் வருகிறதை நாம் காண்கிறோம்.

மித்திரன்.—இருக்கு வேதத்தில் ஐந்து சூரியதேவர்கள் கூறப்படுகிறார்கள். இவர்கள் ஐவரும் சூரியனுடைய வெவ்வேறு தன்மையைக் குறிப்பிடுகின்றவர்கள். இவர்களுள் மித்திரன் அதிபூர்வ தேவதை. மித்திரன் என்னும் பதத்துக்கு சிநேகிதன் என்று பொருள். இவன் சூரியனுடைய பரோபகாரமான செயல்களை குறிப்பிடுகிறவன். வருணனுக்கும் மித்திரனுக்கும் ஒரேவிதமான தன்மை பல சமயங்களில் சொல்லப்பட்டாலும், வருணனுக்குரிய சன்மார்க்க குணங்கள் மித்திரனுக்குக் கிடையாது. ஒரே ஒரு சங்கீதத்தில் தவிர மற்ற இடங்களிலெல்லாம் மித்திரனுடைய பெயர் வருண தேவனுடன் சம்பந்தப்பட்டே வருகின்றது.

சூரியன்.—ஒரு சங்கீதத்தில் சூரியன் தையவுஸின் புத்திரன் என்று சொல்லியிருக்கிறது. உஷை என்ற உதயம் சூரியனுடைய மனைவி. ஏழு குதிரைகள் பூண்ட ரதத்தில் அவன் பிரயாணம் செய்கிறான். தோலைச் சுருட்டுவதுபோல் அவன் இருட்டைச் சுருட்டுகிறான். சரமும் அசரமுமாகிய சர்வத்தையும் பாதுகாப்பவன் சூரியனே. சூரிய தேவனால் ஜீவனையடைந்து மனுஷர் தங்கள் வேலைகளைச் செய்கிறார்கள். அவனுக்கு தூர திருஷ்டியுண்டு, சர்வத்தையும் பார்க்கிறான். ஜீவராசிகளின் நன்மையையும் தீமையையும் அவன் பார்க்கிறான். அவனுடைய மேன்மையினாலே அவன் தேவர்களுக்கெல்லாம் தலைவனானான். சர்வலோக சிற்பி என்னும் கருத்துக்கொண்ட விஸ்வகர்மன் என்ற அடைமொழி சூரியனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

சூரியன் நாட்களை அளந்து ஜீவனை நீடிக்கச் செய்கிறான். அவன் வியாதிகளையும் கெட்ட சொப்பனங்களையும் துரத்துகிறான்.

ஆயினும் சில சங்கீதங்களில் சூரியனைப்பற்றி அவ்வளவு உயர்வாய்ச் சொல்லப்படவில்லை. "சூரியனைப் பிரகாசிக்கச் செய்தவன் இந்திரனே. சூரியனுடைய ரதச்சக்கரங்களி லொன்றை இந்திரன் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டான். மித்திரனும் வருணனும் சில சமயங்களில் மேகத்தினாலும் மழையினாலும் சூரியனை மறைக்கிறார்கள்," என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

சாவித்திரி.—இவன் சூரியதேவதையின் ஓர் அம்சம். சில சங்கீதங்களில் சூரியனாகவே பாவிக்கப்படுகின்றான். சாவித்திரி ஒரு சொர்ன தேவதை, பொன் கண்கள் பொன் கைகள் பொன் நாவு பொன்மயமான ரோமம் உடையவன். அவன் ஆயுதங்கள் பொன். அவன் தனது பலத்த சுவர்ன கரங்களை உயர்த்தி சகல ஜீவராசிகளையும் ஆசீர்வதிக்கிறான். விரும்பப்படக்கூடிய எல்லாவற்றிற்கும் இவனே தலைவன். ஆகாசத்தினின்று ஆசீர்வாதத்தை அனுப்புகின்றவன் இவனே. பொல்லாத சொப்பனங்களை நீக்கி, பிசாசுகளையும் சூனியக்காரரையும் துரத்தி, நல்லவர்களுக்கு நித்திரையைக் கொடுக்கிறவன் சாவித்திரியே.

சாவித்திரியை வணங்கும் வணக்கம் தற்காலம் வரைக்கும் நடைபெற்று வருகிறது. இருக்கு வேதத்தினுள்ள மகா முக்கியமான ஜெபமாகிய சாவித்திரி மந்திரம் இந்நாள்வரைக்கும் இந்தியாவில் நிலைபெற்றிருக்கின்றது. உலகத்திலுள்ள ஜெபங்களிலெல்லாம் அதிகப் பூர்வீகமானது இந்த ஜெபமே. சாவித்திரி மந்திரமாகிய இத்தனை சிறப்புற்ற ஜெபத்தை இயற்றியது ஓர் பிராமணன் அல்ல. பிராமணருடைய கோட்பாடுகளுக்கு விரோதமாயிருந்த க்ஷத்திரிய ஜாதியைச் சேர்ந்த விஸ்வாமித்திர ரிஷியே இந்த மகா ஜெபத்தின் ஆசிரியர். காயத்திரியாகிய இந்த மந்திரமே சரஸ்வதியின் அம்சமாகப் பாவிக்கப்பட்டு தற்காலம்வரைக்கும் வேத மாதா என்னும் சிறப்புப்பெயரால் வணங்கப்பட்டு வருகிறது. சந்தியாவந்தன ஜெபமாக காலைதோறும் லக்ஷக்கணக்கான ஜனங்களால் ஜெபிக்கப்பட்டு வருகிறது, இதற்குக் காயத்திரி மந்திரம் என்றும் பெயர். இந்த ஜெபமாவது:

தத் சவித்தூர் வரண்யம் பர்கே தேவஸ்ய தீமஹீ
தியோ யோ நா ப்ரச்சோதயாத்

"தேவனுகிய சாவித்திரியினுடைய மேன்மையான மகிமையை நாங்கள் அடைவோமாக. எங்கள் ஜெபங்களை சாவித்திரி தேவன் உற்சாகப்படுத்துவாருக."

வேதங்களிலும் இதிகாச புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிற சர்வ ஜெபங்களிலும் சாவித்திரி மந்திரமே அதி விசேஷமானது. பிந்திய காலங்களில் சாவித்திரி மந்திரத்தைப்பற்றி அதிக உயர்வான மதிப்பு உண்டானது. அம்மந்திரத்தை உச்சரிப்பதினுலே சகலருக்கும் ரக்ஷிப்பு உண்டாகும். பதினெரு சங்கீதங்கள் சாவித்திரி தேவனுக்குக் கூறப்பட்டிருக்கின்றன.

புஷன்.—இவனும் ஓர் சூரியதேவன். புஷன் என்னும் பதத்துக்குப் போஷிப்பவன் என்று பொருள். ஆடு மாடுகளைக் காப்பாற்றி அவற்றைப் போஷிக்கும் தெய்வமாகையால் இப்பெயர் பெற்ருன். இவன் இடையரிடத்து மிக்க பட்சமுள்ளவன். இவனுடைய கையில் ஒரு தார்க்கம்பு உண்டு. இவனுடைய ரதம் வெள்ளாடுகளால் இழுக்கப்படுகின்றது. புஷன் ரஸ்தாக்களுக்குக் காவலாளன். பிரயாணிகளை நடத்துபவன். வான லோகத்தின் பாதைகளை இவன் அறிந்திருக்கிறபடியால், மரித்தோரை அவர்களுடைய பிதாக்களண்டைக்கு நடத்துகிருன். எட்டுச் சங்கீதங்களில் புஷன் ஸ்தோத்திரிக்கப்படுகிருன்.

விஷ்ணு.—பிற்கால புராணேதிகாசங்களில் வெகு பிரக்யாதி பெற்றவரும் தற்கால ஹிந்துமத தேவர்களில் அதி விசேஷமானவருமாகிய விஷ்ணு வேதங்களில் அத்தனை விசேஷமான தெய்வம் அல்ல. வேதங்களில் விஷ்ணு நாலாந்தரத் தேவர்களில் ஒருவர் என்று ஓராசிரியர் கூறுகின்ருர். விஷ்ணு ஓர் சூரியதேவன். ஆயினும் மற்ற சூரிய தேவர்களாகிய சாவித்திரி சூரியன் புஷன் என்னும் தெய்வங்களைப்போல அத்தனை விசேஷமானவர் அல்லர். விஷ்ணு என்னும் பெயருக்கு வியாபகன் என்று அர்த்தம். விஷ்ணுவினுடைய அவதாரங்க

ளைப்பற்றி வேதங்களில் ஒன்றும் சொல்லப்படவில்லை. உதயம், உச்சம், அஸ்தமனம் என்னும் மூன்று அடிகளால் விஷ்ணு இவ்வுலகத்தை விரைவில் சுற்றிவருகிறார். மகாபலிச் சக்கிரவர்த்தியினிடத்திலிருந்து தந்திரமாய் மூன்றடிமண் இரந்து பெற்று ஓரடியால் இவ்வுலகத்தையும் இரண்டாவதடியால் மேலோகத்தையும் அளந்து, மூன்றாவது அடிக்கு இடமில்லாமல் தம் காலை மகாபலியின் தலைமேல் வைத்து அவனைப் பாதாளத்தில் தள்ளி உலகை ரக்ஷித்தார் என்னும் திருவிக்ரம அவதாரக் கோட்பாடு மேற்சொன்ன விஷயத்தினின்றுதான் தோன்றினது. இவ்விபரம் வேதங்களில் சொல்லப்படவில்லை. வேதங்களுக்குப் பிந்திய பிரமாணங்களில் கூறப்பட்டிருக்கிறது.

விஷ்ணுவுடைய அதியுயர்ந்த அடி வானத்திலிருக்கிறது. விஷ்ணுவின் உயர்ந்த பாதம் செல்லும் இவ்விடத்தில் தேவர்களும் பிதாக்களும் வசிக்கிறார்கள்.

**உஷை.**—வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிற அதிவிசேஷமான பெண் தேவதை வேறு சில பெண் தேவதைகளினுடைய பெயர் சில இடங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் அவர்களில் யாருக்காவது ஒரு சங்கீதம் முழுவதும் கூறப்படவில்லை. உஷையோ இருபது சங்கீதங்களில் ஸ்தோத்திரிக்கப்படுகிறாள்.

உஷை உதய தேவி. உஷை என்னும் பதத்துக்கு, பிரகாசமானவள் என்று அர்த்தம். உஷையின் குணலக்ஷணங்கள் வேதத்தில் அதி சிறப்பாய்க் கொண்டாடப்பட்டிருக்கிறது. 'உஷை பிரகாசமான பெண். வானத்தில் பிறந்தவள். தையவுஸின் புத்திரி. இருண்ட ராத்திரியினுடைய பிரகாசமான சகோதரி. தன் மணவாளனாகிய சூரியனுடைய பிரகாசத்தினாலே அவள் பிரகாசிக்கிறாள். ஆயினும் சூரியன் தன் கிரணங்களாகிய கைகளை நீட்டி அவளைப் பிடித்துக்கொள்ள முயற்சி செய்தவுடனே மறைந்துவிடுகிறாள். செங்குதிரைகளால் இழுக்கப்படுகிற பிரகாசமான ரதத்தில் அவள் செல்லுகிறாள். வானத்தின் கதவுகளை விரிவாய்த் திறக்கிறாள். அந்தகாரத்தின் கதவுகளைத் திறந்துகொண்டு வெளியே வரு,

கின்றாள். காலுள்ள ஜந்துக்களை அவள் எழுப்பி பட்சிகளைப் பறக்கச் செய்கிறாள். அவளே சர்வத்துக்கும் சுவாசமும் ஜீவனும். அவளுடைய தோற்றமே பலிக்கு அடையாளம், அசுத்த ஆவிகளையும் வெறுக்கப்பட்ட இரவையும் உஷை துரத்துகிறாள்.'

வேதத்தில் கூறப்பட்டிருக்கிற தேவர்களிலெல்லாம் கவி வர்ணனையில் அதி சிறப்பாய்க் கூறப்பட்டிருக்கும் தேவதை இந்த உஷையே. இவளைப் புகழும் சங்கீதங்களைப்போன்ற கவி வர்ணனையுள்ள பாடல்கள் உலக காவியங்களில் வேறெங்குமே கிடையாது என்பதாக கவி சிரேஷ்டர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

அரியமான்.—உத்தம சிநேகிதன் என்பது இதன் அர்த்தம். இவன் வருணன் மித்திரன் என்பவர்களுடன் சேர்ந்தே தொழப்படுகிறான். அவர்களைப்போலவே இவனும் ஒளியின் தேவன், பரிசுத்தன், பாபமற்றவன், நித்திரையில்லாதவன், அநேக நேத்திரன், பொய்க்குப் பகைஞன். ஆயினும் வருணன் முதலிய மற்ற வான தேவர்களைப்போல அத்தனை விசேஷமாகக் கொண்டாடப்படுபவன் அல்லன்.

அஸ்வினி தேவர்கள்.—இவர்கள் இரட்டையர். சூரியன் மனைவியாகிய அஸ்வினி பெண்குதிரை ரூபமடைந்து பெற்ற இரட்டைப் பிள்ளைகள். காலை மாலையாகிய சந்தியாகாலத்துக்குரிய தேவர்கள். தங்கள் இருவருக்கும் மனைவியாகிய சூரியை என்ற சூரிய புத்திரியோடு இவர்கள் ரதமேறிச் செல்லுபவர்கள். இந்த ரதம் பிரகாசமானது. இதன் சகலபாகங்களும் பொன்னாலாக்கப்பட்டது. இவர்கள் காலையில் தோன்றி, தங்கள் ரதத்தைப் பூட்டி, தங்களைத் தொழுதுகொள்ளுகிறவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறார்கள். இந்த இரதம் பூட்டப்படும்பொழுதுதான் உஷை பிறக்கிறாள். இவர்கள் இருவரும் யௌவனமும் சௌந்தரியமும் உள்ளவர்கள். இவர்களுடைய ரதமானது பொற்செட்டைகளையுடைய குதிரைகளால் இழுக்கப்படுகிறது. கலியாணம் பண்ணாமல் மூப்படைகிற ஸ்திரீகளுக்கு இவர்கள் பாதுகாவலர். அஸ்வினிதேவர் இருவரும்

தேவ வைத்தியர். இவர்கள் குருடருக்குப் பார்வையளித்து, முடவர்களை நடக்கச் செய்கிறார்கள். இவர்களுடைய வைத்திய சாமர்த்தியத்தைப்பற்றி வேதங்களிலும், பிராமணங்களிலும், இதிகாச புராணங்களிலும் அதிகமாய்ச் சொல்லியிருக்கின்றது.

மேலே கூறிய பதினொருவரும் வானலோக தேவர்களாவர்.

ii ஆகாய லோகத்திலுள்ள தேவர்கள்.

வாயு.—இவன் காற்றுக்குரிய தெய்வம். வேதத்திலே அத்தனை விசேஷ தெய்வமல்ல. அநேகமாய் இந்திரனோடு சேர்ந்தே கூறப்படுபவன். அதரிசனரூபி. வாதன் என்னும் மறுபெயர் பூண்டவன். "ஓ வாதனே! நீயே எங்கள் பிதா, எங்கள் சகோதரன், எங்கள் சிநேகிதன். எங்களைப் பிழைப்பிப்பாயாக; உனது வீட்டிலே வைக்கப்பட்டிருக்கிற சாவாமையாகிய பொக்கிஷத்திலிருந்து, ஓ வாதனே! எங்களுக்கு ஜீவனை அருளுவாயாக" என்பது ஓர் ரிக்வேத ஜெபம்.

இந்திரன்.—இவன் மழைக்குக் கடவுள். தையவுஸ் (வானம்) தேவனின் புத்திரன். ஆதியில் இவன் ஆகாய தேவர்களுக்கு மட்டுமே தலைவனாக இருந்தாலும் காலாகாலத்தில் வேத வேதர்கள் யாவருள்ளும் அதி சிரேஷ்டமான ஸ்தானத்தை அடைந்தான். வேத காலத்திலிருந்த ஆரியர்களுக்கு இந்திரதேவன்மேல் வெகு பிரீதி. இருக்கு வேதத்திலுள்ள சங்கீதங்களில் கால்வாசிக்கு, மேற்பட்டவை இந்திரனையே ஸ்தோத்திரஞ் செய்கின்றனவென்றால் இவனுடைய சிறப்புக்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும்? மனுஷ ஜாதிக்கு இயற்கையாகவுள்ள குணகுணங்கள் இந்திரனுக்கு மிகுதியாக வுண்டு. சோமச்சாராயம் இந்திரனுக்கு அதிகப் பிரியம். இதையுண்டு உற்சாகமடைகிறான்.

மழைக்கடவுளாகிய இந்திரனுக்கும் வறட்சிக்குரிய ராக்ஷசனாகிய விருத்திரனுக்கும் நடந்த சண்டையைப் பற்றி வேதங்களிலே திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறது. இடியாகிய ஆயுதத்தைத் தரித்துக்கொண்டு

சோமரஸத்தை வயிறுறச் சாப்பிட்டு மாருதர் என்ற கணங்களை உடன் கூட்டிக்கொண்டு இந்திரன் யுத்தத்துக்குச் செல்லுகிறான். வெகு பயங்கரமான யுத்தம் நடக்கிறது. மரத்தைவெட்டி வீழ்த்துவதுபோல் இந்திரன் விருத்திரனை தனது இடியாயுதத்தினால் வெட்டி வீழ்த்தும்போழ்து பூமண்டலமும் வானமண்டலமும் பயந்து நடுங்குகின்றன. இந்த யுத்தம் பலமுறை நடக்கின்றன. வறட்சி காலத்துக்குப்பின் மழைகாலம் தோன்றுவதை இந்த ஒழியாயுத்தம் உவமையாய் குறிப்பிடுகின்றதுபோலும்.

இந்திரன் மனைவி இந்திராணி. இவனுக்கு வேறு பல ஸ்திரீகளும் உண்டு. இந்திரனுடைய சுபாவத்தில் நாம் விசேடித்துக் கூறவேண்டியவைகள் இரண்டு. அவை அவனுடைய யுத்தப்பிரீதியும், சோமச்சாராயத்தின்மேலுள்ள பிரீதியுமே, இதிகாச புராணகாலங்களில் இந்திரனைப்பற்றி அநேக கதைகள் தோன்றின.

ருத்திரன்.—ருத்திரன் என்னும் பதத்துக்குக் கர்ச்சிக்கிறவன் என்று அர்த்தம். இருக்கு வேதத்தில் இப்பதத்துக்கு சிவப்பு என்னும் அர்த்தமும் உண்டு. ருத்திரன் பிரசண்டமாருதங்களுக்குத் தேவன். மாருதர் என்ற தேவகணத்துக்குப் பிதா. மூன்று நாலு சங்கீதங்களில் மட்டுமே ருத்திரன் ஸ்தோத்திரிக்கப்படுகிறார். விஷ்ணுவின் பெயரைப்போல ருத்திரனுடைய பெயர் வேதத்தில் அவ்வளவு அதிகமாய் வருகிறதில்லை. அவருக்கு வில்லும் அம்பும் ஆயுதம், அவருடைய அம்புகள் மனிதருக்கும் மிருகங்களுக்கும் மரணத்தையும் வியாதியையும் கொண்டுவருகின்றன. அவர் காட்டு மிருகத்தைப்போல் பயங்கரமானவன்.

ஆயினும் ருத்திரன் எப்பொழுதும் நஷ்டத்தையும் அழிவையும் மட்டுமே உண்டாக்குகிற கொடிய தெய்வம் அல்ல, அவர் துன்பம்வராமல் காக்கக்கூடியவர். மனிதருக்கும் மிருகங்களுக்கும் வாழ்வை அருளுகிறவர். சொஸ்தமாக்கும் ஔஷதங்கள் அவரிடம் உண்டு. வைத்தியர்களில் எல்லாம் மிகச் சிறந்த வைத்தியர் இவரே.

வேத தேவர்களுள் அத்தனை சிறப்பாய்ப் பாராட்டப்படாத ருத்திரனைப்பற்றிய விசேஷம் என்னவென்றால் தற்காலத்தில் அதி சிரேஷ்டமாகக் கொண்டாடப் படுகின்ற சிவனும் வேத ருத்திரனும் ஒரே தெய்வந்தான் என்னும் கோட்பாடு. சிவன் என்னும் பதம் வேதத்தில் உபயோகிக்கப்படவில்லை. சிவ என்னும் பதம் ருத்திரனுக்கு அடைமொழியாக ரிக் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சிவ ருத்திரன் என்னும் தொடரில், சிவ என்னும் பதத்துக்கு சிவந்த, நல்ல, சிறந்த, மங்களகரமான என்று பொருள். சிவ என்னும் தமிழ்ப்பதத்துக்கும் இதே அர்த்தம் உண்டு. ஆரியர்களும் திராவிடர்களும் ஒருவரோடொருவர் கலக்க ஆரம்பித்தகாலத்தில் திராவிட தெய்வமாகிய சிவனும் ஆரிய தெய்வமான ருத்திரனும் ஒன்றென்னும் கொள்கை தோன்றியிருக்கலாம். சைவமார்க்கத்தைப்பற்றிப் படிக்கும்பொழுது (புனர்நிர்மாண பருவம்) இவ்விஷயத்தை இன்னும் விவரமாய் ஆராய்ச்சிசெய்வோம்.

மின்னல் தேவதைகள்.—ஆகாய தேவர்களில் மூவர் மின்னலுக்குரிய தேவர்கள்.

பார்ஜனியன்.—இவன் மழையை வருஷிக்கும் கடவுள். மூன்று சங்கீதங்கள் மட்டும் இவனுக்குக் கூறப்பட்டிருக்கின்றது. 'இவன் சர்வத்துக்கும் ஆன்மா. தையவுஸின் புத்திரன். சோமச்செடியின் பிதா.'

மாருதர்.—இவர்கள் ருத்திரனுடைய புத்திரர். சில சங்கீதங்களில் இந்திரனுடைய புத்திரரென்றும் வானத்தின் புத்திரரென்றும் சொல்லியிருக்கிறது. இவர்கள் இருபத்தொரு அல்லது நூற்றெண்பது யௌவன வீரரடங்கிய ஒரு சேனை, தங்கள் கைகளில் ஈட்டிகள் கோடாலிகளையும் தலையில் தலைச் சீராவையும் உடையவர்கள். பொன்னால் செய்யப்பட்ட காப்புகளையும் தண்டைகளையும் அணிந்தவர். இவர்கள் பிரசண்டமாருதத்துக்கு தேவர்கள். பூமியையும் பர்வதங்களையும் நடுங்கச் செய்கின்றவர்கள். அவர்கள் மரங்களை முறித்து காடுகளை பட்சிக்கிறார்கள். இரும்புப்பல்லுகள் அவர்களுக்கு உண்டு. கையில் வில்லோடு அவர்கள் பொன்

ரதங்களில் ஏறிச் செல்லுகிறார்கள். விருத்திரனை ஜெயிக்கிறதற்கு அவர்கள் இந்திரனுக்கு உதவிசெய்கிறார்கள். சில வேத ரிஷிகளுக்கு இந்த மாருதர்கள் அதிகப் பிரீதியான தேவதைகள்.

iii. பூமியிலுள்ள தேவர்கள்.

வேத தேவர்களில் மூன்றும் பிரிவாரான பூதேவர்களுள் சிலரைப்பற்றிச் சிறிது பார்ப்போம்.

அக்கினி.—வேதத்தில் சொல்லப்பட்ட தெய்வங்கள் எல்லாருக்குள்ளும் இந்திரனுக்கு அடுத்தாற்போல் அதி விசேஷமான தெய்வம் அக்கினியே. ரோமர், ஸ்லாவானியர் முதலிய பல பிரிவாரான பூர்வ ஆரியர்களும் இந்த தெய்வத்தை இதே நாமத்தோடு வணங்கிவந்தார்கள். இருநூறு சங்கீதங்களுக்குமேல் அக்கினியை ஸ்தோத்திரிக்கின்றன. இருக்கு வேதத்தின் முதல் சங்கீதம் அக்கினி ஸ்தோத்திரமே.

அக்கினி ஆரியர்களுடைய யாகநெருப்பு. அக்கினிக்கு முன்பாக வேதங்கள் உச்சரிக்கப்பட்டன. அக்கினி தேவர்களுக்கெல்லாம் பிதா. அக்கினிக்கு உணவு நெய். அக்கினி நித்தியமானது. அது மனுஷர்களுக்கு ராஜா, வீட்டுக்கு விருந்தாளி, யாவருக்கும் சிநேகிதன். பிசாசுகளைத் துரத்தி, தனது ஆயிரம் கண்களால் மனிதரைக் காத்து, தனது சத்துருக்களை தகனித்துவிடுகிறான். சகல ஆசீர்வாதங்களும் அக்கினியினிடத்திருந்தே வருகின்றன.

அக்கினிக்கு வெவ்வேறு உற்பத்திகள் கூறப்பட்டிருக்கிறது. தூரதேசத்தினின்று கொண்டுவரப்பட்டவன், இந்திரனால் இரண்டு மேகங்களுக்கிடையே ஜனிப்பிக்கப்பட்டவன், இரண்டு கல்லுகளுக்கிடையில் உண்டானவன், தையவுஸுக்கும் பிருதிவிக்கும் புத்திரன்; அப்படியிருந்தும் அக்கினியே தேவர்கள் யாவருக்கும் பிதா. அக்கினியினுடைய வளர்ச்சி வெகு ஆச்சரியமானது. அவனுடைய மாதா அவனைப் போஷிக்க முடியவில்லை. நெய்யே அவனுக்கு ஆகாரம்.

மனுஷரிடத்தில் தங்கும் அமரன் அக்கினியே. அக்கினியே கிரக புரோகிதன். அக்கினி உதயத்தை எழுப்பு

கின்றான். அவன் ரிஷிகளில் அதிக தெய்வீகம் பொருந்தியவன். சர்வ பலிகளையும் நடத்தி முடிப்பவன், சடங்குகளின் சரியான நேரத்தை அறிபவன், பலிகளுக்குப் பிதா, பூலோகத்துக்கும் வானலோகத்துக்கும் இடையில் விரைவாய்ச் செல்லும் தூதன். தொழுதுகொள்ளுபவர்களுடைய சங்கீதங்களையும் நைவேத்தியங்களையும் பூலோகத்திலிருந்து வானலோகத்துக்குக் கொண்டுபோகிறவன், தேவர்களை பலிக்கு அழைக்கிறவன். அக்கினியே மானிட ராஜா, கிரகபதி, வீட்டுக்கு நல் விருந்து, யாவருக்கும் மித்திரன், யாவருக்கும் பிதா, யாவருக்கும் மாதா, யாவருக்கும் புத்திரன், யாவருக்கும் பந்து, சகல ஆசீர்வாதங்களும் அவனிடத்திருந்தே வருகிறது. அவன் அருளும் விசேஷ ஆசீர்வாதம் இல்லற வாழ்வும் புத்திர பாக்கியமுமே.

அக்கினி எரிகிற பற்களை உடையவன், சகலத்தையும் பட்சிக்கிறவன். சிங்கத்தைப்போல் அவன் கர்ச்சிக்கிறான். மின்னல் வண்டியிலாவது ஸ்வர்ண ரதத்திலாவது ஏறிச் செல்லுகிறான்.

அக்கினி மேற்கூறிய குணலக்ஷணங்களை யுடையவனாயிருக்கின்றபடியால் அவனைத் தொழுபவர் அநேகர். அவனைத் தொழும் ரிஷிகள் பலவிதமாய் அவனைத் தோத்தரிக்கின்றார்கள். 'அக்கினியே சூரியனை ஆகாசத்தில் எழும்பச்செய்தவன், சர்வ ஜீவராசிகளுக்கும் சிருஷ்டிகன். சகலரும் அவனுக்குப் பணிகிறார்கள். தேவர்கள் அவனை வணங்குகிறார்கள். அவனை தோத்தரிப்பவர்களுக்கு வாழ்வுண்டு. கீர்த்திப் பிரஸ்தாபமடையும் மைந்தரை அருளுகிறவன் அக்கினியே. யுத்தத்தில் ரக்ஷிப்பு அருளுகிறான், சாகாவரம் ஈகிறான், துன்பங்களை நீக்குகிறான். தன்னை வணங்குகிறவர்கள் அறியாமையினால் செய்திருக்கக்கூடிய சகல பாவங்களையும் அவன் அவர்களுக்கு மன்னிக்கிறான்.'

வேதகாலத்தில் அக்கினிவணக்கம் நடைபெற்றவிதமாவது காலைதோறும் தீமூட்டப்படுகின்றபொழுது குடும்பத்தார் யாவரும்அதைச் சுற்றிலும் பயபக்தியாய் உட்கார்ந்திருப்பார்கள். நெய்யை அதில் ஊற்றியவுடன்

தீயானது ஜ்வாலித்து எழும்பும். இதுவே அக்கினி தேவதை அங்கே எழுந்தருளிப் பலியை அங்கிகரிக்கிறதற்கு அடையாளம்.

மேலும் அக்கினியானது அசுத்த ஆவிகளையும் பில்லி சூனிய முதலிய மாந்திரீகத் தொழில்களையும் எரித்து அகற்றிவிடுகிறது. இதுகாரணம்பற்றித்தான் ராக்ஷாஹன் என்னும் பெயர் ரிக்வேதத்தில் அக்கினிக்குக் கூறப்பட்டிருக்கிறது. ராக்ஷாஹன் என்னும் பதத்துக்கு ராட்சதர்களைக் கொல்லுபவன் என்று பொருள்.

சோமன்.—இரண்டு விஷயத்தில் பூர்வகால ஆரியர்களுக்கும் அவர்களின் சந்ததியாரான தற்கால ஹிந்துக்களுக்கும் வித்தியாசம் உண்டு. அவை மாம்சபோஜனமும் மதுபானமுமே. பூர்வ ஆரியர் மாம்சம் சாப்பிடுவார்கள். சில சமயங்களில் மாட்டிறைச்சியும் சாப்பிடுவார்கள். சோமச் செடியிலிருந்து இறக்கப்பட்ட சாராயம் பூர்வ ஆரியர்களுக்கு வெகு பிரீதி. இந்த சோமரஸச் சாராயமே ஒரு தேவதையாகப் பாவிக்கப்பட்டு ஸ்தோத்திரிக்கப்படுகிறது. நூற்றுப்பதினாறு சங்கீதங்களடங்கிய ஒரு பெரிய காண்டம் முழுவதும் சோமரஸ ஸ்தோத்திரமாகவே முடிந்திருக்கிறது. ஒரு தேவதையின் பெயர் எத்தனைதரம் கூறப்பட்டிருக்கிற தென்பதைக் கொண்டு அந்தத் தேவதையின் விசேஷத்துவத்தைக் கணிப்பதாயிருந்தால் வேத தேவர்களுள் சோமனுக்கு மூன்றுவது ஸ்தானம் கொடுக்கப்படவேண்டும். சோமரஸச் சாராயம் இறக்கப்படும் முறை வெகு அலங்காரமாய் வருணிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றுக்கொன்று சகோதரிகளான பத்துக் கன்னிகைகளால் சோமரஸம் சுத்தமாக்கப்படுகிறது என்று சொல்லும்போது கருதப்படுகின்றவைகள் பத்து விரல்களே.

சோமரஸம் அதை யுண்பவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தமையால் அதற்கு நித்திய ஜீவனை அருளும் சக்தி யுண்டெனை எண்ணினார்கள். இதனால் அதற்கு அமிர்தம் என்று பெயர். அமிர்தம் என்னும் பதத்துக்கு மரணத்தினின்று நீக்குவது என்று பொருள். சோமரஸத்தைச் சாப்பிட்டுத்தான் தேவர்கள் அமரர் (மரண

மல்லாதவர்கள்) ஆனார்கள். சோமதேவனை யார் வணங்குகிறார்களோ அவர்களை அவன் நித்திய வெளிச்சமும் மகிமையும் உடைய அழியாத லோகத்தில் சேர்க்கிறான். சோமனுக்கு ஔஷத சக்தியும் உண்டு. சோமரஸம் வியாதியஸ்தருக்கு மருந்து. சோமதேவன் சகல நோயாளிகளையும் சுகமாக்குகிறான், குருடரைப்பார்க்கச் செய்கிறான், முடவரை நடக்கச் செய்கிறான்.

"நாங்கள் சோமரஸத்தைப் பானம் பண்ணினோம். சாகா வரத்தை அடைந்தோம், வெளிச்சத்துக்குள் பிரவேசித்துவிட்டோம், தேவர்களை அறிந்துவிட்டோம்" என்பது ஒரு சோம வேத கீதம்.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வருகிறதற்கு முன்னேயே சோம வணக்கம் அவர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. பெர்சியாவுக்குச் சென்ற ஆரியரும் ஹோம என்ற பெயருடன் இதே வணக்கத்தை நடத்திவந்தார்கள். ஆகவே இவ்விரு வகுப்பாரும் பிரிகிறதற்கு முன்னேயே இவ்வணக்கம் நடைபெற்றதாய் அறிகிறோம்.

யமன், யமி.—இரட்டைப் பிள்ளையாகிய இவர்கள் இருவரும் சூரியனுடைய புத்திரனும் புத்திரியும். உலகத்தில் வசித்த முதல் மானிடர்கள் இவர்களே. இறந்தவர்களுடைய ஆவி பிதாக்கள் சென்ற பாதையிலேயே சென்று நித்திய ஒளியின் தேசத்துக்குச் செல்லுகின்றன. அங்கே மரித்தோருக்கு அரசனாகிய யம தேவனோடு களிப்பாடி தேவர்களோடு விருந்துண்ணுகின்றன. ஓர் விருக்ஷத்தின் அகன்ற கிளைகளின் நிழலில் யமன் தேவர்களோடுகூட சோமரஸத்தைப் பானம் பண்ணுகிறான். வீணையின் சத்தமும் பாடல்களின் இரைச்சலும் இங்கு கேட்கப்படுகின்றது. வானலோகத்தில் அனுபவிக்கப்படும் இந்த ஜீவியத்தில் யாதொரு குறைவும் இல்லை.

சில சமயங்களில் யமன் ஒரு ஆந்தையையும் ஒரு புறாவையும் தூதாய் அனுப்பினாலும் சாதாரணமாய் அவனுடைய தூதர் இரண்டு நாய்களே. இந்த இரண்டு நாய்களும் மரித்தோர் இந்த உலகத்திலிருந்து மற்ற உலகத்துக்குச் செல்லும் பாதையை காவல்காக்கின்றன. யமன் துஷ்டர்களைத் தண்டிக்கிறான் என்னும் கோட்

பாடு பிந்தியகால ஹிந்துமதத்தில் விசேஷித்த கொள்கையாளுலும், வேதங்களில் அதற்கு ஆதாரமில்லை.

பிருதிவி.—இப்பெயர் பூமிதேவியைக் குறிக்கின்றது. ஒரே ஒரு சிறிய சங்கீதமட்டுமே பூமிதேவியின்மேல் பாடப்பட்டிருக்கிறது. இவள் தையெளஸ் தேவனின் மனைவி, அவனோடு சேர்ந்தே போற்றப்படுகிறாள்.

மேலே கூறப்பட்ட தேவர்களெல்லாம் வானம், ஆகாயம், பூமி என்ற திரிபுவனங்களுக்கும் முறையே பதினொரு பதினொருவராகவுள்ள முப்பத்துமூன்று தேவர்களுள்ளும் விசேஷித்தவராவர். இந்த முப்பத்துமூன்று தேவர்களைத் தவிர வேறு பல தேவர்களைப்பற்றியும் வேதங்களில் கூறப்பட்டிருக்கின்றது. அவர்கள் வருமாறு:—

iv. குண வியக்த தேவர்கள்.

வேதங்களில், விசேஷமாய் வேதங்களின் பிந்திய பகுதிகளில் சில குணங்களையே தெய்வங்களாகப் பாவித்து அவற்றை ஸ்தோத்திரம் செய்திருக்கின்றதை நாம் காண்கிறோம். உதாரணமாக விசுவாசம், கோபம், விருப்பம் முதலியன.

கோபம்.—இத்தேவதை இரண்டு சங்கீதங்களில் ஜெபிக்கப்பட்டிருக்கின்றது.

விசுவாசம்.—ஒரு சிறு சங்கீதத்தில் இதன் ஸ்துதி வருகிறது.

காமன்.—பிற்காலங்களில் தோன்றிய இதிகாசபுராணங்களில் காமன் என்னும் தேவன் மாம்ச இச்சைக்குரிய காமத்துக்குத் தேவதையாவான். ஆனால் வேதகாலத்தில் இது சகலவித விருப்பங்களையும் ஆளுகிற தலைவனைக் குறிக்கிறது.

சரஸ்வதி.—இருக்கு வேதத்தில் சரஸ்வதி என்பது ஒரு நதியின் பெயர். அதிலிருந்து ஒரு நதி தேவதைக்கானது. நதிதீரத்தில் இடப்பட்ட பலியை அங்கீகரிக்கும்படியாக சரஸ்வதியை மன்றாடுவார்கள். சரஸ்வதி மாதாக்களிலெல்லாம் சிறந்தவள். நதிகளில் சிறந்ததும்

சரஸ்வதியே. சர்வ தேவதைகளிலும் சரஸ்வதியே சிறந்தவள்.

வாக்கு.—இவள் பிரஜாபதியினால் சிருஷ்டிக்கப்பட்டவள். இவள் வேதங்களுக்கு மாதா. இந்திரனுக்கு மனைவி. பிந்திய காலக் கிரந்தங்களில் சரஸ்வதியும் வாக்கும் ஒரே தெய்வமாக பாவிக்கப்படுகிறார்கள். ஆனால் ரிக்வேத காலத்தில் சரஸ்வதியும் வாக்கும் வெவ்வேறு தேவிகள்.

பிரகஸ்பதி.—இவன் பக்திக்குரிய தேவதை. ஜெபத்துக்கு அதிபதி என்பது இப்பெயருக்கு அர்த்தம். மனிதர்களுக்காக தேவர்களிடத்தில் பரிந்துபேசி அவர்களைத் தீமையினின்று ரக்ஷிக்கிற ஆசாரியன் பிரகஸ்பதியே. இவனே தேவர்களுக்குப் புரோகிதன், ஜெபத்துக்கு அதிபதி, ஜெபத்துக்குக் காவலாளன். இவன் பிசாசுகளைத் துரத்தி, மேகங்கள் மழையை வருஷிக்கச் செய்கிறவன்.

பிந்திய காலத்து ஹிந்துமதத்தில் பிரகஸ்பதி என்பது தேவகுருவுக்குப் பெயரானது. அன்றியும் வியாழன் (ஜூப்பித்தர்) என்னும் கிரகத்துக்கும் இது பெயராயிற்று.

பிரஜாபதி.—இப்பதத்துக்கு சிருஷ்டிக்கப்பட்டவர்களுக்கு ஆண்டவன் என்று அர்த்தம். வேத ஆரம்ப காலத்தில் இப்பெயரானது சாவித்திரி, சோமன், இந்திரன், அக்கினி முதலிய தேவர்களுக்கு ஓர் அடைமொழியாக மட்டும் பிரயோகிக்கப்பட்டது. சற்று பிந்திய காலத்தில் புத்திர பாக்கியத்தையும், ஆடுமாடுகளையும் அருளுகிற ஓர் தெய்வத்துக்குப் பெயரானது. சில சங்கிதங்களில் பிரஜாபதி முப்பத்துமூவரில் ஒருவராய்ப் பாவிக்கப்பட்டு ஸ்தோத்திரிக்கப்படுகிறான். ஆனால் அவருடைய விசேஷம் அவன் சிருஷ்டிகனாயிருப்பதே. ரிக் வேதத்தில், "பலிகளைக் கொண்டு எந்த தெய்வத்தைத் தொழுவோம்" என்ற வினாவுக்கு கீழ்வரும் விடை கொடுக்கப்பட்டிருக்கிறது. "பிரஜாபதியே, நீதான் சர்வ சிருஷ்டிகளையும் அடக்கிக்கொண்டிருக்கிறாய். உன்னைத் தவிர வேறொருவரும் இல்லை. நாங்கள் உன்னை நோக்கி மன்றாடும்பொழுது எங்கள் இருதயத்தின் விருப்பத்தை

எங்களுக்கு அனுக்கிரகிப்பாயாக. நாங்கள் செல்வப் பெருக்கை உடையவர்களாய் இருப்போமாக."

பிரஜாபதியைப்பற்றிய கொள்கையின் விருத்தி நாலாம் வேதத்திலும் பிராமணங்களிலும் அதற்குப் பிந்திய காலத்து நூல்களிலும் விஸ்தாரமடைந்தது.

**v. கீழ்தர தேவதைகள்.**

**விஸ்வகர்மன்.**—விஸ்வகர்மன் என்னும் பதத்துக்கு 'சர்வ சிருஷ்டிகன்' சகலத்தையும் செய்கிறவன் என்று பொருள். ஆரம்பத்தில் இப்பெயர் விசேஷ வேத தேவர்களுக்கு ஓர் அடைமொழியாகமட்டும் இருந்தது. காலாகாலத்தில் இது சர்வலோக சிற்பியாகிய ஒரு தெய்வத்துக்குப் பெயரானது. கையினால் செய்யப்படும் சகல வேலைகளுக்கும் அறுபத்துநாலு வகைப்பட்ட தொழிற் சாஸ்திரங்களுக்கும் விஸ்வகர்மனே தலைவன்.

**காந்தர்வர், அப்சரர்.**—அப்சரர் என்னும் தொடருக்கு ஜலத்தில் நடமாடுகிறவர்கள் என்று அர்த்தம். இவர்கள் ஒருவகை ஜல தேவதைகள். ஸ்திரீதேவதைகளாகிய இவர்களை விவாகஞ்செய்யும் தைவ வகுப்பாருக்கு காந்தர்வர் என்று பெயர். சில அப்சர ஸ்திரீகள் மனுஷருடனும் சேர்ந்திருக்கிறார்கள். ஊர்வசி இப்படிப்பட்டவள்

**vi. தெய்வீகம்பொருந்திய மிருகங்கள், விருக்ஷங்கள், வஸ்துக்கள்.**

மேலேகண்ட தேவர்களைத் தவிர வேதங்கள் இயற்றப்பட்ட காலத்து ஆரியர் பல மிருகங்களையும், விருக்ஷங்களையும், வஸ்துக்களையும் தெய்வீகம் பொருந்தியனவாகப்பாவித்து அவற்றை வணங்கிவந்தார்கள். வேதங்களிலுள்ள சங்கீதங்களில் பல இவைகளுக்குச் சாற்றப்பட்டிருக்கின்றன. இவைகள் தெய்வங்களாகவே பாவிக்கப்பட்டு வணங்கப்பட்டு வந்தன. இவற்றுள் சிலவாவன:

**குதிரை.**—தேவர்களுடைய ரதங்களைக் குதிரைகள் இழுக்கின்றபடியாலும், சூரிய ஓட்டத்தோடு குதிரைகள் பலவிதமாய்ச் சம்பந்தப்பட்டிருக்கின்றபடியாலும், குதிரையைப் பூர்வ ஆரியர் விசேஷமாய்க் கொண்டாடி வந்தார்கள். வேத ஆராதனைக்குரிய சடங்குகளில் குதி

ரையானது சூரியனுக்கும் அக்னிக்கும் ஓர் அறிகுறியாகக் கருதப்பட்டது. குதிரைப் பலியாகிய அஸ்வமேத யாகம் வேதகாலத்தின் ஆரம்பத்திலே பூர்வ ஆரியர்களுக்குள் வழங்கிவந்தது.

பசு.—பசுவினால் பூர்வ ஆரியர்களடைந்த எண்ணிறந்த பிரயோஜனங்களினிமித்தம் அவர்கள் இம்மிருகத்தை மிகவும் மதிப்பாய் எண்ணிவந்தார்கள். உதயகால கிரணங்களுக்கும், மழைமேகங்களுக்கும் பூமிக்கும் பசுவை உபமானமாய்க் கூறியிருக்கின்றது. பசு ஒரு தேவியாகவும் வேதத்தில் பாராட்டப்படுகிறது. பசு கொல்லப்படக்கூடாது என்னும் கோட்பாடு வேதகாலத்திலேயே உண்டாய்விட்டது.

பிந்தியகாலத்தில் எழுதப்பட்ட பிரமாணங்களிலும் மற்ற நூல்களிலும் பசு வணக்கம் இன்னும் பிரஸ்தாபமடைந்தது.

சர்ப்பம்.—இந்திரனுக்குச் சத்துருவும் வறட்சிக்குரிய ராக்ஷசனுமாகிய விருத்ரன் சர்ப்பரூபமுடையவனாயிருந்தாலும், சர்ப்பத்தைத் தெய்வமாகப்பாவித்து ஆரியர் அதை வணங்கிவந்தார்கள் என்பதற்கு வேதத்தில் ஆதாரம் இல்லை. வேதங்கள் இயற்றப்பட்ட காலத்துக்குப்பிறகு ஆரியர்கள் இன்னும் கிழக்குமுகமாய்ப் பரவி சர்ப்பதேசமாகிய இந்தியாவின் பூர்வகுடிகளோடு கலந்தபின்புதான் நாகவணக்கம் இந்துமார்க்கத்தில் அதி விசேஷமாகப் பாராட்டப்பட்டது.

விருக்ஷங்கள், செடி கொடிகள்.—சில செடிகள் தெய்வீகம் பொருந்தியவைகளாகப் பாவிக்கப்பட்டு வணங்கப்படுகின்றன. ஒரு சங்கீதம் முழுவதும் ஔஷத சக்தியுள்ள செடிகளை ஸ்தோத்திரிக்கின்றது. கலியாணம் முடித்து ஊர்வலம் வருகிறவர்கள் செடிகளுக்கு அர்ப்பணம் சமர்ப்பித்து பெரிய விருக்ஷங்களை ஸ்தோத்திரிக்கின்றதைப்பற்றி ஒரு சங்கீதத்தில் சொல்லியிருக்கிறது.

பலிக்குரிய உபகரணங்கள்.—பலி செலுத்துகிறதற்கு அவசியமான வஸ்துக்கள் தெய்வீகமுடையனவாகப் பாவிக்கப்பட்டிருக்கின்றன. பலி மிருகத்தைக்கட்டும்

பலித்தண்டை ஒரு சங்கீதம் ஸ்தோத்திரிக்கின்றது. சோமபலியை ஆயத்தம் செய்கிற கல்லுகளை மூன்று சங்கீதங்கள் புகழுகின்றன.

ஆயுதங்கள். — மனிதருக்கு பிரயோஜனமாயிருந்த விசேஷ ஆயுதங்கள் வணங்கப்பட்டன. கலப்பை சில இடங்களில் புகழப்பட்டிருக்கின்றது. ஒரு சங்கீதம் முழுவதும் யுத்த ஆயுதங்களை ஸ்துதி செய்கின்றது. அதர்வ வேதத்திலுள்ள ஓர் சங்கீதம் பறையை ஸ்துத்தியம் பண்ணுகின்றது. தற்கால ஹிந்துமார்க்கத்தில் வருஷந்தோறும் நடைபெற்றுவருகிற ஆயுதபூஜை என்னும் பண்டிகைக்கு காரணம் வேதகாலங்களில் அனுஷ்டிக்கப்பட்ட இவ்வணக்கந்தான்போலும்.

vii. பிதிர்வணக்கம்.

இந்தியாவில் வந்து குடியேறின ஆரியரிடத்தில் பிதிர்வணக்கம் அதிகமாய் வழங்கிவந்தது. பிதிர் என்னும் வார்த்தைக்குப் பிதாக்கள் என்று அர்த்தம். இது இறந்துபோய்விட்ட முன்னோரைக் குறிக்கும். காலஞ்சென்றுவிட்ட பிதிர்களுக்குத் தேவர்களைப்போலவே ஆராதனைகளும் பலிகளும் நடைப்பட்டன. மரணத்துக்குப் பிறகு நல்லவர்களுடைய ஆத்துமாவை அவர்களுக்கென்று ஆயத்தம்பண்ணின இடத்துக்கு யமதேவன் அழைத்துக்கொண்டு போவான் என்றும் அங்கே அவர்கள் யமனோடு சேர்ந்து களியாட்டமர்ந்து, தேவர்களோடு கலந்து, சந்தோஷங்கொண்டாடுவார்கள் என்றும் நம்பினார்கள். புனர்ஜன்மக் கோட்பாடு இக்காலத்தில் கிடையாது.

## 2. வேத பலிகள்

உலகத்திலிருந்த இதர பூர்வ ஜாதியாரைப் போலவே பூர்வ ஆரியர்களுக்கும் பலியிடுதல் விசேஷமான ஆராதனை. பலியிடுவதற்கு நோக்கங்கள் பல. பலிசெலுத்துபவனுக்கும் பலியைப்பெறும் தெய்வத்துக்கும் ஒரு நெருங்கிய சம்பந்தத்தை உண்டாக்கிக்கொள்ளும்படியாக பலியிடுவார் சிலர். தெய்வத்தினுடைய கோபத்தை சாந்திசெய்யும்படியாக பலி செலுத்துவார் சிலர்.

கடவுள் அருளிய நன்மைகளுக்கு ஸ்தோத்திரஞ் செய்யும்பொருட்டு பலியிடுவார் சிலர். ஆனால் பலிசெலுத்துகிறதற்கு வேதத்தில் வேறொரு காரணம் தோன்றுகிறது. தெய்வத்தினிடமிருந்து ஒரு தயவைப் பெறுகிறதற்கு பலியானது ஒரு இன்றியமையாத நன்கொடை. சரியான பலியைச் சரியான முறையில் செலுத்தும்பட்சத்தில் ஒருவன் நாடுகிற எந்த விஷயமும் கைகூடும் என்பது அக்காலத்தவர் கோட்பாடு.

வேதபலிகளானவை வீட்டுபலிகள் மகாபலிகள் என்னும் இரண்டு பிரிவினுள் அடங்கும். வீட்டு பலிகள் குடும்பத்தின் தலைவனாகிய தகப்பன் ஒவ்வொரு நாளும் தன் குடும்பத்தாருடன் அக்கினிக்கு முன்சென்று நெய் முதலியவற்றை நெருப்பிலிட்டு நைவேத்தியம் பண்ணுவதைக் குறிக்கும். இதினால் குடும்பத்தின் தலைவனுக்கு அக்கினிஹோத்ரி என்னும் பெயர் வழங்கினது. இதற்கு அக்கினி ஆசாரியன் என்று பொருள். தீயில் பிரசன்னமாயிருக்கிற அக்கினிதேவன் இந்த நைவேத்தியங்களை வானலோகத்திலுள்ள தேவர்களுக்கு கொண்டுசெல்கையில், சங்கீதங்கள் உச்சரிக்கப்பட்டன, ஜெபங்கள் புகையுடனே மேல் எழும்பின. அமாவாசை பௌர்ணமி முதலிய தினங்களில் விசேஷ பலிகள் செலுத்தப்பட்டன. அப்படியே வசந்தகாலம் மாரிகாலம் இலையுதிர் காலம் முதலிய காலங்கள் ஆரம்பிக்கும்பொழுதும் விசேஷ பலிகள் இடப்பட்டன. கதிர் அறுப்புக் காலங்களிலும் வருஷத்துக்கு இருமுறை விசேஷ பண்டிகை நிகழும்.

மகாபலிகள் அதி விசேஷமான காலங்களில் ராஜாக்களாலும் ரிஷிகளாலும் நடைபெறும். காலாகாலத்தில் அவைகள் செல்வாக்குடையவைகளாயின. அவற்றைப் பற்றிய முறைகளும் விரிவாயின. மகாபலிகளில் கீழ்வருவன விசேஷித்தவை. சோமபலி, பசு முதலிய மிருகபலி, குதிரைப்பலி, நரபலி என்பன.

ரிக் வேதத்தில் ஒரு புஸ்தகமும் சாம வேதமுழுமையும் மிகுதியாய் சோமபலியைக் குறித்தே கூறுகின்றன.

மிருகபலிகள் விசேஷமானவை. அஸ்வமேதயாகங்களில் வெள்ளாட்டுக்கடாக்களும் பலியிடப்பட்டன. காளைகள், எருமைக்கடாக்கள், மான்கள் என்னும் இந்த மிருகங்களும் பலியிடப்பட்டன. சில சமயங்களில் இவைகளில் அநேகம் சேர்ந்தாற்போல் பலியிடப்படும். மகா அஸ்வமேதயாகங்களில் காளை பசு பால்பசு முதலிய முந்நூற்று இருபத்தேழு மிருகங்கள் பலியிடப் பட்டிருப்பதாக யஜுர்வேதத்தில் கூறியிருக்கின்றது. இந்த பலிகள் செலுத்தப்படும்காலத்தில் அனுஷ்டிக்கப் படவேண்டியமுறைகள் பல. இதற்குச் சற்று பிந்திய காலத்தில் எழுதப்பட்ட பிராமணங்கள் இவற்றை விரிவாய் எடுத்துக்கூறும்.

வேதகாலத்து ஆரியர் தங்கள் தேவர்களுக்கு மனுஷரையும் பலியிட்டு வந்தார்கள் என்பதற்கு ரிக்வேதத்திலும் யஜுர் வேதத்திலும் பல ஆதாரங்கள் உள. இந்த பலிக்கு புருஷமேதயாகம் என்று பெயர். இப்புருஷமேதயாகத்தை நடத்தும் முறையைப்பற்றி யஜுர் வேதத்தில் கூறியிருக்கிறது.

**பலிகளின் முறை.**—மேற்கூறிய மகாபலிகளைச் செலுத்துவதற்கு அதிகத் திட்டவட்டமான பிரமாணங்களும் அந்தந்தச் சமயத்தில் பாடப்படவேண்டிய சங்கீதங்களும் அதிகமாய் பெருகினபடியினால் இதற்கென்று ஒரு வகுப்பு பிரத்தியேகப்படுத்தப்பட வேண்டியிருந்தது. சடங்காசாரத்துக்குரிய இவ்வகுப்பாருக்கு பிராமணர் என்னும் பெயர் இக்காலமுதல் உண்டாயிற்று. பிராமணன் என்னும் பெயருக்கு ஜெபமனிதன் என்று பொருள். இவ்விதமாய் உற்பத்தியான பிராமணர்களுடைய செல்வாக்கு வரவர அதிகரித்து காலாகாலத்தில் ராஜாக்களுக்கு மேலான மதிப்படைந்தது.

பலிகளைப்பற்றி இவ்வளவு விசேஷமான எண்ணங்களிருந்தாலும் இவர்கள் ஆராதனையில் விக்கிரகங்கள் இல்லை என்பது நாம் நோக்கத்தக்கது.

ஆகவே இக்காலத்தில் மூன்று வகுப்பார் ஆரியர்களுக்குள் இருந்தார்கள். இவர்கள் யுத்தவீரர், குருக்கள், விவசாயிகள் என்னும் மூன்று வகுப்பினரே.

குருக்களாகிய பிராமணர் அதிகமாய் மதிக்கப்பட்டார்கள். ராஜாக்களும் சேனைத்தலைவர்களும் தங்களுக்கு உதவியாக இந்த பிராமணரை புரோகிதராய் வைத்துக் கொண்டார்கள். இப்படியாக குருக்கள் ஒரு ஜாதியாராகித் தங்களுடைய வல்லமையையும் செல்வாக்கையும் அதிகப்படுத்திவந்தார்கள். இக்காலத்திலேயே இவர்கள் கல்விப்பயிற்சி யடைவதற்காக பாடசாலைகள் அங்கும் இங்கும் ஸ்தாபகமாயின.

## வேத ஜெபங்கள்.

வேதங்கள் மிகுதியாய் ஜெப ரூபமாயுள்ளன. பல காரியங்களுக்காக மன்றாட்டுகளும் ஸ்துதி தோத்திரங்களும் அடங்கியவை. பலவேறு காரியங்களுக்காக மன்றாடல் செய்யப்படுகின்றன. இவற்றுள் மிகுதியானவை ஆவிக்குரிய விஷயங்களுக்கல்ல. உலகத்துக்குரிய காரியங்களுக்கே செய்யப்படும் மன்றாட்டுகள். இம்மன்றாட்டுகளாவன:

(1) தேவ ஒத்தாசைக்காக.—பூர்வகுடிகளோடு தாங்கள் செய்யவேண்டியிருந்த கொடும் போர்க்காலத்தில் ஆரியர்கள் தேவ ஒத்தாசையை நாடவேண்டியவர்களாயிருந்தார்கள்.

"ஓ அக்னியே! பிரகாசமானவனே, பரிசுத்த நெய்யினால் நிவேதிக்கப்படுகின்றவனே, பிசாசுகளால் காப்பாற்றப்படுகிற எங்கள் சத்துருக்களை தகித்துப்போடுவாயாக."

"ஓ அஸ்வினி தேவர்களே! எங்களைப் பார்த்துக் குலைக்கும் நாய்களை பீறிப்போடுவாயாக. எங்கள் சத்துருக்களைக் கொன்றுபோடுவாயாக."

(2) பாதுகாப்புக்காக.—சகலவிதமான அபாயங்களிலிருந்தும் காக்கப்பட பல மன்றாட்டுகள் உள. இவற்றுள் சில ஓநாய் பாம்பு முதலியவற்றினின்று காக்கப்படும்பொருட்டுச் செய்யப்பட்டவை.

"ஓ வருணனே! ஓநாயாவது திருடனாவது எங்களுக்கு தீங்குசெய்ய நினைத்தால், அத்தீங்குகளினின்று எங்களை ரக்ஷிப்பாயாக."

"சாவித்திரியே, தேவனே, சகல துக்கங்களையும் துன்பங்களையும் எங்களை விட்டுத் தூர அனுப்பிவிடுவாயாக, நன்மையானவைகளைமட்டுமே எங்களிடம் அனுப்புவாயாக."

(3) க்ஷேமலாபத்துக்காக.—இல்லற வாழ்வுக்காகவும் க்ஷேமலாபங்களுக்காகவும் மிருக ஜீவ விருத்திக்காகவும் பல மன்றாட்டுகள் உள.

"ஓ இந்திரனே! எங்களுக்கு உயர்ந்த கீர்த்தியைத் தருவாயாக. ஆஸ்திகளை அருளுவாயாக. ஆயிரங்களாக நீ எங்களுக்கு அருளிச்செய்து, பூமியின் பலனை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு வீட்டுக்குப் போகும்படி அனுக்கிரகிப்பாயாக."

"ஓ அக்னியே! உன்னை வணங்குகிற ஸ்திதிபந்தருக்கு, ஆகாரம் கிடைப்பதாக, உனக்குப் பானபலி வார்க்கிறவர்களுக்கு தீர்க்காயுசு உண்டாவதாக."

(4) மழைக்காக.—பூர்வ ஆரியர்களுடைய தொழில் விவசாயமும் ஆடுமாடு மேய்த்தலுமே. ஆகையால் மழைக்காக அநேக பிரார்த்தனைகள் செய்யப்படுகின்றன. மழைத்தெய்வமாகிய பார்ஜனியனுக்குக் கீழ்வரும் பிரார்த்தனை செய்யப்படுகிறது.

"உன்னுடைய மகா பலத்த பாத்திரத்தைத் தூக்கி தண்ணீரை ஊற்றுவாயாக; அதிலிருக்கும் தண்ணீர்கள் புரண்டோடி வருவதாக; பூமியையும் வானத்தையும் கொழுமையினால் நனையப்பண்ணுவாயாக. பசுக்கள் குடிக்கிறதற்கு ஏராளமான தண்ணீர் இருப்பதாக."

(5) சுகத்துக்காக.—"ஓ இந்திரனே! எங்கள் பானபலியை மகிழ்ச்சியோடு சாப்பிடுவாயாக. எங்கள் ஜீவனைப் புதுப்பித்து, நீண்ட ஆயுசை அனுக்கிரகிப்பாயாக. உன்னை தரிசிப்பவன் ஆயிரம் பேறுகளைப் பெறும்படி செய்வாயாக."

ஓ மாருத்துக்களே! அதன் வல்லமையால் நாங்கள் நூறு கோடைகாலம் ஜீவனோடிருக்கத்தக்கதாக இந்தப் பாடலைத் தயவாய் அங்கீகரிப்பீர்களாக.

(6) புத்திரபாக்கியத்துக்காக.—விசேஷமாய் ஆண்மக்களுக்காகத்தான் அநேக பிரார்த்தனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. "ஓ அக்னியே! எங்களுக்கு ஒரு புத்திரனும், குலவிருத்தியும் உண்டாவதாக. எங்கள்மேல் உனக்குள்ள சித்தம் இதுவே ஆகுக."

"ஓ பிரகஸ்பதியே! திரண்ட ஐஸ்வரியத்துக்கு அதிபதிகளும், சிறந்த புத்திர பௌத்திர சந்ததியுள்ளவர்களும், ஏராளமான வீரரை உடையவர்களுமாய் நாங்கள் இருப்போமாக."

(7) பாவ மன்னிப்புக்காக.—இதுவரை நாம் பார்த்த மன்றாட்டுகளெல்லாம் உலக காரியங்களுக் கடுத்தவை. பக்திக்குரிய விஷயங்களுக்காக அத்தனை அதிகமாய்ப் பிரார்த்திக்கிறதில்லை. இதற்கு அநேக நூற்றாண்டுகளுக்குப் பின் எழும்பிய துக்காராம், துளசிராம், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் முதலிய பக்த மணிகளினிடத்தில் நாம் காண்கிற பாப உணர்ச்சியும், அதற்குப் பரிகாரமாகப் பகவானுடைய கிருபையை நாடுதலுமாகிய தேட்டங்கள் வேதங்களில் இல்லை. ஆயினும் பிந்தியகாலத்து பக்திமதநூல்களில் கண்டவண்ணம் அத்தனை உயர்ந்த அளவில் இல்லையாயினும், பாவத்தைப்பற்றிய உணர்ச்சியும், பாப பரிகாரத்துக்காக மன்றாட்டும் வேதங்களில் அறுதியாய் இல்லாமல் போய்விடவில்லை. பாவ உணர்ச்சியையும் பாவநிவாரண தேட்டத்தையும்பற்றிய சில சங்கீதங்களாவன:—

"ஓ அதிதியே! ஓ மித்திரனே! ஓ வருணனே! உங்களுக்கு விரோதமாக நாங்கள் எவ்வளவு தவறிழைத்திருந்தாலும் எங்களுக்கு மன்னியுங்கள்."

"எங்களை நேசிக்கிற மனுஷனுக்கு விரோதமாக நாங்கள் பாவஞ்செய்திருந்தால், ஒரு சகோதரன், சிநேகிதன், கூட்டாளி, எப்பொழுதும் எங்களோடிருக்கிற அயலான் அல்லது புறத்தியான் இவர்களில் யாருக்காவது விரோதமாய் எப்போதாவது குற்றஞ்செய்திருந்தால், ஓ வருணனே! எங்கள் பாவங்களை எங்களை

விட்டு அகற்றுவாயாக. விளையாடுகிறவர்கள் ஒருவரை யொருவர் ஏமாற்றுகிறதுபோல, நாங்கள் யாரையாவது ஏமாற்றியிருந்தாலும், அறியாமல் ஏதாவது பாவஞ் செய்திருந்தாலும், அல்லது வேணுமென்று பாவஞ் செய்திருந்தாலும், இந்தப் பாவங்களெல்லாவற்றையும் அவிழ்க்கப்பட்ட விலங்குகளைப்போல எங்களைவிட்டு அகற்றிவிடுவாயாக. ஓ வருணனே! நாங்கள் உன்னால் நேசிக்கப்பட்டவர்களா யிருப்போமாக."

"உலகத்தின்மேல் ஆஞ்ஞைசெலுத்தும் ஞானமுள்ள தேவதைகளே, அசைவனவும் அசையாதனவுமாகிய அனைத்தையும்பற்றி நினைவுள்ளவர்களே, நாங்கள் செய்தனவும் செய்வனவுமாகிய பாபங்களிலிருந்து எங்களை ரக்ஷியும். இன்றையதினத்திலே பாவஞ்செய்யாதபடி எங்களைக் காத்து எங்களுக்கு மகிழ்ச்சியை அருளிச்செய்தருளும்."

பாப உணர்ச்சியையும் பாப மன்னிப்பையும்பற்றிச் செய்யப்படும் மன்றாடல்களிலெல்லாம் வருணதேவனைக் குறித்துச் செய்யப்படுகின்றவைகள்தான் அதி விசேஷமானவைகள்.

(8) மறுமைப் பலனுக்காக.—பிந்திய கால ஹிந்து மதத்தில் விசேஷித்துக் கூறப்படுகிற ஸ்வர்க்கம் என்னும் மறுமை ஸ்தலத்தைப்பற்றி வேதங்களில் விவரிக்கப்படவில்லையாயினும், இன்பத்தையும் சாவாமையையும் உடைய ஒரு ஸ்தலம் மரணத்துக்குப் பின் உண்டு என்னும் எண்ணம் வேதகாலத்தினருக்கு அதிகமாய் உண்டு. இந்த மறுமைப்பலனுக்காக அநேக பிரார்த்தனைகள் செய்யப்படுகின்றன.

"தேவர்களிடம் பக்தியுள்ளவர்கள் இன்பம் அனுபவித்துவரும் ஸ்தலமாகிய அந்த விரும்பப்பட்ட மாளிகையை நான் அடைவேனாக."

"மித்திர—வருணனே, உன்னுடைய ஈவாகிய மழைக்காகவும் சாவாமைக்காகவும் நாங்கள் மன்றாடுகிறோம்."

## III. புஸ்தகங்கள்.

இக்காலத்தில் இயற்றப்பட்ட புஸ்தகங்களுக்கு வேதங்கள் என்று பெயர். வேதம் என்னும் பதத்துக்கு அறிவு என்று அர்த்தம். இவை இக்காலத்துக்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னேயே பாடப்பெற்று, கர்ண பரம்பரையில் ஒரு தலைமுறையினின்று மறு தலைமுறைக்கு ஒப்புவிக்கப்பட்ட கவிகள். அநேக தலைமுறை தலைமுறைகளாக இவைகள் இப்படியே ஒப்புவிக்கப் பட்டுவந்தன. இதுபற்றி வேதங்களுக்கு எழுதாக்கிளவி என்று ஓர் பெயரும் உண்டு. சுருதி என்னும் பெயரும் இக்கருத்துப்பற்றியதே. சுருதி என்பதற்குக் காதினால் கேட்கப்படுவது என்று பொருள். அதாவது கண்ணினால் அக்ஷரவடிவாகக் காணப்படாமல், செவியினால் ஒலிவடிவாகக் கேட்கப்படுவது.

இத்தனை ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே பாடப் பட்டிருந்தாலும், தற்காலத்தில் உலகம் எங்குமுள்ள எவ்வித புஸ்தகங்களைக் காட்டிலும் அதிகப் பழைமை யானதாயிருந்தாலும், இவ்வேதங்களுடைய கவியழகும், கருத்தழகும், சந்தச் சிறப்பும், பிற இன்பங்களும் தற் கால பண்டிதர்கள் யாவரும் ஒப்புக்கொள்ளுகின்றவை.

வேதங்கள் நாலு. இவை இருக்கு, யஜுர், சாமம், அதர்வம் என்பன. இவற்றுள் முதல் மூன்று வேதங்கள் தான் இக்காலத்தில் இயற்றப்பட்டன. நாலாம் வேத மாகிய அதர்வம் இதற்குப் பிந்தியகாலத்தில் செய்யப் பட்டது.

இவ்வேதங்களெல்லாம் மிகுதியாய் ஸ்தோத்திர ரூப மாகவும் பிரார்த்தனை ரூபமாகவும் உள்ள ஜெபங்களே. பலி செலுத்துங்காலத்திலும் பிறசமயங்களிலும் பாடப் படும்படி செய்யப்பட்டவை. இவ்வேத கவிகளுக்கு உதாரணமாகச் சில சங்கீதங்களை முன்னமேயே எடுத் துக் கூறியிருக்கிறோம். மொழிபெயர்ப்பைக் கொண்டு மூல சங்கீதங்களை நிதானிக்கக்கூடாது. மேலும் வேதங் களுக்கென்று ஏற்பட்டிருக்கிற சந்தம் உண்டு. அந்தந்த சங்கீதத்துக்குரிய சந்தத்தோடு பாடும்பொழுது வெகு

திவ்யமாயிருக்கும். சில வேத சங்கீதங்களின் மொழி பெயர்ப்பை இங்கே வரைகின்றோம்.

## அக்னி.

அக்னியை நான் வணங்குகின்றேன். அவனே எங்கள் வீட்டுக்குப் புரோகிதன், தெய்வீக யாகங்களுக்கு ஆச்சாரியன், அவன் சுத்திகரிக்கும் ஆச்சாரியனுமிருந்தாலும் செல்வத்தை அருளுகின்றான்.

அக்னி பூர்வத்தாரால் பூஜிக்கப்பட்டவன், தற்காலத்தவர் பூஜிப்பவனும் அவனே. அக்னியே தேவர்களை எங்களண்டைக்குக் கொண்டுவருவானாக.

அக்னியின் மூலமாய் ஒருவன் திரவியத்தைச் சம்பாதிக்கலாம், தினம் தினம் க்ஷேமத்தை அடையலாம். சிறந்த வீரர்களுக்குரிய கீர்த்தியைப்பெறலாம்.

ஓ அக்னியே! உனக்கு ஆராதனை செய்கிற ஒவ்வொரு மனிதனுக்கும் நீ நன்மை செய்கிறாய், தேவதூதனே! இதுதான் உனது உண்மையான குணலக்ஷணம்.

தகப்பனண்டைக்கு மகன் செல்வது எவ்வளவு இலேசாயிருக்கின்றதோ அப்படியே உன்னண்டைக்கு நாங்கள் செல்வதும் இலேசாயிருப்பதாக. நீயே எங்களை நன்மைக்கென்று மேலும் மேலும் நடத்திக்கொண்டு செல்வாயாக.

## சோமன்.

சோமனே! நீ அறிவில் மஹா அறிவாளி. நீதான் எங்களை நேர்மையான வழியில் நடத்திக்கொண்டு போகின்றாய். உன்னுடைய நடத்துதலினாலேயே பக்தியுள்ள எங்கள் பிதாக்கள் தேவர்களண்டையில் பாக்கியத்தை அடைந்தார்கள்.

சோமனே! நீயே ஞானத்தில் மஹா ஞானி, சகலத்தையும் பெற்று வல்லமையில் மஹா வல்லவனானாய். பெலத்திலும் மேன்மையிலும் காளைபோன்றவன், மகிமையிலும் மகா மகிமையுள்ளவன். நீ மனிதனைக் காண்கிறவன்.

சகல சாறுகளும் சகல பலமான சக்திகளும் தவறுதலை மேற்கொள்ளக்கூடிய சகல வல்லமைகளும் உன்னில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

சோமனே! நீயே எங்கள் உண்மை ஆண்டவன், நீயே எங்கள் ராஜா. நீயே விருத்திரனைக் கொன்றவன். சித்தியைக் கொடுக்கிற பலம் நீயே.

சோமனே! வயோதிபர்கள் மேல் ஆசீர்வாதத்தையும் வாலிபர்மேலும் பக்தியுள்ளவன் மேலும் ஜீவிக்கக்கூடிய சக்தியையும் அனுக்கிரகிப்பாயாக.

## சிவபுத்திரர்.

(இது அகஸ்தியர் பாடிய சங்கீதம் என்பர்.)

ஒவ்வொரு யாகத்துக்கும் நீங்கள் விரைந்து வருகின்றீர்கள். ஜெபங்களை ஒன்றின்பின் ஒன்றாய் ஏற்றுக்கொள்கின்றீர்கள்.

ஓ மாருதர்களே! எனது ஜெபங்களினால் உங்களை வானலோகத்திலிருந்தும் பூலோகத்திலுமிருந்து எங்கள் நன்மைக்காகவும் பாதுகாப்புக்காகவும் கொண்டுவருவேனாக.

ஓ மாருதர்களே! இந்த ஸ்தோத்திரம்; மானனின் குமாரனுகிய மண்டாரியன் என்னும் கவிஞன் பாடிய இந்த சங்கீதம், எங்களுக்கு புத்திரர்களை அனுக்கிரகிக்கும்படியாய் வேண்டிக்கொள்ளுகிறது. எங்களுக்கு பெலமும் உற்சாகமும் தரக்கூடிய வருஷத்தையும், யாவற்றையும் செழிப்பிக்கக்கூடிய மழையையும் எங்களுக்கு அருளுவீர்களாக.

சாவித்திரி.

இருண்ட வெளியினூடே சாவித்திரி வருகின்றான். இவனே அழிவில்லாதவர்களையும் அழிவுள்ளவர்களையும் இளைப்பாறச் செய்கிறவன்; சொர்ண ரதத்தில் தங்கிக்கொண்டு பார்க்கிறவன்; எழும்பச் செய்கிற தேவன் இவனே. பிரகாசிக்கிற சாவித்திரி இவனே. அதோ வருகிறான்! பிரகாசமுள்ளவன் வருகிறான். முன்னேறி வருகிறான். உயர்ந்து வருகிறான். கண்ணியமுள்ள தேவனுகிய இவன் இரண்டு மஞ்சள் குதிரைகளோடு வருகிறான். பிரகாசிக்கின்ற தேவனுகிய சாவித்திரி அதிகத் தூரத்திலேயிருந்து சகல கஷ்டங்களையும் நீக்கிக்கொண்டு வருகிறான். முத்துக்களினால் அலங்கரிக்கப்பட்டதும் உயர்ந்ததும் பொன்னுலாகிய அச்சுப்பூண்டதுமான ரதத்திலேறி வருகின்றான்.

சூரியன்.

தேவர்களுடைய பிரகாசமான முகங்கள் எழும்புகின்றன. மித்திரன்; அக்னி, வருணன் இவர்களுடைய கண் இதுவே. ஆகாயம், பூமி, வானம் ஆகியவற்றை அவன் நிரப்புகிறான். நடமாடுகின்றனவும் நிற்பனவுமாகிய யாவற்றிற்கும் ஆத்மா சூரியனே.

ஒரு வாலிபன் இளமைப் பருவத்து பெண்ணுக்கு பின்தொடர்வதுபோல பிரகாசமான தேவியாகிய உதயத்தை சூரியன் பின்பற்றி செல்லுகின்றான்.

ஓ தேவர்களே! இன்றைத்தினத்தில் சூரியன் எழும்பும்போது துன்பத்திலிருந்தும் அபக்கியாதியிலிருந்தும் எங்களை விடுவிப்பீர்களாக. வருணன், மித்ரன், அதிதி, சிந்து, பூமி, வானம் ஆகிய இவர்கள் இந்த வரத்தை எங்களுக்கு அருளுவார்களாக.

உலகத்தை அளந்தவனுகிய விஷ்ணு

விஷ்ணுவினுடைய பலத்த செய்கைகளை நான் பிரஸ்தாபிப்பேன். அவன் மேலான நிலையில் கெட்டியாய் தங்கிக்கொண்டு, அகன்ற அடிகளால் மூவுலகத்தையும் தாண்டினுன்.

அதிகமாய் மனிதர் பயப்படுகிறதும் தன் இஷ்டப்படி அலைந்து திரிந்து மலைகளில் நிலை உண்டுபண்ணுவதுமாகிய கோரமான மிருகத்திற்கு பயப்படுவதுபோல் விஷ்ணுவுக்கும் பயப்படவேண்டும்.

அதிக தூரதூரமான இடங்களில் நடந்து திரிகிற மலைவாழ் காளையைப்போன்ற வனுகிய விஷ்ணுவினண்டைக்கு எனது உற்சாகமான சங்கீதம் செல்லுவதாக. இந்த நீண்டதும் அகன்றதுமான உலகத்தை விஷ்ணு தனது மூன்று அடிகளால் தனிமையாய் அளந்தானே.

MARAIMALAI ADIGAL LIBRARY

இந்திர—வர்ணன்.

ஓ வீரர்களே! உங்களுடைய சிநேக பாந்தமான உதவியை நாடி அவர்கள் அகன்ற ஆயுதங்களை அணிந்துகொண்டு யுத்தப் பிரியராய் சென்றூர்கள். அப்பொழுது நீங்கள் இருவரும்தானே தாச ஜாதியையும் ஆரிய சத்துருக் களையும் அடித்தீர்கள்.

ஓ இந்திர-வர்ணனே! எனது பகைவனுடைய கெடுதியும் என் சத்துருவினுடைய தாக்குதலும் என்னை எல்லாப்பக்கத்திலும் நெருக்குகின்றன. மித்துருவுக் கும், சத்துருவுக்கும் உரியபொருள் உனது ஆதீனத்தில் இருக்கின்றபடி யால் யுத்த தினத்தில் எங்களுக்கு ஜெயத்தை அனுக்கிரகிப்பாயாக.

ருத்ரன்.

ஓ மாருதர்களின் பிதாவே! உன்னுடைய பிரியம் எங்களை பிரகாசிப்பதாக, சூரிய தரிசனையினின்று எங்களை பிரித்துவிடாதே. எங்களுடைய குதி ரைகள் உனது கிருபையினுல் காப்பாற்றப்படட்டும், ஓ ருத்ரனே! எங்க ளுக்கு ஏராளமான புத்திரர்களை கொடுப்பாயாக.

ஓ ருத்ரனே! ஔஷதங்களும் குளிர்ச்சியும் நிறைந்த உனது கிருபையுள்ள கரம் எங்கே? தேவர்கள் அனுப்பிய துன்பங்களை எல்லாம் நீ நீக்குகிறவனுகை யால் ஓ காளையே! நீ இப்போது என்மேல் இரக்கம் காட்டுவாயாக.

இவ்வேதங்களானவை நாலாயிரம் வருஷமாக இந்தியாவில் செலுத்தியிருக்கும் செல்வாக்கு அளவிடற்கரியது. பிற்காலத்தில் இந்தியாவில் தோன்றின சகல மத போதனைகளும் வேதத்தையே தங்களுக்கு ஆதாரமாய்க் காட்டும். உதாரணமாக பிற்காலத்தில் தோன்றிய வேதாந்தம் சித்தாந்தம் முதலிய தத்துவ சாஸ்திர மதோபதேசங்களெல்லாம் வேதங்களின் சாரம் என்றே கூறுவர். தமிழ்நாட்டில் பிந்திய காலங்களில் தோன்றிய தேவார திருவாசகங்கள் வேதசாரம் என்று கூறுவது மல்லாமல், அவைகளுக்குத் தமிழ்வேதம் என்றும் பெயரிடுவர். அவ்வாறே வைஷ்ணவர்கள் சிறப்பித்துக் கொண்டாடுகின்ற நூலாகிய நாலாயிரப் பிரபந்தம் என்னும் புஸ்தகத்துக்கும் தமிழ்வேதம் என்னும் பெயர் வழங்கும். திருவள்ளுவநாயனுர் இயற்றிய நீதிநூலாகிய திருக்குறளுக்கும் தமிழ்மறை என்னும் பெயர் உண்டு. சகல அறிவும் ஞானமும் வேதங்களினின்றே பிறக்கின்றன என்பது ஹிந்துமதத்தினர் கொள்கை.

1. ருக் வேதம்.—நாம் மேலே பார்த்த விஷயங்களெல்லாம் மிகுதியாய் ருக் வேதத்திலிருந்தே எடுத்துச்

சொல்லப்பட்டன. இந்த ருக் வேதமானது உலகத்தி லுள்ள புஸ்தகங்களிலெல்லாம் அதிகப் பூர்வீகமானது. இப்பொழுது உலகத்திலுள்ள புஸ்தகங்களில் ருக் வேதத்துக்கு முந்தின புஸ்தகம் இல்லை. இந்த நூலானது அநேக நூற்றாண்டுகளாக எழுதப்படாமல் வாய்மொழியாக ஒரு சந்ததியினின்று மறு சந்ததிக்கு ஒப்புவிக்கப்பட்டு வந்தது. இந்த ருக் வேதத்தில் சொல்லப்பட்டவைகள் மகா இன்பமான சுலோகங்கள். பூர்வ ஆரியர்களுடைய வழக்க பழக்கங்கள், யுத்தமுறைமைகள், அன்றாடக ஜீவியம், ஆராதனைமுறைகள், ஜனசங்க நிலைமை முதலிய அநேக விஷயங்களை நாம் அறிவதற்கு இடமாய் நிற்பதால் இந்த நூல் மேற்கு தேசங்களிலும் கிழக்கு தேசங்களிலும் உள்ள சர்வ பண்டிதர்களாலும் விசேஷமாய் கொண்டாடப்படுகின்றது.

2. சாம வேதம்.—இரண்டாம் வேதமாகிய இது மிகுதியாய் ருக் வேதத்திலிருந்து எடுக்கப்பட்ட சங்கீதங்களினாலேயே ஆகியது. ருக்வேதத்தில் இல்லாத எழுபத்தைந்து சங்கீதங்கள் மட்டுமே சாமவேதத்தில் இருக்கின்றது. சாமவேதம் சோமபலி காலத்தில் பாடப்பட வேண்டிய சங்கீதங்களின் தொகுதி. தெரிந்தெடுக்கப்பட்ட இச்சங்கீதங்கள் செவிக்கு மெத்த இனிமையானவை. ஆகையால்தான் 'சாமவேத கானம்போல் இனியது' என்னும் பழமொழி உண்டானது.

சாமவேதம் 1549 சங்கீதங்கள் அடங்கியது. இவற்றுள் 1472 ருக் வேதத்தினின்று எடுக்கப்பட்டவை.

3. யஜுர்வேதம்.—மூன்றாம் வேதமாகிய யஜுர் வேதமும் இரண்டாம் வேதத்தைப்போலவே மிகுதியாய் ருக் வேதத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட சங்கீதங்களினால் ஆகியது. இது மூன்றாவது பிராமண வகுப்பாருக்குப் பிரயோஜனமாய் இருக்கத்தக்கதாக உண்டாக்கப்பட்டது. ருக்வேதத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட சங்கீதங்களைத்தவிர, வசனரூபமாகவுள்ள சில வாக்கியங்களும் இவ்வேதத்தில் உண்டு.

# III

# THE BRAHMANA-ARANYAKA PERIOD.

---

மூன்றாவது

# பிராமணாரணியக பருவம்.

கி. மு. 1000—750.

மூன்றாவது

## பிராமணாரணியக பருவம்.

பிராமணியங்கள், ஆரணியகங்கள்

**கி. மு. 1000—750.**

சுமார் முந்நூறு வருஷங்களடங்கிய இக்காலத்தில் பிராஹ்மணங்கள் ஆரணியகங்கள் என்னும் புஸ்தகங்கள் இயற்றப்பட்டமையாலும், இக்காலத்து மதத்தின் அதி விசேஷமான காரியமாகிய பலிகளைப்பற்றி பிராஹ்மணங்கள் என்னும் நூல்களிலே கூறப்பட்டிருக்கிறபடியாலும் இப்பருவம் பிராஹ்மணாரணியக பருவம் என்று பெயர் பெற்றது.

### I. சரித்திரம்.

ஆரியர்கள் கிழக்குமுகமாய் இன்னும் பரவிக்கொண்டே சென்றனர். இப்பருவத்தின் கடைசியில் வட இந்தியா முழுவதும் ஆரியர்களுடைய ஆளுகைக்கும் நாகரீகத்துக்கும் உள்ளடங்கியது. ஆரியர் ஜெயம் பெற்றுச் சென்ற இடங்களிலெல்லாம், அவர்களுடைய குருக்களாகிய பிராமணர் பூர்வகுடிகளைத் தங்கள் செல்வாக்கின் கீழ்க்கொணர்ந்தார்கள். இக்குடிகளையெல்லாம் தங்களைவிட்டு முழுவதும் பிரத்தியேகமான ஜாதியாகப் பாவிக்காமல், தங்களுக்குள் நாலாவது பிரிவாரான சூத்திரஜாதியாக பாவித்தார்கள். இப்படியாக அநேக ஜாதிகள் கிளம்பின.

தேசமானது அநேக சிறுசிறு ராஜ்யங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் அநேகம் ஆரியகுல ராஜாக்களால் ஆளப்பட்டன. வியாபாரம் விருத்தியடைந்தது. இந்திய சமுத்திரத்தில் கப்பல் வியாபாரமும் தலையெடுத்தது. ஐஸ்வர்யம் அதிகமாய் விருத்தியடைந்து வந்தது. இந்திய மாலுமிகளுக்கு பாபிலோனிய வர்த்தகரோடு ஏற்பட்ட போக்குவரத்து சிலாக்கியங்களின் பலனாய், எழுத்துவித்தையை ஆரியர் இக்காலத்தில் கற்றுக்கொண்டார்கள்.

ஸ்திரீகளுடைய நிலைமை சற்றே தாழ்வடையத் தொடங்கினது. ஒரு மனைவி தன் புருஷனோடு உட்கார்ந்து சாப்பிடக்கூடாது என்னும் கோட்பாடு இக் காலத்திலேயே தொடங்கிவிட்டது.

ஆகவே இந்த மூன்று நூற்றாண்டுகளும் ஆரியர்களுக்கு மிகவும் சிலாக்கியமான காலங்களே. யுத்தத்தில் எப்பக்கமும் ஜெயம்; பூர்வஜாதியார் இவர்களுக்குக்கீழ் அடங்கினர். வியாபாரமும் நாகரீகமும் அதிகப்பட்டது. படிப்படியாய் ஜனங்கள் கல்வியிலும் விருத்தியடைந்தார்கள்.

## II. மார்க்கம்.

மதசம்பந்தமாய் இப்பருவத்தில் பல அபிவிர்த்திகள் காணப்படுகின்றன. தற்கால ஹிந்துமதத்துக்குரிய பல அம்சங்கள் இப்பருவத்துள்தான் விசேஷமாய்த் தோன்றுகின்றன.

1. பலிகளின் ஆசாரவிர்த்தி.—வேதமார்க்கத்து பலிகளைப்பற்றிய ஆசாரம் முதலியவை விருத்தியடைந்ததே இக்காலத்து மார்க்கத்தைப்பற்றி விசேஷமாய்க் குறிப்பிடத்தக்கது. ருக்வேத காலத்தில் மனிதர் தங்கள் பலியினாலும், சங்கீதங்களினாலும், பிரார்த்தனைகளினாலும், தேவர்களுடைய தயவைப்பெறவும் தங்கள் கோரிக்கைகளை ஈயும்படி அவர்களை தூண்டவுமே நாடினார்கள். ஆனால் இக்காலத்திலே பலிகளைப்பற்றி மிகப் பிரமாண்டமான எண்ணங்கள் தோன்றின. சரியான விதத்தில் பலியை ஒருவன் செலுத்துவானானால் தனது வேண்டுகோளை எவ்விதத்திலாவது அத்தெய்வம் கொடுக்கும்படி அப்பலி அத்தெய்வத்தைக் கட்டாயப்படுத்தும். மனிதன் சரியான அளவுக்கு பலிகளைச் செலுத்துவானானால், அது அவனை தேவர்களுடைய ஸ்தானத்துக்கு உயர்த்தும். ஆகையால் இப்பலிகளைச் செலுத்தும் விஷயத்தில் அப்பலிக்குரிய நுட்பமான ஆசாரங்களையும் பிரமாணங்களையும் கவனிப்பது இன்றியமையாத அவசியமாயிற்று.

2. பிராமணர்.—ஆசாரியர் இக்காலத்தில் அதிக செல்வாக்கும் வல்லமையும் அடைந்தார்கள். பலிகளின் ஆசாரவிர்த்தி அதிகப்பட அதிகப்பட இவர்களுடைய அதிகாரமும் வல்லமையும் அதிகப்பட்டது. இந்த ஆசாரியர்களாகிய பிராமணர்களாலே மாத்திரம் பலிகள் செலுத்தப்படவேண்டும். இவ்வாறு பிராமணர் அதிக உன்னதஸ்தானம் அடைந்தார்கள். அவர்கள் இக்காலத்தில் மிகுதியாய் தெய்வாம்சமுடையவர்களாய் எண்ணப்பட்டார்கள். ஜனங்கள் அவர்களை தேவர்களாகக் கருதி தேவர்களைக்காட்டிலும் அதிக பயபக்தியோடு இவர்களிடத்தில் நடந்துகொண்டார்கள்.

"உண்மையாகவே, இரண்டுவிதமான தேவர்கள் உண்டு. தேவர்கள் ஒருவகை, வேதங்களைக்கற்று வேதாகமங்களை கற்பிக்கிற பிராமணர்கள் இன்னொருவகை" என்று சதபத பிராமணத்தில் கூறியிருக்கிறது. இதினிமித்தம் பிராமணர்களுக்கு பூதேவர்கள் என்னும் பெயர் உண்டாயிற்று. பிராமணர்களுக்குக் கொடுக்கப்படும் தக்ஷிணை தேவர்களுக்கு இடும் பலிகளைப்போலவே புண்ணிய பலம் பொருந்தியதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

3. தெய்வத்தைப்பற்றிய மேலான எண்ணங்கள்.—வேத சங்கீத காலத்து ஆரியர்கள் தெய்வத்தைப்பற்றிக் கொண்டிருந்த எண்ணங்களுக்கும், இக்காலத்துள்ளவர் கொண்டிருந்த எண்ணத்துக்கும், பல வித்தியாசங்கள் உண்டு. தெய்வத்தைப்பற்றிய சில விசேஷ அம்சங்களில் இக்காலத்திய கோட்பாடு பல மாறுதல்களை அடைந்திருந்தன. இரண்டு விஷயங்களில் இம்மாறுதலை நாம் காண்கிறோம்.

(1) ஒரே கடவுள் உண்டு என்னும் நம்பிக்கை. வேத சங்கீத காலத்தில் ஒரே கடவுள் உண்டு என்னும் எண்ணத்தை நாம் காண்கிறதில்லை. முப்பத்து மூன்று விசேஷ தேவர்களும் வேறு அநேக சாமானிய தேவர்களும் உண்டென அக்காலத்தவர் நினைத்தனர். சமயத்துக்குத் தக்கபடி ஒரு தேவனை மற்ற எல்லா தேவர்களைக்

காட்டிலும் விசேஷம் என்று அவர்கள் ஒப்புக்கொண்டு
அந்த தேவனுக்கே மிக உயர்வான ஸ்துதி ஸ்தோத்தி
ரங்கள் பாடி ஆராதித்தாலும், அவர்கள் எப்பொழுதும்
இப்படியே நினையாமல், ஒரு சமயத்தில் ஒரு தேவனை
யும் இன்னொரு சமயத்தில் வேறொரு தேவனையும் விசே
ஷித்து வந்தமையால், இது ஏகேச்சுரவாதமாகாது.
மேலும் இந்த கோட்பாடு அத்தனை திட்டமாகவும் தெளி
வாகவும் கூறப்படவில்லை. வேத சங்கித காலத்து எண்
ணங்கள் இத்தன்மையாயிருக்க, இக்காலத்திலோ ஒரே
ஒரு தெய்வம்தான் உண்டு என்னும் எண்ணம் உதித்தது.
அநேக தேவர்கள் இருந்தாலும் அவர்களுக்கும் மேலாக
ஒரு ஏகதெய்வம் உண்டு. ஒன்றான இத்தெய்வத்தைப்
பற்றி இரண்டுவிதமான சித்தாந்தங்கள் உண்டாயின.
(i) வேதத்தில் லோகசிருஷ்டிகராகக் கூறப்பட்டிருக்கிற
பிரஜாதிபதிதான் இந்த ஒன்றான தெய்வம் என்றார்கள்.
சாதாரண தெய்வங்கள் எல்லாம் தோற்றம் ஒடுக்கம்
முதலிய வாதனைகளுக்கு உள்ளானவர்களாயிருக்க இந்
தப் பிரஜாதிபதி மட்டுமே இவற்றுக்கெல்லாம் மேலான
வர். மற்றத் தேவர்கள் பலிசெலுத்துவதினாலும் தபசு
அனுஷ்டிப்பதினாலுமே மேலான கடவுளினிடத்தின்று
சாவாமையாகிய வரத்தைப்பெற்று அனுபவித்து வந்
திருக்கிறார்கள். பிரஜாதிபதியே இந்த ஒன்றான மெய்த்
தெய்வம் என்பது இவர்கள் கோட்பாடு. ஆயினும் இவ்
வித ஏகேச்சுரவாத கோட்பாடு அத்தனையாக விருத்
தியடையவில்லை. (ii) வேறு சிலரோ ஒன்றான இத்தெய்வம்
ஏதாவது ஒரு தெய்வத்தோடு மாத்திரம் சம்பந்தப்
பட்டவராயிராமல், சர்வத்திலும் வியாபகமாயிருக்கிற
ஒரு வஸ்துவைக் குறிக்கிறது என்றார்கள். இந்தக் கொள்
கைதான் படிப்படியாக விர்த்தியடைந்தது. சர்வத்தி
லும் அடங்கி இருக்கிற சர்வ வியாபக வஸ்துவே இந்த
ஒன்றான தெய்வம் என்னும் இக்கோட்பாடு இக்காலத்
தில் எழுதப்பெற்ற ஆரணியகங்கள் என்னும் நூல்களில்
ஓரளவு சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு அடுத்த பரு
வத்தில் இயற்றப்பட்ட நூல்களாகிய உபநிஷதங்களில்
தான் இந்தப் பரமவஸ்து எப்படிப்பட்டதென்று

மிகவும் விரிவாய் வியார்த்தி செய்யப்பட்டிருக்கின்றது.

(2) வேத சங்கிதங்களில் கூறப்பட்ட அநேக தேவர்கள் இந்தக்காலத்தில் அத்தனை விசேஷமாய் மதிக்கப்படவில்லை. அதற்கு மாறாக வேதத்தில் அதிக சிறப்பாய்க் கொண்டாடப்படாத இரண்டு தேவர்கள் இக்காலத்தில் அதி விசேஷமாய்க் கொண்டாடப்பட்டார்கள். இத்தேவர்கள் சிவனும் விஷ்ணுவுமே. இந்த இரண்டு தேவர்களிடத்திலும் அமைந்த குணலக்ஷணங்கள், ஆரியர்கள் ஜெயித்த திராவிடர் முதலிய ஜாதிகளின் பூர்வ தெய்வங்களுக்கும் வழக்க பழக்கங்களுக்கும் ஒத்தவைகளாயிருந்தபடியால், இந்த இருதேவர்களும் மிக்க உயர்வாய் மதிக்கப்பட்டார்கள். இவ்விருதேவர்கள் சார்பாய் உண்டான மார்க்கங்கள் பிந்திய காலத்தில் சைவம் வைஷ்ணவம் என்னும் பெயர்களோடு மிக்கப் பிரக்யாதிபெற்று விளங்கின. இவற்றிற்குரிய வளர்ச்சியையும் இவற்றின் தன்மையையும்பற்றி பிந்திய பருவங்களில் விரிவாய்ப் படிப்போம்.

3. புராணக்கதைகள்.—இவ்வித கதைகள் வேத சங்கிதகாலத்தில் வெகு சொற்பம். இந்தக்காலத்தில்தான் இக்கதைகள் அதிகமாய் உண்டாயின. பிராமணங்களில் இக்கதைகள் ஏராளமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றுள் இரண்டொரு கதைகளை உதாரணமாகச் சொல்லுவோம்.

சுனசேபன் கதை (நாய்வால்).—அரிச்சந்திரன் என்று ஓர் அரசன் இருந்தான். அவனுக்குப் பிள்ளைகள் இல்லை. தனக்கு ஓர் புத்திரன் உண்டாகும்பட்சத்தில் அவனை வருணதேவனுக்குப் பலியிடுவதாகப் பிரதிக்கினை செய்துகொண்டான். இதன் பின்பு அவனுக்கு ரோகிதன் என்று ஒரு குமாரன் பிறந்தான். புத்திரன் பிறந்த பின்பு, அரசன் பலியிடும் நாளைக்கடத்திக்கொண்டே வந்தான். பையன் வளர்ந்தபின்பு வருணன் பிதாவை நெருக்க, பிதா யாகத்துக்கு வேண்டிய சகலத்தையும் ஆயத்தம்பண்ணினான். ஆனால் ரோகிதன் அவ்விடத்தி

னின்று தப்பி காட்டுக்கு ஓடி ஆறுவருஷம் அங்கு அலைந்து திரிந்தான். இக்காலத்தில் வருணதேவன் அரிச்சந்திர ராஜனுக்கு நீர்க்கோவை வியாதியை அனுப்பி அரசனை வருத்தினான். அரசன் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க, ஓர் பிராமணன்வந்து அரசன் தனக்கு நூறு பசுக்கள் கொடுக்கிறதாயிருந்தால் தன் புத்திரன் சுனசேபனை ராஜகுமாரனுக்குப் பதிலாகப் பலியிடும்படி தான் விற்றுப்போடுவதாகச் சொன்னான். இதைப்பற்றி வருணனைக் கேட்க, வருணன் க்ஷத்திரியனிலும் பிராமணன் உசிதமே என்று சொல்லி இணங்கினான். ஆகவே சுனசேபனை ஒரு கம்பத்தோடு சேர்த்துக்கட்டி அவனைப் பலியிடப்போனார்கள். அப்பொழுது சுனசேபன் ஒருவர்பின் ஒருவராய் அநேக தேவர்களைப் பிரார்த்தித்தான். ஒவ்வொரு கவியையும் அவன் உச்சரிக்கும்பொழுது, வருணனால் தரிக்கப்பட்ட விலங்குகள் ஒவ்வொன்றாய் விழுக ஆரம்பித்தன. அரசனுடைய நீர்க்கோவை வீக்கமும் குறைய ஆரம்பித்தது. கடைசியாக சுனசேபன் விடுதலை யடைந்தான். அரிச்சந்திர ராஜனும் பூரண சுகமடைந்தான். இக்கதை ஐத்தரேய பிராமணத்தில் சொல்லியிருக்கிறது.

ஜலப்பிரளயக் கதை.—மனுவானவர் கைகழுவும்படி அவருக்குக் காலையில் ஜலம் கொண்டுவந்தார்கள். அவர் தம் கைகளைக் கழுவிக்கொண்டிருக்கும்போழுது ஒரு மீன் அவருடைய கைக்குள் அகப்பட்டது. அந்த மீன் மனுவை நோக்கி நீர் என்னை வைத்துக்கொள்ளும், நான் உம்மைக் காப்பாற்றுவேன் என்று சொன்னது. மனு அப்படியே செய்தார். அம்மீன் சீக்கிரத்தில் கொம்புள்ள ஓர் பெரிய மீனாய்விட்டது. அப்பொழுது அம்மீன் மனுவைப் பார்த்து "இன்ன வருஷம் கோடைகாலத்தில் வெள்ளம் அதிகப்பட்டு ஜலப்பிரளயம் உண்டாகும். நீர் ஒரு கப்பலை உண்டுபண்ணி, பிரளயம் உண்டாகும்பொழுது அதற்குள் நுழைந்துகொள்ளும் நான் உம்மை ரக்ஷிப்பேன்" என்று சொன்னது. மீன் சொன்ன காலத்தில் பிரளயம் உண்டானது. மனு ஓர் கப்பலை உண்டாக்கி அதற்குள் நுழைந்தார். மீன் நீந்த ஆரம்

பித்தது. கப்பலின் கயிற்றை மனு மீனின் கொம்பில் கட்டினார். மீன் அவரை வட பர்வதத்துக்கு நேரே நடத்தினது. அங்கு சேர்ந்தபொழுது மீன் அவரைப் பார்த்து "இதோ நான் உம்மை ரக்ஷித்திருக்கிறேன், இந்தக் கப்பலை ஒரு மரத்தில் கட்டும், தண்ணீர் வற்றிய பிற்பாடு நீர் கீழே இறங்கிச் செல்லும் என்று சொன்னது." மனு அப்படியே இறங்கினார். ஆகையால் அம்மலைக்கு மனுவிறங்கு மலை என்று பெயரானது. ஜலப் பிரளயமானது உலகத்திலுள்ள சர்வத்தையும் நாசஞ் செய்துவிட்டது. மனு ஒருவர் மட்டுமே இருந்தார். சந்தானத்தையும் லோக விருத்தியையும் கருதி மனுவானவர் தபஸ் இயற்றினார். அவர் ஒரு யாகத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கையில் நெய் தயிர் மோர் முதலியவற்றைத் தண்ணீரில் ஊற்றினார். ஒரு வருஷங்கழித்து இவற்றினின்று ஒரு பெண் உற்பவித்தாள். மித்திரனும் வருணனும் அவளைச் சந்தித்து நீ யார் என்றார்கள். அதற்கு அவள் நான் மனுவினுடைய புத்திரி என்றாள். தங்களுடைய புத்திரி என்று சொல்லச் சொன்னார்கள். அவள், அப்படியல்ல, நான் என் பிதாவின் புத்திரி என்றாள். அவள்மேல் தங்களுக்கும் பங்கிருப்பதாக அவர்கள் கூறினார்கள். இதற்கு அவள் இணங்கியும் இணங்காமலும் இருந்தாள். அவள் அவர்களோடு மனுவினிடத்துக்குப் போனாள். "நீ யார்" என்று மனு கேட்டார். "நான் தங்கள் புத்திரி" என்றாள். "மகிமையுள்ள ஸ்திரீயே! நீ எப்படி எனது புத்திரி" என்று கேட்டார். "யாககாலத்தில் தாங்கள் தண்ணீரிலிட்ட நெய் பால் மோர் தயிர் இவற்றினின்று நான் பிறந்தேன். நான் ஓர் ஆசீர்வாதம், இந்த யாகத்தில் தாங்கள் என்னை உபயோகித்தால், தங்களுக்கு யதேஷ்டமான புத்திரரும் ஆடுமாடுகளும் உண்டாகும். என் மூலமாய்த் தாங்கள் என்னென்ன ஆசீர்வாதத்தை நாடுவீர்களோ அவைகளெல்லாம் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று கூறினாள்." அப்படியே அவர் யாகத்தின் மத்தியில் அவளை உபயோகித்தார். அவரும் அவளுமாக புத்திர சந்தானத்தை விரும்பி ஆராதனை செய்துகொண்டும் தபஸ்

இயற்றிக்கொண்டும் வந்தார்கள். இவள் மூலமாய் மனுக் குலமாகிய உலக ஜாதிகளை எல்லாம் இவர் பெற்றார். அவள் மூலமாக என்னென்ன ஆசீர்வாதங்களுக்காக அவர் வேண்டிக்கொண்டாரோ அவையெல்லாம் அவருக்கு அனுக்கிரகிக்கப்பட்டன. இக்கதை சதபத பிராமணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

வராகாவதாரக் கூர்மாவதாரக் கதை.—வைஷ்ணவர் இக் கதைகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு வெகுகாலத்துக்கு முன்னேயே இவைகள் பிராமணங் களில சொல்லப்பட்டிருக்கிறது. தெய்வீக பலம் பொருந்திய ஆமை பன்றி இவைகளைப்பற்றிப் பொதுவாய்ச் சொல்லப்பட்டிருக்கிற இந்தச் சிறிய கதைகள் பிற்காலத்தில் விஷ்ணுவோடு சம்பந்தப்படுத்தப்பட்டு, விரிவடைந்து, வைஷ்ணவ சம்பிரதாயத்தில் அதி முக்கியத் தன்மை யடைந்தன.

இப்படியே ஏராளமான கதைகள் பிராமணங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

4. சந்நியாசம்.—வேதசங்கித காலத்தில் சந்நியாசிகளைப்பற்றி நாம் பார்க்கிறதில்லை. இப்பருவத்தின் அந்தத்திலிருந்துதான் சந்நியாசிகளைப்பற்றி நாம் வாசிக்கிறோம். இவர்கள் நாட்டைவிட்டுக் காட்டுக்குச் சென்று அங்கே மரங்களினாலும் இலைகளினாலும் குடிசைகளைக் கட்டிக்கொண்டு, அவற்றில் குடியிருந்து தபஸ் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு வனப்பிரஸ்தர் என்றும் தபசிகள் என்றும் பெயர். இவர்கள் இருப்பிடத்துக்கு ஆச்சிரமம் என்று பெயர். இவர் மரவுரி அல்லது தோலுடையுடுத்து, ஜடாமுடி தரித்து, காட்டில் கிடைக்கும் காய் கனி கிழங்கு முதலியவற்றைப் புசித்து அதிகக் கொடூரமான உஷ்ணத்திலும் குளிரிலுமிருந்து கடுந்தவம் புரிந்துவருவார்கள். இவர்கள் இவ்வித அருந்தவங்களை இயற்றிவருவதன் நோக்கம் பெரும்பாலும் அற்புத சக்தியைப் பெறுவதாயிருந்தாலும், சன்மார்க்க சார்பான நோக்கங்களும் உள. மனிதர்மேலும் தேவர்கள்மேலும் அற்புதார்த்தமான

வல்லமையைத் தேடுவது போலவே, தபசிகள் ஆத்ம சுத்தியையும் தெய்வப்பிரசன்னத்தையும் நாடுகிறார்கள்.

இந்த சந்நியாசிகள் சில சிஷர்களைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு உபதேசஞ் செய்துவருவார்கள். இப்படியாகத் தாங்களும் தபசிகளாக விரும்பும் பாலியருக்கு, மற்றத் தபசிகளால் ஆரணியத்தில் கொடுக்கப்பட்ட உபதேசங்களுக்கு ஆரணியகம் என்று பெயர். பலிகளை ஞானோபமானங்களாகப் பாவித்து அவற்றுக்கு ஞானார்த்தம் கற்பிப்பதே ஆரணியகங்களுடைய விசேஷ தன்மை.

5. பூர்வகுடிகள்.—தங்களுடைய ஆளுகைக்கும் செல்வாக்குக்கும் உட்பட்ட பூர்வகுடிகள் தங்கள் பழைய ஆராதனையையும் தெய்வங்களையும் வைத்துக்கொள்ளும்படி ஆரியர் விட்டுவிட்டார்கள். இதுபற்றித்தான் இன்றையதினம் வரைக்கும் பல ஜாதியார் அநாரிய (கிராம) தேவதைகளை வணங்கிவருகிறதைப் பார்க்கிறோம். பிராமணருடைய சாதாரண கோட்பாடுகளில் சிலவற்றையும், பிராமணர்களுடைய அதிகாரத்தையும் ஒருவாறு ஒப்புக்கொண்டால் அதுவே போதும் என்று சொல்லி, பூர்வகுடிகளை முழுவதும் ஆரிய மதப்பிரவேசம் செய்யச்சொல்லாமல் விட்டுவிட்டார்கள். இப்படியாக ஆரியர்களுக்கும் அநாரிய பூர்வ குடிகளுக்கும் ஏற்பட்ட ஒற்றுமையின் பலனாக பூர்வகுடிகள் ஆரியரிடத்திலிருந்து அநேக காரியங்களைக் கற்றுக்கொண்டார்கள். அப்படியே பூர்வகுடிகள் வழங்கிவந்த அநேக அநாரிய வழக்க பழக்கங்களும், கோட்பாடுகளும், மதானுஷ்டானங்களும் படிப்படியாய் ஆரியமதத்தினுள்ளும் சென்றது. இவ்வாறு ஆரியர் அநாரிய பூர்வ குடிகளிடமிருந்து பெற்ற விஷயங்களுள் புனர்ஜன்மம், சர்ப்ப வணக்கம், விருக்ஷ வணக்கம், புண்ணிய தீர்த்தம், ஸ்தல யாத்திரை முதலியவை விசேஷித்தவை.

## III. புஸ்தகங்கள்

பிராமணர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருந்த பாடசாலைகள் இக்காலத்தில் வளர்ந்தோங்கின. ஒவ்

வொரு பிராமணனும் ஏதாவது ஒரு வித்யாசாலையில் கற்றுத் தேறியவனாய் இருக்கவேண்டும். பிராமணருள் தான் எந்த வகுப்பைச் சேர்ந்தவனாய் இருந்தானோ, அந்த வகுப்புக்குரிய வேதத்தை அவன் மனப்பாடமாய் படித்திருக்க வேண்டுவதுமல்லாமல், அவற்றைப்பற்றித் தனது ஆசிரியன் கற்பிக்கும் பல விஷயங்களை அறிந்தவனாயும் அந்த வேதங்களைச் சரியானபடி உச்சரிக்கக் கூடியவனாயும் இருக்கவேண்டும். மதசம்பந்தமான படிப்பைத்தவிர சாதாரண கல்வியும் இக்காலத்தில் அதிக விர்த்தியானது. பாஷைக் கல்வி அதிகமாய் முன்னேறினது.

இப்பாடசாலைகளில் அளிக்கப்பட்ட வித்தையெல்லாம் வாய்மொழிப் பரம்பரையாகவே வழங்கிவந்தன. ஒவ்வொரு பாடசாலைக்குரிய பரம்பரை வியாக்கியானங்களும் காலாகாலத்தில் விசேஷிக்கப்பட்டு, அவ்வப் பாடசாலையைச் சேர்ந்தவர்களால் காக்கப்பட்டு வந்தது. இவைகள் பிற்காலத்தில் பிராமணங்கள் என்று பெயர் பெற்றவை. ஆகவே இக்காலமுதல் வேதங்களைப் படிப்பவன் அவ்வேதங்களோடு அவ்வவ் வேதங்களுக்குரிய வியாக்கியானங்களாகிய பிராமணங்களையும் படிக்கவேண்டியது அத்யாவசியமாயிற்று. கல்வி விருத்தியடைந்து, அநேக வேத வித்யாசாலைகளும் அவ்வவ் வித்யாசாலைகளுக்குரிய பரம்பரை வியாக்கியானங்களாகிய பிராஹ்மணங்களும் அதிகப்பட்டன. பலி வியாக்கியானங்களைப் பற்றிய இப்பரம்பரை வியாக்கியானங்களுக்கு பிராமணர்கள் என்னும் பெயர் உண்டாயிற்று. ருக், யஜுர், சாமம், அதர்வம் என்ற நாலு வேதங்களில் ஒவ்வொரு வேதத்துக்கும் உரிய பல பிராஹ்மணங்கள் உண்டு. ஒவ்வொரு பிராமணத்துக்கும் ஓர் பெயர் உண்டு. உதாரணமாக ஐத்தரேய பிராமணம், சதபத பிராமணம், தைத்திரீய பிராமணம், ஜைமனீய பிராமணம்.

இந்த பிராமணங்கள் வாசிப்பதற்குக் கொஞ்சமும் பிரியமாயிராத கஷ்டமான புஸ்தகங்கள். இவை வேத

பலிகளை வியாக்கியானப் படுத்துபவை. பலவேறு பாரம்பரியங்கள் அடங்கியவை. மதசம்பந்தமான மற்ற அநேக நூல்களைப்போல் கவிரூபமாக இயற்றப்படாமல், மிருதியாய் வசனரூபமாக வுள்ளவை. இந்தப் பிராமணங்களிலிருந்து அந்தக்காலத்து மார்க்கத்தைப்பற்றிச் சரித்திர சம்பந்தமான பல விஷயங்களை அறிந்து கொள்ளுகிறோம்.

2. ஆரணியகங்கள். — இவ்வார்த்தைக்குக் காட்டுக்குரியவை என்று பொருள். நாட்டைத்துறந்து காட்டுக்குச் சென்று ஆங்கு தபஸ் இயற்றிவந்த ரிஷிகள் தங்கள் சீஷர்களுக்கு உபதேசித்த போதனைகள் அடங்கியது. பலிகளுக்கு ஞானார்த்தங்கூறுவது. ஆரணியகங்கள் பிராமணங்களோடு சாதாரணமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றபடியினுல்தான் பிராமணுரணியக பருவம் என்று கூட்டிச்சொன்னோம். ஆரணியகங்களை பிராமணங்களினின்று பிரித்து உபநிடதங்களோடு கூட்டிச் சொல்லுவாரும் உளர்.

இவ்வித ஆரணியகங்களுக்குக் கீழ்வருவது ஒரு உதாரணமாகும்.

### அஸ்வமேதயாகம் (குதிரைப் பலி)

#### ஒரு பாலிய வானப்பிரஸ்தனின் தியானம்

யாகக் குதிரையின் சிரசு உதயமே. அதன் கண் சூரியன், அதன் மூச்சு ஆகாயம், அதன் வாய் அக்கினி, யாகக் குதிரையின் உடம்புதான் வருஷம். அதன் முதுகு வானம். அதன் வயிறு ஆகாசம். அதன் நெஞ்சு பூமி, அதன் கால்கள் நாற்றிசை, அதன் விலாவெலும்புகள் காலங்கள், அதன் மடக்குகள் மாசங்களும் அரைமாசங்களும், அதன் பாதங்கள் பகலும் இரவும், அதன் எலும்புகள் நக்ஷத்திரங்கள், அதன் சதை மேகங்கள், அரைகுறையாய் ஜீரணமாயிருக்கிற அதன் இரை மணல், அதன் குடல்கள் நதிகள், அதன் ஈரல் மலைகள், அதன் மயிர்கள் புல்பூண்டு விருக்ஷங்கள், சூரியன் உதிக்கும்பொழுது அது குதிரையின் முன்பாகம், சூரியன் அஸ்தமிக்கும்பொழுது அதன் பின்பாகம், குதிரை ஆடும்பொழுது மின்னல் வெட்டுகிறது, அது உதைக்கும்பொழுது இடி இடிக்கிறது, அது நீர் விடும்பொழுது மழை பெய்கிறது, சத்தம் அதன் சத்தமே; இது பிருகுதாரணியத்தில் சொல்லியிருக்கிறது.

3. அதர்வ வேதம்.—ருக், யஜுர், சாமம் என்னும் மூன்று வேதங்களும் ஒரு காலத்தில் தொகுக்கப் பட்டவை என்று முன்னேயே பார்த்தோம். நாலாம் வேதமாகிய அதர்வம் இந்தக்காலத்தில் இயற்றப்பட் டது. இதில் ஜனங்களுடைய மூடபக்தியைப்பற்றிப் பல விஷயங்களை அறியலாம். இன்பத்தையும் துன்பத் தையும் கொண்டுவரக்கூடிய அநேக மந்திரங்களையுடை யது. இது விசேஷமாய் இப்படிப்பட்ட பாடல்களி னாலேயே ஆக்கப்பட்டிருப்பதால், அநேகருக்கு மற்ற மூன்று வேதங்களைப் பார்க்கிலும் நாலாம் வேதமாகிய அதர்வணத்தில்தான் வெகு பிரீதி. ஆயினும் பண்டி தர்கள் இந்நூலை வெகுகாலமாய் வேதமாக ஒப்புக் கொள்ளவில்லை. சற்றே பிந்தியகாலத்தில்தான் இந்த நாலாம் வேதம், வேதமாக ஒப்புக்கொள்ளப்பட்டு, மற் றைய மூன்று வேதங்களோடும் சரியாய் எண்ணப் பட்டது.

இம்மந்திரங்களைச் சரியாய் உச்சரிப்பதால் தங்க ளுக்கு இன்பத்தையும் தங்கள் சத்துருக்களுக்கு துன் பத்தையும் கொண்டுவரலாம் என்று பூர்வத்தார் எண் ணினார்கள். ஜுரம், நீர்க்கோவை, இருமல், குருடு, காயம் முதலிய வியாதிகளைத் தீர்ப்பதற்கு மந்திரங்கள் உள. இம்மந்திரங்களோடு சேர்த்து சில மூலிகைகளும் சொல் லியிருக்கிறது. ஆகவே ஹிந்து வைத்திய சாஸ்திரத்தின் அதிபூர்வநூல் அதர்வ வேதம் என்னலாம். ஜீவனுக் காகவும், சுகத்துக்காகவும், மரணத்திலிருந்து விடுவிக் கப்படுவதற்காகவும், யுத்த ஜெயத்துக்காகவும், இன்னும் அநேக காரியங்களுக்காகவும் பல மந்திரங்கள் கூறப் பட்டிருக்கின்றன. இவ்வித மந்திரங்களில் ஒன்றை உதா ரணமாக எடுத்துச் சொல்லுவோம்.

ஜுரமந்திரம்

ஆகையால் தூய்மையான பெலத்தினால் நிரப்பப்பட்டு, அக்னியும், சோம னும், வருணனும், ஏந்திரக்கல்லும், பலிபீடமும், புல்லும், ஜுவாலித் தெரிகிற விறகும், காய்ச்சலைத் துரத்துக. வெறுக்கப்பட்ட விஷயங் கள் தூரத்திலே இருக்கட்டும்.

ஓ, ஜ்வரமே! அக்னி எரிப்பதுபோல சகல மனிதரையும் எரித்து அவர்கள் யாவரையும் மஞ்சளாக்குகிறவனே! நீ பலட்சியப்பட்டு சக்தியற்றுப் போவாயாக. கீழேயுள்ள பூமிக்குள் போய்விடு, அல்லது மறைந்து போ.

ஓ, ஜ்வரமே! அந்நிய ஜாதியாரண்டை போ. அந்த துன்மார்க்கமான சூத்திரப் பெண்ணைத் தேடி அவளை ஆட்டிவை.

ஓ, ஜ்வரமே! நீ உன் சகோதரனாகிய க்ஷயரோகத்தோடும் உன் சகோதரியாகிய இருமலோடும், வாதரோகமாகிய உன் மாமனோடும், அந்த அந்நிய ஜாதியாரண்டைக்குச் சென்றுவிடு.

(அதர்வவேதம் V. XXII.)

# IV

# THE UPANISHADIC PERIOD.

நாலாவது

# உபநிஷத தத்வஞான பருவம்

கி. மு. 750—550.

நாலாவது

# உபநிஷத தத்வஞான பருவம்

## கி. மு. 750—550.

சுமார் இருநூறு வருஷங்கொண்ட இப்பருவமானது ஹிந்துமதச் சரித்திரத்தில் அதிக விசேஷமானது. ஹிந்துமதத்தின் அதி முக்கிய பிரிவுகளான வேதாந்த சித்தாந்த சம்பிரதாயங்களுக்கெல்லாம் ஆதாரமாகக் காட்டப்படுகின்ற உபநிஷத்துக்கள் இக்காலத்தில் தான் இயற்றப்பட்டது. உபநிஷதங்களும் தத்வசாஸ்திரங்களும் தோன்றிய பருவமாகையால் இது உபநிஷத தத்வஞான பருவம் என்னும் பெயர்பெற்றது.

## I. சரித்திரம்

இப்பருவத்தின் ஆரம்பகாலத்திலேயே ஆரியர் வட இந்தியா முழுவதிலும் பரவிவிட்டார்கள். ஆரிய குருக்களும் அதிகாரிகளுமான பிராமணர் ஜெயிக்கப்பட்ட ஜாதியாரை எல்லாம் பலவிதமான ஒழுங்குகளுக்குட்படுத்தினார்கள். வட இந்தியாவானது இக்காலத்தில் சிறிதும் பெரிதுமான பல ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றுள் மிகுதியானவை சக்கரவர்த்திகளால் ஆளப்பட்டவை. சில பிரஜாபத்திய நாடுகளும் இருந்தன. வட இந்தியாவிலிருந்த நாடுகளில் சில மிகப் பெரியவை. மிக்கச் சேனுபலம் பொருந்தியவை. இவற்றுள் அதிக விசேஷமானது மகததேசம். இது தற்காலத்து பீகார் அயோத்தியா நாடுகள் அடங்கியது.

இந்த தேசங்களின் தலைநகர்கள் மிகப் பெரியவைகளாயும் செழிப்பும் சிறப்பும் பொருந்தியவைகளாயும் செல்வம் நிறைந்தவைகளாயும் இருந்தன. கைத்தொழிலும் வியாபாரமும் விருத்தியாயின. ஆடு மாடு தானிய வகைகளில் கொள்வனை விற்பனை செய்யப்பட்ட காலம் போய், பொன் வெள்ளி செம்பு முதலிய லோகங்களால்

செய்யப்பட்ட ஒருவகை நாணயம் வழங்கப்பட்டு வந்தது. இந்நாணயங்களின்மேல் சில அடையாளங்களும் குறிகளும் முத்திரிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு செல்வமும் செழிப்பும் நாகரீகமும் ஒரு பகுதியில் விருத்தியாகிக்கொண்டே வந்தாலும் தேசத்தில் பெருங்காடுகள் இருந்தன. இக்காடுகள் இருப்பினும் ஒரு தேசத்துக்கும் மறு தேசத்துக்கும் அதிகப் போக்குவரவுகள் இருந்தன.

இக்காலத்தில் இந்தியாவின்மேல் அதிவிசேஷமான படையெழுச்சிகள் நிகழ்ந்தன. இப்பருவத்தின் அந்தத்தில் நடந்த பாரசீக படையெழுச்சி இவற்றுள் விசேஷமானது. பாரசீக ராஜனாகிய தரியு இந்தியா தேசத்தின்மீது படையெடுத்து பஞ்சாப் நாட்டை ஜெயித்தான். பஞ்சாப் தேசத்தை ஜெயித்து, அதிலிருந்து ஏராளமான கொள்ளைப்பொருளைத் திரட்டிக் கொண்டு, தன் தேசத்துக்குத் திரும்பிச்சென்றான். இந்திய வில்வீரர்கள் பாரசீக சேனையில் சேர்க்கப்பட்டார்கள். கி. மு. 497-ஷ கிரேக்கருக்கும் பாரசீகருக்கும் மேல் தேசத்தில் நடந்த சண்டையில் பாரசீகர் சேனையில் இந்திய வில்வீரர்கள் இருந்ததாகச் சரித்திரக்காரர் எழுதிவைத்திருக்கிறார்கள்.

## II. மார்க்கம்

இக்காலத்திலேயும் பிராமணர்களுடைய பலியாசாரங்கள் நடைபெற்றுத்தான் வந்தன. இந்தியாவின் பூர்வ குடிகளை ஆரியர்களுடைய செல்வாக்குக்கும் நாகரீகத்துக்கும் உள்ளாக்கும் வேலை நடந்துகொண்டுதான் வந்தது. வட இந்தியாவில் அநேக நூற்றாண்டுகளாக வாசம்பண்ணி தங்களுக்குரிய சொந்த நாகரீகம் ஜனசங்க ஆசாரம் மதம் முதலியவற்றை உடையவர்களாய் இருந்தாலும், அநாரியரான இப்பூர்வ குடிகள் ஒருவர் பின் ஒருவராய் பிராமணருடைய செல்வாக்குக்கு அமைந்தனர்.

இப்படியாக ஆரியர்களுடைய சாதாரண மார்க்கம் முந்திய காலத்து மார்க்கத்தைப்போலவே இருக்க,

ஜனங்களில் அறிவுடையோரும் கல்விமான்களும் மார்க்க விஷயங்களைக் குறித்து அதிக நுட்பமாய் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தனர். இவ்வாறு ஆராய்ச்சி செய்த பொழுது முன் ஆரியர்களிடத்திலில்லாத சில நூதன உபதேசங்கள் இப்பொழுது தோன்றின. அவற்றுள் சிலவாவன:—

1. மறுஜென்மமும் கர்மோபதேசமும்.—ஓர் மனிதன் தன் மரணத்துக்குப்பின் ஒரு மிருகமாக அல்லது ஓர் பட்சியாக அல்லது வேறு ஏதோ ஒரு ஜீவராசியாகப் பிறப்பான் என்னும் எண்ணம் இந்தியாவின் பூர்வ குடிகளிடமிருந்தது. பூர்வ ஆரிய ஹிந்துக்களிடம் இக்கோட்பாடு கிடையாது. திராவிடர் முதலிய பூர்வ குடிகள்தான் மறுஜென்மம் என்னும் இவ்வெண்ணங்கொண்டிருந்தவர்கள். இப்பூர்வ குடிகளிடத்திலிருந்துதான் ஆரியர்கள் இக்கோட்பாட்டைக் கற்றிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் பூர்வ குடிகள் மறுஜென்மத்துக்கும் மனுஷன் செய்யும் நன்மை தீமைக்கும் யாதொரு சம்பந்தமும் கற்பிக்கவில்லை. மறுஜென்ம உபதேசத்துடன் புண்ணிய பாவங்களைச் சம்பந்தப்படுத்தினவர்கள் ஆரியர்களே. இவ்வாறு சம்பந்தப்படுத்தப்படும்பொழுது, இவ்வுபதேசம் கர்மோபதேசம் எனப் பெயர் பெறும்.

உலகத்தில் மனுஷர்களுக்குண்டாகும் இன்பதுன்பங்களைப்பற்றி தீர்க்கமாய் ஆலோசனைசெய்த ஆரியர், இவற்றிற்கெல்லாம் காரணம் கண்டுபிடிக்க ஆரம்பித்தனர். ஏன் ஒரு மனிதன் இன்பத்தை அடையவேண்டும், வேறொருவன் ஏன் துன்பத்தை அடையவேண்டும், உலகத்தில் ஏன் நல்லவர்களுக்குத் துன்பம் உண்டாக வேண்டும், ஏன் துஷ்டர்கள் வாழ்வடைகிறார்கள் என்று இவ்வித கேள்விகளைக் கேட்டு, அவற்றிற்கு திருப்தியான விடை கண்டுபிடிக்க மிகுதியும் பிரயாசப்பட்டார்கள். பூர்வ குடிகளிடமிருந்து தாங்கள் பெற்றுக்கொண்ட மறுஜென்மக்கொள்கை சம்பந்தமாக இதற்குத் தகுந்த விடை கிடைத்தது. போன ஜென்மத்திலே ஒருவன் செய்த நன்மை தீமைகளுக்குத் தக்கதாக ஒருவன் இன்ப துன்பங்களை அனுபவித்து வருகிறான், அவ்வாறே இந்த

ஜென்மத்தில் ஒருவன் நடப்பிக்கும் புண்ணிய பாவங்களுக்குத் தக்கதாக அடுத்த ஜென்மத்திலே அவன் இன்ப துன்பங்களை அனுபவிப்பான் என்னும் கொள்கை உண்டானது. இக்கோட்பாட்டின்படி ஒருவனுடைய கர்மமே அவனுடைய நிலைமைக்குக் காரணம். மனிதன் கஷ்ட நஷ்டமில்லாமல், க்ஷேமலாபமாகவும் சந்தோஷமாகவும் ஜீவிக்க விரும்பினால் அவன் செய்யவேண்டியது புண்ணியம் ஒன்றே.

கர்மோபதேசமாகிய இக்கோட்பாடு இக்காலமுதல் தற்காலவரைக்கும் ஹிந்து மார்க்கத்தில் வெகு செல்வாக்குள்ளதாய் இருந்து வந்திருக்கிறது. *இவ்வுபதேசம் ஹிந்துமார்க்கத்திலிருந்து ஜைனபௌத்த மார்க்கங்களுக்கும் சென்றிருக்கிறது. காலாகாலத்தில் இவ்வுபதேசம் மிகவும் பெருப்பிக்கப்பட்டது.

2. பிரமத்தைப்பற்றிய உபதேச அபிவிர்த்தி.—சகல வஸ்துக்களும் ஒன்றுதான் என்னும் எண்ணம் ருக்வேத காலத்திலேயே இருந்தது. அண்டசராசரங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும் இந்தத் தெய்வத்துக்குப் பிரஜாபதி என்னும் பெயர் ருக்வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. பிராமணங்களிலே, பிரஜாபதி தேவர்களுக்கும் மனுஷர்களுக்கும் நரகர்களுக்கும் பிதாவாகக் கூறப்பட்டிருக்கிறார். பிரஜாபதியே சர்வலோகங்களையும் சிருஷ்டித்து ஆண்டு நடத்திவருகிறவர், அவரே ஆதியில் இருந்தவர், தாம் இயற்றிய யாகசக்தியினால் அவர் இந்த உன்னதபதவிக்கு வந்தார், அவர் தம்முடைய சரீரத்தையும் சரீரத்தின் அவயவங்களையும் பிரபஞ்சத்தின் பல பகுதிகளாக மாற்றி இவ்விதமாய் உலக சிருஷ்டியை நடத்திவருகிறார் என்னும் இப்படிப்பட்ட விஷயங்கள் பிராமணங்களில் சொல்லியிருக்கிறது. உபநிஷத்துக்கள் எழுதப்பட்ட காலத்தில், வேறு இரண்டு நூதன கருத்துக்கள் புதிதாய்த் தோன்றுகின்றன. இக்கருத்துக்கள் பிரமம் ஆத்மம் என்னும் பதங்

---

* இதைப்பற்றிய விபரத்தை சைவசித்தாந்த உபதேசத்துள் காண்க. புனர் நிர்மாண பர்வம்.

களோடு சம்பந்தமுடையவை. பிரமம் ஆத்மம் என்னும் இந்த இரண்டு விஷயங்களைப்பற்றிய கோட்பாடுகளின் விருத்தி பிந்திய காலங்களுக்குரியதாயினும், உபநிஷதங்களில் இப்பதங்கள் விசேஷ ஸ்தானம் வகிக்கின்றன. தற்காலத்தில் இந்தியாவில் மிகுதியாய்க் கொண்டாடப்படுகிற அத்துவித மார்க்கத்துக்குரிய விதை இக்காலத்துத்தான் விதைக்கப்பட்டது.

ஆத்மம் பிரமம் என்னும் இந்த இரண்டு பதங்களும் ஹிந்துமத தத்வ சாஸ்திரத்தில் அதிக விசேஷமானவை. இப்பதங்களின் கருத்தையும் இவற்றின் சரித்திரத்தையும் நன்ருய் விளங்கிக்கொள்ளாவிட்டால் வேத தத்வ சாஸ்திரம் செவ்வனே விளங்காது. ஆத்மம் என்னும் பதத்துக்கு ஆதியில் சுவாசம் என்று அர்த்தம். இப்படியாகக் காற்று தேவர்களுடைய சுவாசம் அல்லது ஆத்மம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்பால் இப்பதம் மனுஷனுடைய ஜீவனைக் குறிக்கும்படி உபயோகிக்கப்பட்டது. காலாகாலத்தில் மனுஷனுக்குள் இருந்து அவனை அசைவாட்டுகிற ஆத்மாவைப்போலவே, பிரபஞ்சத்துக்குள்ளிருந்து அதை நடப்பிக்கிற ஒரு ஆத்மா உண்டு என்னும் கோட்பாடு முற்றுப்பெற்ற காலத்தில், ஆத்மா என்னும் இப்பதம் லோக ஆத்மாவைக் குறித்தது. இது ஆத்மா என்னும் பதத்தின் சரித்திரம். இனி பிரமம் என்னும் பதத்துக்கு மூல அர்த்தம் ஜெபம் என்பதே. அதற்கப்பால் ஜெபத்தில் அடங்கியிருக்கும் மந்திரச்சக்தியைக் குறித்தது. அப்புறம் மனிதருக்குள்ள இந்த மந்திர சக்தியானது தேவர்களுக்கும் இருப்பதாகக் கருதப்பட்டது. கடைசியாய் பிரமம் என்னும் இப்பதம் சர்வவல்லமையும் நித்தியத்துவமுடைய தெய்வத்தைக் குறித்தது ஆகவே பிரபஞ்சத்துக்குள்ளிருந்து அதை அசைத்துவந்த சக்திக்குப் பிரமம் என்னும் பெயரும், மனுஷனுக்குள்ளிருந்து அவனை நடத்திவந்த சக்திக்கு ஆத்மா என்னும் பெயரும் வழங்கலாயிற்று.

1. உபநிஷத்துக்காலத்தில் உண்டான விசேஷ கோட்பாடு யாதெனில் மனுஷனுக்குள்ளிருக்கும் ஆத்மாவும்

பிரபஞ்சத்துக்குள்ளிருக்கும் பிரமமும் ஒன்றென்பதே. உள்ளேயுள்ள ஆத்மமும் புறம்பேயுள்ள பிரமமும் ஒன்றே. இக்கருத்து கீழ்வரும் வாக்கியங்களில் கூறப்பட்டிருக்கின்றது.

அகம் பிரமாஸ்மி = நான் பிரமம்.
தத்வம் அஸி = நீயே அது.

இதற்கு பிருகதாரணியக உபநிஷதத்தினின்று திருஷ்டாந்தம் வருமாறு:—

ஓ மைத்திரேயி! ஈரமான விறகு அக்னி பற்றியெரியும்பொழுது, புகையானது தானகக் கிளம்புகின்றதுபோல, ருக்வேதமும், யஜுர்வேதமும், சாமவேதமும், அதர்வணமும், இதிகாசங்களும், புராணங்களும், வித்தைகளும், உபநிஷத்துக்களும், சுலோகங்களும், சூத்திரங்களும், அநுவியானங்களும், வியாக்கியானக்களும் இந்த மஹாபிரமத்தின் சுவாசத்தினின்று தோன்றின. பிறமத்தினின்றே இவைகள் சுவாசிக்கம்பட்டன. ஜலமெல்லாவற்றிற்கும் கடல் மையாயிருப்பதுபோலவும், ஸ்பரிசமனைத்துக்கும் தோல் மையமாயிருப்பதுபோலவும், ருசியனைத்துக்கும் நாவு மையமாயிருப்பதுபோலவும், நாற்றமனைத்துக்கும் நாசி மையமாயிருப்பதுபோலவும், வர்ணமனைத்துக்கும் கண் மையமாயிருப்பதுபோலவும், சப்தமனைத்துக்கும் காது மையமாயிருப்பதுபோலவும், எண்ணம் அனைத்துக்கும் மனது மையமாயிருப்பதுபோலவும், அறிவனைத்துக்கும் இருதயம் மையமாயிருப்பதுபோலவும், செய்கையனைத்துக்கும் கை மையமாயிருப்பதுபோலவும், பெயர்ப்பனைத்துக்கும் கால் மையமாயிருப்பது போலவும், வேதங்களனைத்துக்கும் வாக்கு மையமாயிருப்பதுபோலவும், தண்ணீரில் போடப்பட்ட உப்பானது அத்தண்ணீர் கரைந்து பின் எடுக்கப்படக்கூடாமற் போனலும், அத்தண்ணீரை எங்கெங்கே ருசிபார்ப்பினும் அது உப்பாயிருக்கிறதுபோலவும், ஓ மைத்திரேயி! முடிவில்லாததும் அளவுகடந்ததும் சித்ருபமானதுமான இந்த பரப்பிரம வஸ்து (பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களினின்று தோன்றி, அவற்றுள் திரும்பவும் ஒடுங்கும் தன்மையது. ஓ மைத்திரேயி! இந்த பிரமம் போய்விட்டால் அறிவு என்பதே இராது என்று நான் சொல்லுகிறேன்'—யஜ்ஞவல்க்கியர் இவ்வாறு கூறினர்.

(2) இவ்வாறு பரப்பிரமமும் ஆத்மாவாகிய தானும் இரண்டல்ல, ஒன்றே என்னும் ஞானத்தைப் பெறுவதே மனுஷனுக்கு இருக்கவேண்டிய மேலான நோக்கம் என்பது உபநிடதங்களின் போதனை. நானும் பிரமமும் வேறல்ல, ஒன்றே, என்னும் இந்த ஞானத்தை எவன் பெற்ருனே அவன் இப்பிரபஞ்சத்துக்குரிய பிறப்புக்களினின்று முக்தியை (இரட்சிப்பை) அடைவான். பலி

யிடுவதாலும் பக்திக்குரிய செயல்களினாலும் இந்த முக்தியைப் பெறமுடியாது. கிரியா மார்க்கத்தினால் மனுஷன் அடையக்கூடிய நன்மையெல்லாம் மேலான பிறப்புக்களில் பிறந்து இன்பம் அனுபவிப்பதேயொழிய வேறில்லை. மனுஷன் உண்மையை உணராமல், தானும் பிரமமும் வேறு என்று எண்ணும்வரையில், ஆசையினால் அவன் ஆளப்படுகிறான். ஆசையே அவனைக் கர்மத்துக்கு நடத்துகிறது. கர்மம் பிறப்புக்களை உண்டாக்குகிறது. இப்படியே ஆத்மாவானது தனக்கு ஒரு நிலையில்லாத கொள்ளிவட்டம்போல பிறந்து பிறந்திறந்து உழலுகின்றது. ஆனால் ஜீவான்மாவாகிய தானும் பரமான்மாவாகிய பிரமமும் வேறல்ல, ஒன்றே, என்ற ஞானத்தை எவன் அடைகிறானோ அவனுடைய கர்மக்கயிறு அறுந்து, புண்ணிய பாவப்பலன்கள் தகிக்கப்பட்டுப்போம். அவனுக்கு அதன்பிறகு பிறப்பே கிடையாது. அவன் மாறாப்பூரணமும் நித்தியத்துவமுடைய பரப்பிரமத்தோடு கலந்து, அத்துடன் ஒன்றாய்விடுகிறான்.

ஆகவே நானும் பிரமமும் வேறல்ல ஒன்றே என்றுணரும் ஞானமே மனுஷனுக்கு முக்தியைக் கொடுக்கிறது.

(3) ஆயினும் நானும் பிரமமும் ஒன்றெண்ணும் ஞானத்தை எந்த மனுஷனும் அடையக்கூடியவனாயிருந்தாலும், பிரமத்தின் லக்ஷணத்தை ஒருவரும் உணரமுடியாதென்பதை உபநிடதங்கள் தெளிவாய்க் கூறும். அது இப்படி இப்படி என்று உடன்பாடாய்க் கூறப்படாமல், அது அப்படியல்ல அப்படியல்ல என்று எதிர்மறையாகவே கூறப்படும்.

3. சாதாரண மதம்.—வேத வியாக்யானங்களும் தத்வ சாஸ்திரப் பயிற்சியும் அதிகமாய் நடந்தேறிய இக்காலத்தில் சாதாரணமான ஜனங்கள் வேத பலிகளை முன்போலவே நடத்திவந்தார்கள். அன்றியும் இக்காலத்தில் ஆரியர் பூர்வ குடிகளோடு மிகுதியாய்ச் சம்பந்தப்பட்டு வந்தபடியால் மதசம்பந்தமான அநேக வழக்கப்பழக்கங்களை அவர்களிடமிருந்து பெற்று அனுசரித்து வந்தார்கள்.

4. தத்வசாஸ்திரப் பயிற்சி.—கல்வியும் ஞானமும் மிகுதியாய்ப் பாராட்டப்பட்ட இக்காலத்தில் தத்வசாஸ்திரப் பயிற்சி மிகவும் முன்னேற்றமடைந்து வந்தது. பல இடங்களில் பல ஞானிகள் எழும்பி ஆங்காங்கு தத்தம் மதங்களை பிரபலப்படுத்தத் தலைப்பட்டனர். பிற்காலத்தில் இந்தியாவில் மிகவும் பிரக்யாதிபெற்ற ஆறுசாஸ்திரங்கள் என்னும் ஞானமதங்கள் இக்காலத்தில்தான் தலையெடுத்தன. இவற்றின் விருத்தியும், இவற்றின் விருத்தாந்தங்களை யெடுத்துக்கூறும் நூல்களும் இக்காலத்துக்குச் சற்றே பிந்தித் தோன்றியபடியால், அவற்றைப் பற்றி இங்கு கூறாது விடுத்தோம். இக்காலத்தில் விருத்தியடைந்த அத்துவித உபதேசத்துக்கு மாறாக துவித உபதேசம் ஒன்று பிரபலியமானது. இந்த சாஸ்திர உற்பத்திக்குக் காரணம் கபிலமுனிவர்.

5. காலக் கணிப்பு.—மறுஜென்மக் கொள்கை சம்பந்தமாக காலம் முதலியவற்றைப்பற்றிச் சில புதிய எண்ணங்கள் தோன்றின். கிரியை செய்யும் ஆத்துமாக்கள் அக்கிரியையைத் தொடங்குகிறதற்கு ஏதாவது காலம் வேண்டும். அவ்வாறே காலமுடிவும் வேண்டும். ஆத்மா கிரியைசெய்ய ஆரம்பித்த காலம் முதல் அதன் கிரியை அடங்கும் காலம்வரையுள்ள ஒரு காலத்தை ஒரு கற்பம் என்று சொன்னார்கள். பிற்காலத்தில் இது வேறுவிதமாகவும் பிரிக்கப்பட்டது. அப்பிரிவு வருமாறு:

யுகங்கள் நாலு, அவையாவன:

கிரேதாயுகம்—இது 4800 தேவவருஷங்கள் கொண்டது.
திரேதாயுகம்—இது 3600 தேவ வருஷங்கொண்டது.
துவாபரயுகம்—இது 2400 தேவ வருஷங்கொண்டது
கலியுகம்—இது 1200 தேவ வருஷங்கொண்டது.

மனுஷ வருஷம் 360 கொண்டது ஒரு தேவ வருஷம்; மேற்கூறப்பட்ட யுகம் நாலுங்கொண்டது ஒரு சதுர்யுகம். மகாயுகம் 1000 கொண்டது ஒரு கற்பம்.

கற்பகாலத்தின் ஆரம்பமே கிருஷ்டி. இதுவே ஆத்மாக்கள் கிரியைசெய்ய ஆரம்பிக்கும் காலம். இச்சிருஷ்டி

முதல் சங்காரகாலம்வரை ஆன்மாக்கள் கிரியை செய்யும். சிருஷ்டிக்கும் சங்காரத்துக்கும் இடைப்பட்ட காலத்துக்கு ஸ்திதி என்று பெயர்.

5. பிராமண மதவிரோதம்.—ஹிந்து ஆரியர்களில் ஒரு சாரார் தத்வஞான சார்புடையவர்களாயும் ஒரு சாரார் பலி முதலிய ஆசாரானுஷ்டிகளாயும் இருந்த இக்காலத்தில் சிலருக்கு மதவெறுப்புத் தோன்றியது.

## III. புஸ்தகங்கள்.

1. உபநிடதங்கள்.–இவைகள் வேதங்களின்மேல் தத்வஞானார்த்தமாகச் செய்யப்பட்ட வியாக்கியானங்கள். இதற்கு முன்னே செய்யப்பட்டிருந்த வியாக்கியானத்துக்கு பிராமணங்கள் என்று பெயர். இவை மிகுதியாக பலி முதலிய ஆசாரங்களைக்குறித்தே பேசும். இந்த உபநிஷதங்களோ, கடவுள், ஆன்மா, உலகம், இவற்றிற்குள்ள சம்பந்தம், ஆகிய இவற்றைப்பற்றிக் கூறும். வேதங்கள் எல்லாம் கற்றுத்தேறியபின் படிக்கவேண்டிய விஷயமாகையால் உபநிடதங்களுக்கு வேதாந்தம் என்றும் பெயர். இதற்கு வேதத்தின் முடிவு என்று பொருள். இவை மிகுதியாக வினாவிடை ரூபமாகவும் சம்பாஷணை வடிவாகவும் இருக்கும்.

உபநிஷத்துக்களின் தொகை நூற்றெட்டு என்ப. இவற்றுள் பல இறந்துகெட்டன. தற்காலத்தில் இருப்பன சிலவே. இந்த நூற்றெட்டு உபநிடதங்களில் பத்து உபநிடதங்கள் அதிக விசேஷமாய்ப் பாராட்டப்படும். அவை ஈசோபநிஷத் முதல் பிருஹதாரணிய சோபநிஷத் ஈறுகவுள்ள பத்தும், இவற்றிற்கு தசோபநிஷத் என்று பெயர். ஸ்மார்த்தமதத் தலைவராகிய சங்காராச்சாரியார் இவற்றிற்கு வியாக்கியானம் எழுதியிருக்கிறார். சைவமத ஸ்தாபகராகிய நீலகண்டாச்சாரியாரும், வைஷ்ணவ மதஸ்தாபகராகிய ராமானுஜாச்சாரியாரும், மத்வ மதஸ்தாபகராகிய மத்வாச்சாரியாரும் இந்தத் தசோபநிடதங்களைப் பெரிதும் பாராட்டி, அவற்றினின்று மேற்கோள் எடுத்தோதி வந்திருக்கின்றனர். இப்படியாக

உபநிஷத்துக்களின் சிறப்பு எத்தன்மையதென அறிகிறோம்.

இப்பருவத்தின் முடிவுக்குள் பிராமணங்கள், ஆரணியகங்கள், உபநிஷத்துக்கள் ஆகிய இவை மூன்றும் வேத மந்திரங்களோடு ஒத்த சிறப்பை அடைந்துவிட்டன. ஆகவே ஒவ்வொரு வேதத்துக்கும் நாலு பாகங்கள் ஏற்பட்டன. அவை வருமாறு:

i. ருக்வேதம்

ருக்வேத சங்கீதம்
ருக்வேத பிராஹ்மணம்
ருக்வேத ஆரணியகம்
ருக்வேத உபநிஷதம்

ii. யஜுர் வேதம்

யஜுர் வேத சங்கீதம்
யஜுர்வேத பிராஹ்மணம்
யஜுர்வேத ஆரணியகம்
யஜுர்வேத உபநிஷதம்

iii. சாமவேதம்

சாமவேத சங்கீதம்
சாமவேத பிராஹ்மணம்
சாமவேத ஆரணியகம்
சாம்வேத உபநிஷதம்

iv. அதர்வ வேதம்

அதர்வவேத சங்கீதம்
அதர்வவேத பிராஹ்மணம்
அதர்வவேத ஆரணியகம்
அதர்வவேத உபநிஷதம்

காலாகாலத்தில் மேற்கூறிய அனைத்துக்கும் வேதம் என்னும் பெயர் வழங்கப்பட்டது.

2. இராமயணம்.—இப்பருவத்தின் அந்தத்தில் இராமாயணம் என்னும் காவியம் இயற்றப்பட்டது. ஆனால் இக்காலத்தில் இப்புஸ்தகம் தற்கால பருமனை அடைந்திருக்கவில்லை. இராமாயணத்தின் முதல்பாகமும் கடைசிப்பாகமும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை. இராமா

யணத்தை இயற்றியவர் வால்மீகி முனிவர். இவர் இயற்றிய இந்த இராமாயணத்தில் இராமர் ஓர் சிறந்த வீரராகமட்டும் காணப்படுகிருரே யொழிய கடவுளின் அவதாரமாகத் தோன்றவில்லை.

3. மஹாபாரதம்.—இந்தியாவிலுள்ள காவியங்களிலெல்லாம் அதிசிரேஷ்டமான காவியமாக பாவிக்கப்படும் இந்த மஹாபாரதம் எழுதப்பட்ட காலத்தைக்குறித்து சமஸ்கிருத பண்டிதர்களுக்குள்ளே அபிப்பிராயபேதம் உண்டு. அது கி. மு. 5–ம் நூற்ருண்டில் இயற்றப்பட்டதென்று வாதிப்பார் பெரும்பாலோர். ஆயினும் தற்காலத்தில் மகாபாரதம் அடைந்திருக்கின்ற பருமன் அதற்கு முன்காலத்திலில்லை. ஆரம்பத்தில் அது வெகு சிறு லாக இருந்தது. பிற்காலத்தில் எழுந்த பண்டிதர்கள் முன்னும் பின்னுமாகச் சில பாகங்களைச் சேர்த்தும், இடைக்கிடையே சில கவிகளைக் கோத்தும் அதைப் பெருப்பித்திருக்கின்றனர்.

# V

# THE JAIN AND BUDDHISTIC PERIOD.

ஐந்தாவது

# ஜைன பௌத்தமத பருவம்.

கி. மு. 550—200

ஐந்தாவது

# ஜைன பௌத்தமத பருவம்.

## கி. மு. 550—200.

ஆரியர்களுடைய செல்வாக்கையும் மேன்மையையும் எதிர்த்துப் போராடிய பல இயக்கங்களில் பிரதான மானவையாகிய ஜைனமதம் பௌத்தமதம் என்னும் இவ்விரு மதங்களும் தோன்றி அபிவிர்த்தியடைந்த பருவமாகையால், இது ஜைன பௌத்தமத பருவம் என்னும் பெயர் பெற்றது.

## I. சரித்திரம்.

இக்காலத்தில் ஆரியர்கள் செல்வாக்குக்கும் அதிகாரத்துக்கும் அளவில்லை. வட இந்தியா முழுமைக்கும் அவர்களே எஜமான்களாயினர். அதன்றி, தென் இந்தியாவிலும் ஆரியர்களுடைய செல்வாக்கு அதிகப்பட்டது. ஆரிய ராஜாக்களில் சிலர் தென் இந்தியாவுக்கு வந்து பூர்வ குடிகளை ஜெயித்தனர். அன்றியும் பிராமணர்களில் சிலர் வட இந்தியாவினின்று தென் இந்தியாவுக்கு வந்து புரோகிதராகவும், மந்திரிகளாகவும் அமர்ந்து, ஆரிய செல்வாக்கை அதிகரித்தனர். இவ்வாறு வந்த பிராமணர்களுக்கு தமிழ் அரசர்கள் பலவித உதவிகளைச் செய்து, அவர்கள் தங்குவதற்கு வீடுகளையும் கட்டிக்கொடுத்தனர். இப்படி பிராமணர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கு அக்கிராஹாரம் என்று பெயர்.

சரித்திர சம்பந்தமாய் இக்காலம் பல விசேஷ சம்பவங்கள் நிறைந்தது. கி. மு. 5-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாரசீக தேசத்து அரசனாகிய தரியு ராஜன் இந்தியாவின்மீது படையெடுத்துவந்து வட இந்தியாவின் ஒருபாகத்தை ஜெயித்து அதை வெகு காலம் பாரசீகரின் ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந்தான். அதற்கப்பால் இரு

நூறு வருஷங்களுக்குப்பின் கிரேக்க போர்வீரனாகிய மஹா அலெக்சந்தர் சக்கரவர்த்தி, சீரியா, மொசப்பொத்தோமியா, பாரசீகம், ஆப்கானிஸ்தானம் முதலிய தேசங்களை எல்லாம் ஜெயித்து, சிந்துநதியைக் கடந்து, வட இந்தியாவின் ஒரு பெரும்பாகத்தை ஜெயித்தான். அலெக்சந்தர் வடஇந்தியா முழுவதையும் ஜெயிக்காமல் திரும்பிவிட்டாலும்கூட, கிரேக்க செல்வாக்கு அக்கால முதல் வட இந்தியாவில் வெகுகாலம் நிலைபெற்றிருந்தது. கிரேக்கர்கள் இந்துக்களுடைய சாஸ்திரங்கள், காவியங்கள் முதலியவைகளைக் கற்றனர். இந்துக்கள் அவ்வாறே கிரேக்கர்களுடைய நாகரீகத்துக்கடுத்த பல விஷயங்களைக் கற்றனர். இவ்விதமாக இவ்விருவருக்கும் பரஸ்பர சிநேகம் ஏற்பட்டது. கிரேக்கர்களுடைய ராஜரீகம் இந்தியாவில் அற்றுப்போன காலத்திலும்கூட சீரியா பாக்த்திரியா முதலிய கிரேக்க நாடுகளிலுள்ள ராஜாக்கள் தங்கள் ஸ்தானாதிபதிகளை இந்தியாவிலுள்ள இந்து அரசர்களிடம் அனுப்பினார்கள். இதன்றி பூர்வ கிரேக்க ராஜகுடும்பங்களுக்கும் பூர்வ இந்து ராஜகுடும்பங்களுக்கும் இடையில் சில விவாக சம்பந்தங்களும் ஏற்பட்டன. இவ்வாறாக இந்தப் பருவம் இந்தியா தேச சரித்திரத்தில் அதிவிசேஷமானது என்று சொல்லலாம்.

## II. மார்க்கம்.

1. ஹிந்துமதமானது வட இந்தியாவில் சர்வாதிகாரம் பெற்றது. பிராமணர்களுடைய அந்தஸ்தும் செல்வாக்கும் அதிகப்பட்டது. இதற்குமுன் அரசர்களோடு சமமாய் எண்ணப்பட்ட பிராமணர்கள் இப்போது அவர்களினும் உயர்வாய் மதிக்கப்பட்டார்கள். இதனால் அவர்களுக்கு பூதேவர்கள் என்று பெயர் உண்டாயிற்று. ஜாதியாசாரம் அதிகப்பட்டது. சில ஜாதிகள் உயர்வாயும் சில ஜாதிகள் தாழ்வாயும் பாவிக்கப்பட்டனர். பலிகள், விசேஷமாய் மிருக பலிகள் அதிகமாய் செலுத்தப்பட்டன. வேத தேவதைகளுக்கும் பூர்வ குடிகளின் தேவதைகளுக்குமாக ஆடு, மாடு முதலிய மிருகங்கள் கணக்கில்லாமல் பலியிடப்பட்டன. ஹிந்துமதத்துக்கு

விரோதமான ஒரு உணர்ச்சியும் இக்காலத்தில் தோன்றியது. பிராமணர்களுடைய சர்வாதிகாரத்தையும் ஜாதியாசாரத்தின் கொடுமையையும் மிருக பலியின் கொரேத்தையும் சகிக்கமுடியாமல் சிலர் அங்கங்கே பிராமண மதத்துக்கு விரோதமாய் எழும்பினர்.

அநேகமாய் இவ்விதமாக பிராமணர்களுக்கு விரோதமாய் எழும்பியவர்கள் க்ஷத்திரியர்களே. இவ்வாறு கிளம்பிய போராட்டத்தின் பலனாக இரண்டு கிளர்ச்சிகள் ஓங்கி வளர்ந்தன. இவை ஜைனமதமும், பௌத்த மதமும் என்பன. இவ்விரண்டு கிளர்ச்சிகளையும் சற்றே விரிவாய் படிப்போம்.

ஜைனமதம்.—ஜைன மதம் எனினும் க்ஷமண மதமெனினும் ஒக்கும். இம்மத ஸ்தாபகன் மஹாவீரன் என்பவர். இவர் வட இந்தியாவில் கி. மு. 6–ம் நூற்றாண்டில் இருந்த ஒரு சிற்றரச குடும்பத்தைச் சேர்ந்தவர். பிராமணர்களுடைய அதிகாரத்தை எதிர்த்து, மிருகபலிகளை ஒழித்து, ஜீவராசிகள்மீது கருணை உண்டாக்கவேண்டுமென்பதே இவரது நோக்கம். இதற்காக இவர் மிகுந்த பிரசாரம்செய்து, தமக்கு சிஷ்ர் கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு, அயல்நாடு எங்கும் சுற்றிவந்தார். இவருடைய மதசித்தாந்தத்தில் கடவுளுக்கு எவ்வித இடமும் இல்லாவிட்டாலும், மனுஷன் தனது முயற்சியாலும தன் வல்லமையாலும் தெய்வமாகலாம் என்னும் கோட்பாடு உண்டு. இவ்வித தெய்வஸ்தானததை அடைந்தவர்கள் அநேகர்; அவர்களுக்கு ஜினர் என்று பெயர். ஆகையால் தான் இம்மதம் ஜைனம் என்று பேர்பெற்றது. இம்மத சித்தாந்தப்படி ஜீவராசிகளிடத்து மிகுநத கருணை காட்டவேண்டும். ஈ எறும்பு முதலியவற்றைக்கூட கொல்லக்கூடாது. கொல்லாவிரதமே எல்லா விரதங்களிலும் சிறந்தது என்பது இவரது கொள்கை. ஜைனர்கள் மதத்தை பெரிதாய் அபிமானித்து வந்தது போல, கல்வியையும் அபிமானித்து வந்தனர். இலக்கணம், இலக்கியம், காவியம் முதலியவைகளை ஆவலுடன் கற்றுவந்தனர். இதற்காக பல கலாசாலைகளையும், சங்கங்களையும் ஏற்படுத்தினர். இம்மதத்தினருடைய பிர

சாரத்தால் அநேக சிற்றரசர்களும் சில அரசர்களும்கூட ஜைனமதத்தை தழுவினர். இம்மார்க்கம் நாளுக்கு நாள் வலுவடைந்துகொண்டே வந்தது.

சமண மதத்தின் விசேஷ கொள்கைகளாவன:—

1. ஆத்துமா (ஜீவான்மா) அநாதி நித்தியமானது, அதாவது ஒருகாலத்தில் உண்டாக்கப்படாமல், என்றைக்கும் உள்ளது.

2. உலகம் அவ்வாறே அநாதி நித்தியமானது.

3. ஆத்துமாவும் உலகமும் இவ்வாறு நித்தியமாக வின் உலகத்துக்கு ஒரு கடவுள் இல்லை.

[ஜைனர்கள் பிறப்பு இறப்பு முதலியவைகளுக் குட்பட்ட சில்லறை தெய்வங்களை ஒப்புக்கொள்வார்கள். ஆனால் உலகத்தை சிருஷ்டித்து காத்து நடாத்திவருகிற ஒரு பரப்பிரம வஸ்து இல்லை என்பர்.]

4. ஆத்துமாக்கள் தங்கள் நல்வினை தீவினைப் பயனுக்குத் தக்கதாய் பிறவிகடோறும் பிறந்திறந்துழலும்.

5. முக்திக்கு நிர்வாணம் என்று பெயர். ஜென்ம பந்தம் அறுபடுவதே நிர்வாணம். இந்த முக்தியை யடைவதற்கு வழி மூன்று விசேஷ காரியங்களை அனுசரித்தலாகும். அவற்றுக்கு மும்மணி அல்லது ரத்தினத்திரீயம் என்று பெயர். இவை சரியான அறிவு, சரியான உணர்வு, சரியான ஜீவியம் என்பன. சரியான அறிவு என்பது சித்து அசித்து என்ற ஆன்மாவுக்கும் பிரபஞ்சத்துக்குமுள்ள சம்பந்தா சம்பந்தங்களை அறிவது. சரியான உணர்வு என்பது ஜைனமத ஸ்தாபகராகிய ஜினன் (வர்த்தமானர்) மேலும், ஜைன வேதாகமங்கள் மேலும் வைக்கவேண்டிய நம்பிக்கையும் பக்தியுமாகும். சரியான ஜீவியம் என்பது மேலேகூறிய சரியான அறிவையும் சரியான உணர்வையும் உடையவன் தனது ஜீவியத்தில் அனுஷ்டிக்கவேண்டிய ஐவகை நடத்தையைக் குறிக்கும். அவையாவன:

(1) அஹிம்சை. எந்த ஜீவனுக்கும் எவ்வித துன்பத்தையும் கொடுக்கலாகாது. மனிதனைத் துன்புறுத்துகின்ற பேன் கொசு முதலிய ஜெந்துக்களுக்குங்கூட துன்பத்தை உண்டாக்கலாகாது.

(2) பட்சமும், பிறருக்கு இன்பத்தை உண்டுபண்ணத்தக்கதாக உண்மையைப் பேசுதலும்.

(3) கண்ணியமான நடத்தை. பிறர்பொருளைத் திருடாமை முதலியவை.

(4) மனம் மொழி மெய்த்தூய்மை. (திரிகரண சுத்தம்) ஒவ்வொருவனும் தன்தன் மனதிலும் வாக்கிலும் சரீரத்திலும் சுத்தமுள்ளவனாயிருக்கவேண்டும்.

(5) உலகப்பற்றறுத்தல். சமண மதத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும் உலகப்பற்றற்றவனா யிருத்தல் வேண்டும்.

இவ்வாறு முக்தியைப்பெற்றுப் பிறரையும் முக்தி பெறச் செய்யத்தக்க உன்னத நிலையை அடைந்தவர்களுக்கு ஜினன் என்றும் அருகன் என்றும் தீர்த்தகரன் என்றும் பெயர். இப்படிப்பட்ட இருபத்துநான்கு தீர்த்தகரர் இதற்குமுன் தோன்றியிருக்கின்றார்கள். கடைசியாகத் தோன்றிய தீர்த்தகரர் வர்த்தமானன் என்ற மகாவீரரே. ஜைனமத ஸ்தாபகராகிய இவரே ஜைனர்கள் யாவராலும் போற்றப்பட வேண்டியவர். தெய்வ ஸ்துதியும் ஆராதனையும் இவருக்குச் செலுத்தப்பட வேண்டும்.

சமணமதத்தில் சந்நியாசத்துவம் அதிகமாய்ப் பாராட்டப்படுகின்றது. சமண சந்நியாசிகள் மிகவும் கடுமையான தவத்தை அநுஷ்டிக்கவேண்டும். சாதாரணமாய் ஒவ்வொரு சந்நியாசியும் பன்னிரண்டு வருஷமாவது தபஸ் நடத்திய பிறகுதான் அவனுக்கு முக்தி சித்திக்கும். இந்தச் சந்நியாசிகள் இரண்டு பிரிவாராவர். இவர்களுக்கு சுவேதாம்பரர் திகாம்பரர் என்று பெயர். சுவேதாம்பரர் வெள்ளை ஆடை அணிபவர். சுவேதம் என்பது வெள்ளை; அம்பரம் என்பது ஆடை. இவர்கள் வடக்கிலும் மேற்கிலும் அதிகமாயிருந்தனர். திகாம்பரர் என்னும் வார்த்தைக்கு திக்கை (வெளியை) யே ஆடையாக உடையவர் என்று அர்த்தம். இவர்கள் ஆடை ஒன்றுமில்லாமல் நிர்வாணமாகவே இருப்பர். இவர்கள் நாட்டுப்புறங்களிலும், மலைப்பிரதேசங்களிலும், காடுகளிலும் வசித்துவந்தனர். மிகுதியாய் தெற்கேதான் இவ்வகுப்பார் அதிகமாயிருந்தனர். இவர்கள் மிகவும்

கடுமையும் கொடுமையுமான தபசை அனுசரித்து வந்தார்கள்.

ஜைனமதத்தைச்சேர்ந்த சாதாரண ஜனங்கள் சமணமத ஸ்தாபகராகிய அருகனிடத்தில் பக்தியுடையவர்களாய், அவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுகிறவர்களாய், குருபக்தி யுடையவர்களாய் இருத்தல்வேண்டும். இவர்கள் அநுசரிக்கவேண்டிய ஐந்து தருமங்கள் கொல்லாமை, பொய்சொல்லாமை, திருடாமை, விபசாரஞ் செய்யாமை, தங்களிடமுள்ள சொற்பப்பொருள் விஷயத்தில் மனரம்மியமாயிருத்தல் என்னும் இவைகளே.

ஜைன மார்க்கமானது பிந்திய நூற்றுண்டுகளில் இந்தியாவில் அதிகமாய்ப் பரவி ஹிந்துமார்க்கத்தின்மேல் அதிகச் செல்வாக்குச் செலுத்தக்கூடியதாயிற்று.

புத்தமதம் என்ற இரண்டாவது இயக்கமானது சமணமத கிளர்ச்சிக்குச் சற்றுப் பிந்தியது. எனினும் காலாகாலத்தில் அதிக செல்வாக்கடைந்து ஒருகாலத்தில் இந்துமதத்தையே ஜெயித்துவிடக் கூடியதாயிருக்குமோ என்று சந்தேகிக்கும்படியாக இருந்தது. இம்மத ஸ்தாபகர் புத்தர். இவருக்கு கௌதம சாக்கியமுனி என்றும் பெயர். இவர் வட இந்தியாவில் கபிலவஸ்து என்னுமிடத்தில் அரசாட்சி செய்துகொண்டிருந்த க்ஷத்திரிய ராஜனின் புத்திரர். இவர் பெற்றோருக்கு ஒரே மகன், பெரிய தபசின் பயனாக பிறந்தவர். ஆகையால் இவரை மிகவும் போற்றி வளர்த்துவந்தனர். இவரைப்பற்றி புத்தர்கள் சொல்லும் சரித்திரமாவது:

இவர் சிறுவரா யிருக்கும்பொழுதே இவரது முகத்தோற்றத்தைக் கண்டு இவர் ஒருகாலத்தில் ஒரு சந்நியாசி ஆவார் என்று சிலர் கூறியிருந்தமையால் அரசன் இவருக்காக மிகவும் கவலைகொண்டு, இவருக்கு சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் உல்லாசத்தையும் கொடுக்கத்தக்க சகல வைபவங்களுக்கிடையில் இவரை வளர்த்துவந்தனன். வருத்தம், கஷ்டம், சஞ்சலம், களைப்பு, வியாதி, தரித்திரம், மூப்பு, மரணம் முதலிய

அசுப காரியங்கள் இவரை அனுகாதபடிக்கும் அவைகளைப்பற்றிய அனுபவம் இவருக்கு சிறிதும் உண்டாகாமலிருக்கும்படிக்கும் அரசன் வெகு சாவதானமான நடவடிக்கைகளை செய்துவந்தான். மகனுக்குத் தக்க வயது வந்தபோது அவனுக்கு விவாகம் முடித்துவைத்தான். ராஜ குமாரனுக்கு நகுலன் என்னும் ஒரு புத்திரனும் பிறந்திருந்தான்.

அக்காலத்தில் தனது நகரத்தை பார்க்கவேண்டுமென்ற எண்ணம் புத்தருக்கு உண்டாயிற்று. இதை தகப்பனுக்கு அறிவிக்க, அவன் இதைக்குறித்து மிகவும் கவலையுற்று, அடுத்தநாள் நகரத்தைப் பார்க்கும்படி உத்திரவு கொடுத்தான். இதற்கிடையில் மந்திரி பிரதானிகளைக்கொண்டு நகரத்தை சுத்தப்படுத்தி அலங்கரித்து அரசகுமாரன் தெருக்களினூடே வருங்காலத்தில், வியாதி முதலிய அசுப காரியங்கள் எதுவும் காணப்படக்கூடாதென்று கண்டிப்பாய் கட்டளையிட்டிருந்தான்.

அடுத்தநாள் அரசகுமாரன் தனது குதிரை ரதத்திலேறி சாரதி ஒருவனைமட்டுமே தனக்குத் துணையாகக் கொண்டு, தான் பிறந்தது முதல் வெளியேறாத கோட்டையைவிட்டு புறப்பட்டு, பட்டணத்துக்குள் சென்றான். சாரதி ரதத்தை ஓட்டிக்கொண்டு போனான். அவ்வாறு போகும்பொழுது ராஜகுமாரன் பெரிய வீதிகளிலன்றி சிறு தெருக்களிலும் ரதத்தை செலுத்துமாறு கட்டளையிட்டான். சாரதியும் அவ்வாறே செய்தான். அவ்வாறு செல்லும்போது ஒரு தெருவில் ஒரு பிச்சைக்காரன் உடுக்க உடையின்றி குடிக்கக் கூழின்றி தெருவோரத்தில் கிடந்து பிச்சை கேட்டான். அவ்விடத்தில் ராஜ குமாரன் ரதத்தை நிறுத்தச்சொல்லி இது என்ன என்று கேட்டான். சாரதி இவனொரு பிச்சைக்காரன். இவனுக்கு உடையும் சாப்பாடும் இல்லை. இந்நிலைமையிலேயே இவன் அநேக வருஷங்களைக் கழித்துவிட்டான். இதுதான் தரித்திரம் என்பது என்றான். அதைக்கேட்ட இராஜகுமாரன் திடுக்கிட்டு, இப்படிப்பட்ட தரித்திரத்தையுடையவர் வேறு யாரும் இப்பட்டணத்தில் உண்

டோ என, சாரதி ஆம் ஆயிரக்கணக்கானவர்கள் உளர் என்ருன். அரசகுமாரன் மனந்தளர்ந்து ரதத்தை ஓட்டச்சொன்னுன். சிறிது தூரம் சென்றவுடன் வழியருகே ஒரு வியாதியஸ்தனிருந்தான். உடம்பு மெலிந்து சரீரமெங்கும் புண்ணுயிருந்த அம்மனுஷனைப் பார்த்து இராஜகுமாரன் இது என்ன என்ருன். இதுதான் வியாதி என்று சாரதி சொல்லி, வியாதியின் தன்மையை விவரித்துச் சொன்னுன். அதுகேட்ட அரசன் வியாதி என்பது மற்றவர்களுக்கும் வரக்கூடுமோ என, சாரதி ஆம் மனுஷர் யாவருக்கும் சிற்சில காலங்களில் வியாதி வரக்கூடியதே என்ருன். அரசகுமாரன் மனம் சோர்ந்தவனுய் இரதத்தை நடத்தச் சொன்னுன். வெகுதூரம் சென்று இன்னொரு வீதிக்கு வந்தார்கள். அங்கே நூறு வயதுக்கு மேற்பட்ட ஒரு கிழவன் எலும்பைத் தோலால் போர்த்த வண்ணமாய், தடியை ஊன்றி வெகு கஷ்டத்தோடு நடந்து செல்லுகிறதைப் பார்த்து இது என்ன? என்ருன். சாரதி இது மூப்பு என்று சொல்லி, வயோதிபத்தின் தன்மையை விளக்கிக் காட்டினுன். இந்த மூப்பு யாவருக்கும் வருமோ என்று அரசன் கேட்க, சாரதி ஆம் என்ருன். அரசன் இரதத்தை வேருெரு வீதியில் ஓட்டச் சொன்னுன். அவ்வாறு வேருெரு வீதியில் அவர்கள் செல்லும்பொழுது, நாலுபேர் சுமந்துகொண்டுவந்த பாடையின்மேல் ஒரு பிணம் கிடக்கிறதைப் பார்த்து, அதை நிறுத்தச்சொல்லி இது என்ன என்று கேட்டான். சாரதி இது மரணம் என்று சொல்லி மரணத்தின் கொடுமையை விளக்கிக் காட்டினுன். இது யாவருக்கும் வருமோ என்று அரசன் கேட்க, சாரதி ஆம் என்ருன் நானும் என் மனைவியும் என் மகனும் இவ்வித மரணத்தை அடையும்படி வருமோ என்று அரசகுமாரன் கேட்க, சாரதி, மனிதனுய்ப் பிறந்தோரெல்லாம் இறக்கவேண்டுமென்ருன். அப்போது அரசகுமாரன் தாங்கமுடியாத துயரமுற்றவனுய்ச் சாரதியைப்பார்த்து இரதத்தை வீட்டுக்குத் திருப்பு; நான் எதைக்காண நினைக்கவில்லையோ அதையே கண்டேன்; இவ்வுலகத்தில் சஞ்சலமே தவிர வேருென்றுமில்லை என்ருன்.

அரண்மனைக்கு வந்தபின் இராஜகுமாரனுடைய முகம் வாடினது. தன்னைச் சூழ்ந்திருந்த வைபவங்களிலும் உல்லாசங்களிலும் அவர் பிரியப்படவே இல்லை. தான் கண்ட காட்சிகள் அவருடைய மனதில் அழுத்தமாய் பதிந்தன. வறுமை, பிணி, மூப்பு, சாக்காடு என்னும் துயரங்களால், மனுஷர் துன்புறுவதை நினைத்து நினைத்து, மனங்கசிந்து, இவ்விதத் துயரத்தினின்று மனுஷஜாதியை இரட்சிக்கிறதற்கு ஏதாவது வழி உண்டாவென்று ஆராய்ச்சிசெய்தார். ஒருவழியையும் காணுமல் துயரமுறுவார், ஒருவேளை இவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு அந்நிய இடங்களுக்குச் சென்று, கல்விமான்களான சிலரை அடுத்து, அவர்களுடைய உதவியினுல் ஒருவழியைக் கண்டுபிடிக்கலாமோவென்று எண்ணுவார். இவ்வாருக நாட்கள் கழிந்தன. ஒருநாள் இரவு தன் மனைவியும் மகனும் நித்திரை செய்துகொண்டிருந்தபொழுது, இவர் அவர்களுக்குத் தெரியாமல் வீட்டைவிட்டு வெளியேறி கோட்டைவாசலைக் கடந்து தனது நாட்டையும் துறந்து, அயல்நாடுகளுக்குச் சென்று, உலகத்தின் துயரங்களினின்று தப்புகிறதற்கு வழியைக் காட்டக்கூடிய ஒரு குருவைத் தேடித்திரிந்தார். ஓரிடத்தில் ஒரு சந்நியாசி வகுப்பாரைக்கண்டு அவர்களுடன் சேர்ந்து வசித்துவந்தார். இதுவும் அவருக்கு மனச்சமாதானத்தைக் கொடாமையால், அவர் அவ்விடம்விட்டு வேறிடங்களுக்கு அலைந்து திரிந்தார். ஒருசமயம் ஒரு பிராமணக் குருவை அடுத்து அவரிடம் உபதேசம் கேட்டார். இதுவும் தமக்கு மனத்திருப்தியைத் தராதபடியால் மீண்டும் அநேக ஆண்டுகளாகச் சுற்றித்திரிந்தார். இவ்வாறு 12 வருஷங்கள் கழிந்தன. 12-ம் வருஷத்தில் ஒரு ஆரண்யத்தில் ஓர் பெரிய விருக்ஷத்தின் அடியில் ஏகாந்தமாக அவர் உட்கார்ந்து, உலகத்தின் துயரங்களைப்பற்றியும் அவற்றை நீக்கும்வழியைப் பற்றியுமே தியானித்துக் கொண்டிருக்கும்போது, அவருடைய மனதில் திடீரென்று ஓர் வெளிச்சம் உதயமாயிற்று. எந்த விஷயத்தை அறியும்படியாகத் தான் தமது ராஜ வைபவங்களை எல்லாம் துறந்தாரோ, எதன் பொருட்டு 12 வருஷமாய் அலைந்து

திரிந்தாரோ, அவ்விஷயம் தம் மனதுக்கு தெரிந்துவிட்டதாக உணர்ந்தார். உலகத்தின் துயரங்களை நீக்குகிறதற்கு வழியைக் கண்டுபிடித்ததாக உணர்ந்த இவர் அதுமுதல் ஊர்கள்தோறும், பட்டணங்கள்தோறும், நாடுகள்தோறும் சென்று உபதேசம் பண்ணிக்கொண்டு திரிந்தார். புத்தருடைய சரித்திரத்தை வேறு பல விதமாகவும் கூறுவர்.

புத்தருடைய உபதேசம்:—

புத்தருடைய உபதேசம் நாலு பிரிவுகளுள் அடங்கும். ஆகையால் இதற்கு நாலு ஆரிய சத்தியங்களென்று பெயர். ஆரியம் என்பதற்கு சிறந்த என்று அர்த்தம்.

அவையாவன:—

1. இவ்வுலக ஜீவியமானது துன்பம் நிறைந்தது. அரசன் முதல் அடிமைவரை யாவருக்கும் துன்பமுண்டு. துன்பமில்லாதவர் எவருமே இல்லை.

பிறப்பு துன்பம், அழிவு துன்பம், வியாதி துன்பம், மரணம் துன்பம். நாம் வெறுக்கிறவைகளின் சமீபத்திலிருத்தல் துன்பம். நாம் சிநேகிக்கிறவைகள் சமீபத்தில் இல்லாதிருத்தல் துன்பம். நாம் விரும்புகிறவைகள் கிடைக்காமை துன்பம், சுருக்கமாய்ச் சொன்னால் ஜீவியமனைத்தும் துன்பம்.

2. இந்தத் துன்பத்திற்குக் காரணம் ஆசை. இதனால் புனர்ஜென்மங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

3. துன்பத்திற்குக் காரணமாய் நிற்பவைகளை அழிக்கக்கூடிய நல்லவழி அவாவறுத்தல், அதாவது ஆசையை அவித்தல். சகல துன்பங்களுக்கும் காரணம் ஆசையாகையால், துன்பத்தினின்று நீங்கியிருப்பதற்கு வழி அந்த ஆசையை அறுத்துப் போடுவதேயாகும்.

4. முழுவதும் துன்பத்தினின்று நீங்கிய நிலைமைக்கு ஒருவனை நடத்தக்கூடிய வழி எண்வழி (எட்டுப்பாதை) யாகும். இந்த எண்வழியாவது;

(1) சரியான அறிவு. தன்னைப்பற்றியும், உலகைப் பற்றியும் சரியான அறிவுடையவனு யிருக்கவேண்டும். மூடப்பக்தி ஆகாது.

(2) சரியான நோக்கம், எல்லாக்காரியத்தையும் நல்ல நோக்கத்தோடு செய்யவேண்டும்.

(3) சரியான பேச்சு. பட்சமும், சுத்தமும், உண்மையுமாயிருத்தல்வேண்டும்.

(4) சரியான நடத்தை. நடத்தை சமாதானமும், கண்ணியமும், பரிசுத்தமுமாயிருத்தல் வேண்டும்.

(5) சரியான ஜீவனம். எந்த ஜீவஜெந்துக்கும் அபாயத்தையும், இம்சையையும் கொடுக்கிற ஜீவனத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

(6) சரியான முயற்சி. தன் கடமையைச் செய்வதிலும் தன்னடக்கத்திலும் ஒருவன் எப்போதும் முயற்சியாயிருக்கவேண்டும்.

(7) சரியான தியானம். எப்பொழுதும் விழிப்புள்ளவர்களாயிருந்து பரிசுத்தமான விஷயங்களைப்பற்றித் தியானித்துக்கொண்டிருத்தல் வேண்டும்.

(8) சரியான சாந்தி. சாந்தி என்பது மனம் அசைந்து தள்ளாடாமல், ஜீவியத்தில் வருகிற இன்ப துன்பங்களையும் சுக துக்கங்களையும் ஒரேவிதமாகப் பாவித்து, ஜீவியத்தின் ஆழமான இரகசியங்களின்பேரிலேயே மனதைச் செலுத்தி அமைதியாயிருத்தல்.

மேலே கூறிய நாலு பெரிய சத்தியங்களும், எட்டுச் சிறந்த பாதைகளுமே, புத்தமார்க்கத்தின் அஸ்திபாரங்கள் என்று சொல்லலாம். முதல்கூறிய நாலு சத்தியங்களும், ஆசையை அவித்தல் என்னும் ஒரேதொடரில் அடங்கும். ஆசையினுலேயே மனிதர்களுக்கு பலவிதமான துன்பங்கள் உண்டாகின்றனவென்றும் அந்த ஆசை அவிக்கப்படுமானல் அவனுக்குத் துன்பங்கள் நீங்கும் என்பதும் இதன் கருத்து. இவ்விதமாக ஆசையை அவித்தவனுக்கு மேற்கூறிய எட்டுப் பாதைகளும் எளிதில் சித்திக்கும். இவ்வித நிலைமையை அடைந்தவனே புத்த மார்க்கத்தின்படி முத்திபெற்றவன். இந்த முத்திக்கு

நிர்வாணம் என்று பெயர்; அதாவது ஆசை ஒன்று மில்லாமல் இருக்கும் நிலைமை என்பது இதன் கருத்து.

புத்தருடைய உபதேசம் அதிகமாய்ப் பரவியது. அநேகர் அதை விரைவாக ஒப்புக்கொண்டனர். சாமான்ய ஜனங்கள் இதை வெகு சந்தோஷத்துடனே ஏற்றுக் கொண்டனர். மிருக பலியினாலும் பிராமணர்களுடைய சடங்காசாரங்களின் மூலமாகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு புத்தமதம் ஒரு பெரிய ஆறுதலாயிருந்தது. சாமான்ய ஜனங்களே யல்லாமல், அரசர் அமைச்சர் முதலானோர்களும் புத்தமதத்தை ஏற்றுக்கொண்டனர். புத்தமதம் வட இந்தியாவில் தீவிரகதியாய் பரவியது. இராஜாக்களும், சக்கரவர்த்திகளும், புத்தமதத்தைத் தழுவினபடியால் அவர்களுடைய உத்தியோகஸ்தருள் பலரும் அவ்வாறே செய்தனர். புத்தமதத்தைத் தழுவிய சக்கரவர்த்திகளுள் ஒருவனாகிய அசோகராஜன் இந்தியாவின் அரசாண்ட அரசருள் மிகவும் விசேஷித்தவன். தான் புத்தமதத்தவனாயிருந்தபோதிலும் தன் பிரஜைகள் அவரவர் இஷ்டப்படி தத்தம் மதத்தை அனுசரிக்கலாம் என்று மத சுயாதீனம் கொடுத்துவந்தான். அசோகராஜன் புத்தமதக் கொள்கைகளும் சன்மார்க்கப் போதனைகளும் அடங்கிய வசனங்களைக் கல்லில் வெட்டி தன் ராஜ்யத்தில் பல பாகங்களிலும் நிறுத்தினான். அவற்றில் சில இந்நாள்வரைக்கும் இருக்கின்றன. சக்கரவர்த்தியின் இனத்தவருள் பலர் புத்த மிஷனெரிகளாக பர்மா, ஸயாம், திபேத், சீனா, தென் இந்தியா, இலங்கை முதலிய இடங்களுக்குச் சென்றனர். இவர்கள் முயற்சியின் பலனாக இந்த இடங்களிலெல்லாம் புத்தமார்க்கம் விர்த்தியாயிற்று. இஃதன்றி புத்தமதம் சிந்துநதியைக் கடந்து மேற்கே சென்று, ஆப்கானிஸ்தானம் பாக்திரியா, மத்திய ஆசியா முதலிய இடங்களுக்கும் சென்றது.

இவ்விதமாய் பௌத்தமதம் இத்தனை தீவிரகதியாய்ப் பரவியது பிராமணர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தாலுங்கூட அவர்களுக்கு எவ்விதமான தீங்கையும் புத்தமார்க்கம் நேராய் அழைக்காதபடியால் அவர்கள் ஒன்றும் செய்யமுடியாமல் போயிற்று. புத்தமார்க்

கம் இன்னும் அதிகமாய் விர்த்தியடைந்து சில வருஷங்களுள் இந்துமார்க்கத்தை முழுவதுமாக அழித்துவிடுமோ என்று ஐயுறத்தக்கதான அத்தனை உயர்ந்த நிலைமையை அடைந்தது. இக்காலத்தில் இந்துமார்க்கத்திலும் ஏதோ ஒரு அளவுக்கு சில சீர்திருத்தங்கள் நடைபெற்றன. சடங்காசாரத்தின் கொடுமை குறைந்தது. வேத தேவதைகளுக்கு சாதாரணமாய்ப் பலியிடப்பட்ட செம்மறி, வெள்ளாடு, பசு, குதிரை முதலியவற்றிற்குப் பதிலாக, காய், கனி, நெய் முதலியவத்றை யாகம் செய்யலாம் என்னும் முயற்சி ஆரம்பித்தது. மேலும் தத்துவ சாஸ்திர ஆராய்ச்சி இன்னும் பலவிதமாய் நடந்தது. அப்படி இருந்தும், புத்தமதத்தை மேற்கொள்வதற்கு இந்து மார்க்கம் இக்காலத்தில் சக்தியற்றதாயிருந்தது.

## III. புஸ்தகங்கள்.

இப்பருவத்தில் ஏற்பட்ட புஸ்தகங்கள் அத்தனை அதிகமில்லை. இந்துமத சம்பந்தமாய் சில உபநிஷத்துக்கள் எழும்பின. புத்தமத சம்பந்தமாய் சில நூல்கள் மட்டும் தோன்றி இருந்தன. அவைகளும் அவ்வளவாய் ஒழுங்குபடுத்தப்பட்டவைகளா யிருக்கவில்லை. இதற்கு பிந்திய பருவங்களில்தான் புத்தர்கள் சில அரிய நூல்களை இயற்றினார்கள்.

ஜைன மதத்தினர் பல நூல்களைச் செய்தனர். அவர்களுள் ஒரு பிரிவாரிடத்தில் மட்டும் நாற்பத்தாறு ஆகமங்களும், பன்னிரண்டு அங்கங்களும், பன்னிரண்டு உபாங்கங்களும், வேறு பல வைதிக நூல்களும் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். இக்காலத்தில் இயற்றப்பட்ட இரண்டு நூல்கள் ஜைனர்களால் அதிகமாய்ப் பாராட்டப்பட்டன.

1. ஆகாராங்க சூத்திரம். இது ஜைனமத உபதேசத்தைப்பற்றியும், மதானுஷ்டானங்களைப்பற்றியும் கூறும் ஓர் விசேஷித்த நூல்.

கல்பசூத்திரம். இது மகாவீரருடைய ஜீவிய சரித்திரத்தையும், தீர்த்தகாருடைய சரித்திரத்தையும் கூறும் நூல்.

# VI

# THE SMRITI PERIOD.

ஆறுவது

# ஸ்மிருதி பருவம்.

கி. மு. 200—கி. பி. 300.

ஆறுவது

# ஸ்மிருதிபருவம்.

## கி. மு. 200—கி. பி. 300.

வேதம் அல்லாத மதநூல்களுக்கு ஸ்மிருதி என்று பெயர். வேதம் என்பது வேத சங்கீதம், வேதபிராமணம், வேத ஆரண்யகம், வேத உபநிஷதம் என்னும் நான்கு வகைப் பிரிவுகளையுடைய ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கையும் குறிக்கும். இவைகளொழிந்த மற்றைய வைதீக நூல்களுக்கெல்லாம் ஸ்மிருதி என்று பெளர். ஸ்மிருதி என்னும் பதத்துக்கு ஞாபகத்திலுள்ளவை என்றர்த்தம். வேதங்களுக்கு சுருதி என்று பெயர். அதற்குக் கேட்கப்பட்டது என்றர்த்தம். அதாவது, வேதங்கள் ஒரு தலைமுறையிலிருந்து மறு தலைமுறைக்கு கர்ணபரம்பரையாய் வந்தமையாலும், எழுத்துவித்தை தோன்றிய காலத்திலும்கூட இது எழுதப்படாமையாலும் இது இப்பெயர்பெற்றது. ஆகவே இந்து மத நூல்களெல்லாம், சுருதி, ஸ்மிருதி என்னு மிவ்விரு வகைப் பிரிவினுள் அடங்கும்.

## I. சரித்திரம்.

இக்காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்து அநேக ஜாதி சிந்துநதியைக் கடந்து இந்தியாவுக்குள் பிரவேசித்து வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் பரவினர். இவர்களுக்கும் இந்தியர்களுக்கும் அநேக சண்டைகள் நேர்ந்ததால், தேசத்தில் மிகக் குழப்பம் இருந்தது. இதன்றி அசோக ராஜ்யம் பிரிவுப்பட்டதின் பலனாக பலவித கஷ்டங்களும் போராட்டங்களும் நிகழ்ந்தன. அப்படியிருந்தும், குஷனிய ராஜ்யம் என்ற ஒரு ராஜ்யம் இந்தியாவில் ஸ்தாபகமானது. இந்த ஜாதியார் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள். இவர்களுடைய பிரதான அரசன் கனிஷ்கா. இவர்கள் தலைநகர் பிஷா

வார். இப்பட்டணம் கல்விக்கும் நாகரீகத்துக்கும் பெயர் பெற்றது. இதில் ரோமர், பெர்சியர், இந்தியர் ஆகிய மூ வ கை ஜாதியினரும் ஒருவரோடொருவர் கலந்து, கல்வி, வித்தை, வர்த்தகம் முதலிய துறைகளில் வெகு அன்னியோன்யமாயிருந்தனர். சிறந்த கட்டடங் களும், சிலை நிர்மாணங்களும், சித்திரசாலைகளும் செழித் தன.

கனிஷ்கா முதலிய அரசர்கள் புத்தர்களாயிருந்தா லும், ஹிந்துமார்க்கத்தையும் சம்ரக்ஷித்து வந்தனர். இவ் விதமாக புத்தமார்க்கமும் ஹிந்துமார்க்கமும் ஒன்றுக் கொன்று போட்டிபோட்டு நின்றன. இவைகளில் ஒவ் வொன்றும் ஒரு காலத்தில் மேலாகவும் மற்றொரு காலத் தில் கீழாகவுமிருந்தது.

## II. மார்க்கம்.

ஐந்நூறு வருஷச் சரித்திரமடங்கிய இக்காலத்தில் ஹிந்துமதத்தில் பல அபிவிர்த்திகள் ஏற்பட்டன. மே லும் ஹிந்துமதம் புத்தமதம் ஜைனமதம் என்னும் இந்த மதங்கள் ஒன்றின்மேலொன்று செலுத்திய செல்வாக் கின் பலனாக பல விஷயங்கள் இம்மதங்களில் தோன்றின. இந்த அபிவிர்த்திகளைச் சிறிது கவனித்துப் பார்ப் போம்.

### i. அவதார உபதேசம்.

பாரத ராமாயணங்கள் எழுதப்பட்ட காலத்தில் ராமரும், கிருஷ்ணனும் சிறந்த மானுட வீரர்களாகவே கருதப்பட்டார்கள் என்று சொன்னோம். இக்காலத் தில் அவர்கள் மஹாவிஷ்ணுவின் அவதாரங்களாகப் பாவிக்கப்பட்டு வணங்கப்பட்டு வந்தனர். இவ்வாறாக அவதார உபதேசம் இக்காலமுதல் அதிகமாக வற்புறுத் தப்பட்டது. அவதாரமென்பதற்கு கீழே இறங்கல் என் றர்த்தம். அதாவது அரூபியாயிருக்கிற கடவுள் பூலோ கத்தை இரட்சிக்கும்பொருட்டு ஏதோ ஒரு ரூபத்தில் தோன்றுகிறார் என்பதாகும். உலகத்தில் எப்போதெப் போது நீதி தாழ்ந்து, அநீதி உயருகிறதோ, அப்போதப்

போதெல்லாம் துஷ்டரை நிக்கிரகம் பண்ணவும், சிஷ்டர்களைப் பரிபாலனம் பண்ணவும், உலகத்தைச் சம்ரக்ஷிக்கவும், நான் உலகத்தில் அவதரிக்கிறேன் என்று கிருஷ்ணன் பகவத்கீதையில் சொல்லுகிறார். இதுதான் அவதார உபதேசத்துக்குத் திறவுகோல் வசனம் என்னலாம். இக்காலமுதல் அவதார உபதேசமானது இந்தியாவில் வேரூன்றினது.

அவதார உபதேசத்தை ஏற்றுக்கொள்ளாத வகுப்பினரும் இந்தியாவிலிருந்தனர். அவர்களுள் விசேஷித்தவர் சைவர். மகா தூய்மையுடையவராகிய கடவுள், கேவலம், ஒரு ஸ்திரீயின் வயிற்றில் தங்கிப் பிறப்பது அவருடைய பரிசுத்தத்துக்குப் பங்கமாகுமென்று சைவர்கள் கருதுகின்றனர். சர்வவல்லமையுடைய கடவுள் எந்த வடிவத்தையும் எடுத்து உலகத்தில் தோன்றுவது கூடியதாயிருப்பதால் அவர் அவதாரமெடுப்பது அவசியமில்லையென்பர். இக்காலமுதல் சைவமார்க்கமும் அபிவிர்த்தியடைந்துவந்தது. சைவமார்க்கத்தின் அபிவிர்த்தியை இன்னொரு பருவத்தில் கூறப்போகின்றோமாதலால் இங்கு அதை விவரியாது விடுத்தோம்.

வைஷ்ணவ மதத்தில் அவதார உபதேசம் இக்காலமுதல் அதிக முக்கியமாயிற்று.

இவ்விதமாக மஹாவிஷ்ணு அநேக அவதாரங்கள் எடுத்ததாக நம்பப்பட்டது. இவற்றுள் விசேஷமானது பத்து என்றும், பதினைந்து என்றும், பதினெட்டு என்றும் பலவாறு சொல்லப்படும். ஆயினும் சாதாரணமாய் ஒப்புக்கொள்ளப்படுவது பத்து அவதாரங்களே. இவற்றிற்கு தசாவதாரம் என்று பெயர். இவற்றுள் ஒன்பது அவதாரங்களே இதுவரை நிகழ்ந்திருக்கின்றவை. பத்தாம் அவதாரம் இனிமேல் நிகழவேண்டியது. இந்தத் தசாவதாரங்களின் சாரத்தைச் சுருக்கிக் கூறுவோம்.

1. மச்சாவதாரம்.

முன்னொரு காலத்தில் பிரமதேவன் கண்துயில்கையில், சோமகன் என்னும் அசுரன் வேதங்களையெல்லாம்

கவர்ந்துகொண்டு சமுத்திரத்தினுள் மறைந்து செல்ல, பிரமன் முதலிய தேவர்களின் வேண்டுகோளால் மஹா விஷ்ணு மச்சமாக அவதரித்து சமுத்திரத்தினுட் புகுந்து, அவ்வசுரனைத் தேடிப்பிடித்துக் கொன்று, அவன் கவர்ந்துசென்ற வேதங்களை மீட்டுக்கொணர்ந்து, அன்னவடிவாய் அவற்றைப் பிரமனுக்கு உபதேசித்தார் என்பது.

**2. கூர்மாவதாரம்.**

இந்திரனுக்குத் துருவாச மகாமுனிவரிட்ட சாபத்தினால் திருப்பாற்கடலினுள் போய் ஒளித்த சுவர்க்க லோகத்துச் செல்வங்களையும் ஆயுதங்களையும் மீளவும் பெறும்பொருட்டு, இந்திரன் முதலிய தேவர்கள் மஹா விஷ்ணுவின் ஆஞ்ஞைப்படி அசுரர்களுடன் கூடிச்சென்று மந்திரமலையை மத்தாக நாட்டி, வாசுகி என்னும் சர்ப்பத்தைக் கயிறாகப் பூட்டி, திருப்பாற்கடலைக் கடைந்த பொழுது, அந்த மந்திர பர்வதம் கடலினுள்ளே சென்று அழுந்துவிடாதவண்ணம், விஷ்ணுவானவர் ஒரு மஹா கூர்ம (ஆமை) ரூபத்தைத் தரித்து, அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்தார் என்பது.

**3. வராகாவதாரம்.**

ஒருகாலத்தில் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக்கொண்டு கடலில் முழுகிச்சென்ற இரணியாக்கனை மஹாவிஷ்ணு, தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளுக்கிணங்கி, மஹா வராக (பன்றி) ரூபமாக அவதரித்து இரணியாக்கனைக் கொன்று, பூமியைக் கொம்பினால் குத்தி யெடுத்துக்கொண்டுவந்து பழையபடி விரித்தருளினார் என்பது. இது ஒரு ஜலப்பிரளயக் கதை போலும்.

**4. நரசிம்மாவதாரம்.**

தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் ஐம்பெரும் பூதங்களாலும், ஆயுதங்களாலும் தனக்கு மரணமில்லாதபடி அளவற்ற வரங்களைப் பெற்று தேவர் முதலிய

யாவர்க்கும் துன்பமியற்றித் தன்னையே தெய்வமாக யாவரும் வணங்கச்செய்த (இரணியாக்கனது சகோதரனாகிய) இரணியன், தன் புத்திரனும் மஹாவிஷ்ணு பக்தனுமான பிரகலாதாழ்வான் தன் நாமஞ்சொல்லிக் கல்விகற்காமல், நாராயண நாமஞ் சொல்லிவரவே, அவனைக் கொல்வதற்குப் பலவித உபாயஞ்செய்தும் அவன் விஷ்ணுவின் அருளால் இறந்திலனாக, இரணியன் மகனை நோக்கி "நீ சொல்லும் நாராயணன் எங்கே இருக்கின்றான் அவனை எனக்குக் காட்டு" என, பிரகலாதாழ்வான்

> சாணினு முளனோர் தன்மை அணுவினைச் சதக்கூ றிட்ட
> கூணினும் உளன்மா மேரு குன்றினும் உளன்இந் நின்ற
> தூணினும் உளன்நீ சொன்ன சொல்லினும் உளன்இத் தன்மை
> காணுதி விரைவின் என்றான் கனகனே மறத்து நின்றான்.

"அந்நாராயணன் எங்கும் உளன். சாணிலும் உளன். ஓர் அணுவை நூறு துண்டாக்கினாலும் அவை ஒவ்வொன்றிலும் உளன். மஹாமேரு பர்வதத்திலும் இருக்கின்றான். இங்கே நிற்கிற தூணினும் உளன். நீ சொன்ன சொல்லினும் உளன்" என்று சொல்ல, உடனே இரணியன் நன்றெனச் சினந்து தூணைக் கையினால் அடிக்க, அதினின்றும் மஹாவிஷ்ணு நரசிங்க உருவமாய்த் தோன்றி, கை நகங்களால் அவன் மார்பைப் பிளந்து, அவனை அழித்தார் என்பது.

## 5. வாமனாவதாரம்.

மகாபலி யென்னும் அசுரராஜன் தனது அளவற்ற வல்லமையால் இந்திரன் முதலிய யாவரையும் ஜெயித்து மூவுலகங்களையும் தன் வசப்படுத்திக்கொண்டு அரசாண்டு செருக்குக்கொண்டிருக்கும்பொழுது, அரசிழந்த தேவர்கள் திருமாலைச் சரணமடைந்து வேண்ட, அவர் குள்ளவடிவான வாமனாவதாரம் எடுத்து காசியப முனிவருக்கு அதிதி தேவியினிடந் தோன்றின பிராமண பிரமச்சாரியாகி, யாவர்க்கும் வேண்டிய அனைத்தையுங் கொடுத்துவந்த அம்மஹாபலி சக்கிரவர்த்தினிடஞ்

சென்று, தவஞ்செய்கிறதற்குத் தன் காலடியால் மூமடி மண் வேண்டி, அது கொடுத்தற் கிசைந்து அவன் தத்தஞ்செய்த ஜலத்தைக் கையிலேற்று, உடனே திரிவிக்கிரமனாக ஆகாயத்தை அளாவி வளர்ந்து, ஓரடியால் மண்ணையும் ஓரடியால் விண்ணையும் அளந்து, மற்றோர் அடியால் அவனையும் பாதாளத்தில் அழுத்தி அடக்கினார் என்பது. இது திரிவிக்கிரமாவதாரம் என்னவும்படும். வேத சங்கிதங்களிலே காலை மத்தியானம் மாலை என்னும் மூன்று அடிகளால் சூரியன் உலகத்தை அளக்கிறார் என்று சொல்லியிருக்கிற கதைதான் பிந்திய காலங்களில் இந்த ரூபத்தை அடைந்தது. வேதங்களில் விஷ்ணு சூரிய தேவனுடைய ஓர் அம்சமே.

6. பரசுராமாவதாரம்.

உலகத்திலே அழிப்பவர் எவருமில்லாமையால் கொழுத்துத் திரிந்து கொடுமை இயற்றிவந்த க்ஷத்திரிய வம்சங்கள் பலவற்றை நாசஞ்செய்யும்பொருட்டு, மஹாவிஷ்ணு ஜமதக்கினி முனிவரது மனைவியான ரேணுகையினிடம் ராமனாய் அவதரித்து, பரசு என்னும் கோடாலிப் படையையே ஆயுதமாகக்கொண்டு, தமது தந்தையைக் கொன்றது காரணமாக க்ஷத்திரிய வம்சத் தலைவர்களைக் கொன்று, அதன்மூலமாகவே க்ஷத்திரிய வம்சம் அனைத்தின்மேலும் கோபாவேசங்கொண்டு, உலகத்திலுள்ள அரசர்கள் பலரோடும் இருபத்தொரு தலைமுறையாக யுத்தஞ்செய்து ஒழித்துவிட்டார் என்பது.

7. ஸ்ரீராமாவதாரம்.

ஒரு காலத்தில் தேவர்களெல்லாரும் இராவணன் முதலிய ராக்ஷசர்களின் உபத்திரவம் பொறுக்கமுடியாமல், மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்து வேண்ட, அவர் தசரதச்சக்கிரவர்த்தி குமாரனாய், ஸ்ரீராமனாக அவதரித்து, ராக்கதர் அனைவரையும் கொன்று அழித்து நல்லோரைக் காத்தருளினார் என்பது.

இராமாயணக் கதை பிரசித்தமாதலால் இங்கு சுருக்கியுரைக்கப்பட்டது.

8. பலராமாவதாரம்.

சில அசுரரைச் சங்கரிக்கும்படி மஹாவிஷ்ணு ரோகிணியிடத்தில் பிறந்து அவ்வசுரரைச் சங்காரம் செய்ததுமன்றி தம்பியாகிய கிருஷ்ணன் செய்த யுத்தங்களிலெல்லாம் அவருக்குத் துணைவராகவும் இருந்தார் என்பது.

9. ஸ்ரீகிருஷ்ணவதாரம்.

பூமியின் பாரத்தைத் தணிக்கும்படியாக மகாவிஷ்ணு உலகத்தில் க்ஷத்திரிய ஜாதியில் பிறந்து பாண்டவர், துரியோதனாதியர் என்னும் இரு பகுதியாருக்கும் சண்டை மூளும்படி செய்து, இவ்விதமாய் பாரத யுத்தத்தை உண்டுபண்ணி பூ பாரம் தணித்தார் என்பது. இது மிகப் பிரசித்தமாதலால் சுருக்கி யுரைக்கப்பட்டது.

10. கற்கி அவதாரம்.

கலியுகத்தின் இறுதியில் மகாவிஷ்ணு முழுவதும் அழிகிற தருமத்தை நிலைநிறுத்தும் பொருட்டு மகிமையுடையதொரு குதிரையின் வடிவமாகத் தோன்றுவார் என்பது; இதை வெள்ளைக் குதிரையின்மேல் ஏறி வரும் பிராமணனாகத் தோன்றுவார் என்றும் சிலர் கூறுவர்.

இதுவே தசாவதார ஸாரம். துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்தின் பொருட்டும் உலகத்தில் தர்மத்தை நிலைநிறுத்தும் பொருட்டும் கடவுள் அவதாரம் செய்கிறார் என்னும் கோட்பாடு இக்காலமுதல் ஹிந்து மார்க்கத்தில் வெகு பலமாய் ஊன்றியது.

ii. ஹிந்துமத அபிவிர்த்தி.

வேறு அநேகவிதத்திலும் ஹிந்துமதமானது இக்காலத்தில் அபிவிர்த்தி யடைந்துவந்தது. இப்பருவத்தின் ஆரம்ப காலத்திலேயே தென்னிந்தியா முழுமையும் ஆரியர்களுடைய செல்வாக்குக்குள் அமைந்துவிட்டது. ஆரிய தர்மத்துக்கு அடாத தொழில்களைச் செய்துவந்தவர்களையும் ஒவ்வாத வழக்க பழக்கங்களை

யுடையவர்களையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. இவர்கள் ஹிந்துக்களாகப் பாவிக்கப்படவுமில்லை. அந் நாள்முதல் இவர்கள் தீண்டா ஜாதியார் என்றே கருதப் பட்டு வந்திருக்கின்றனர்.

பூர்வ குடிகள் ஆரியரின் செல்வாக்குக்கு எந்த அளவு அமைந்தார்களோ அந்த அளவுக்கு ஆரியரும் பூர்வ குடி களின் செல்வாக்குக்கு அமைந்தனர். பூர்வ குடிகளு டைய தெய்வங்கள், வழக்க பழக்கங்கள், அனுஷ்டானங் கள் முதலிய அநேக விஷயங்களை ஆரியர் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்டுவந்தனர். பூர்வ குடிகளிடத்தி லிருந்தே ஆரியர் விக்கிரக ஆராதனை, புண்ணிய க்ஷேத் திர தரிசனம், தீர்த்தயாத்திரை, திருவிழா முதலியவற் றைக் கற்றுத், தாமும் அவைகளை அநுசரித்து வந்தனர். மேற்கூறியவற்றை ஆரியர் நன்றாய் ஆராய்ச்சி செய்து, செய்யவேண்டிய திருத்தங்களைச் செய்து, அவற்றுக்கு வேத சம்பந்தங் கற்பித்து, அவ்வவற்றிற்கு உபயோக மாகக்கூடிய சமஸ்கிருத மந்திரங்களையும் ஏற்படுத்தி னார்கள்.

இக்காலத்தில் கல்வி அதிக விருத்தியடைந்தது. பாடசாலைகள் ஆங்காங்கு ஏற்பட்டன. இவைகளில் சாதாரணக் கல்வி புகட்டப்பட்டதோடு நாலு வேதங்க ளும், ஆறு சாஸ்திரங்களும், பல கலைகளும் கற்பிக்கப் பட்டன.

iii. ஹிந்துமதமும் புத்தமதமும்.

இக்காலத்தில், ஹிந்துமார்க்கமும், புத்தமார்க்கமும் சம அந்தஸ்தை உடையனவாய் ஒன்றின்மேல் ஒன்று செல்வாக்குச் செலுத்தத்தக்கனவாயிருந்தன. புத்த மார்க்கம் ஹிந்துமார்க்கத்திலிருந்து பலவித ஒழுங்கு களையும் முறைகளையும் கற்றுக்கொண்டது. ஹிந்துமார்க் கம் புத்தமார்க்கத்தினிடமிருந்து கொல்லாமை என் னும் விரதத்தை மிகுதியாய்ப் பின்பற்றியது. இக்கால முதல் ஆகாரத்துக்காக ஜீவ ஜந்துக்களைக் கொல்லக் கூடாது என்னும் கொள்கை ஹிந்துக்களால் அனுசரிக் கப்பட்டது. வேத தேவர்களுக்கு இடப்பட்ட மிருக பலிகளும் இக்காலமுதல் குறைந்தன.

iv. பௌத்தமத அபிவிர்த்தி.

புத்தமதத்திலும் சில வித்தியாசங்கள் காணப்பட்டன. இஃதுணைகாலம் ஒரு வெறும் தத்துவ சாஸ்திரமாகமட்டும் இருந்த புத்தமார்க்கமானது இக்காலத்தில் ஆராதனைக்குரிய மதமாகி, மிகவும் மதிப்புற்று விளங்கினது.

அலங்காரமான பௌத்த ஆலயங்கள் கட்டப்பட்டன. புத்தருடைய சொரூபமும், அவரது சீடர்களின் சொரூபமும், கடைசிநாட்களில் உலகத்துக்கு வரப்போகிற புத்தராகிய மைத்திரேயருடைய சொரூபமும் வணங்கப்பட்டு வந்தன. புஷ்பங்கள், பழங்கள் முதலியன நிவேதிக்கப்பட்டன. தூபதீப ஆராதனைகள் நடந்தன; ஜெபங்களும் மந்திரங்களும் உச்சரிக்கப்பட்டு வந்தன.

v. ஜைனமத அபிவிர்த்தி.

ஜைனமத சந்நியாசிகள் அம்மதத்தைப் பிரசாரம் செய்யும் பொருட்டு பல நாடுகளுக்கும் சென்றனர். அவர்களுடைய பாடசாலைகளில் இலக்கணம், இலக்கியம், தத்வ சாஸ்திரம், மதம் முதலிய யாவும் கற்பிக்கப்பட்டன. சூத்திர ருபமாய்ப் பல நூல்கள் இயற்றப்பட்டன.

vi. ஓர் புதுமதம்.

இந்தப் பருவத்தின் மத்தியில் ஒரு புதிய மார்க்கம் இந்தியாவுக்குள் நுழைந்தது. இது கிறிஸ்துமதம். இயேசுநாதருடைய பன்னிரு சீஷர்களில் ஒருவனுகிய தோமா என்பவர் தென் இந்தியாவில் மலையாளக்கரையில்வந்திறங்கி, அங்கே கிறிஸ்து மதத்தைப்பிரசங்கித்து, அநேக சபைகளை ஸ்தாபித்தார் என்றும், அவருடைய சுவிசேஷ கைங்கரியத்தின் பலனுக சீரிய கிறிஸ்தவர்கள் எனவும், தோமைக் கிறிஸ்தவர்களெனவும் பெயர்பெற்றிருக்கிற மலையாளக் கிறிஸ்தவர்கள் தோன்றினுர்களென்றும் அநேக கல்விமான்கள் சொல்லுகின்றனர். சீரிய கிறிஸ்தவர்களுடைய பாரம்பரியமும் இதுவே. ஆயினும் வேறு சில சரித்திராசிரியர்களோ இந்த சபைகளை ஸ்தா

பித்தது அப்போஸ்தலனாகிய தோமா அல்லவென்றும், மெசபத்தோமியா தேசத்திலுள்ள எடஸ்ஸாப் பட்டணத்திலிருந்து மலையாள நாட்டிற்குவந்து சுவிசேஷ ஊழியம் நடத்திய அத்தியக்ஷராகிய தோமா என்றும் கூறுகின்றனர். இது எப்படியாயினும் சுமார் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் இந்தியாவிலிருந்தார்கள் என்பது நிச்சயம். அலெக்சாந்திரியாப் பட்டணத்து அத்தியக்ஷகராகிய தெமித்திரேயு என்பவர் பிராமணரைக் கிறிஸ்தவர்களாக்கும்பொருட்டு பாண்டனேயு என்பவரை இந்தியாவிற்கு அனுப்பினார் என்பது சரித்திர சம்மதம் பெற்ற விஷயம். ஆகவே அதிபூர்வீக காலத்திலேயே இந்தியாவில் கிறிஸ்துமதம் ஸ்தாபகமாயிற்று. ஐரோப்பாவில் பெரும்பாகம் கிறிஸ்து மதத்தை ஏற்றுக்கொள்ளாமலிருந்து, தற்காலத்தில் அதிக நாகரீகம் பெற்றவர்களென்றெண்ணப்படுகிற ஆங்கிலேயர், ஜெர்மானியர் முதலியோரெல்லாம் சாக்சனிதேசக் காடுகளில் சஞ்சாரஞ் செய்துகொண்டிருந்த அந்தப் புராதன காலத்திலேயே இந்தியாவில் கிறிஸ்துமதம் ஸ்தாபிதமாகி விர்த்தியடைந்து வந்தது நாம் நோக்கத்தக்க ஓர் விஷயம்.

கிறிஸ்தவ சபைகள் மலையாளத்திலே மாத்திரமல்ல, இந்தியாவின் பல இடங்களிலும் உண்டாயின. சென்னைக்குப் பக்கத்திலிருக்கிற மைலாப்பூர், கூர்ஜரம் முதலிய இடங்களில் சிறந்த கிறிஸ்தவ சபைகள் இருந்தன. இந்தக் கிறிஸ்தவர்களுக்கு பலவித துன்பங்கள் உண்டானபோதிலும் இவர்கள் தங்களைச்சூழ இருந்தவர்கள் மேல் பல துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்களாயிருந்தார்கள். இதற்குப் பிந்திய நூற்றாண்டுகளில் கிறிஸ்துமதம் ஹிந்து மதத்தின்மேல் இன்னும் அதிகச் செல்வாக்குச் செலுத்தக்கூடியதாயிற்று.

## III. புஸ்தகங்கள்.

இக்காலத்தில் சூத்திரரூபமாய் அநேக புத்தகங்கள் தோன்றின. சூத்திரமென்பது வெகு சுருக்கமாகவும் இனிமையாகவும் ஒரு விஷயத்தைக் கூறுகின்ற

செய்யுள் வாக்கியம். (நன்னூல் தொல்காப்பியம் முதலிய தமிழ் நூல்களும் சூத்திர ரூபமாய் இயற்றப்பட்டவைகளே.) இவைகளை மாணுக்கர் பாராமல் படித்துக் கொண்டு அவற்றை எப்பொழுதும் மனதில் வைத்துக் கொள்ளுவார்கள். ஆசிரியர் இவற்றை விளக்கிக் காண்பிப்பார்கள். இப்படிப்பட்ட சூத்திர நூல்கள், நூற்றுக் கணக்கானவை இக்காலத்தில் செய்யப்பட்டன.

மேலே நாம் பார்த்த ஆறு சாஸ்திரங்கள் சம்பந்தமாக அநேக சூத்திரநூல்கள் தோன்றின. (உ—ம்.) நியாய சூத்திரம், வேதாந்த சூத்திரம் முதலியன. சூத்திரங்களை உதவியாகக்கொண்டு நூல் எழுதும் முறை மிகவும் சித்தியுள்ளதாயிருந்தமையால் அக்காலத்தில் பௌத்தர், ஜைனர் முதலிய யாவரும் இம்முறையைப் பின்பற்றினர். மேலும் இம்முறையானது சமஸ்கிருத பாஷையில் மட்டும் உபயோகிக்கப்படாமல், தமிழ் தெலுங்கு முதலிய திராவிட பாஷைகளிலும் உபயோகிக்கப்படலாயிற்று. இக்காலத்தில் தோன்றிய புஸ்தகங்கள் ஆறு சாஸ்திரங்கள் வேதாந்த சாஸ்திரம் மனுஸ்மிருதி ராமாயணம் பாரதம் பகவத்கீதை முதலியன.

## 1. ஆறு சாஸ்திரங்கள்.

ஆறுசாஸ்திரங்கள் மிகுதியாய்ப் பாராட்டப்பட்டு வந்தன. உயர்தர கல்வி கற்கப்புகுந்தவர்கள் யாவரும் இந்த 6 சாஸ்திரங்களையும் ஆராய்ச்சி செய்தனர். அவையாவன:

1. சாங்கியம்.—இது கபிலர் இயற்றியது. இதன்படி உலகத்தில் 25 தத்துவங்கள் உள. கடவுள் என்று ஒரு தத்துவம் இல்லாமையால் சாங்கிய சாஸ்திரம் ஒருவகை நிரீச்சுரவாதமே யாகும்.

2. யோகசாஸ்திரம்.—இதை இயற்றியவர் பதஞ்சலி முனிவர். இந்த சாஸ்திரத்தின்படி ஐம்புலன்களை யடக்கி மனதை ஒருநிலைப்படுத்தி, சரீர சம்பந்தமாகவும் மானச சம்பந்தமாகவும் சில அப்பியாசங்களைச் செய்யும்போது, ஆன்மாவானது சரீர பந்தத்தினின்று

ஒருவாறு விடுவிக்கப்பட்டு பரமான்மாவோடு ஐக்யப் படும்படி செய்வது. யோகமென்னும் வார்த்தைக்கு ஐக்கியம் அல்லது ஒன்றுதல் என்றர்த்தம்.

3. வைசேஷிகம்.—இது கணுதர் இயற்றியது. உலகம் சிறுசிறு அணுக்களால் ஆக்கப்பட்டிருக்கிறதென்றும் அந்த அணுக்கள் பரிணமித்தலாலேயே இந்த உலகம் உண்டானதென்றும் இந்த சாஸ்திரம் போதிக்கும்.

4. நியாயம்.—இது கௌதமர் இயற்றியது. நியாயம் என்பதற்கு தர்க்கம் என்றும் பெயர். இது மனிதருக்கு உண்டாகும் அறிவு எவ்வழியாய்க் கிடைக்கிறது என்கிறதையும் இவைபோன்ற இதர விஷயங்களையும் கூறுவது. நியாய சாஸ்திரத்தில் அறிவடைகிறதற்கு நாலு பிரமாணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. பூர்வ ஹிந்துக்களின் கல்வித்திறமையும் ஆராய்ச்சி நுட்பமும் எவ்வாறிருந்திருக்கின்றன வென்பதற்கு இவை சிறந்த திருஷ்டாந்தங்களாகையால், இந்த நாலு பிரமாணங்களையும் சிறிது நோக்குவோம்.

(1) பிரத்தியட்சப் பிரமாணம். இதை காட்சி என்பர் தமிழர். பிரத்தியட்சமென்றால், கண்ணுக்கெதிரே என்று பொருள், உதாரணமாக ஒருவன் குடத்தைப் பார்க்கிறன். உடனே இது குடம் என்னும் அறிவு தோன்றுகிறது. இந்த அறிவுக்கு பிரமாணம் பிரத்தியட்சம் எனலாம்.

(2) அனுமானப் பிரமாணம். அதாவது ஒன்றைக் கொண்டு வேறென்றை நிதானித்தறிந்து கொள்ளுதல். மலைக்குச் சென்றவொருவன் அங்கே புகையைக் கண்டு இங்கு நெருப்பு இருக்கிறதென்றன். இது அனுமானப் பிரமாணம். இது 5 வாக்கியங்களால் கூறப்படும்.

1. மலையில் நெருப்பு இருக்கிறது.

2. ஏனெனில் அங்கே புகை யிருக்கிறது.

3. எங்கே புகை உண்டோ அங்கே நெருப்பிருக்கும் அடுப்பண்டைபோல.

4. இங்கே புகை யிருக்கிறது.

5. ஆகையால் நெருப்பும் இருக்கிறது.

இவ்வாருகவே அனுமானப் பிரமாணம் நியாய சாஸ்திரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதேகாலத்தில் கிரேக்கு தேசத்தில் மகா பெரிய தத்துவ சாஸ்திரியாகவிருந்த சாக்ரட்டீஸ் என்பவருடைய சிஷ்யனுன அரிஸ்றருட்டில் என்பவர் எழுதிய நியாயசாஸ்திரங்களில் இதே விதமான அனுமானப் பிரமாணம் விளக்கப்படுவதுடன், இவ்வைந்து வாக்கியங்களும் எடுத்துக் கூறப்பட்டிருப்பது நமக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. இதனுல் ஒருவரிடமிருந்து மற்றவர் இதைக் கடன் பெற்ருரென்று பலர் கூறுவர். யாரை யார் பார்த்தெழுதின ரென்பது இன்னும் தீராத ஓர் விஷயம்.

(3) உவமப்பிரமாணம்.—அதாவது தனக்குத் தெரிந்த உவமையைக்கொண்டு தெரியாத பொருளை அறிந்து கொள்ளல். புலி பூனையைப்போலிருக்குமென்ற அறிவையுடையவன் காட்டுக்குச் சென்று, அங்கே ஒரு மிருகத்தைக் கண்டு, அது பூனையைப்போலிருந்ததால் இது புலியென்ருன். இவ்வறிவுஉவமப் பிரமாணத்தால்வந்தது.

(4) சாத்தப் பிரமாணம்.—சாத்தன் என்ருல் பெரியோர். அதாவது பெரியோர் வாக்கை அனுசரித்த அறிவு. இதற்கு சப்தப்பிரமாணம் என்றும் பெயர். சப்தம் என்பது தொனி, கேள்வி. அதாவது பெரியோரால் கேள்விப்பட்ட விஷயங்களை நம்பி அறிவடைதல்.

இந்து சாஸ்திரிகளில் ஒரு சாரார் இந்தப் பிரமாணத்தை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. இந்தப் பிரமாணத்தாலுண்டாகிற அறிவு நிச்சயமும் பிழையற்றதுமுமாய் இருக்குமென்று உத்தரவாதஞ்செய்ய முடியாதாகையால், இதை மற்றப் பிரமாணங்களோடு சமத்துவப்படுத்திக் கூறுவது ஆகாது என்பதே இவர்களுடைய கொள்கைபோலும். ஆயினும் சாத்தப் பிரமாணமே மனுஷஜாதியின் முடிவுக்கு அதிக தேவையான ஓர் பிரமாணமாகையால், இதைக் கட்டாயமாய் ஒப்புக்கொள்ளவேண்டுமென்பார் பிறிதொரு சாரார். இவர்கள் கூறுவதுண்மையே. சில உதாரணங்களால் விளக்கு

வோம். 'நமது தேசத்தின் மேற்கே அமெரிக்கா என்னும் பெரிய தேசம் இருக்கிறது.' இந்த அறிவு நமக்கு வந்ததற்குப் பிரமாணம் யாது? இவர் என் தந்தை, இவள் என் தாய், இவர் என் தமயன். இந்த அறிவும் சாத்தப் பிரமாணத்தினுலேயே வந்தது.

5. வேதாந்தம்.—இந்த சாஸ்திரத்தை ஆரம்பித்தவர் வியாசமுனிவர் என்று சொல்லுவார்கள். இதன்படிக்கு ஆன்மா அல்லது புருஷன் என்று சொல்லப்பட்ட வஸ்துவும், தெய்வமும் ஒன்றே. ஆகவே தெய்வம் ஒன்று தவிர உலகத்தில் வேறொன்றுமில்லை. காணப்படும் பிரபஞ்சமெல்லாம் நம்முடைய மனதினுல் சிருஷ்டிக்கப்பட்டுக் காணப்படுகிறவைகளே யொழிய அவை உண்மையானபடி இருப்பவை அல்ல. அவை வெறும் தோற்றமே. இந்த அறிவையுடையவனுய், நானும் தெய்வமும் வேறல்ல, நானே அது என்று உண்மையாய் யார் நம்புகிருனே அவனே உண்மையைக் கண்டறிந்தவன். அவனே முக்தியை யடைந்தவன் என்பது இந்த சாஸ்திரம். இதற்கு பிரம்ம சூத்திரம் என்றும் உத்திர மீமாஞ்சை என்றும் வேறு பெயர் உண்டு.

இந்தச் சாஸ்திரத்தைப் பிந்தியகாலத்தவர் அதிகமாய் விஸ்தரித்து வியாக்கியானஞ் செய்து எழுதியிருக்கின்ருர். இதன் விரிவை அங்கங்கு பார்ப்போம்.

6. மீமாஞ்சை.—இது ஜைமினி முனிவரால் செய்யப்பட்டது. வேதம் ஒருவரால் செய்யப்படாமல் அநாதி காலமுதல் சுயம்புவாய் உள்ளதாதலின், அதுவே பிரமாணமாகக் கொள்ளப்படும் என்பது.

இவ்வாறு இந்தப் பருவத்தில் கல்வியும் சாஸ்திர ஆராய்ச்சியும் சில வகுப்பினருக்குள் முன்னேற்றமடைந்தது.

## 2. மனுதர்ம சாஸ்திரம்

நாம் ஆராய்ச்சி செய்கின்ற இப்பருவத்தில் தோன்றிய நூல்களில் மனுஸ்மிருதி என்ற மனுதர்ம சாஸ்திரம்

விசேஷித்தது. இது அக்காலத்து வழக்க பழக்கங்கள், ஜாதியாசாரம் முதலிய விஷயங்களை எடுத்துக் கூறுகின்ற படியால் இந்நூலைக்கொண்டு அக்காலத்து விஷயங்கள் பலவற்றை அறிந்துகொள்ளலாம். அன்றியும் தற்கால ஹிந்துமதத்துக்கு மூலாதாரமாயுள்ள பல பிரமாணங்களும் பல விஷயங்களும் மனுதர்ம சாஸ்திரத்திலே திட்டமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. எங்கேயாவது மனுதர்ம சாஸ்திரத்துக்கும் ருக் முதலிய வேதங்களுக்கும் விரோத மேற்பட்டால், மனுதர்ம சாஸ்திர விதியையே முடிவான நீதியாகக்கொள்க என்று ஓர் வியாக்கியானி கூறியதிலிருந்து இதன் மேன்மையை அறிந்துகொள்ளலாம். இது காரணம் பற்றித்தான் மனுஸ்மிருதியைப் பற்றிச் சற்று விரிவாகப் படிக்கத் தொடங்கினோம்.

மனுஸ்மிருதியில் மொத்தம் பன்னிரண்டு அத்தியாயங்கள் உண்டு. அவை ஒவ்வொன்றிலும் சொல்லியிருக்கும் விஷயமாவன:

**1. அத்தியாயம்.**

இதில் உலக சிருஷ்டிப்பைப்பற்றிச் சொல்லியிருக்கிறது.

**2-4. அத்தியாயங்கள்.**

இவற்றில் சில ஆச்சாரங்களைப்பற்றிக் கூறியிருக்கிறது. பிராமணர் முதலிய துவிஜர்கள், ஆரிய வர்த்தத்திலேயே குடியிருக்க வேண்டுமென்று கூறியிருக்கிறது. (இமயமலைக்கும் இந்திய பர்வதத்திற்கு மிடைப்பட்ட தேசம்.)

நாலுவகை ஆச்சிரமமுண்டு. பிரமச்சாரி—அதாவது மாணுக்கனுயிருந்து தகுந்த உபாத்தியாயரிடத்தில் கற்றுக்கொள்ளுபவன். கிரகஸ்தன்—விவாகம் செய்து இல்லறம் நடத்துபவன். வனப்பிரஸ்தன்—மனைவியோடு அல்லது மனைவியைவிட்டு வனத்துக்குச்சென்று தவம் இயற்றுபவன். சன்னியாசி—மனைவியையும் வீட்டையும் விட்டு உலகப்பற்றற்றவனுய்ச் சுற்றித்திரிபவன்.

5. அத்தியாயம்.

இதில் உணவின் சுத்தம் அசுத்தம் இவைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறது.

இதிலுள்ள சில வசனங்களாவன:—வெள்ளைப்பூடு, வெங்காயம், காளான் இவைகள் துவிஜர்களுக்கு ஆகாத உணவு. பசு ஈன்று பத்துநாளைக்குள் அதன் பாலையாவது, ஒட்டகம், ஒரே குளம்புள்ள மிருகங்கள், செம்மறியாடு, கன்றில்லாப் பசு இவற்றின் பாலையாவது சாப்பிடலாகாது. மாம்சம் தின்னும் எல்லாப் பக்ஷிகளையும், கிராமங்களில் வசிக்கும் பக்ஷிகளையும் சாப்பிடலாகாது. யாகத்தில் தவிர மற்றப்படி மாம்சம் சாப்பிடலாகாது. தேவர்களைக் கனம்பண்ணும்படி மாம்சம் சாப்பிடுவது பாவமில்லை. ஆனால் யாகம் செய்ய எத்தனித்த ஒருவன், அந்த மாம்சத்தைச் சாப்பிட மறுதலித்தால் இருபத்தொரு தலைமுறைகளாக அந்த மிருகமாகப் பிறப்பான். மந்திர உச்சரிப்பில்லாமல் ஒரு பிராமணன் மாம்சம் சாப்பிடக்கூடாது. பூர்வ பிரமாணங்களை அனுசரித்து வேத வசனங்களால் அதைப் பரிசுத்தம் பண்ணிச் சாப்பிடலாம். அவனுக்கு மிருக மாம்சத்தின்மேல் மிக்கப் பிரீதியாயிருந்தால், வெண்ணையிலாவது, மாவினாலாவது அம்மிருகத்தின் உருவம்செய்து அதைச் சாப்பிடக்கடவன்.

6. அத்தியாயம்.

சன்னியாசியினுடைய விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றது. ஒரு சன்னியாசி தனிமையாய் யாதொரு துணையுமின்றி அலைந்து திரியவேண்டும். அவனுக்கு வீடு இருக்கக்கூடாது. தன் ஆகாரத்திற்கு நெருப்பு மூட்டக்கூடாது. ஓடு அவனுக்குக் கைத்துணை. மரங்களினடியே அவனுடைய வாசஸ்தலம். பழமையான முரட்டுத்துணியே அவனது உடை. அவன் சாகவும் பிழைக்கவும் விரும்பக்கூடாது. சம்பளத்தை எதிர்பார்க்கும் வேலைக்காரனைப்போல் இவன் தன் காலத்திற்காகக் காத்திருக்கவேண்டும். அவன் ஒருவரையும் தீதாய்ப் பேசக்கூடாது. யாருக்கும் தன்னைச் சத்துருவாக்கிக் கொள்ளக்கூடாது.

7. அத்தியாயம்.

அரசர் தர்மம். அரசர்கள் தெய்வங்களின் அம்சமாகையால், ஓர் இளைய அரசனைக்கூட அவமதிப்பாய் எண்ணக்கூடாது. அரசன் துஷ்டர்களுக்குத் தண்டனை விதிக்கவேண்டியவன். அரசன் முதலாவது தன் ஐம்புலன்களையும் ஜெயித்து அவற்றை அடக்கினவனாயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் தன் பிரஜைகளை அடக்குவான். வேட்டையாடுதல், சூதாட்டம், பகல் தூக்கம், ஸ்திரீகளின் விஷயம், குடி, ஆட்டம், பாட்டு, சங்கீதம், பிரயோஜனமற்ற பிரயாணம் இவை பத்தும், சுகபோக பிரியத்தினால் உண்டாகிற குற்றங்கள், இவற்றை அரசன் நீக்கவேண்டும். கோள்சொல்லுதல், கொடுமை, துரோகம், பொறாமை, தூஷணம், பிறர்பொருளைக் கைப்பற்றல், பழிவாங்கல், சண்டை இந்த எட்டும் கோபத்தின் பலனான குற்றங்களாகையால் இவைகளையும் அரசன் ஒழிக்கவேண்டும். மேற்கூறிய பதினெட்டு குற்றங்களுக்கும், பேராசையே வேராகையால் அரசன் ஆசையை ஒழித்தவனாயிருக்கவேண்டும்.

அரசர், பரம்பரையாய் ராஜசேவையிலிருந்தவர்களும், சாஸ்திரம் கற்றவர்களும், யுத்தத்தில் வல்லவர்களுமான ஏழெட்டு மந்திரிமார்களை நியமிக்கவேண்டும். நம்பிக்கைக்குரியவர்களை உத்தியோகஸ்தராக நியமிக்க வேண்டும். அரசன் தன் விஷயங்களை எடுத்துக் கூறும்படி மற்ற அரசர்களின் ஸ்தானங்களில் ஸ்தானாதிபதிகளை நியமிக்கக்கடவன். பிற ராஜ்யங்களோடு சிநேகமும் பகையும் ஸ்தானீகர்களாலேயே உண்டாகிறது.

இந்த அத்தியாயத்தை வாசிக்கும்பொழுது தற்கால ராஜாங்கங்கள் அனுஷ்டித்து வருகிற சகல விஷயங்களும் பூர்வ இந்தியர்களால் அனுஷ்டிக்கப்பட்டனவென்று தெரியவருகிறது.

8. அத்தியாயம்.

இந்த அத்தியாயத்தில், சிவில் கிரிமினல் சம்பந்தமான குற்றமும் தண்டனையும் கூறப்பட்டிருக்கின்றன.

அரசனே நியாயம் விசாரிக்கவேண்டியவன். 18 வகைத் தாவாக்களை அவன் விசாரிக்கவேண்டியவன். வாங்கின கடன் கொடாமை, வாக்குறுதி, சொந்தமல்லாததை விற்றல், பாகம், தான விபரம், சம்பளம் கொடாமை, ஒப்பந்தமீறல், வியாபார விற்பனைவிஷயமான தாவா, எஜமான் வேலைக்காரனுக்குள்ளவை, எல்லை, அடிபிடி, மானநஷ்டி, திருட்டு, கொள்ளை, விபசாரம், ஸ்திரீ புருஷாள் கடமை, பாகம், சூது என்பனவே அவை.

திருடப்பட்ட சொத்தை அரசன் உடையவனுக்குக் கொடுக்கவேண்டும். தண்டனை விஷயத்தில் பிராமணருக்கு தாட்சண்யமும், சூத்திரருக்குக் கொடுமையும் காட்டப்பட்டது. ஒரு மனைவிக்கும், பிள்ளைக்கும், அடிமைக்கும் சம்பாத்திய பாத்தியம் கிடையாது. அவர்களது சொத்து அவர்களை உடையோருக்குச் சேரும்.

9. அத்தியாயம்.

ஸ்திரீ புருஷர்களுடைய சமுதாய வாழ்க்கைக்குரிய சட்டங்களும், பிரமாணங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்திரீகளுக்குச் சுதந்தரமில்லை. சிறு பிராயத்தில் தகப்பனாலும், பாலியத்தில் புருஷனாலும், வயோதிபத்தில் ஆண்பிள்ளைகளினாலும் காக்கப்படவேண்டியவள். ஸ்திரீகள் குடிக்கக்கூடாது. அண்ணன் மனைவி ஒருவனுக்குக் குருவாவாள். தம்பி மனைவி அவனுக்கு மறுமகளாவாள். சகோதரனுக்குச் சந்தானமில்லாவிட்டால், மற்ற சகோதரரைக்கொண்டு சந்தானம் உண்டு பண்ணிக்கொள்ளுகிறதற்கு சட்டமுண்டு. ஆயினும் சந்தானம் உற்பத்தியானபின் எவ்விதத்தொடர்பும் இருக்கக்கூடாது. மனைவி மலடியாயிருந்தால் எட்டு வருஷங்களுக்குப் பிறகு அவளைத் தள்ளிவிட்டு இரண்டாம் மனைவியை விவாகம்செய்யலாம். அவளைத் தள்ளுவதோ அல்லது வைத்திருப்பதோ அவனிஷ்டம். ஆனால் பிந்தினவளே முதல் ஸ்தானம் பெறுவாள். இதே அத்தியாயத்தில் குடும்பச்சொத்து பிரிவினையைப்பற்றியும், அரசர் கடமையைப்பற்றியும் சொல்லியிருக்கிறது.

**10. அத்தியாயம்.**

இதில் கலப்புஜாதிகள், பாமர ஜாதிகள், தீண்டா ஜாதிகள் முதலியவர்களுடைய விபரங்கள் காணப்படுகின்றது. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்னும் ஜாதியார் துவிஜராவார் (இருபிறப்பாளர். இதனடையாளம் பூணூல்.) நாலாவது வருணத்தாராகிய சூத்திரருக்கு ஒரே பிறப்புண்டு. ஐந்தாம் ஜாதியில்லை. நாலு ஜாதி தவிர மற்றவரெல்லாம் மிலேச்சர்.

நாலு ஜாதிகளையும் சேராதவர்கள் எவரென்றாலும், அவர்கள் மிலேச்ச பாஷை பேசினாலும் ஆரிய பாஷை பேசினாலும் தாசர்கள் என்றழைக்கப்படுவர். இழிதொழிலாராகிய இவர்களுக்குரிய வேலைகளாவன:— குதிரைவேலை, ரதவேலை, வியாபாரம், மீன்பிடித்தல், தச்சுவேலை, வேட்டையாடுதல், மிருகங்களைக் கொல்லுதல், தப்படித்தல் முதலியன. சண்டாளர் மரங்களடியிலும், சுடுகாட்டிலும், புதைகாட்டிலும், மலைகளிலும், தோப்புகளிலும் வசிக்கவேண்டும். அவர்கள் ஊருக்கு வெளியே வசிக்கவேண்டும். நாய்களும் கழுதைகளுமே அவர்கள் சொத்து. செத்தவர்களுக்குப் போட்ட வஸ்திரமே அவர்கள் உடுப்பு. உடைந்த பாத்திரங்களில் சாப்பிடவேண்டும். இரும்பு அவர்களின் ஆபரணம். இடத்திற்கிடம் அவர்கள் அலையவேண்டும். இருட்டில் அவர்கள் ஊருக்குள் வரக்கூடாது. அநாதிப் பிணங்களை அவர்கள் புதைக்கவேண்டும். கொலைத் தீர்ப்படைந்தவர்களைக் கொல்லவேண்டும்.

பிராமணனாவது க்ஷத்திரியனாவது வேளாண்மை செய்யக்கூடாது. ஏனெனில் வேளாண்மையில் அநேகம் பூச்சிகளைக் கொல்லவேண்டியிருக்கிறது. பிராமணன் பால் விற்கக்கூடாது. விற்றால் மூன்றுநாளில் சூத்திரனாகிவிடுகிறான். விலக்கப்பட்ட மற்ற வஸ்துக்களை (ஜலம், ஆயுதம், நெய், எண்ணெய் முதலியன) விற்றால் ஏழுநாளில் வைசியனாகிவிடுகிறான். தாழ்ந்த ஜாதியானாகிய ஒருவன் உயர்ந்த ஜாதியானுடைய தொழிலைச் செய்வானென்றால் அரசன் அவனுடைய சொத்துக்களை ஜப்திசெய்து

தேசத்திலிருந்து துரத்திவிடவேண்டியது. தன் ஜீவனுக்கு ஆபத்தான நிலைமையிலிருக்கிறவன் யாரிடத்திலிருந்தும் சாப்பாடு வாங்கியுண்ணலாம். வாமதேவனென்பவன் பசியால் நிர்ப்பந்தமடைந்தபொழுது, தன் ஜீவனைக் காப்பாற்ற நாயின் மாம்சத்தைச் சாப்பிட மனதாயிருந்தான். அநேக தபசியற்றிய பாரத்துவாசர் என்பவர் தன் பிள்ளைகளோடு காட்டில் தபசு பண்ணிக்கொண்டிருந்தபோது, பசியின் உபத்திரவத்தினால் பிரிபு என்ற தச்சனிடமிருந்து அநேக பசுக்களைப் பெற்றான். நன்மையும் தீமையுமறிந்த விஸ்வாமித்திரர் பசியின் கொடுமையால் ஒரு சண்டாளனிடமிருந்து நாய்க்கறியை வாங்கினார். பிராமணனும் க்ஷத்திரியனும் பணத்தை வட்டிக்குக் கொடுக்கக்கூடாது.

11. அத்தியாயம்.

இதில் கொடை, பலி, பிராயச்சித்தம் இவைகளைப் பற்றிக் கூறியிருக்கிறது.

12. அத்தியாயம்.

இதில் மறுபிறப்பு, மோக்ஷம், ஆத்துமஞானம் என்னும் மூன்று விஷயங்களைப்பற்றிச் சொல்லுகிறது.

மனுஸ்மிருதியின் கடைசி சூத்திரம்: 'மனுவால் வெளிப்படுத்தப்பட்ட இந்தச் சட்டங்களை ஓதுகிற துவிஜன் தன் நடத்தையில் எப்பொழுதும் சுத்தவானாகவும், தன் மனது நினைத்த காரியங்களையெல்லாம் அனுபவிக்கிறவனாகவு மிருப்பான்' என்பதே.

## 3. இராமாயணம்.

முன்னமேயே தோன்றியிருந்த இந்நூல் அதிக விரிவடைந்து முன்னும் பின்னுமாக சில பெரிய பகுதிகள் கூட்டப்பட்டன.

## 4. மகாபாரதம்.

இதுவும் அதேவிதமாய் மிகுதியாய் இக்காலத்தில் பெருப்பிக்கப்பட்டது. அவ்வாறு புதிதாகப் பாரதத்தில் சேர்க்கப்பட்ட பாகத்தில் பகவத்கீதை யென்பதொன்று. இது விசேஷமானதாகையால் இதைப்பற்றித் தனியாகப் பார்ப்போம்.

## 5. பகவத்கீதை

இது ஆதியில் ஓர் தனிப்புஸ்தகமாக இருந்து, அப்பால் பாரதத்தில் சேர்க்கப்பட்டதாகத் தோன்றுகிறது. இது பாரதத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற சந்தர்ப்பம் பின்வருமாறு:—

சந்திர வம்சத்து அரச புத்திரர்களான பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பெரிய யுத்தம் நிகழ்ந்த போழ்து, ஒருநாள் அர்ஜுனன் யுத்தம் செய்யவேண்டிய பொழுது, இரு பகுதியும் யுத்தசன்னத்தராய் அணிவகுத்து நின்றதையும் தனக்கு எதிரே தனது குருக்களும் தன் பங்காளிகளும் நிற்கிறதையும் அர்ஜுனன் கண்டு, சகோதரர்களையும், குருக்களையும் யுத்தகளத்தில் கொன்று அவர்கள் நாட்டைக் கைப்பற்றி அதை ஆள்வதில் என்ன பெருமை இருக்கிறதென்பதை நினைத்துத் துக்கித்துச் சோர்ந்து விழுந்தான்.

அப்பொழுது அர்ஜுனனுக்கு சாரதியாக இரதத்தை ஓட்டிச்சென்ற கிருஷ்ணன் அவனைப்பார்த்து க்ஷத்திரியனாகப் பிறந்த அவன் க்ஷத்திரிய தருமத்தை நிறைவேற்றுவதே அவனுடைய கடமை என்று அவனைத் தேற்றிய பொழுது அவனுக்கு உபதேசித்த உபதேசங்களே பகவத்கீதையாகும். பகவத்கீதை என்னும் வார்த்தைக்கு பகவானது பாடல்கள் என அருத்தம்.

இவை இரண்டு அடிகளால் ஆக்கப்பட்ட சுலோகங்கள், தற்கால ஹிந்துக்களால் மிகப்பெரிதும் பாராட்டப்படுவது; இது சர்வகாலங்களுக்குமுரிய உபநிஷத் என்று சொல்வார்கள். இதற்கு சமஸ்கிருதத்திலும் இந்திய பாஷையிலும் அநேக வியாக்கியானங்களுண்டு. இங்கிலீஷ் பாஷையிலும் இது பலரால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

மற்றப் பழைய உபநிஷத்துக்களைப் போலல்லாது இது மிகவும் தெள்ளிய இனிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் ஆசிரியர் இதை பண்டிதர்கள்மட்டும் கற்கவேண்டுமென்று நினையாமல், பாமர ஜனங்களும் ஸ்திரீகளும் அடங்கிய சகலரும் உபயோகிக்கவேண்டுமென்று கருதியதாகத் தெரிகின்றது.

இதன் ஆசிரியர் யார் என்பதும் அவர் எக்காலத்தில் வசித்தார் என்பதும் இன்னும் திட்டமாய் வரையறுக்கப் படாத விஷயங்களாகும்.

சமரசம் என்பதே இதன் ஆசிரியருடைய விசேஷித்த கருத்தாய் தோன்றுகின்றது. அக்காலத்தில் பிரபல்ய மாயிருந்த அறுவகைப்பட்ட தத்துவசாஸ்திரங்களையும் பாமர ஜனங்கள் வழிபட்டுவந்த விக்கிரக ஆராதனையை யும் அவர்கள் அனுசரித்துவந்த ஜாதியாச்சாரம் முதலியவற்றையும் சமரசப்படுத்திக் காட்டுவதே இவருடைய விசேஷித்த கருத்தாகத் தோன்றுகின்றது.

## பகவத்கீதை விஷயமாய் கீழ்வருவன நாம் நோக்கத்தக்கவைகள்.

i. கடவுளைப்பற்றிய புதிய போதனை.

ஹிந்துமார்க்கத்தில் அதிகக்காலமாகச் செல்வாக்குச் செலுத்திய விசேஷ போதனைகளெல்லாம் பகவத்கீதையில் சொல்லியிருந்தாலும், அவைகளில் சொல்லப்படாதனவும் அத்தனை விசேஷமாய்ப் பாராட்டப்படாதனவுமாகிய பல புதிய எண்ணங்களையும் இங்கே நாம் பார்க்கிறோம். இப்புதிய போதனைகள் கிறிஸ்துமதக் கொள்கைகளுக்கு ஏறத்தாழ ஒத்திருக்கின்றன.

கடவுள் ஸ்வதந்திரர், தாமே இருப்பவர் அவருக்கு ஸ்தூல சரீரமில்லை, ஆத்மசொரூபி, அவர் சர்வபரிபூரணர், அவர் உலகத்துள்ளும் உலகத்துக்குப் புறம்பேயும் உள்ளவர், நித்தியர், சர்வவியாபகர், சர்வஞ்ஞர், சர்வவல்லவர், உலக சிருஷ்டிகர், உலக பாதுகாவலர், உலகத்தை நடத்திக்கொண்டு வருபவர், சன்மார்க்க தத்துவமுடையவர், இரக்கமுடையவர், பாபிஷ்டிகளை நல்லோராக்கக் கூடியவர், உலகத்தை சம்ரக்ஷிப்பதற்காகவும், தருமத்தை நிலைநாட்டுவதற்காக உலகத்தில் பலதரமும் அவதாரஞ் செய்யக்கூடியவர். இக்கருத்துகளில் சிலவற்றை விளக்கக்கூடிய சில மேற்கோள்களை வசனரூபமாகவும் செய்யுள் ரூபமாகவும் இங்கே எடுத்துக் காட்டுகின்றோம்.

"அர்ஜுனா! அநேகம் ஆயிரமாயிரமாகவும் அநேகவித பேதாபேதங்களாகவும், பற்பல விசித்திரங்களாகவும், நானாவித வர்ணரூபங்களாகவும், அனேகவிதமான சொரூப விசேஷங்களோடும் கூடியிருக்கின்ற நம்முடைய விஸ்வரூபத்தைப் பார்ப்பாய்."

"அர்ஜுனா! உனது ஊன நேத்திரத்தாலே விசால்மானதும் அதியாச்சரியமானதுமான நமது விஸ்வரூபத்தைப்பார்க்க வல்லவனல்லை. உத்தமமான ஞானநேத்திரந் தருகின்றோம், அதனாலே நமது யோகமாயையின் பிரபாவத்தையுடைய விஸ்வரூபத்தை பார்."

"மிகுந்த துன்மார்க்க ஜீவியஞ்செய்கிற ஒருவன் அதிக பக்தியுடன் என்னைப் பூஜித்து வருவானென்றால், அவன் நல்லவன் என்று எண்ணப்படுவான். ஏனெனில் அவன் நன்றாய்த் தீர்மானித்தான். சீக்கிரமாக அவன் நற்குணத்தைப் பெற்று நித்திய சமாதானத்தை அடைகிறான். ஓ, அர்ஜுனா! எனது பக்தர்களில் ஒருவரும் அழிந்துபோகார்கள் என்பதை அறிவாயாக."

இருவகை உயிர்க்கும் இனியனாய் இன்ப
துன்பம்யான் என்னதென் றறியாது
ஒருபொருளாலும் குறைவுபா டின்றி
உள்ளமும் ஒருவழிப் படர
பொருவரும் துணிவும் கருணையும் புரிந்து
புலன்தெரி உணர்வை என் பாலே
மருவிநின் றொழுகும் யோகியென் பவன் காண்
மன்னமற் றெனக்குவே றினியான்:

உலகமும் தானும் வேறிலா மையினால்
தானொரு பொருட்குமஞ் சாதே
அலகிலா உயிர்கட் கினியனா தலினால்
அவைகளும் தன்னையஞ் சாதே
புலவரா னவர்கள் புகழவே நிகழ்வான்
பொறாமையும் மயக்கமும் களிப்பும்
இலகிடா நெஞ்சத்து யோகிஎன் பவன்காண்
யாரினும் எனக்குவே றினியான்.

"யார் சகல உயிர்களுக்கும் இன்பத்தையே கருதுபவனாய், இன்பதுன்பங்களை ஒரேவிதமாய்ப் பாவிக்கின்றவனாய், நான் என்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் அற்றவனாய், மனசம்மியமுடையவனாய், தன் உள்ளத்தை ஐம்பொறிவழி செல்லவிடாமல் நல்வழிச் செலுத்துகின்றானோ, யார் சிறந்த துணிவும் கருணையும் உடையனாய் தன் உணர்வையெல்லாம் என்னிடத்தில் வைத்திருக்கிறானோ, அவனே எனக்கு இனிமையானவன்.

இவ்விதமான அனேக உயர்ந்த சன்மார்க்க தத்வங்களும் அறநெறிகளும் பகவத்கீதையில் கூறப்பட்டிருக்கின்றது.

ii. சர்வமத சமரசம்.

இந்தியாவிலுள்ள ஆறுவகைப்பட்ட தத்துவ சாஸ்திரங்களை ஒருமைப்படுத்தும்படி இந்நூல் எழுதப்பட்டதென்பதை முன்னே பார்த்தோம். இந்நூலை வாசிக்கும்போது சகல மதங்களும் சமத்துவமுடையன என்றும் எந்த மதத்தின் மூலமாகவும் முத்திபெறலாம் என்றும், எந்த தெய்வத்தை ஒருவன் ஸ்மரிக்கின்றானோ அந்த தெய்வத்தில் ஈஸ்வரனாகிய தாம் இருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

"மோக்ஷாபேக்ஷைகொண்டுள்ள ஒருவன் நம்மை உபாசிப்பானாயின் அவனுக்கந்த பலமும் மற்றும் இந்திராதி தேவர்களை உபதேசித்து தேவ போகார்த்தம் இச்சித்தால் நாமே அந்த தேவர்களில் அந்தரியாமியாயிருந்து அவர்கள் இச்சித்த தேவ போகங்களையும் அனுபவிக்கக் கிருபை செய்கின்றோம்."

யாவன் ஒருத்தன் யாதொரு தெய்வம்
மேவ அருச்சனை அன்பின் விளைப்பான்
ஆவல் சலிப்பறும் அன்பவ னுக்கே
ஆவது முற்றும் அளித்திடு மவன்நான்.

iii. பரமாத்மன்.

பரமான்மாவோடு ஜீவான்மா ஐக்கியப்படுதலே முத்தி சாதனமாகையால் முத்தியடைய ஏற்பட்ட வழிகள் எல்லாம் யோகம் என்று பெயர்பெறும். யோகம் என்னும் பதத்திற்கு ஐக்கியமென்றருத்தம்.

எல்லார்க்குங் கதியும்நான் இருவினைப்பா ரகனும்நான்
எல்லார்க்குந் தலைவன்நான் எப்பொருட்கும் சான்றுநான்
எல்லார்க்கும் உறைவிடம்நான் யார்க்கும்இடர் தீர்ப்பன்நான்
எல்லார்க்கும் நல்லேன்நான் எப்பொருட்கும் வித்துநான்.

உபநிஷத்துக்களில் பரமாத்மாவைப்பற்றிச் சொல்லியிருக்கிற விஷயமே கீதையிலும் இன்னும் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றது.

"அர்ஜுனா! காணப்படும் எல்லாப் பூதபிராணிகளுடைய இருதய ஸ்தானத்தில் அந்தரியாமியாக இருக்கும் பரமாத்ம சொரூபம் நாமே, சரம் அசரமாகிய பிரபஞ்சம் தோன்றுதற்கும் அவை காக்கப்படுவதற்கும், பிறகு லயப்படுவதற்கும் காரணமாயிருக்கின்றதெதுவோ அந்தப் பழம்பொருளும் நாமே. பிரகாசங்களுக்குள்ளே சூரியப்பிரகாசமும், நக்ஷத்திரங்களுக்குள்

ளே சந்திரனும் நானே. வேதங்களுக்குள்ளே சாமவேதமும் முப்பத்து முக்கோடி தேவர்களுக்குள்ளே தேவேந்திரனும் ஞானேந்திரியங்களுக்குள்ளே மனசும் நானே.''

'ஓ அர்ஜுனா! எந்த லோகங்களிலும் எந்த ஸ்தலங்களிலும் எந்த வஸ்துக்களிடத்தும், காணப்படும் ஐசுவரியங்களும் மகிமைகளும் பிரகாசங்களும் மற்றுமுள்ள விசேஷ பலன்களும் நம்முடைய முக்கியமான விபூதிகளென்றும் நமது அம்சத்தினால் உண்டானதென்றும் அறிவாயாக.'

'நானே சகல உயிர்களிடத்தும் இருக்கின்றேன், சகல உயிர்களும் என்னிடத்தே இருக்கின்றன.'

யாவன் ஒருவன் என்னையெல்லா உயிர்க ளிடையும், என்னிடையே
மேவ எல்லா உயிர்களையும் வேறு காதே மெய்காண்பான்
தேவர் பகைமுன் செகுத்தானே! அவன்யா தேனும் செய்திடினும்
ஆவ அவனு கின்றேன்யான் அதுநீ ஏதும் ஐயுறேல்

iv. அவதார உபதேசம்.

வேறெந்த நூலைக்காட்டிலும் பகவத்கீதையில் தெளிவாய் சொல்லப்பட்டது. எங்கெங்கே நீதியானது தாழ்ந்து அநீதி உயர்கின்றதோ அங்கங்கே துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனம் நடத்தும்படி நான் அவதரிக்கிறேன். தருமத்தை நிலைநிறுத்த யுகங்கள்தோறும் நான் உலகத்தில் வந்து பிறக்கிறேன் என்று பகவத்கீதையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

அன்றியும் இனிமேலும் தர்ம ஸம்ஸ்தாபனார்த்தம் செய்யும்படி ஈஸ்வரன் அவதரிக்கப் போகிறார் என்ற கொள்கையும் கூறப்பட்டிருக்கின்றது.

சாவாது பிறவாது தனிமுதலாய் இருந்தநான்
ஆவாவிவ் வுலகுபடும் அழிதுயர்தீர்ப் பதற்காக
மேவாது நின்றேயென் மாயையினால் மெய்யேபோல்
ஓவாது பிறந்திடுவேன் உகந்தோறும் உகந்தோறும்.

v. சர்வஜன ஊழியம்.

மற்றைய ஹிந்துமத நூல்களைக்காட்டிலும் இங்கே இவ்விஷயம் அதிகமாய் பாராட்டப்படுகின்றது. இதற்கு நிஷ்காம கர்மயோகம் அதாவது பிரதிபலன் கருதாத ஊழியம் என்று கூறப்படுகிறது.

கைம்மா றில்லா தனசெய்வான் காதல் தோழன் கடும்பகையன்
விம்மா தெவர்க்கும் ஒத்திருப்பான் வேண்டப் படுவான் வேண்டாதான்
அம்மா மறைநூல் நெறிபுரிவான் ஆகா தனவாக் கிடுவான் என்று
இம்மானுடவர் அனைவருக்கும் ஒப்பான யோகி என்னப்படுவான்.

vi. வர்ணாஸ்ரம தருமம்.

இதுவே கீதையின் அதிவிசேஷித்த போதனை என்று சிலர் கூறுவர். வர்ணாஸ்ரம தருமம் என்பது ஜாதிமுறை ஒழுக்கம். அதாவது ஒவ்வொரு ஜாதியைச் சேர்ந்தவனும் தன் தன் ஜாதிக்குரிய தொழிலைச் செவ்வனே செய்யல் வேண்டும். க்ஷத்திரியன் போருக்கு அஞ்சக்கூடாது. ஒவ்வொரு மனிதனும் தான் தான் ஏற்ற கடமைகளைச் சரிவர நிறைவேற்றவேண்டும். இதுவே பகவத்கீதையின்படி வர்ணாஸ்ரம தருமமாகும். வர்ணாஸ்ரம தருமம் என்னும் பதத்தில் மேல்ஜாதி கீழ்ஜாதி என்ற வித்தியாசங்களும், தீண்டாமை, தீட்டு என்ற விஷமங்களும் அடங்காது.

செயலாலும் குணத்தாலும் செலுகாலு குலமாக
இயலால்முன் படைத்தேன்நான் இப்பொழுதும் காப்பேன்நான்
மயலாய வினைப்பயனில் மனம்வையேல், மற்றதனால்
அயலாயே இருக்கும்எனக் கவையறிவார் எனையறிவார்.

vii. பல வேறு நீதிகள்.

இவைகளையன்றி வேறு பல நீதிகளும் ஆலோசனைகளும், புத்திமதிகளும் பகவத்கீதையில் உண்டு.

இவ்விதமான சிறந்த முன்னேற்றத்துக்குரிய உபதேசங்கள் அடங்கியிருத்தலாலும், யாவருக்கும் விளங்கக்கூடிய விதமாய் இவைகள் கூறப்பட்டிருக்கின்றபடியாலும், தற்காலத்தில் பகவத்கீதை இந்தியாவில் பெரிதும் பாராட்டப்பட்டு வருகின்றது. தற்காலத்தவர் இதுவே ஹிந்து பைபில் என்று கூறுவர்.

## பௌத்த ஜைன நூல்கள்.

இவ்விரு மதத்தினரும் இந்தக் காலத்தில் அநேக நூல்களை இயற்றினார்கள். இவைகள் மிகுதியாய் சூத்திர ரூபமாகவே இருந்தன. பௌத்த நூல்களிலே விசேஷமானது திரிபிடகம் என்று கூறுவர். இவைகள் மூன்று கூடை நிறை இருந்தமையால் இப்பெயர் பெற்றன. பிடகம் என்பது கூடை, திரிபிடகம் என்னும் இந்த நூல்கள் இலங்கையில் கி. மு. 200 வருஷம் சேர்க்

கப்பட்டன. இவை எழுதப்பட்டிருக்கின்ற பாஷைக்கு பாலி பாஷை என்று பெயர். இது சமஸ்கிருத பாஷையின் சிதைவு.

இதையன்றி இந்தியாவில் சமஸ்கிருத பாஷையிலேயே அநேக பௌத்தமத புஸ்தகங்கள் இயற்றப்பட்டன: லலித விஸ்தாரம், புத்தச் சரித்திரம், அமிதாய சூத்திரம் முதலிய சில விசேஷ பௌத்த நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன.

ஜைனர்களும் தம் மதத்துக்குரிய பல நூல்களை இக்காலத்தில் எழுதலானார்கள்.

# VII

# THE DECADENCE PERIOD.

---

எழாவது

## க்ஷீணபருவம்.

கி. பி. 400—700.

ஏழாவது

# க்ஷீண பருவம்.

## கி. பி. 300—700.

பௌத்த ஜைனமதங்களோடு சமமாய்நின்று போராடிவந்த ஹிந்துமதமானது இந்த நானூறு வருஷக் காலத்தில் பல வேறு காரணங்களால் பலஹீனமடைந்து வரவரக் குறைவுற்றதினால் இப்பருவம் க்ஷீணப்பருவம் என்னும் பெயரைப்பெற்றது. க்ஷீணம் என்னும் பெயருக்குத் தேய்ந்துபோதல் என்று பொருள்.

## I. சரித்திரம்.

இக்காலத்தில் அயோத்தியில் பிரபல அரசர்கள் ஆண்டனர். சமுத்திரகுப்தன், விக்கிரமாதித்தன் முதலிய அரசரின் காலமிதுவே. விக்கிரமாதித்தன் கதைகள் என்று வழங்கும் அரசன் இவனே. இக்காலத்தில் மங்கோலியர் என்று சொல்லப்பட்ட ஜாதியார் இந்தியாமீது படையெடுத்து ஹிந்து ஆலயங்களையும் புத்த மடங்களையும் நிர்மூலமாக்கி, முறடரானதால் பலவித ஹிம்சைகளையும் உண்டாக்கினார்கள். என்றாலும், ஐம்பது வருஷம் மட்டும் அவர்கள் தேசத்திலிருந்தனர். அப்பால் அவர்கள் துரத்தப்பட்டு ஓடிப்போய்விட்டனர்.

தென்னிந்தியாவில் பல ராஜ்யங்கள் தோன்றின. இக்காலத்தில்தான் ஹையூன்தசாங் என்ற சீன யாத்திரீகன் இந்தியாவுக்கு வந்தார். இவர் இந்தியாவைப்பற்றி எழுதிவைத்த புத்தகங்கள் சீனதேசத்தில் இன்னும் இருக்கின்றன. இப்புத்தகங்களை வாசிக்கும்போது அக்கால இந்தியாவைப்பற்றி அநேக விஷயங்களை அறிந்துகொள்ளலாம். சைவ வைஷ்ணவ மதங்கள் இக்காலத்தில் மிகுந்த வளர்ச்சியடைந்தன. இம்மதங்களைப்பற்றி

யிருந்த பல புராதனக்கொள்கைகள் மாறிப்போயின. மேலான சில கொள்கைகள் சேர்க்கப்பட்டன.

## II. மார்க்கம்.

திரிமூர்த்திகளைப்பற்றிய உபதேசம் இக்காலத்தில் தோன்றியதாகத் தெரிகிறது. பிரமன், சிவன், விஷ்ணு என்னும் இந்த மூன்று தெய்வங்களையும் வழிபடுபவர்களுக்குள்ளே மிகுந்த போராட்டமும் விரோதமும் ஏற்பட்டபடியினுல், இம்மூவரும் ஒன்றுதான் என்னும் சமரஸக்கொள்கை ஏற்பட்டு, அதற்கு உதவியாக திரிமூர்த்தியைப்பற்றிய உபதேசம் உண்டாயிற்று ஆனாலும் இந்த உபதேசம் விருத்தியடையவில்லை. காலஞ் செல்லச்செல்ல திரிமூர்த்திகளில் ஒருவனுகிய பிரமதேவனுக்கு ஆலயங்களும் ஆராதனைகளும் இல்லாமற்போய்விட்டது.

கிருஷ்ணனைப்பற்றிய பல கதைகள் இக்காலத்தில் பெருப்பிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டன. விசேஷமாய் கிருஷ்ணனுடைய சிசுபிராயத்தைப்பற்றிய பல கதைகள் புதிதாய்த் தோன்றின. இக்கதைகள் தோன்றிய இடம் கூர்ஜ்ஜர தேசமாதலாலும், இதே இடத்தில் பெருந்தொகையினரடங்கிய ஒரு பூர்வ கிறிஸ்தவ சபை இருந்தாலும், இக்கதைகள் கிறிஸ்தவர்கள் மூலமாய்த் தோன்றியிருக்கலாமென்று நினைக்க இடமுண்டு. இவ்விதமாய் நினைப்பதற்குச் சில ஆதாரங்களாவன: கிருஷ்ணனுடைய (வளர்ப்புத்) தகப்பனுகிய நந்தகோபன் கர்ப்பவதியாயிருந்த யசோதையைக் கூட்டிக்கொண்டு தன் வரிப்பணத்தைச் செலுத்தும்பொருட்டு மதுராபுரிக்குச் செல்லுதல், குழந்தையாகிய கிருஷ்ணன் மாட்டுத் தொழுவத்தில் இருத்தல், யாதொரு பயமுமின்றி சமாதானமாய் நித்திரைசெய்கிற யசோதையைச் சூழ இடையரும் இடைச்சியரும் மாடுகளும் கழுதையும் நின்று பார்த்துக்கொண்டிருத்தல், பிறந்த குழந்தையைக் கொல்லும்படி கம்ஸன் தந்திரஞ்செய்தல், பாலகர் கொலை, ஆற்றைக்கடந்து ஓடிப்போதல், ஓர் ஸ்திரீயினுடைய மரித்துப்போன குமாரனைக் கிருஷ்ணன் உயிரோடெழுப்புதல், குப்ஜை என்ற ஸ்திரீயைக் குணப்படுத்தினதற்காக அவள் பரிமள தைலத்தைக் கிருஷ்ணன்

மேல் ஊற்றுதல் முதலான அநேக அம்சங்கள் சுவிசேஷக்கதையோடு ஒத்தவைகளாகத் தோன்றுகின்றது. மேலும் இக்காலமுதல் தான் குழந்தையாகிய கிருஷ்ணனை (பாலகிருஷ்ணனை) ஆராதிக்கும் வணக்கம் தோன்றியது. இக்காலத்துக் கிறிஸ்தவர்கள் குழந்தையாகிய இயேசுவை விசேஷமாகப் பாராட்டி, மரியாள் குழந்தையை கையிலேந்தியிருக்கிற பாவனையில் இவ்வணக்கத்தை விசேடித்து வந்தார்கள் என்பதை நாம் நோக்கும் பொழுது இதிலும்கூட கிறிஸ்தவ செல்வாக்குச் சென்றிருக்கலாம் என்று யூகிக்கவேண்டியிருக்கிறது. இவற்றையும் இவைபோன்ற பிறகாரணங்களையுங்கொண்டு சில ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் இக்கதைகள் கூர்ஜரத்திலிருந்த கிறிஸ்தவ ஜனசமூகத்தினின்று வந்திருக்க வேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள்.

விக்கிரகாராதனை, வீண்சடங்கு, கட்டுக் கதைகள், புராணங்கள் முதலியவை இக்காலத்தில் அதிகமாய்த் தோன்றின. மொத்தமாய்ச் சொன்னால் இந்துமார்க்கத்தின் வலிமை இக்காலத்தில் குறைந்துபோனது.

இவ்வாறு ஹிந்துமதம் க்ஷீணித்துவிட்டதற்குப் பல காரணங்கள் உள. சைவர்களும் வைஷ்ணவர்களும் ஒருவரோடொருவர் சண்டையிட்டு, ஒருவரையொருவர் தூஷித்துத் திரிந்தனர். புத்தமார்க்கமும் ஜைனமார்க்கமும் தன்னோடு ஓயாது போராடி வந்ததன் பயனாக அவ்விரண்டு மதங்களினின்றும் பல விஷயங்களை ஹிந்துமதம் பெற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. இந்தியாவின் பூர்வ குடிகளை ஆரிய மதத்தினராக ஒப்புக்கொள்ளும்பொழுது அநேக அநாரிய தெய்வங்களையும் அநாரிய அனுஷ்டானங்களையும் ஹிந்துமதம் ஏற்றுக்கொண்டது. அரசர்கள் ஹிந்துமதத்தைமட்டும் பாதுகாக்காமல், சகல மதங்களையும் ஒரேவிதமாக பாவித்துவந்தார்கள். மேலும் ஹிந்து மதத் தலைவர்களும் பிராமணர்களும் ஹிந்துமதத்தின் விசேஷதத்துவங்களை இக்காலத்தில் அதிகமாய்ப் பாராட்டாமல், புராணக்கதைகள், வீண்சடங்கு முதலியவற்றையே விசேஷப்படுத்திக்கொண்டிருந்தனர். இத்யாதி காரணங்களால் ஹிந்துமதம் க்ஷீணிக்கத் துவங்கினது.

இந்தக் காலத்தில் பௌத்தமதம் செழிப்புற்றிருந்தது. அந்த மதத்தில் இப்பொழுது இரண்டு பிரிவுகள் காணப்பட்டன. இவற்றுக்கு ஹினயாணம் மஹாயாணம் என்று பெயர். ஹினயாணம் என்பது பழைய பௌத்தமதம். மஹாயாணம் என்பது புதியது. பழைய சித்தாந்தப்படி ஒருவன் தேடக்கூடிய அதிமேலான நிலைமை பரிபூரணத்துவத்தை அடைந்த அருகதனுவதே. இந்த நிலைமையை அடைந்தவன் தன் மரணகாலத்தில் நிருவாணத்தை அடைகிறான். மஹாயாணம் என்னும் இப்புதிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு முன்வைத்த இலக்கு அருகதன் ஆகவேண்டுமென்பதல்ல, போதிசத்வன் ஆகவேண்டும் என்பதே. உபத்திரவப்படும் மனுஷஜாதியை மீட்கும்படியாக நிருவாணம் என்னும் நற்பதவியைத் துறந்து, அவர்களுக்கு ஆசானுகவும் குருவாகவும் இருப்பதைத் தெரிந்துகொள்ளுகிறவனே போதிசத்வன். இவ்விதமாக ஹினயாண பௌத்தம் சிலருக்கு மீட்பை அளித்தது. மஹாயாண பௌத்தமோ அநேகருக்கு மீட்பை அளித்தது. இவ்வாறு போதிசத்வர்களானோர் அநேகர்.

புத்தர்களும் போதிசத்வர்களும் தெய்வங்களாகப் பாவிக்கப்பட்டனர். இவர்களுக்கு ஆராதனைமுறைமைகள் ஏற்பட்டன. ஆலயங்கள், அலங்கரிக்கப்பட்ட பீடங்கள், சிங்காரமான ஆசாரிய உடுப்புகள், மேளதாளங்கள், ஊர்வலங்கள், கொடிகுடைகள், தேர்திருவிழாக்கள் முதலியவெல்லாம் தோன்றின.

இந்தப் பருவகாலத்தில் புத்தமதம் உலகத்தின் மற்ற பாகங்களில் அதிகமாய்ப் பரவியது. சீனதேசத்தில் பௌத்தமதமே விசேஷ மதமாயிற்று. இந்த மதத்தைச் சீனர்களுக்குக் கற்றுக்கொடுக்கும்படி இந்தியாவிலிருந்து அநேக கல்விமான்கள் சீனுவுக்குச் சென்றனர். பௌத்தமதத்தின் ஜனனதேசமாகிய இந்தியாவைத் தரிசித்து நேர்முகமாக புத்தமார்க்கத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்னும் நோக்கத்தோடு அநேக யாத்திரீகர்கள் சீனுவிலிருந்து இந்தியாவுக்கு வந்து, தேசமுழுவதிலும் சுற்றித்திரிந்தனர். அநேக பௌத்த

மத நூல்கள் சீனபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டன. சீனுவிலிருந்து பௌத்தமதம் கொரியா ஜப்பான் தேசங்களுக்குச் சென்றன. அன்றியும் பர்மா, சையாம், ஜாவா முதலிய தேசத்தினர் புத்தமார்க்கத்தை ஏற்றுக்கொண்டனர். இதுவுமல்லாமல் மத்திய ஆசியாவிலுள்ள தேசங்களிலும் பௌத்தமத செல்வாக்கு அதிகமாயிற்று.

பௌத்தர்கள் கல்வியில் அதிக முயற்சியுள்ளவர்கள். பீஹார் நாட்டிலுள்ள நாளந்தை என்னும் இடத்தில் ஓர் பெரிய பௌத்த சர்வகலாசாலையிருந்தது. இருநூறு வருஷங்களுக்கு அதிகமாக இது செழிப்பான ஒரு வித்யாபீடமாய், புத்தமதக் கல்வியை அபிவிர்த்தி செய்துகொண்டுவந்தது.

பௌத்தமதத்தின் ஜென்ம தேசமாகிய இந்தியாவை தரிசித்து பௌத்தமத உபதேசத்தையும் பௌத்தமத புஸ்தகங்களையும் நேரே பெற்றுக்கொள்ளும்படி சீனுதேசத்திலிருந்துவந்த இரண்டு யாத்ரீகரைப்பற்றி நாம் இங்கே குறிப்பிடவேண்டும். பா—ஹியான் என்னும் யாத்ரீகன் ஆப்கான் ஸ்தானத்தின் வழியாய் கி. பி. 399—ம் வருஷம் இந்தியாவுக்குள் பிரவேசித்து 414 வருஷம் வட இந்தியாவிலிருந்தான். இந்துமதமும் பௌத்தமதமும் சம அந்தஸ்துடையவைகளாய் இருந்தன. இரண்டாவது யாத்ரீகனாகிய ஹியூன்தசாங் விசேஷமானவர். இவர் மத்திய ஆசியா வழியாய் இந்தியாவுக்கு வந்தார். கி. பி. 629 ல் வந்து 16 வருஷமாக வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் பிரயாணம் செய்து இந்தியாவைப்பற்றி ஒரு புஸ்தகம் எழுதினார். அப்புஸ்தகம் இந்நாள்வரைக்கும் சீனுதேசத்தில் இருக்கிறது. இவர் வந்தபொழுது புத்தமதம் பல இடங்களில் சற்று பலஹீனமாயும், இந்துமதம் செல்வாக்குள்ளதாயும் இருந்ததாகத் தெரிகின்றது. ஆயினும் பௌத்த அரசர்கள் பலர் இருந்தார்கள். கானூஜ் பட்டணத்தில் 100 பௌத்த மடங்களும் 10000 சந்நியாசிகளும் இருந்தனர். இவர் எழுதிய புஸ்தகத்திலிருந்து பௌத்த மதத்தைப்பற்றியும் அக்காலத்து இந்தியாவின் நிலைமையைப்பற்றியும் பல காரியங்களைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

இக்காலத்தில் சமணமதமும் நன்னிலைமையுற்றிருந்தது. விசேஷமாய்த் தென்னிந்தியாவில் சமணமத செல்வாக்கு அதிகமாயிருந்தது. அரசர்களிலும் சிலர் ஜைன மதத்தை அனுசரித்ததுமல்லாமல், அதைப் பிரபல்லியப் படுத்தப் பலவாறு முயற்சித்து வந்தார்கள். சமஸ்கிருதத்திலும் தமிழ் முதலிய இதரபாஷைகளிலும் ஜைனர்கள் அநேக நூல்களை இயற்றினார்கள். ஹிந்துக்களையும் பௌத்தர்களையும் போலவே ஜைனர்கள் அழகிய ஆலயங்களைக் கட்டினார்கள். இவைகள் விசேஷமாய் கன்மலைகளில் வெட்டித் தோண்டிக் கட்டப்பட்டவை.

## III. புஸ்தகங்கள்.

ஹிந்துமத நூல்கள்.

மதசம்பந்தமாக ஹிந்துமதம் க்ஷீணித்து வந்தாலும் கல்வி விஷயத்தில் அநேக அபிவிர்த்திகள் நடைபெற்றன. இக்காலத்து ராஜவம்சங்கள் கல்வி விஷயத்தில் மிகவும் முயற்சியெடுத்து வந்தார்கள். விசேஷமாய் குப்தராஜாக்கள் இலக்கண இலக்கிய சாஸ்திரம் முதலிய ஆராய்ச்சியைப் பெரிதும் பரிபாலித்து வந்தார்கள். இவர்களுடைய பரிபாலனத்தின்கீழ் நாடகங்கள், காவியங்கள், இலக்கண இலக்கியங்கள், ஜோதிடம் முதலிய பலதுறைகளில் நூல்கள் இயற்றப்பட்டன. விக்கிரமாதித்தன் முதலிய அரசர்கள் கதைகளை உற்பத்திசெய்வித்து அவற்றை எழுதுவித்தார்கள்.

இக்காலத்தில் தோன்றிய விசேஷ மதநூல்கள் புராணங்களே. புராணமென்னும் பதத்திற்கு பழமையாகிய கதை என்று அர்த்தம். இவை பதினெட்டு என்பர்.

பிரமா, மகாவிஷ்ணு, சிவன் ஆகிய இம்மூவருக்கும் ஒவ்வொருவருக்கு அவ்வாறாக மொத்தம் பதினெட்டு புராணம். இப்பதினெட்டுப் புராணங்களை ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்ட புராணங்களுக்குக் கணக்கில்லை. இவையன்றி மதுரை, காஞ்சிபுரம் முதலிய ஸ்தலங்களின் மகிமையை எடுத்துரைக்கும்படி எழுதப்பட்ட ஸ்தல புராணங்களும் பல உள.

பௌத்த ஜைன நூல்கள்.

இவ்விருமதத்தினரும் இக்காலத்தில் அநேக நூல்களை இயற்றினார்கள். இவற்றில் சில தென்னிந்தியாவில் தமிழ் பாஷையில் இயற்றப்பட்டன. இவற்றில் விசேஷமானவைகளுக்கு பஞ்சகாவியம் என்று பெயர். இவை ஜீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன. இவற்றிலும் உயர்ந்த காவியங்கள் தமிழில் இல்லை என்று சொல்லுவர் புலவர்.

# VIII

# THE RECONSTRUCTION PERIOD.

எட்டாவது

## புனர் நிர்மாண பருவம்.

கி. பி. 700—1200.

எட்டாவது

# புனர் நிர்மாண பருவம்.

## கி. பி. 700—1200.

சுமார் ஐந்நூறு வருஷச் சரித்திரமடங்கிய இப்பருவமானது ஹிந்துமதச் சரித்திரத்தில் அதிவிசேஷமான பருவம் என்னலாம். ஏனெனில் தற்காலத்தில் இந்தியாவிலுள்ள ஹிந்துமதம் இந்தப் பருவத்தில்தான் முதல் முதல் தோன்றியது.

ஹிந்துமதமானது பலஹீனமடைந்து க்ஷீணித்து நிற்கும்பொழுது சமயாச்சாரிகள் என்ற பெரியோர் ஆங்காங்கு எழுந்து, சீர்திருத்த முயற்சிகளைச்செய்து, ஹிந்துமதத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் மத சித்தாந்தங்களை வரையறுத்து, அந்தந்தப் பிரிவுக்கு அவசியமான வேதாகமங்களை திட்டம்பண்ணி இவ்வாறு ஹிந்துமதத்தை புனருத்தாரணம் செய்ததைப்பற்றிக் கூறும் பாகமாகையால், இது புனர் நிர்மாண பருவம் என்னும் பெயர் பெற்றது. புனர் நிர்மாணம் என்பதற்குத் திரும்பவும் கட்டுதல் என்று பொருள்.

## I. சரித்திரம்.

அநேக புதிய புதிய ஜாதியார் இந்தியாவிற்குள் வந்தனர். மகமதியர் இக்காலத்தில் வட இந்தியாவிலுள்ள சிந்துப்பிரதேசத்திலும், எல்லைப்புறமாகாணங்களிலும் மட்டுமே படையெடுத்துவந்து குடியிருந்தனர். வட இந்தியாவிலுள்ள இதரபாகங்களுக்கு அவர்கள் இன்னும் வரவில்லை. ரஜபுத்ரர் என்னுமொரு ஜாதியார் இக்காலத்தில் தோன்றி மாளவம், டில்லி, ஆஜ்மீரம் முதலிய இராஜ்ஜியங்களை ஸ்தாபித்துப்பிரபலமாயிருந்தனர். இவர்களுடைய ஆளுகையின்கீழ் இராணுவ தைரியமும், உயர்ந்த நாகரீகமும் விருத்தியாயின. தென்னிந்தியாவிலும் பல இராஜ்ஜியங்கள் வளர்ந்தோங்கின. மொத்தமாய்ச்சொன்னால் தேசம் முழுவதிலும் ஒருவிதமான அமைதியும், செழிப்பும், குடிகளிடத்தில் மகிழ்ச்சியுமிருந்தன.

## II. மார்க்கம்.

இவ்வாறு நல்ல நிலைமையிலிருந்த ஜனங்களுடைய மனது மார்க்க விஷயங்களிலே சென்றது. மிகுந்த க்ஷீணதசை யடைந்திருந்த மார்க்கத்தைச் செவ்வைப்படுத்தி, ஒருவித ஒழுங்குக்குள்ளாக்கித் திருத்தி அமைப்பதில் நாட்டிலுள்ள உயர்ந்தோர் யாவரும் கவனம் செலுத்தினார்கள்.

பிராமணர்களாற் செய்யப்பட்ட வேதயாகங்கள் இக்காலத்தில் அநேகமாய் நின்றுபோயின. ஆயினும் புராதன குடிகள் வழங்கிவந்த மிருகபலிகள் நடைபெற்று, அவைகளின் இரத்தம் ஆலயங்களிலுள்ள தேவதைகளுக்குப் படைக்கப்பட்டது. ஆலயங்களில் சுவாமி தரிசன காலத்தில் நடைபெறவேண்டிய ஆராதனை முறைமையும் வரையறுக்கப்பட்டது. சமஸ்கிருதத்திற்குப் பதிலாக ஆலயங்களில் சுதேசபாஷைகள் உபயோகிக்கப்பட்டன. சைவ, வைஷ்ணவ சம்பிரதாயங்கள் மிகவும் செழித்தோங்கின. இக்காலத்தில் இந்துமதம் திருத்தி அமைக்கப்பட்ட விதத்தைப்பற்றி நாம் படிக்கும்போது சைவம், வைஷ்ணவம், ஸ்மார்த்தவம், மத்துவம், லோகாயதம், பாமரமதம் என்னும் பல பிரிவுகளுள் அமைத்துப் படிப்போம். நாம் சம்பந்தப்பட்ட அளவுக்கு ஹிந்து மதமென்பது மேற்கூறிய சைவம் முதலிய மதங்களையே குறிக்கும். ஆதலினால் இந்த மார்க்கங்களைப் பற்றித் திட்டமாய்க் கற்றறிவது மதச்சரித்திர மாணவர்களாகிய நமக்கு முக்கியமானதேயாம். இம்மதங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே படிப்போம்.

### I. சைவம்.

சைவமென்னும் வார்த்தை ஓர் தத்திதாந்த நாமம். சிவனைத் தொழுபவன் சைவன். ஆதியில் சைவமார்க்கம் பூர்வ இந்திய ஜாதியாரிடத்திலிருந்தே நிலைத்திருப்பதென்பதற்கு இடமிருக்கிறது. ஆரியருடைய செல்வாக்கு அதிகப்படுவதற்கு முன்னமேயே பூர்வகுடிகள் சிவனைத் தொழுதுவந்தனர். சிவனுக்குப் பல கோவில் கட்டிவைத்தனர். பிற்காலத்தில் ஆரியர்கள் பூர்வ ஜாதி

யாருடன் கலந்து அவர்களோடு உறவுகொண்டாடிய காலத்தில் ஆரியர் திராவிட தெய்வமாகிய சிவனை வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற ருத்திரனோடு சம்பந்தப்படுத்தி, இவ்விருவரும் ஒருவரேயென்று கூறி சைவமதம் வேத அதிகாரம் பெற்றதென்று வற்புறுத்தினர். அக்காலமுதல் ஆரியர்கள் சைவமதத்தை மிகவும் பரிபாலித்து அதற்காகப் பல நூல்களும் செய்து சிறப்பித்தனர். இவ்வித அபிப்பிராயத்தை வைதீகப்பண்டிதர்கள் ஒப்புக்கொள்ளாராயினும், சரித்திர ஆராய்ச்சியுடையவர்கள் இதைப் பெரும்பாலும் அங்கீகரிக்கின்றனர். இப்பகுதியில் நாம் சைவமார்க்கத்தின் உபதேசங்கள், சைவமார்க்கத்தின் அநுஷ்டானங்கள், சைவமார்க்கப் புஸ்தகங்கள் என்ற மூன்று விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சிசெய்வோம்.

சைவர்கள் தங்கள் மதத்தை மிக்கத் திட்ட நுட்பமாய் ஆராய்ச்சி செய்திருக்கின்றார்கள். இந்த ஆராய்ச்சியின்பொருட்டு அநேக சைவ மடங்கள் ஸ்தாபகமாயிருக்கின்றன. சைவமத போதனையை விளக்குவதற்கு அநேக நூல்கள் தமிழிலும் வடமொழியிலும் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை அநுசரித்துச் செய்யப்படும் போதகத்துக்கு சைவசித்தாந்தம் என்று பெயர்.

## சைவமத போதனை.

சைவமத உபதேசத்தை விளங்கிக்கொள்வதற்கு தெய்வம், மனிதன், பாவம், இரட்சிப்பு என்னும் நான்கு பிரிவுகளுள் ஆராய்ச்சி செய்வோம். இவற்றைச் சைவர்கள் பதி, பசு, பாசம், மூக்தி யென்னும் நான்கு வார்த்தைகளாற் கூறுவர்.

### i. கடவுளைப்பற்றிய உபதேசம்.

**பதி இலக்கணம்.**—சைவ சித்தாந்தத்தில் பதி என்பது கடவுள். இவர் இதர மார்க்கங்களில் கூறப்படுகிற குணங்களைப் பெரும்பாலும் உடையவர். அவர் நித்தியர், சர்வவியாபகர், அநாதிமலமுக்தர், சர்வஞ்ஞர், சர்வகர்த்தா, நித்தியானந்தர், ஸ்வதந்தர்.

நித்தியர்—எக்காலத்திலுமிருப்பவர்.

சர்வவியாபகர்—எவ்விடத்திலுமிருப்பவர்.

அநாதிமலமுக்தர் — இயல்பாகவே, அநாதிகாலந் தொட்டே பாவங்களிலிருந்து நீங்கியவர்.

சர்வஞ்ஞர்—சகலத்தையுமறிந்தவர்.

சர்வ கர்த்தா—சகலத்தையும் நடத்துகிறவர்.

நித்தியானந்தர்—எப்பொழுதும் ஆனந்த சொரூப மாயிருப்பவர்.

ஸ்வதந்தர்—தம்மை நடத்துபவர் ஒருவருமின்றித் தாமே நடப்பவர்.

(பதி இயல்பு)

பலகலையா கமவேதம் யாவையினும் கருத்துப்
பதிபசுபாசந் தெரித்தல் பதிபரமே அதுதான்
நிலவுமரு உருவின்றிக் குணங்குறிக ளின்றி
நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி
அலகிலுயிர்க் குணர்வாகி அசல மாகி
அகண்டிதமாய் ஆநந்த உருவாய் அன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்துளாரே.

(சிவப்பிரகாசம்)

கடவுளுடைய தொழில்.—கடவுளுக்கு ஐந்துவகைத் தொழில்களுண்டு. இவற்றிற்கு ஐந்தொழிலென்றும், பஞ்சகிருத்தியங்களென்றும் பெயர். அவையாவன:—

சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரௌபதம், அநுக்ரகம் என்பன. இவற்றைத் தமிழில் முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பர். இவற்றுள் சிருஷ்டியென்பது ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உண்டாக்குதல் அல்ல. களிமண்ணால் குடமுண்டாக்குதல் போலவும், மரத்தினால் பெட்டியுண்டாக்குவதுபோலவும் இப்பிரபஞ்சமானது ஏதோவொரு வஸ்துவினின்று உண்டாக்கப்பட்டது. அவ்வஸ்துவுக்கு மூலப்பிரகிருதியென்றும், மாயை என்றும் பெயர். ஆகவே, சிருஷ்டியென்பது மூலப்பிரகிருதியினின்று தனு, கரண, புவன போகங்களை யுண்டாகச்செய்தல் என்பர். தனு

என்பது சரீரம். கரணம் என்பது மனது. புவனம் என்பது உலகம். போகம் என்பது இவற்றில் ஒன்றை யொன்று அநுபோகம் செய்தல்.

இவ்வாறு கடவுள் உலகங்களை யுண்டுபண்ணும் போது, அதற்கு மூன்று காரணங்களுள. குடம் செய்வதற்குக் களிமண், தண்ட சக்கரம், குயவன் ஆகிய இம் மூன்றும் வேண்டும். இவற்றுள் களிமண் முதற்காரணம். இஃதில்லாமற் குடமுண்டாகாது. பெட்டிக்கு மரம் போலவும், நகைக்குப் பொன்போலவும், வஸ்திரத்துக்கு நூல்போலவும் ஆதிமுதல் கடைசிவரையில் பொருளோடு ஒன்றிருத்தலால் இது முதற்காரணம் எனப்பட்டது. குயவன் நிமித்தகாரணம் எனப்படுவான். நிமித்தகாரணம் என்பதும், கர்த்தாவென்பதும் ஒன்றே. ஏனெனில் ஒரு பொருள் உருவாகிறதற்குப் புத்தி அவசியம். அப்பொருளின் உருவம், பரிமாணம், தன்மை முதலியவை தாமே நடைபெறமாட்டா. இவற்றை யெல்லாம் கொடுப்பதற்குப் புத்தி சித்தமுள்ள புருஷன் தேவை. தச்சனைப்போலவும், கொல்லனைப்போலவும், சாலியனைப்போலவும், குயவன் இங்கு நிமித்தகாரணமெனப்படுவான். துணைக்காரணமென்பது காரியமாகும் வரை துணையாக நின்று அக்காரியம் ஆவதற்கு வேண்டிய பலத்தையும், சக்தியையும் கொடுக்கும் ஒரு வல்லமை அல்லது அவ்வல்லமையைக் கொடுக்கக்கூடிய ஓர் ஆயுதம். தச்சனின் உளியைப்போலவும், சாலியனின் தறியைப்போலவும் தண்ட சக்கரமானது இவ்வாறு சக்தியைத் தந்து உதவுவதால்தான் துணைக்காரணம் என்னப்பட்டது. இவ்விதமாய் முதல், நிமித்தம், துணை எனக் காரணம் மூன்று. இனி இவ்வாறே தனு, கரண, புவன போகங்களாகிய இப்பிரபஞ்ச மனைத்திற்கும் மூன்று காரணங்களுள.

1. மூலப்பிரக்ருதி.—இதுவே பாசம் எனப்படும். இம்மூலப்பிரக்ருதி உருவமாறியிருப்பினும் எப்போதுமுளது. அதையழிக்க ஒருவராலும் முடியாது. இம் மூலப்பிரக்ருதியிலிருந்துதான் உலகமனைத்தும் தோன்றிற்று. 2. சிருஷ்டிக்கு நிமித்த காரணம் ஈசுவரன் அல்

லது பதி. பெட்டியைச் செய்வதில் தச்சனின் மனதும், பானையைச் செய்வதில் குயவனது மனதும்போலச் சிருஷ்டிப்பில் ஈசுவரன் நிமித்த காரணமாய் நின்று அவற்றின் அமைப்பு, உருவம், பரிமாணம், அழகு, ஒழுங்கு, பிரமாணம் முதலிய சகலத்தையும் நடத்தி வருகிறார். 3. இவ்வாறு நடத்திவருவதில் கிரியை நடப்பதற்கு வேண்டிய சக்தியொன்றுண்டு. அந்தச் சக்தியின் பலனாக சிருஷ்டி நடைபெறுகிறது. அச்சக்தி ஈசுவரனுக்கு வேறானதல்ல. தண்ட சக்கரத்தினாலாகிய சக்தி குயவனுடைய கையிலே நின்று அவனில் ஒரு பாகமாவது போல பராசக்தியானது ஈசுவரனுடைய கையிலேயிருந்து அவனுடைய சித்தம் நிறைவேறத்தக்க வல்லமையைக் கொடுப்பதால் அவரில் ஒரு பாகமாயிருக்கின்றது. சைவசித்தாந்தத்தில் இந்தச் சக்தி பெண்பாலாகக் கருதப்படும். இதனால்தான் இதற்கு பராசக்தி என்னும் பெயர் வழங்குகிறது.

2. ஸ்திதி.—சிருஷ்டிக்கப்பட்டவைகள் நிலைபெறும்படி செய்தல்.

3. சங்காரம்.—தோற்றுவிக்கப்பட்டு நிலைநிறுத்தப்பட்டிருக்கின்ற தனு, கரண, புவன போகங்களை முதற்காரணத்தில் ஒடுக்கல். இது யுகாந்தமென்னும் பிரளய காலத்தில் நடக்கும். இப்பிரளயகாலத்தில் இவ்வுலகம் ஒன்றுமேயிராது. பிரபஞ்சமெல்லாம் முதற்காரணமாகிய மாயையில் ஒடுங்கிக்கிடக்கும்.

4. மறைத்தல் அல்லது திரௌபவம்.—ஆன்மாக்களை நல்வினை தீவினையென்னும் வினைப்பயன்களை யனுபவிக்கும்படி அவர்களை அப்பொருள்களில் அமிழ்த்தல்.

5. அருளல் அல்லது அநுக்ரகம்.—ஆன்மாக்களுக்கு பாசத்தை நீக்கி இரட்சிப்பு அருளல்.

ஆக சைவ சித்தாந்தத்தின்படி கடவுளுக்குரிய தொழில்கள் ஐந்து. பஞ்சகிருத்திய மெனப்படுகின்ற இவற்றுள் கடைசி இரண்டையும் ஸ்திதி என்பதனுள்ளடக்கி, தெய்வத்திற்குத் தொழில் மூன்று (சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம்) என்பாரும் உளர்.

கடவுளின் வடிவம்.—கடவுளுக்கு மூவகைவடிவமுண்டு என்பர். அவை அருவம், அருவுருவம், உருவம் என்பன. இவற்றுள் அருவம் என்பது கடவுள் யாதொரு வடிவமுமில்லாமலிருக்கும் தன்மையைக் குறிக்கும்.

அருவுருவம் என்பது அரூபமாயும் உருவமாயுமிருத்தலைக் குறிக்கும். அருவுருவத்திற்குத் திருஷ்டாந்தம் சிவலிங்கம் என்பர். அரூபியாயிருக்கும் கடவுள் அடியார் தம்மை வணங்கும்பொருட்டு லிங்கமாகிய வடிவத்தில் வெளிப்படுவதால் இது அருவுருவம் என்னப்பட்டது.

உருவம் என்பது சிவனுக்கு ஆகமங்களில் கூறப்பட்டிருக்கிற முப்பத்திரண்டு வகையான வடிவங்களைக் குறிக்கும். இவ்வடிவங்களுக்கு மூர்த்தமென்று பெயர். அவ்வடிவத்தில் அமைந்த கடவுளுக்கு மூர்த்தியென்று பெயர். இவை சிவன் சரித்திரகாலத்தில் அடியார் பொருட்டு எடுத்துக்கொண்ட வெவ்வேறு வடிவங்களாகும். இவ்வடிவங்களுள் சிலவாவன:—அர்த்தநாரீசர், (பாதிப்பெண்ணும் பாதி ஆணுமாயிருக்கிற கடவுள்) நீலகண்டர், (நீலமான தொண்டையையுடையவர்) திரிபுரசங்கரர், (மூன்று கோட்டைகளைக் கட்டிய அசுரர்களைச் சங்கரித்தவர்) காமாரி, காலாரி, ரிஷபாரூடர்.

கடவுள் தம்மை எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதற்கு மூன்றுவிதமாய் அவர் தம்மை வெளிப்படுத்துகிறாரென்று சைவநூல்கள் கூறும். இதைக் குருலிங்க சங்கமம் என்னும் பதத்தால் குறிப்பர். அதாவது சிவன் 1 குருவாகவும், 2 லிங்கமாகவும், 3 சங்கமமாகவும் தம்மை வெளிப்படுத்துவார் என்பது.

1. குருவாக வெளிப்படுத்துவார்.—ஒரு ஆத்துமா இரட்சிப்படையத்தக்க பக்குவநிலையை அடையும்போது கடவுள் தாமே ஒரு குருவடிவமாகத் தோன்றி, அவ்வாத்துமாவுக்கு ஈடேற்றமருளுவார்; அல்லது இரட்சிக்கப்பட்ட இன்னொருவரை அநுஷ்டித்தினின்று அதாவது நிலைக்களமாகக்கொண்டு நின்று, அவ்வான்மாவுக்கு அநுக்ரகம் செய்வார். இதுதான் சைவசித்தாந்த குரு

உபதேசம். இவ்வாறே மாணிக்கவாசகருக்கு ஈடேற்ற மருளும்போது சிவன் தாமே குருமூர்த்தியாக வந்து குருந்தமரத்தடியில் அமர்ந்து அவருக்கு ஞானோபதேசம் அருளினார். தாயுமானவர் ஈடேற்றத்திற்குரிய பரிபக்குவ நிலைமையை யடைந்தபோது, சிவன் தாமே குருமூர்த்தியாக அவ்விடத்திற்கு எழுந்தருளி வாராமல், முன்னேயே முக்திபெற்ற பக்தர்களுள் ஒருவரான மௌன குருதேசிகரைத் தமக்கு நிலைக்களமாகக்கொண்டு நின்று அவர் மூலமாய்த் தாயுமானவருக்கு முக்தியருளினார்.

2. லிங்கமாகத் தம்மை வெளிப்படுத்துவார்.—லிங்கமென்னும் பதத்திற்கு சித்திரித்தல் அதாவது அழகு செய்தல் என்று அருத்தம். அதாவது சிருஷ்டி திதி முதலியவற்றால் உலகத்தை அழகுபெறச் செய்தல். கடவுளே அந்த லிங்கமென்றாவது அல்லது அந்த லிங்கத்தில் கடவுள் அதிஷ்டித்து நிற்கிறார் என்றாவது அது ஒரு அடையாளமென்றாவது கொள்ளலாம்.

ஆயினும் அந்த லிங்கம் கடவுள் என்பதே பெரும்பாலோர் கொள்கை. இந்த லிங்கம், சுயம்புலிங்கம், மானிடலிங்கம், இஷ்டலிங்க முதலாகப் பலவகைப்படும். இதன் விரிவை இன்னொரு பிரிவினுள் பார்ப்போம்.

3. சங்கமமாக வெளிப்படுத்துவார்.—சங்கமத்தில் அவர் வெளிப்படுகிறார். சங்கமமென்பது அடியார் கூட்டம், அதாவது குருக்கள் சிவனடியார்களின் கூட்டம். இவர்கள் சிவசின்னங்களாகிய ருத்திராக்ஷம் திருநீறு என்பவற்றை அணிந்திருக்கின்றபடியினாலும், இவர்களைக் காணும்போது சிவனுடைய உருவம் மனதில் படுகிறபடியாலும், இவர்களைச் சிவனாகவே பாவித்து வணங்க வேண்டுமென்பது சைவ சமயத்துணிபு.

ii. ஆத்துமாவைப்பற்றிய போதனை.

4. பசு அல்லது ஆன்மா.—1. தன்மை, ஆத்துமா, ஜீவன், உயிர் என்பன ஒருபொருட் பன்மொழி. ஆத்துமாவாவதென்ன? நித்தியமாய், அறிவுடையதாய், ஜடத்தாற் கட்டப்பட்டதாய், சரீரந்தோறும் வெவ்வே

ருய் வினைகளைச்செய்து வினைப்பயன்களை அநுபவிப்ப வைகளாய்ச் சிற்றறிவும், சிறுதொழிலும் உடையனவா யிருப்பனவைகளே ஆத்துமாக்கள்.

(பசு இயல்பு.)

எண்ணரிதாய் நித்தமாய் இருள்மலத்தின் அழுந்தி
இருவினையின் தன்மைகளுக் கீடான யாக்கை
அண்ணலரு ளானண்ணி அவையவராய் அதனால்
அலகினிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றல்
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணருமிருள் மலபாகம் பொருந்தியக்கால் அருளால்
உண்ணிலவும் ஒளியதனால் இருளகற்றிப் பாதம்
உற்றிடும்நற் பசுவர்க்கம் எனவுரைப்பர் உணர்ந்தே.

(சிவப்பிரகாசம்)

அநாதி காலமுதல் ஆத்துமாவுக்கும் ஜடத்திற்கும் ஓர் சம்பந்தமுண்டு. ஜடத்தின் ஓர் அம்சமான ஆணவம் என்னும் மலம் அநாதிகாலந் தொடுத்தே ஆத்துமாவோடு ஒட்டிக்கொண்டே யிருக்கிறது. இச்சம்பந்தத்தின் காரணமாகத்தான் ஆத்துமாவுக்கு இன்பதுன்பங்கள் உண்டாகின்றன. ஆகவே இந்த இன்பதுன்பங்கள் அறவேண்டுமானால் ஆத்துமா ஜடத்திலிருந்து பிரிக்கப் படவேண்டும்.

ஒவ்வொரு ஆன்மாவுக்கும் ஒவ்வொரு சரீரமுண்டு. இது 1 ஸ்தூலசரீரம், 2 அனுஸ்தானி சரீரம், 3 சூக்ஷ்மசரீரம் என மூன்றுவகைப்படும். ஸ்தூலசரீரம் என்பது பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகாசமென்னும் பஞ்சபூதங்களாலாகியது. அனுஸ்தானி சரீரம் என்பது ஸப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்னும் இந்திரியங்களுக்கு இலக்காயுள்ளது. சூக்ஷ்மசரீரம் என்பது மனம், புத்தி, அஹங்காரம் என்னும் அந்தக்கரணங்களால் ஆக்கப்பட்டது.

மரிக்கும்போது ஸ்தூலசரீரம் மட்டுமே அழியும். ஆன்மாவானது சூக்ஷ்மசரீரத்தோடு வேறொரு சரீரத்தை எடுத்துக்கொள்ளும். எடுத்து, நால்வகைத் தோற்றத்தையும் எழுவகைப் பிறப்பையும், எண்பத்திநான்கு

லக்ஷம் யோனிபேதத்தையுமுடையதாய், பிறந்து இறந்து உழலும்

நால்வகைத் தோற்றமாவன.—1. முட்டையில் பிறப்பன. 2. வேர்வையில் பிறப்பன. 3. வித்து வேர் கிழங்கு முதலியவைகளில் பிறப்பன. 4. கருவில் பிறப்பன.

எழுவகைப் பிறப்பு.—எழுவகைப்பட்ட வித்தியாசமான பிறப்புகளைக் குறிக்கும். அவை தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன.

இஃதன்றி மேற்குறித்த ஒவ்வொரு வர்க்கத்துக்கும் அநேக உட்பிரிவுகளுண்டு. ஆக எண்பத்திநான்கு லட்சம் யோனிபேதங்களுள. இதனாற்றான் நால்வகைத் தோற்றம் எழுவகைப்பிறப்பு எண்பத்திநான்கு நூறாயிரம் யோனிபேதமென்னும் பதத்தொடர்கள் வழங்கப்படுகின்றன.

பிறப்பின் விபரம்.—ஆன்மாவானது தான் ஒரு ஜென்மத்திலே செய்யும் புண்ணியபாவங்களின் பலனாக சொர்க்கம், உலகம், நரகம் என்னும் இடங்களை யனுபவிக்கும். இருவினைகளையும் செய்தற்கும் இருவினைப்பயனை அனுபவித்ததற்கும் இடம் பூமி. நல்வினைப்பயனை அனுபவிப்பதற்கு ஸ்தலம் சொர்க்கம். தீவினைப்பயனை அனுபவிப்பதற்கு இடம் நரகம். நல்வினைசெய்த ஆன்மாக்கள் ஸ்தூலசரீரத்தை விட்டவுடன் தான்விட்ட ஜென்மத்தைக்காட்டிலும் உயர்ந்த ஜென்மத்தில் பிறக்கும். அல்லது அதே ஜென்மத்தில் முன்னிலும் பாக்கிய நிலையை அடையும். அவ்வாறே தீமைசெய்த ஆன்மாக்கள் முன்னிலும் இழிந்த பிறவியில் பிறக்கும். அல்லது அதே பிறவியில் முன்னிலும் தாழ்ந்த நிலைமையை அடையும்.

சொர்க்கத்திலே இன்பம் அநுபவித்த ஆன்மாக்கள் தொலையாமல் மீதமாயிருந்த கன்மசேஷத்தினாலே திரும்ப பூமியில் வந்து, உலகில் மனிதர்களாய்ப் பிறக்கும். அவ்வாறே நரகத்தில் துன்பமனுபவித்த ஆத்துமாக்கள் தொலையாமல் மீதமாயிருந்த கன்மசேஷத்தினாலே திரும்ப பூமியில்வந்து, முன்பு தாவரங்களாயும்,

பின்பு நீர்வாழ்வன, ஊர்வன, பறவை, விலங்கு முதலிய வைகளாயும் பிறந்து, அதன்பின் மனிதராய்ப் பிறக்கும். ஆகவே இவ்வேழுவகைப் பிறப்புள்ளும் மானிடப்பிறப்பே விசேஷம். ஏனெனில் இதில்தான் ஆன்மாவுக்கு முக்தி சித்திக்கும்.

### iii. பாசத்தை (பாவத்தை)பற்றிய போதனை.

3. பாசம் என்னும் பதத்திற்கு ஆன்மாவைக் கட்டிக் கொண்டிருக்கும் வஸ்து என்று பெயர். பாசம், மலம், ஜடம் என்பன ஒரே பொருளைக் குறிக்கும். பாசம் மூவகைப்படும். அது ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் என்பன.

(1) ஆணவ மலம்.—ஆணவமலமென்பது செம்பிற் களிம்புபோலவும், கோடிப்புடவையில் அழுக்குப்போலவும், ஆன்மாக்களில் அநாதிகாலம் முதல் உடன்கலந்து நிற்பதாய், தத்தம் கால எல்லையிலே நீங்கக்கூடியதாய், ஜடமாயிருப்பது. இது கிறிஸ்தவ சித்தாந்தத்தில் ஏறக்குறைய ஜென்மபாவத்திற்குச் சமம்.

(2) கன்ம மலம்.—இது ஆன்மாக்கள், மனோவாக்கு காயம் மூன்றிலும் செய்த புண்ணியபாவங்கள். இதுவும் ஆன்மாவை பந்தித்து, ஆன்மா செல்லும் பிறப்பெல்லாம் சென்று, அதற்கு இன்பதுன்பங்களை உண்டாக்குவதினால் இது பாசம் என்னப்பட்டது.

(3) மாயா மலம்.—இது தனு, கரண, புவன போகங்கள் தோன்றுவதற்கு முதற்காரணமாயுள்ளது. அதாவது இப்போது நாம் அறிகிற ஜடப்பொருளுக்கு மூலகாரணமாயுள்ளது. மாயைக்கு இலக்கணமாவது.

பாட்டு

நித்தமாய் அருவாய் ஏக நிலையமாய், அகிலத்துக்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக் கோர்
சத்தியாய் புவன போகம் தனுகரண முமுயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யு மன்றே.

(சிவஞானசித்தியார்)

இப்பிரபஞ்சத்துக்கு முதற்காரணமாகிய மாயையானது கடவுளைப்போலவே நித்தியமானது. அதற்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. அது அவரைப் போலவே அரூபமானது. எங்கும் வியாபகமானது. ஆனால் மரம் முதலியவை தோன்றுகிறதற்கு வித்து காரணமாயிருப்பதுபோல பிரபஞ்சமானது தோன்றுகிறதற்கு இது காரணமாய் உள்ளது, இது அசித்து; அதாவது கடவுளையும் ஆன்மாவையும் போலல்லாது, அறிவில்லா வஸ்து.

கடவுள் ஆன்மாக்களுக்கு மாயையின் பிரதிரூபமாகிய தனு, கரண, புவன போகங்களைக் கொடுக்கிறார். தனு—சரீரம், கரணம்—மனம், புவனம்—உலகம். ஏன் இவற்றை ஆன்மாக்களுக்குக் கொடுக்கிறாரென்றும் விஷயத்தைச் சைவசித்தாந்திகள் வினாவிடை ரூபமாக ஆராய்ந்திருக்கின்றனர். அது வருமாறு.

வினா. சிவன் மாயாகாரியமாகிய தனு, கரண, புவன போகங்களை ஆன்மாவிற்கு எதற்காகக் கொடுக்கிறார்?

விடை. ஆன்மாக்களைப் பந்தித்த ஆணவமலமும், கன்ம மலமுமாகிய நோய்களைத் தீர்த்து சிவானந்தப் பேறாகிய மோட்சத்தை யவர்களுக்குக் கொடுக்கும் பொருட்டே யாகும்.

வினா. தனு, கரணம் முதலியவைகளும் மலமல்லவோ? மலம் அழுக்கல்லவோ? ஆணவமலமாகிய அழுக்கைப் பிரபஞ்சமாகிய அழுக்கினாலே எவ்வாறு போக்கலாம்?

விடை. வண்ணான், கோடிப்புடவையிலே சாணியையும், உவர்மண்ணையும் பிசறி, மிகக் கறுத்தது என்னும்படி செய்து, முன்னைய அழுக்கோடு பின்னைய அழுக்கையும் போக்கி, அப்புடவையை மிகவும் வெண்மையுடையதாகச் செய்கிறான். அவ்வாறே சிவபெருமான் ஆன்மாக்களிடத்தே மாயாமலத்தைக்கூட்டி அநாதிபந்தமாகிய ஆணவமலத்தோடு ஆதிபந்தமாகிய மாயாமலத்தையும் போக்கி, அவ்வான்மாவைச் சிவமாம் தன்மையாகிய மோட்சத்தில் சேர்ப்பார்.

iv. முக்தியைப்பற்றிய போதனே.

முக்தி அல்லது மோட்சம்.—முக்தி, மோட்சம், இரட்சிப்பு, மீட்பு என்னும் இவை ஒரேபதம். முக்தி யென்பது சொர்க்கமல்ல. சாதாரணமாய் தென்னிந்திய கிறிஸ்தவர்களும், சில ஹிந்துக்களும்கூட இப்பதத்தைச் சொர்க்கம் என்னும் அர்த்தத்தில் உபயோகிக்கிறார்கள். இது தவறு, சொர்க்கம் வேறு. மோக்ஷம் வேறு. சொர்க்கமென்பது ஒருவன் இவ்வுலக வாழ்க்கையை விட்டு மறுமைக்குள் பிரவேசம் செய்யும்போது அவனடையக்கூடிய நல்ல நிலைமையாகும். சொர்க்கம், வைகுண்டம், கைலாசம், சிவபதம், பரமபதம் முதலிய பெயர்களால் குறிக்கப்படும் விஷயம் ஒன்றே.

மோட்சமென்பது மறுமை அநுபவத்தைக் குறியாமல் இம்மையிலேயே நிகழும் ஆத்தும இரட்சிப்பைக் குறிக்கும். அதாவது ஒருவனுடைய சுபாவத்தோடு கலந்திருக்கிற பாவம் நீங்கி அவன் பரிசுத்தம் பெற்று முக்தி நிலைமையை அடைவதைக் குறிக்கும். முக்தி யென்னும் பதத்திற்கு விடுதலையென்று அர்த்தம். மோக்ஷ மென்னும் பதத்திற்கும் அதே கருத்து. தமிழில் இதை வீடு என்று சொல்லுவார். வீடு என்பது விடு என்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற்பெயர். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களினின்றும் அதை நீக்குவது அல்லது விடுதலை செய்தலே முக்தியாகும்.

ஆன்மா முக்தியடையும்பொருட்டே அதற்குச் சரீரம் கொடுக்கப்பட்டதென்றும், இச்சம்பந்தத்தின் பலனுகவே ஆன்மாவுக்கு ஈடேற்றம் கிடைக்கிறதென்றும் பார்த்தோம். இதற்குக் கோடிப்புடவை உவர் சாணி யென்னும் திருஷ்டாந்தத்தையும் பார்த்தோம். இரட்சிப்பின் தன்மையையும் அதன் விருத்தியையும் முறையையும் காண்பிக்கிறதற்கு இன்னொரு திருஷ்டாந்தமும் கூறுவர். அது செம்பிலுள்ள களிம்பு நீங்கும் முறையை அநுசரித்தது. இது இரசவாதமென்னும் வித்தையைக் குறித்தது. அவ்வித்தையாவது களிம்போடுகூடிய செம்பை இரசவாதக்காரனெடுத்து அனலேற்றிச் சில குளிகைகளால் அதைப் பரிசித்துப் புடமிட்டு அதைத்

தங்கமாக மாற்றுகிறான். அவ்வாறே கடவுளும் இயற்கையாகவே மலத்தோடுகூடிய ஆன்மாவைச் சரீரமாகிய புடத்திலிட்டு ஞான அனல் மூட்டித் தமது கிருபையால் பரிசித்து பத்துமாற்றுத் தங்கமாக மாற்றுகிறார்.

கருமருவு குகையனைய காயத்தி னடுவுள்
களிம்புதோய் செம்பனையயான்
காண்டக விருக்கநீ ஞானவனல் மூட்டியே
கனிவுபெற வுள்ளுருக்கிப்
பருவமதறிந்துநின் அருளான குளிகைகொடு
பரிசித்து வேதிசெய்து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பக்ஷத்தை யென்சொல்லுவேன்
அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்தம்
ஆதியா மந்தமீதும்
அத்துவித நிலையரு மென்னையாண் டென்னடிமை
யானவர்க ளறிவினூடுந்
திருமருவு கல்லா லடிக்கீழும் வளர்கின்ற
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயானந்த குருவே.

முக்தியடைவதற்குச் சைவசித்தாந்தத்தில் நாலு வழிகள் கூறப்பட்டுள்ளன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. சரியை என்பது: சிவ ஆலயத்துக்கும், சிவனடியார்க்கும் தொண்டு செய்தல். கிரியை என்பது: சிவலிங்கப்பெருமானை அகத்திலும் புறத்திலும் பூஜித்தல். யோகம் என்பது: விஷயங்களின்வழியே போகாமல் மனதை நிறுத்தி, சிவத்தை தியானித்து, பின் தியானிப்போனாகிய தானும் தியானமும் தோன்றாது தியானப் பொருளாகிய சிவம் ஒன்றையே விளங்கப்பெறுதல். ஞானம் என்பது: பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களை யறிவிக்கும் ஞானநூற்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிதல்.

இந்த நாலு மார்க்கங்களினாலும் அடையப்பெறும் பதவியும் பேதப்படும். இவை முறையே: சாலோக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம், சாயுச்சியமெனப்படும். இவற்றுள் தாழ்ந்தது சாலோக்கியம். அது கடவுளிருக்கும் ஸ்தானத்திலிருப்பது. அதற்கு மேலானது சாமீப்பியம். அது கடவுளுக்கு அருகிலிருப்பது. அதற்கு மேலானது சாரூப்பியம். அது கடவுள் என்ன ரூபமாயிருப்பாரோ அந்த ரூபத்தையடைவது. இவை யெல்லாவற்றிற்கும் மேலானது சாயுச்சியம். இது கடவுளோடு கலந்துபோவது. இதுவே மேலான முக்தி.

மேற்கூறிய மார்க்கங்களில் கீழேயிருந்து மேலே போகுதலே முறை.

சைவசித்தாந்தத்தில் கூறப்பட்ட இந்த மார்க்கங்களைப்பற்றிப் படிக்கும்பொழுது வேதாந்தம், பகவத்கீதை முதலிய சாஸ்திரங்களுக்கு இது உடன்பாடல்ல என்பதை நாம ஞாபகம் பண்ணிக்கொள்ளவேண்டும். வேதாந்தத்தில் ஒப்புக்கொள்ளப்படும் பதவியொன்றே. அதை யடைவதற்கு வழியுமொன்றே. அவ்வழி ஞான மார்க்கம். ஆயினும் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று மார்க்கங்களும் ஒருவனை ஞானமார்க்கத்துக்குள் நடத்தலாம்.

பகவத்கீதையில் அநேக மார்க்கங்கள் கூறப்பட்டுள்ளன. ஒரு பட்டணத்திற்குப் பலவேறு வழிகள் உள்ளதுபோல முக்திக்கும் பலவேறு மார்க்கங்கள் உள. அவை எவற்றாலும் முக்தியடையலாம். மார்க்கங்களுள் தாரதம்மியமில்லை. அது அவரவர்களுடைய மனச்சார்பையும் நிலைமையையும் பொறுத்தது. ஒருவருக்கு இலேசாயிருக்கும் மார்க்கம் பிறருக்குக் கஷ்டமாயிருக்கலாம். ஒருவருக்குக் கஷ்டமாயிருக்கும் மார்க்கம் பிறருக்கு இலேசாயிருக்கலாம். ஆகையால் அவரவர் தங்கள் தங்கள் மனப்பான்மைக்கேற்ற மார்க்கத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்பது பகவத்கீதையின் உபதேசம்.

இங்கு கூறியவற்றால், சைவசித்தாந்த முக்தி லக்ஷணத்திற்கும், வேதாந்தம் முதலிய இதரமத முக்தி லக்ஷணத்திற்கும் வித்தியாசம் உணர்த்தப்பட்டது.

சைவர்கள் தவிர மற்றைய மதத்தினர்களுக்கும் முக்தி உண்டோவென்று சைவர்களைக் கேட்டால் அவர்கள் ஆம் என்றே பதிலுரைப்பர். யார் யார் எந்தெந்த தெய்வத்தை வணங்கினாலும் பரமசிவனே அந்தந்த தெய்வமாகி அவர்களுக்கு அனுக்கிரகிப்பார் என்பது சைவமதத் துணிபு. இதற்கு பிரமாணம் வருமாறு:

யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்மற் றத்தெய்வங்கள்
வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யும்
ஆதலால் அவையி லாதான் அறிந்தருள் புரிவ னன்றே.

## III. சைவ வேத ஆகமங்கள்

சைவர்களால் தங்கள் மதத்துக்கு ஆதாரமாகக் காட்டப்படும் நூல்கள் இருவகைப்படும். அவை வடமொழியில் உள்ளனவும் தமிழில் உள்ளனவுமாகும். வடமொழி வேத ஆகமங்களின் ஸாரமே சைவ தமிழ் வேதாகமங்களிலும் கூறப்பட்டிருக்கிறது என்பது சைவர் கோட்பாடு.

### சமஸ்கிருத வேத ஆகமங்கள்.

சமஸ்கிருதத்தில் உள்ள நூல்கள் வேதம், சிவாகமம் முதலியவை ஆகும்.

i. வேதங்கள்.

இவற்றுள் வேதம் ருக், யஜுர், சாமம், அதர்வம் என நாலு. இவற்றின் விபரத்தை வேத சங்கீத பர்வத்தில் விரிவாய்ப் படித்திருக்கிறோம். வேதங்களில் மேலாகக் கூறப்பட்டிருக்கிற தெய்வம் சிவன் என்பது சைவர்கள் துணிவு.

ii. சிவாகமங்கள்.

சிவாகமம், காமிகம் முதல் வாதுளம் ஈறாகவுள்ள இருபத்தெட்டு நூல்கள் ஆகும். வேதத்தைப்போலவே அதற்குச் சமமாக சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்டவைகளே ஆகமங்கள் என்றும் வேதமும் ஆகமமும் இறைவனாலேயே அருளிச்செய்யப்பட்டமையின் அவை தம்முள் சிறிதும் பேதமின்றி இயலுந்தன்மை

யன என்றும் சைவர் கூறுவர். ஆன்மாக்களுக்கு மலத்தை நசிப்பித்து, ஞானத்தை உதிப்பித்து, மோக்ஷத்தைக் கொடுப்பதே ஆகமங்களின் போதனை என்பர். இந்த இருபத்தெட்டு ஆகமங்களில் ஒவ்வொன்றும் ஞான யோக கிரியை சரியைகளை உணர்த்தும் நான்கு பாதங்களை உடையன. அவற்றுள் ஞானபாதம் பதிபசுபாசம் என்னும் திரிபதார்த்த ஸ்வரூபத்தைப்பற்றிக் கூறும். யோகபாதம் யோக இலக்கணங்களைப்பற்றிக் கூறும். கிரியாபாதம் மந்திரங்கள், ஜெபங்கள், ஹோமங்கள் முதலியவற்றைப்பற்றியும் தீக்ஷை விசேடங்களைப்பற்றியும் கூறும். சரியாபாதம் பிராயச்சித்தம் சிராத்தம் முதலியவைகளைப்பற்றிக் கூறும் என்பர்.

iii. வேதாங்கம்.

வேதங்களை நன்றாய் விளங்கிக்கொள்வதற்கு அனுகூலமான சில நூல்களும் சமஸ்கிருதத்தில் உண்டு. அவை வேதாங்கம் எனப் பெயர்பெறும். வேதாங்கம் ஆறு. அவை சிட்சை, கத்தியம், வியாகரணம், நிருத்தம், ஜோதிடம், சந்தம் என்பவை. இவற்றுள் சிக்ஷை என்பது வேதத்தை பலவிதமான சுரவேறுபாட்டினால் உச்சரிக்கும் முறையை அறிவிப்பது. கற்பம் என்பது நாலு வேதங்களிலும் விதிக்கப்பட்டிருக்கின்ற கருமங்களை அனுஷ்டிக்கவேண்டிய முறையை அறிவிக்கும் நூல். வியாக்கரணம் என்பது இலக்கணம். அது வேதங்கள் ஆக்கப்பட்டிருக்கின்ற பூர்வ சமஸ்கிருத பாஷையின் (எழுத்து, சொல், பொருள் என்னும் இவற்றின்) இலக்கணத்தை உணர்த்தும் நூல். நிருத்தம் என்பது வேதசொற்களின் பொருளை அறிவிக்கும் நூல். சந்தோவிசிதியாவது வேதமந்திரங்களில் காயத்திரி முதலிய சந்தங்களின் அமைப்புக்கு எழுத்து இவ்வளவு என்பதை வழுத்தும் நூல்.

iv. வேத உபாங்கம்.

வேத உபாங்கம் என்பது புராணம், நியாயம், மீமாம்சை, ஸ்மிர்தி என நான்குமாம். இவற்றுள் புராணம், பரமசிவன் உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்பவற்றைக் கூறும். நியாயம் என்

பது வேதபொருளை நிச்சயித்ததற்கு அனுகூலமாகிய பிரமாணங்களை அறிவிப்பது. மீமாம்சை என்பது வேத பொருளினுடைய தாற்பரியத்தை அறிந்துகொள்வதற்கு அனுகூலமாகிய நியாயங்களை ஆராய்ச்சிசெய்து அறிவிப்பது. மீமாம்சை பூர்வ மீமாம்சை, உத்தர மீமாம்சை என இருவகைப்படும். பூர்வ மீமாம்சை வேத ஆராதனைக்குரிய தர்மம், பலி, யாகம் இவற்றைப் பற்றிக் கூறுவது. உத்தர மீமாம்சை தத்துவசாஸ்திர ஆராய்ச்சியுடையது. இதுவே வேதாந்தம் எனப்படும். ஸ்மிர்தியானது அவ்வவ்வருணங்களுக்கும் ஆச்சிரமங்களுக்குமுரிய தர்மங்களை அறிவிப்பது. இவற்றுள் விசேஷித்தது மனுஸ்ருதி.

இவையன்றி, ஆயுர்வேதம், தனுவேதம், காந்தர்வ வேதம், அர்த்த வேதம் என நாலு உண்டு. இவற்றுள் ஆயுர்வேதம், எல்லாவற்றையும் அனுபவித்தற்குச் சாதனமாகிய சரீரத்தை நோயின்றி நிலைபெறச் செய்வதற்கு வேண்டப்படுபவைகளை அறிவிப்பது. தனுர் வேதம் என்பது பகைவர்களால் நலியாது உலகத்தைக் காப்பதற்கு வேண்டப்படும் படைக்கலப் பயிற்சியைக் கற்பிப்பது. காந்தர்வ வேதம், கடவுளுக்கு மகிழ்ச்சியை விளைவிக்கும் இசை முதலியவற்றை அறிவிப்பது. அர்த்தவேதம், இம்மைக்கும் மறுமைக்கும் ஏதுவாகிய பொருள்களைச் சம்பாதிக்கும் முறை அல்லது உபாயத்தை அறிவிப்பது.

உபநயம் பெற்றவராகிய பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்னும் முதல் மூன்று வர்ணத்தாருமே வேதம் ஓதுவதற்கு அதிகாரிகள். சூத்திரரும் நான்கு வர்ணத்துப் பெண்களும் இதிகாசபுராண முதலியவைகளை ஓதுவதற்கும் வேதத்தின் பொருள்களைக் கேட்பதற்கும் அதிகாரிகள்.

## தமிழ் வேதாகமங்கள்.

வடமொழியிலுள்ள வேதாகமங்களின் கருத்தைத் தமிழில் அறிவிக்கும் நூல்கள் இருவகைப்படும். இவை பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களுமாம்.

i. பன்னிரு திருமுறை.

பன்னிரு திருமுறை, சைவ சமையாச்சாரிகளாலும் அடியார்களாலும் இயற்றப்பட்ட தேவார திருவாசகங்கள் முதலிய பாடல்களின் தொகுதியும் சைவ அடியார்களின் சரித்திரமும் ஆகும். இப்பாடல்களெல்லாம் இவ்வடியார்கள் சைவ ஸ்தலங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைக் குறித்துப்பாடிய ஸ்தோத்திரங்களும் மன்றாட்டுகளுமாகும். தேவாரம் என்னும் பதத்திற்கு தேவமாலை என்றருத்தம்.

இப்பன்னிரு திருமுறைகளும் சைவர்களால் மிகவும் போற்றப்படுகின்றமையால் இவற்றைப்பற்றி நாம் சிறிதளவாவது அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

1–7, முதல் ஏழு திருமுறைகளுக்குத் தேவாரம் என்று பெயர். இவற்றுள் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடியவை.

நான்காம் ஐந்தாம் ஆறும் திருமுறைகள் திருநாவுக்கரசு நாயனார் என்ற அப்பர் சுவாமிகள் பாடிய திருமுறை.

ஏழாம் திருமுறை சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தேவாரம்.

இவை மூன்றுக்கும் தேவாரத் திருமுறை என்று பெயர். இவை பாடப்பட்டிருக்கும் இராகங்கள் பண் என்னப்படும். இவற்றை சங்கராபரணம் பைரவி முதலிய இராகங்களிலும் பாடலாம். இம்மூவர் தேவாரங்களுக்கும் ஒவ்வொரு உதாரணத்தை இங்கு எடுத்துக் கூறுவோம்.

பண்—நட்டபாடை.

தோடுடைய செவியன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனம் நாள்பணிந்
தேத்த அருள்செய்த
பீடுடைய பிர மாபுரம் மேவிய
பெம்மான் இவனன்றே.

(ஞானசம்பந்தர் தேவாரம்.)

பண்—திருந்தாண்டகம்.

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்
அங்க மெல்லாம் புழுத்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் ஜடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே.

(திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.)

பண்—கொல்லி.

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்விலும் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே யெந்தைப்
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும்
எத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

(சுந்திரமூர்த்தி நாயனார் தேவாரம்.)

இம்மூவருள்ளும் ஞானசம்பந்தர் ஒவ்வொரு பதிகத்துள்ளும் கடைசிக் கவியில் தமது பெயரைவைத்துப் பாடுவர். சுந்தரமூர்த்தி நாயனார் தமக்கு வேண்டிய உலகப் பொருள்களுக்காகப் பிரார்த்திக்கும் தன்மையார். அப்பர் என்னப்பட்ட திருநாவுக்கரசு நாயனாரோ இவ்விருவகைக் குற்றமுமின்றி பக்திமிகுதியினால் பகவானைப் பாடுவார், இதனால் அப்பர் பாடலே சிவனுக்கு மிகப் பிரீதி என்பதை,

தன்னைப் பாடுவான் சம்பந்தன்
பொன்னைப் பாடுவேன் சுந்தரன்
என்னைப் பாடுவான் என்அப்பன்

என்னும் வாக்கியங்களால் உணர்க.

8. எட்டாம் திருமுறை, திருவாசகமும் திருக்கோவையும். இவற்றை இயற்றியவர் மாணிக்கவாசகர். இவரின் சரித்திரம் மதுரை திருவிளையாடல் புராணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

திருவாசகமே தமிழ் பக்தி நூல்கள் அனைத்திலும் விசேஷித்தது என்பர். திருவாசகத்துக் குருகாதர் ஒரு வாசகத்துக்கு முருகார் எனத் தமிழ் பழமொழியுண்டு. ஆசிரியர் போப் ஐயர் இதை ஆங்கிலத்தில் செய்யுள் ரூபமாக மொழிபெயர்த் திருக்கிறார்.

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோவேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்
ஆண்டநீ அருளிலை யானல்
வார்கடல் உலகில் வாழ்கிலன் கண்டாய்
வருகவென் றருள்புரி வாயே.

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே,

திருக்கோவையார் என்பது ஒரு அகப்பொருள் தமிழ் இலக்கியம். இது சாலேமோன் இயற்றிய உன்னதப் பாட்டைப்போன்றது. தமிழில் வழங்கிவந்த அகத் தமிழ் இலக்கணத்திற்கு இசையப் பாடப்பெற்ற ஒரு பிரபந்தம். நானூறு கட்டளைக் கலித்துறைகளால் ஆக்கப்பட்டது. இதில் கூறப்பட்ட கதை மிகச் சிறியது.

ஒரு அரசகுமாரன் வேட்டைக்குச் சென்றபோது ஒரு மிருகத்தைத் துரத்திக்கொண்டு அடர்ந்த ஒரு காட்டினுள் புகுந்தான். அங்கே மலைவாழ் ஜாதியாகிய குறவர் தலைவருடைய மகள் தினைப்புனம் காத்துக் கொண்டிருந்தாள். அவள் விளையாட்டு விருப்பால் தன்

தோழிகள் கூட்டத்தை நீக்கி தனிப்பட்டு அவ்வனத்தில் வந்து நின்றாள். அரசகுமாரன் அவளைக் கண்டு காதலுற்று, இது என் முயற்சியால் கிடைத்தது அன்று, இது தெய்வம் எனக்குத் தந்ததென்று கூறி, அவளைக் கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தானே மணந்து கொள்ளுகிறான். இது காந்தருவ விவாகம். இவ்விதம் தோழி முதலியவர்கள் உதவியால் அவளை அடைந்து, கடைசியாய் அவளை முழுவதும் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள விரும்பி விலைகொடுத்துக் கொள்ளுதல், உடன்கொண்டுபோகுதல், மடலேறுதல் முதலிய வழிகளில் ஒன்றால் அவளைத் தனதாக்கிக்கொண்டானாகி, அவளுடன் வாழ்கிறான். வாழ்கிற காலத்தில் அவர்களிருவருக்கும் இடையில் கூடல், பிரிவு முதலிய நிகழ்கின்றன. மேற்கூறிய சிறு கதையில் அமைந்திருக்கும் விஷயங்களை நானூறு கவிகளாகப் பாடியிருக்கின்றார். மாணிக்கவாசகர் காதல் சம்பந்தமான விஷயங்களைக் கூறவந்தார் என்று நினைத்தல் பொருந்தாது. முழுவதும் வைதீக விஷயங்களில் ஆழ்ந்துகிடந்த மாணிக்கவாசகர் காதல் சம்பந்தமான விஷயங்களை யல்ல, திருக்கோவை என்னும் நூலினால் பல ஆத்மீக விஷயங்களையே கூறினார். இதனுள் தலைவன் தலைவி, பரமான்மா ஜீவான்மா என இரண்டுமாகும். இந்த நூல் தங்கள் தங்கள் மனப்போக்கின்படி பலர்க்கும் பலவேறு வகையான அர்த்தத்தை உண்டாக்கும் என்பதை,

> ஆரணங் காணென்பர் அந்தணர் யோகிய ராகமத்தின்
> காரணங் காணென்பர் காமுகர் காமநன்னூலதென்பர்
> ஏரணங் காணென்பர் எண்ணரெழுத் தென்பர் இன்புலவோர்
> சீரணி காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே.

என்னும் கவியால் உணர்க. இது தாயுமானவர் பைங்கிளிக் கண்ணியைப் போன்றது. கிருஷ்ண பிள்ளை இயற்றிய ஆன்மாப் பிரலாபமும் இதைப்போன்றதாகும்.

9. ஒன்பதாம் திருமுறை சேந்தனார் முதலியோர் இயற்றிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முதலியவை.

10. பாத்தாம் திருமுறை என்பது திருமந்திரம். இது திருமூலநாயனார் பாடிய மூவாயிரம் விருத்தங்களால் ஆகிய நூல். இது யோகசாஸ்திர சார்புடையது. பரமான்மாவுக்கும் ஜீவான்மாவுக்கும் உள்ள ஐக்யத்தை மிகவும் இனிமையாய் எடுத்துரைக்கும்.

என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்தவொண் ணாதே.

11. பதினோராம் திருமுறை. இது பட்டினத்தார் முதலிய அடியார்கள் பாடிய பாடல்களின் தொகுதி.

12. பெரியபுராணம். இது 63 தனி அடியார்கள் ஒன்பது திருக்கூட்டத்தாராகிய இவர்களின் சரித்திரத்தைக் கூறும். இது சேக்கிழார் நாயனார் இயற்றியது. அறுபத்துமூன்று தனியடியார்களுள் விசேஷித்தவர்கள்

| | |
|---|---|
| ஞான சம்பந்தர் | பிராமணர் |
| அப்பர் அல்லது திருநாவுக்கரசு | வேளாளர் |
| சுந்தரர் | பிராமணர் |
| திருநாளைப் போவார் (நந்தனார்) | பறையர் |
| கண்ணப்ப நாயனார் | வலையர் |
| திருநீலகண்ட நாயனார் | குயவர் |

திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் பாணர் (பறையருள் ஒருவகுப்பு)

சைவ சமயாசாரிகளில் விசேஷித்தவராகிய மாணிக்கவாசக சுவாமிகள் இந்தப் பெரிய புராணத்தில் சொல்லப்பட்ட அறுபத்துமூன்று நாயனார்களில் ஒருவரல்ல. இதற்குக் காரணம், இவர் பெரிய புராணமும் சைவத் திருமுறை வகுப்பும் உண்டானபிற்பாடு தோன்றியிருக்கலாம். அல்லது இவர் ஒன்பதுவகை அடியார் கூட்டத்தில் ஒருவராயிருக்கலாம். இனி ஒன்பதுவகை அடியார் கூட்டத்து விசேஷித்தவர்: தில்லை வாழ் அந்தணர் அதாவது சிதம்பரத்திலிருக்கும் மூவாயிரம் பிராமணர்கள்; முப்பொழுதும் திருமேனி தீண்டுவர், முழுநீறு பூசிய முனிவர்.

ii. பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்கள்.

இவை தமிழில் உள்ளன. சிவாகமத்தில் ஞானகாண்டபொருளை சுருக்கி விளக்குவன. இச்சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கு. இவற்றில் விசேஷமாய் பாராட்டப்படுகின்றவையாவன:

(1) சிவஞானபோதம் இது திருவெண்ணை நல்லூர் மெய்க்கண்ட தேவர் இயற்றியது. இது பன்னிரண்டு சிறு சூத்திரங்கள் அடங்கியுள்ளது. அச்சு ஒரே பக்கத்தில் அடங்கக்கூடியது. இதற்கு அநேக வியாக்கியானங்கள் உண்டு. அவ்வியாக்கியானங்கள் பல ஆயிரம் பக்கங்களுள்ளன. இது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளின் இலக்கணத்தை எடுத்துரைப்பது.

(2) சிவஞானசித்தியார். இதை எழுதினவர் அருணனந்தி சிவாச்சாரியார்; மெய்கண்ட தேவருடைய சிஷர்கள் நாற்பத்திரண்டுபேர்களில் விசேஷித்தவர். இவர் இயற்றிய சிவஞானசித்தியார், பரபக்கம், சுபக்கம் என்னும் இரண்டு பாகங்கள் உள்ளது. பரபக்ஷத்தில் ஜையினம், வைஷ்ணவம், பௌத்தம், லோகாயதம் முதலிய மார்க்க உபதேசங்களை எடுத்து விளக்கிக்காட்டி, தவறுதல்களை எடுத்துக்கூறி, அம்மார்க்கங்களைக் கண்டிக்கிறார். சுபட்சத்தில் சைவமதத்தின் உபதேசத்தை விளக்கிக்காட்டி அம்மத உண்மையை ஸ்தாபிக்கிறார். இது சிவஞான போதத்துக்கு வியாக்கியானமாய் எழுதினது. தற்கால வேதசாஸ்திர கலாசாலைகளில் நடப்பதுபோலவே சைவமடங்களிலும் இம்மதசாஸ்திரம் ஓர் பாடமாகக் கற்பிக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

(3) சிவப்பிரகாசம். இது ஸ்ரீஉமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் இயற்றியது; ஐம்பது விருத்தங்களில் சைவ சமய போதனையை எடுத்துரைக்கும் நூல்.

இம்மூன்று நூல்களினின்றும் பல மேற்கோள்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவை மூன்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டும் இருக்கின்றன.

மேற்கூறிய பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களுமே சைவமத உபதேசத்துக்கு ஆதாரமாக ஒப்புக்கொள்ளப்படுபவைகள்.

இவைகளைச் சைவமத மூல உபதேசங்கள் (Canon) என்று சொல்லலாம். பக்திவிருத்திக்கு ஆதாரமாக வேறு பல நூல்களையும் கொண்டாடுகின்றனர். (உ-ம்.) தாயுமானவர், இராமலிங்கசுவாமி பாடல், இன்னும் பல புராணங்கள், காவியங்கள். ஆயினும் இவை எல்லாம் சைவ சமயத்துக்கு ஆதாரமாகமாட்டா.

## II சைவமத அனுஷ்டானம்.

ஹிந்துமார்க்கத்தில் பொதுவாகவும் சைவமார்க்கத்தில் விசேஷமாகவும் மார்க்கானுஷ்டானங்கள் அதிகமாக பாராட்டப்படுகின்றன. ஒரு ஹிந்து சூரியோதயத்திற்கு முன் எழுந்ததுமுதல், இரவில் அவன் நித்திரைக்குப் போகும்வரைக்கும் அவனுடைய ஜீவியமானது ஆச்சாரங்களாலும் சடங்குகளாலும் நிறைந்திருக்கின்றன வென்பது சைவசமய அனுஷ்டிகளுக்கு மிகச் சிறப்பாய்ப் பொருந்தும். சைவசமயத்தார் இன்றியமையாது அனுஷ்டிக்கவேண்டிய ஆச்சாரங்களைப்பற்றிச் சைவசமய நூல்களில் விரிவாய்ச் சொல்லியிருக்கின்றது. இவற்றை யனுசரித்துக் கீழ்கண்ட ஆச்சாரங்களைப்பற்றிச் சில விஷயங்களைப் பார்ப்போம்.

1. சிவசின்னதாரணம்.—அதாவது சிவனுக்கறிகுறியாய் இருக்கின்றவைகளைச் சரீரத்தில் தரித்துக்கொண்டிருத்தல். இவை விபூதிதாரணம், ருத்ராக்ஷதாரணம் என்று இருவகைப்படும்.

விபூதி.—இதற்குத் திருநீறு என்றும் கூறுவர். இது குற்றமில்லாத பசுவினுடைய சாணத்தை விதிப்படி தகனித்தலால் உண்டாகிய சாம்பல். இந்தச் சாம்பலைச் சைவர்கள் நெற்றியிலும், மார்பிலும், புஜத்திலும் திரிபுண்டமாகத் தரித்துக்கொள்ள வேண்டுமென்பது சைவ சாஸ்திரம். திருநீறணிதல் எதற்கு அறிகுறி என்றால் அதற்குச் சைவசித்தாந்த நூல்கள் ஞானாக்கினியினால் தகிக்கப்பட்ட பசுமல நீக்கத்தில் தோன்றும் முக்திப் பேற்றுக்கு அறிகுறியென்று கூறும். (பசு = ஆன்மா மலம் = அழுக்கு, பாசம், பாவம்.)

சித்தாந்த சார்பாக இவ்வித வியாக்கியானம் சைவ நூல்களில் கூறப்பட்டிருப்பினும், புராணசார்பாக இதற் காதாரம் வேறு இருப்பதாகத் தோன்றுகிறது. சுடுகாட்டுச் சிவன் சாம்பலைப் பூசிக்கொண்டு ஆடுகின்றார் என்று புராணம் இருப்பதாலும், சுடலை ஆடி என்றும், சுடலைப் பொடி பூசியென்றும், அவருக்குப் பெயர் இருக்கின்றமையாலும், இது சைவர்களுக்கு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

விபூதி உண்டு பண்ணுதல், அதைத் தரித்துக்கொள்ளுதல் முதலியவற்றைப்பற்றி மிகவும் நுணுக்கமான விதிகள் சைவ சமயநெறி முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளது.

ருத்திராக்ஷம்.—ருத்ரன் = சிவன், அக்ஷம் = கண், ருத்ராக்ஷம், சிவன் கண்கள். இது ஒருவகைக் காய். அக்காய்களைத் தனியாகவோ, ஒரு மாலையாகவோ, கழுத்தில் தரித்துக்கொள்ள வேண்டுமென்பது கட்டளை. ருத்ராக்ஷதாரணம் எதற்கு அறிகுறி என்றால், சிவன் அன்புக்கறிகுறி. அதாவது திரிபுர அசுரர்களுடைய இம்சையைப் பொறுக்கமுடியாது, தேவர் முனிவர் முதலியோர் தம்மிடத்து வந்து முறையிட்ட காலத்தில் அவர்களுடைய முறையீட்டைக் கேட்ட சிவனுக்கு அவர்கள்பால் கண்ணீர் பெருக, அவருடைய நேத்திரங்களில் தோன்றிய கண்ணீரையும், அக்கண்ணீருக்குக் காரணமாயிருந்த அன்பையும் ருத்ராக்ஷம் குறிக்கும் என்பர். சைவ சித்தாந்த நூல்கள் இவ்வாறு கூறினும், புராண சார்பாக இதற்கு வேறு காரணத்தையும் கூறலாம். அதாவது சுடலையாடிய சிவன் தலையோடுகளை மாலையாகக் கோர்த்து அதை அணிந்து ஆடுகின்றார் என்று புராணம் இருக்கின்றபடியால் அக்கதையை ஞாபகப்படுத்தவே ருத்ராக்ஷதாரணம் சைவர்களால் அனுஷ்டிக்கப்படுகிறதென்பாரும் உளர். ருத்ராக்ஷதாரண சம்பந்தமாய்ப் பல நுணுக்கமான விதிகள் சைவ சமயநெறி முதலிய நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன.

2. பஞ்சாக்ஷர ஜேபம்.—இது சி. வா. ய. ந. ம, என்னும் ஜெபம். சிவனுக்கு நமஸ்காரம் என்பது பொருள். பஞ

சாக்ஷர ஜெபம் செய்யும்போது ஜெபமாலை அல்லது ருத்ராக்ஷமாலை கொண்டாவது, வலக்கை விரல்களைக் கொண்டாவது உரு எண்ணவேண்டும். ஜெபம் என்பது தியானிக்கப்படும் பொருளை எதிர்முகமாக்கும் பொருட்டு அதனை உணர்த்தும் மந்திரத்தை உச்சரித்தல். மந்திரமென்னும் பதத்திற்கு நினைப்பவனைக் காப்பது என்பது பொருள். இது மானசம், உபாஞ்சு, வாசகம் என மூவகைப்படும்.

இவற்றுள் மானசமாவது.—நா நுனி உதட்டைத் தீண்டாமல் ஒருமை பொருந்தின மனத்தினாலே ஜெபித்தலாம். உபாஞ்சை யென்பது, தன் செவிக்குமட்டும் கேட்கும்படி நா நுனி உதட்டைத் தீண்ட மெல்ல ஜெபித்தலாம். இதற்கு மந்திரம் என்றும் பெயர். வாசகமாவது அருகிலிருக்கும் பிறர் செவிக்கும் கேட்கும்படி ஜெபித்தலாம். பஞ்சாக்ஷரத்தின் பொருளை அறிந்து சிவபெருமான் ஆண்டவன், தான் அடிமை, என்னும் முறைமையை மனத்தகத்தே வழுவாமலிருத்தி, அதனை விதிப்படி மெய்யன்போடு ஜெபித்துக்கொண்டு வரின், விறகினிடத்தே அக்கினி பிரகாசித்தாற்போல ஆன்மாவிடத்தே சிவபெருமான் பிரகாசித்து மும்மலங்களும் நீங்கும்படி ஞானத்தைப் பிரகாசித்தருளுவார் என்பது சைவநூல் துணிபு.

3. சிவலிங்க பூஜை.–சிவபெருமான் புறத்தே சிவலிங்க முதலிய திருமேனிகளும், குருவும், சங்கமமும், (அடியார் கூட்டமும்) ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை கொண்டருள்வார். ஆதலால் ஆன்மாக்கள் அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம். சிவபெருமான் எங்கும் வியாபகமாய் இருப்பினும் இவ்விடங்களில் மாத்திரமே தயிரில் நெய்போல விளங்கி நிற்பார். மற்ற விடங்களிலெல்லாம் பாலின் நெய்போல வெளிப்படாது மறைந்து நிற்பார்.

சிவலிங்கம் பலவகைப்படும். ஒருவரும் உண்டாக்காமல் தானாகவே இருப்பது சுயம்பு லிங்கமாகும்.

இவை தேவ அருளால் ஸ்தாபிக்கப்பட்டவை, ரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்டவை, மனிதரால் ஸ்தாபிக்கப்பட்டவை, எனப் பலவகையாகவும் பிரிக்கப்படும். அன்றியும் இது ஆக்கப்பட்ட கல், லோகம் முதலியவற்றிற்குத் தக்கதாய் வேறு பல பெயர்களாலும் அழைக்கப்படும். லிங்கங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் நால்வகை மார்க்கத்தாராலும் வழிபடத்தக்கன ஆயினும் அவரவர் கருத்துவகையால் அவ்வழிபாடு வித்தியாசப்படும். அவருக்குச் சிவபெருமான் அருள் செய்யும் முறையும் அவ்வாறே வேறுபடும்.

1. இவருள் சரியையாளர்.—பகுத்தறிவில்லாமல் சிவலிங்க முதலிய திருமேனியே கடவுள் எனக்கொண்டு வணங்குவார்கள். அவர்களுக்குச் சிவபெருமான் அங்கே வெளிப்படாமல் நின்று அருள் செய்வார். 2. கிரியையாளர்.—அருவப் பொருளாகிய சிவபெருமானும் மந்திரங்களினாலே சிவலிங்க முதலிய திருவுருக்கொண்டார் என்று தெரிந்துகொள்ளாமல் வணங்குவார்கள். அவர்களுக்குச் சிவபெருமான் கடைந்தபொழுது தோன்றும் அக்கினி போல அம்மந்திரங்களுக்கு அவரவர் விரும்பிய வடிவாய் அவ்வத்திருமேனியில் அவ்வப்பொழுது தோன்றிநின்று அருள்செய்வார். 3. யோகிகள்.—எங்கும் இருக்கும் சிவபிரான் இந்தத் திருமேனியிலு மிருந்து பூசைகொண்டு அருள்வார் என்று அறிந்து வணங்குவர். அவர்களுக்குச் சிவபெருமான் கறந்தபொழுது தோன்றும் பால் போல அவ்வம்மந்திரங்களினால் அவரவர் விரும்பிய வடிவாய் அவ்வத் திருமேனிகளில் அவ்வப்பொழுது தோன்றி நின்று அருள் செய்வார். ஞானிகள்.—மேலே சொல்லப்பட்ட முத்திறத்தாரைப்போல ஓர் இடத்தைக் குறியாமல் அன்பு மாத்திரத்தால் அங்கே வழிபடுவர். அவர்களுக்குச் சிவபெருமான் கன்றையீன்ற அல்லது நினைந்த தலையீற்றுப் பசுவின் முலைப்பால் போல அவ்வன்பே தாம் ஆகி எப்பொழுதும்போல வெளிப்பட்டு நின்று அங்கே அருள்செய்வார்.

லிங்கங்களில் இஷ்டலிங்க மென்பது அதிக விசேஷமானது. இஷ்டலிங்கமென்பது யாவருக்கு முரியதா

யிராமல், தங்கள் இஷ்டம்போல் தாங்கள் ஏற்றுக்கொண்ட லிங்கம். இது விசேஷ தீட்சை பெற்றுக்கொண்ட சிவபக்தர்களுக்கு மட்டுமே உரியது. இதன் விபரமாவது: விசேஷ தீட்சை நடக்குங்காலத்தில் ஆசாரியர் சீஷனைப் பார்த்து நீ உள்ளளவும் கைவிடாமல் இவனை தினந்தோறும் பூஜி என்று அனுமதிசெய்து, அடியேன் இச்சரீரம் உள்ளவரையிலும் சிவபூஜை செய்வதன்றி ஒன்றும் உட்கொள்ளேன் என்று பிரதிக்கினை செய்வித்துக்கொண்டு கொடுக்க, அவன் வாங்கி பூஜிக்கும் லிங்கமாம். இஷ்டலிங்கம் பலவகைப்படும். (உ—ம்.) 1. க்ஷணிக லிங்கம். இது மண், அரிசி, அன்னம், ஆற்று மணல், கோமயம், வெண்ணெய், ருத்ராக்ஷம், சந்தனம், சர்க்கரை, மா முதலியவற்றால் செய்யப்பட்டு பூஜை நடந்து முடிந்தவுடன் கைவிடப்படுவது. 2. சைலலிங்கம்: கல்லினால் ஆக்கப்பட்டது. 3. லோகஜலிங்கம்: தங்கம், வெள்ளி முதலியவற்றால் ஆக்கப்பட்டது. 4. இரத்தின லிங்கம்; மரகதம், மாணிக்கம் முதலிய கற்களால் ஆக்கப்பட்டது. 5. ஸ்படிக லிங்கம்: பளிங்கினால் ஆக்கப்பட்டது.

இஷ்டலிங்க பூஜைக்கு அதிகாரிகள் யாவரென்று கேட்டால், உயர்ந்த ஜாதியினராய், அங்கவீனமில்லாதவராய், பிணி இல்லாதவராய், இடம் பொருள் ஏவல் உடையவராய், சிவபூஜாவிதி பிராயச்சித்தவிதி முதலிய விதிகளை அறிந்தவராய், அறிந்தபடியே அனுஷ்டித்து வருபவராய் உள்ளவர் மாத்திரமே, சைலலிங்கம் லோகஜலிங்கம் இரத்தினலிங்கம் ஸ்படிகலிங்கம் முதலியவற்றுள் ஒன்றைப் பிரதிஷ்டை செய்வித்துக்கொண்டு பூஜை செய்யலாம். மற்றவர்களெல்லாரும் க்ஷணிகலிங்க பூஜையே செய்யக்கடவர். அவர் குளிக்கப் புகுந்து சேறு பூசிக்கொள்வதுபோல, சிவலிங்கபூஜை செய்வித்துக்கொள்ளப் புகுந்து பாவம் தேடிக்கொள்வது புத்தியன்று. உயர்ந்த ஜாதியாருள் அங்கஹீனம் முதலிய குறைகளை யுடையவர்களும், இதரஜாதியாரும் ஸ்தூல லிங்கமாகிய கோபுரத்தைப் பத்திர புஷ்பங்களால் அர்ச்சித்துப் பூஜிக்கக்கடவர்.

சிவபூஜை எழுந்தருளப் பண்ணிக்கொண்டவர் பூஜை பண்ணுமல் புசிக்கலாகாது. அவ்வாறு புசிப்பது பெருங் கொடும்பாவம். அப்படிப் புசிக்கும் அன்னம் புழுவுக்கும், பிணத்திற்கும், மலத்திற்கும் சமம். புசித்தவன் ஆச்சாரியரை யடைந்து, அதற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ளல் வேண்டும். ஞானநிஷ்டையடைந்தவர் சிவபூஜை முதலிய நியமங்களைச் செய்யாது நீக்கி விடல் குற்றமாகாது. ஆனால் நித்திரை செய்வோன் கையிலுள்ள பொருள் அவனை அறியாமலே தாஞக நீங்குவதுபோல ஞானநிஷ்டை யுடையவருக்குச் சிவபூஜை முதலிய நியமங்கள் தாமே நீங்கின் குற்றமில்லை. அப்படியின்றி அவர் தாமே அவைகளை நீக்குவராயின் தப்பாது நரகத்தில் வீழ்வர். ஜனனமரணத் தீட்டுக்காலங்களிலும், வியாதிகாலத்திலும், தம்மாசாரியரைக் கொண்டாகிலும் தம்மோடொத்தாரைக்கொண்டாகிலும் தமது பூஜையைச் செய்விக்கவேண்டும்.

4. சிவ தீட்சைப் பேறு.—சைவர்கள் பெறத்தக்க தீட்சைகள் நான்கு:—

(1) சமய தீட்சை.—இது கிறிஸ்தவர்களுக்குள்ளே ஞானஸ்நானம் என்னும் சடங்குக்குச் சரி. இத்தீட்சை பெற்றவர் சமயதீட்சிதர் எனப்படுவர். இவர்கள் சந்தியாவந்தனமேனும் சிவாலயப்பணியேனும் இவ்விரண்டையேனும் அனுஷ்டிப்பவர்.

(2) விசேஷதீட்சை.—சமயதீட்சை விசேஷதீட்சை என்னும் இவ்விரண்டையும் பெற்றுக்கொண்டவர்கள் சந்தியாவந்தனம்,சிவாலயப்பணி என்பவற்ருேடுசிவலிங்கப் பூஜையும் செய்வதற்கு அருகராவர். இந்தத் தீட்சையானது கிறிஸ்தவர்களுள் வழங்கும் உட்சபையில் சேருதல் (Confirmation) என்னும் சடங்குக்கு ஏறத்தாழச் சரியாகும்.

(3) நிருவாண தீட்சை.—சமயதீட்சை விசேஷதீட்சை நிருவாணதீட்சை என்னும் மூன்றையும் பெற்றுக்கொண்டவர்கள் சந்தியாவந்தனம் சிவாலயத்திருப்பணி, சிவலிங்கபூஜை என்பவற்ருேடு ஞான பூசையையும் அனுஷ்டிப்

பர். ஞானபூசை என்பது சைவ மதத்துக்கு ஆதாரமாகவுள்ள சித்தாந்த சாஸ்திரங்களை ஓதுதலும் ஓதுவித்தலுமாம். கிறிஸ்தவ முறைமையில் இது குரு அபிஷேகச் (Ordination) சடங்குக்குச் சமமாகும்.

(4) ஆச்சாரியாபிஷேகம்.—இது கிறிஸ்தவர்களுக்குள் நடைபெறும் அத்தியக்ஷாபிஷேகத்திற்குச் சரி (Consecration). ஆச்சாரியர் சமயதீட்சை, விசேஷதீட்சை நிர்வாணதீட்சை, ஆச்சாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றுக்கொண்டு, நித்திய கருமங்களோடு தீட்சை, பிரதிஷ்டை முதலிய கிரியைகளும் செய்கிறவர்கள்.

ஆச்சாரியராவதற்குச் சில நியதிகளுண்டு. பிராமணர் முதலிய நான்கு வர்ணத்தாருள்ளும் மனக்குற்றங்களும் உடல்குற்றங்களு மில்லாதவராய், நிகண்டு கற்று இலக்கிய ஆராட்சிசெய்து, இலக்கணமும், தர்க்கமும், நீதிநூல்களும், சிவ புராணங்களும், படித்தறிந்தவராய், தேவாரத் திருவாசகங்களைத் திருப்பண்ணோடு ஓதினவராய், சைவாகமங்களை ஓதி அவைகளால் உணர்த்தப்படும் நாலு பாதங்களையும் அறிந்தவராய்ச் சீஷர்களுக்கு நல் ஒழுக்கத்தையும், சைவசமயத்தையும் போதிக்கிறதில் அதிசமர்த்தராய் யுள்ளவர். சிவஞானத்தையடைய விரும்பிய சீஷன் தானடைந்த ஆச்சாரியரிடத்தில் சிவஞான மில்லையாயின் அவன் வண்டானது தானடைந்த பூவினிடத்தே தேன் இல்லையானால் அதனைவிட்டு தேன் உள்ள பூவைத் தேடியடைவதுபோல, அவரைவிட்டு சிவஞானமுள்ள ஆச்சாரியரைத் தேடியடையலாம். ஆயினும் முச்சந்தியும் முந்திய ஆச்சாரியரைத் தியானித்துக் கொண்டே ஞானமுபதேசித்த பிந்திய ஆச்சாரியரைத் தியானம் செய்யவேண்டும்.

5. நித்திய கர்மாநுஷ்டானம்.—சூரியோதயத்துக்குஐந்து நாழிகைக்கு முன்னாவது, அது கூடாதாயின் மூன்றே முக்கால் நாழிகைக்கு முன்னாவது நித்திரையைவிட்டெழுந்ததுமுதல், இரவில் படுத்துறங்குவது வரைக்கும் சைவசமயிகள் அனுஷ்டிக்கவேண்டிய விதிவிலக்குகளுக்கு கணக்கில்லை. இவற்றை ஒழுங்குபடுத்திக்கூறி

ஞல் அவை வருமாறு: 1. நித்திரையைவிட்டெழுந்த வுடன் வாய் கொப்பளித்து, கை கால் முகங்கழுவி, விபூதி தரித்து, சிவபெருமானை தியானித்து, சிவமூல மந்திரத்தை ஜெபித்து, தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களை உச்ச இசையோடு பாடித் தோத்திரம் செய்தல், 2. காலைக்கடன், 3. தந்தசுத்தி, 4. ஸ்நானம், 5. சந்தியாவந்தனம், 6. சிவபூஜை, 7. சிவாலயதரிசனம், 8. சிவசாஸ்திரப் பாராயணம், 9. திருப்பாடற் பாராயணம், 10. மத்தியான சந்தியாவந்தனம், 11. போஜனம், 12. சிவசாஸ்திரப்படனம், 13. சாயங்கால சந்தியாவந்தனம், 14. சிவாலயதரிசனம், 15. சிவபுராணங்கேட்டல், 16. நித்திரை. இவை ஒவ்வொன்றையும் பற்றி சைவ சமயநெறி முதலிய நூல்களில் வெகு திட்டவட்டமான விதிவிலக்குகள் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் சைவசமயத்தினர் தினந்தோறும் அனுஷ்டித்து வரவேண்டும்.

5. சிவாலய கைங்கரியம்.—அதாவது சிவாலயத்தில் செய்யத்தக்கத் திருப்பணிவிடைகளைச் செய்தல். இவை வெகு சாதாரணமானபடியால் இவற்றின் பெயர்களை மட்டும் எடுத்துக் கூறுவோம். திருவலகிடுதல், திருமெழுக்குச் சாற்றல், திருநந்தவனம் வைத்தல், பத்திர புஷ்ப மெடுத்தல், திருமாலை கட்டுதல், சுகந்த தூபமிடுதல், திருவிளக் கேற்றுதல், தோத்திரம் பாடல், ஆனந்தக் கூத்தாடல், பூஜைத்திரவியம் கொணர்தல். பூஜைத்திரவியம் என்பது சிவபூஜைக்கு அவசியமாயிருக்கின்றவற்றைக் கொண்டுவருதல். அவை: ஏலம், லவங்கம், சந்தனம், அறுகு, ஜாதிக்காய், கர்ப்பூரம், பால் முதலியன. பஞ்சகவ்வியம் = பால், தயிர், நெய், கோசலம், கோமயம். ரசபஞ்சாமிர்தம் = பால், தயிர், நெய் தேன், சர்க்கரை என்பவைகளின் தொகுதியாம். பல பஞ்சாமிர்தம் = முன் கூறிய ரசபஞ்சாமிர்தத்தோடு கூட்டி யமைக்கப்பட்ட வாழை, பலா, மா இவைகளின் தொகுதியாம். நைவேத்தியமென்பது = சுத்தான்ன சித்திரான்ன வகைகள், நெய், காய்ச்சுப்பால், தயிர், முப்பழம், தேங்காய்க்கீறு, பானகம், பானியம், (வாசனையோடுகூடியது) வெற்

றிலே, பாக்கு, பணிகாரம், சர்க்கரை, கறியமுது முதலி யனவாகும்.

6. சிவாலய தரிசனம்.—ஆலயத்திற்குச் சென்று சிவ லிங்கத்தைத் தரிசனம் செய்யும் விஷயமாய் அதிக நுட்ப மான விதிவிலக்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தரிசனம் செய்வோர் ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து விபூதி அணிந்தவராய், முதலாவது திருக்கோபுரத்தை வணங்கி, இரண்டு கரங்களையும் தலை மேல் குவித்துக்கொண்டு, சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டே ஆலயத்தினுட் சென்று, பலிபீடத்தையும் துவஜ ஸ்தம்பத்தையும் (கொடிக்கம்பு) ரிஷபதேவரையும் கும்பிட்டு நமஸ்காரஞ்செய்து, எழுந்து, கைகூப்பி, பஞ் சாக்ஷர ஜெபத்தை உச்சரித்துக்கொண்டு, மூன்றுதரத் துக்குக் குறையாமல் பிரதக்ஷிணம்பண்ணி, மீட்டும் சந்நி தானத்தை யடைந்து, நமஸ்காரம் செய்தல்வேண்டும்.

7. குருசங்கம சேவை.—அதாவது குருவையும், சங்கத் தையும் சேவித்தல். குருவென்பது தீக்ஷாகுரு, வித்தி யாகுரு, ஞானகுரு முதலாயினோர். குரு ஆசிரியர் தேசி கர் என்பன ஒருபொருட் சொற்கள். சங்கம் என்பது நிர்வாண தீக்ஷிதர், விசேஷித்த தீக்ஷிதர், சமய தீக்ஷிதர் என்னும் மூவகையான சிவபக்தர்களாகும். குருவை யும் சிவபக்தனையும் மனிதன் எனக் கருதாது, சிவபிரான் எனவே கருதி, மனம் வாக்கு காயம் என்னும் மூன்றி னும் சிரத்தையோடு வழிபடல்வேண்டும். இவ்வாறு இவரைச் சிவபிரான் என நினைத்தற்குக் காரணமு முண்டு. சிவபெருமான் இவர்களை (அதிஷ்டித்து) நிலைக்களமாகக்கொண்டு நிற்கப்பெறுதலும், கண்டவுட னே சிவபெருமானை நினைப்பிப்பனவாயுள்ள திருவேடங் களுடைமையும், நாடோறும் செய்யப்படும் சிவோகம் பாவனையும், சிவயோகமும், இவர்கள் சிவபெருமான் என நினைத்தற்குக் காரணங்களாம்.

இவ்வாறு சிவபக்தரைச் சிவமெனக்கண்டு வழிபடுத லுக்கு வேடம், பாவனை, செயல், தன்மை என்னும் இவற் றினுள் ஒன்றே அமையும். ஒருவன் ஒரு பெண்ணி

டத்து அன்புடைமை அவனுடைய சுற்றத்தாரைக் கண்ட பொழுது அவனுக்குண்டாகும் அன்பின் அளவுபற்றியே தெளியப்படும். அதுபோல ஒருவன் சிவபெருமானிடத்து அன்புடைமை அவருடைய அடியாரைக் கண்டபொழுது அவனுக்குண்டாகின்ற அன்பின் அளவுபற்றியே தெரியப் படுமாதலினால், சிவனடியாரிடத்து அன்பு செய்யாது, அபிமானம் செய்யும்பொருட்டு சிவலிங்கப்பெருமா னிடத்தே அன்புடையராய் ஒழுகுதல் வயிறுவளர்க் கும் பொருட்டும், டம்பத்தின் பொருட்டும், நடித்துக் காட்டும் நாடகமாத்திரமேயன்றி வேறல்ல. குருவையும் சிவனடியாரையும் தரிசிக்கும் காலத்தில் வெறுங்கை யுடன் போகாது தம்மால் இயன்ற பதார்த்தத்தைக் கொண்டுபோய் அவர் சந்நிதியில் வைத்து அவரை நமஸ் கரித்து விபூதிவாங்கித் தரித்துக்கொள்ளல் வேண்டும். தீட்சாகுரு, வித்தியாகுரு, முதலானவர் சிவபதமடைந் துவிடின் வருஷந்தோறும் அவர் சிவபதமடைந்த மாத நட்சத்திரத்திலாகிலும் திதியிலாகிலும் அவரைக்குறித் துக் குருபூஜை செய்துகொண்டு வரவேண்டும். மேலும் பல அற்புதங்களைச் செய்தும் தமிழ்வேதத்தைத் திரு வாய் மலர்ந்தருளியும் சைவசமயத்தை ஸ்தாபித்தரு ளிய ஞானசம்பந்தம் முதலிய சமய குரவர் நால்வர்க் கும் (சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்) பெரிய புராணத்தை அருளிச்செய்த சேக்கிழார் நாயனு ருக்கும், சைவசித்தாந்த நூல் உணர்ச்சியை வளர்த்தரு ளிய மெய்கண்டதேவர் முதலிய சந்தான குரவர் நால் வர்க்கும், தமிழ் வழங்கும் நிலமெங்கும் நல்லறிவுச் சுடர் கொழுத்தி யருளிய தெய்வப்புலமை திருவள்ளுவ நாய னருக்கும், இயன்றமட்டும் குருபூஜை செய்துகொண்டு வரல்வேண்டும்.

8. மாஹேஸ்வரப்பூஜை.—மஹேஸ்வரனாகிய சிவனை வழி படுவோர் மஹேஸ்வரர். ஆச்சாரியர், நிருவாண தீக்ஷிதர் விசேஷித்த தீக்ஷிதர், சமய தீக்ஷிதர் என்னும் நால்வகை மாஹேஸ்வரர்களையும் விதிப்படி பூஜித்து திருவமுதுசெய் வித்தல்வேண்டும். இப்பூஜை கீழ்வரும் காலங்களில் அவ சியமாகச் செய்தல்வேண்டும். தீக்ஷை பெற்றுக்கொண்ட

போதும், சிவலிங்கப் பிரதிஷ்டைப்பூஜை செய்வித்துக் கொண்டபொழுதும் புண்ணியஸ்தல யாத்திரைக்குப் புறப்படும்பொழுதும், புண்ணியஸ்தலத்தை யடைந்த பொழுதும், யாத்திரைசெய்து திரும்பி வீடுசேர்ந்தபொழுதும், வியாதிக்கு மருந்து உட்கொள்ளத் துவங்கும் பொழுதும் வியாதி நீங்கியபொழுதும் இப்பூஜை செய்வித்தல்வேண்டும்.

9. விரதானுஷ்டானம்.—விரதமென்பது மனம் பொறி வழிபோகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும், மனம் வாக்கு காயம் எனும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதலாம். இது சிவனை நோக்கிச் செய்யப்படுவனவும், சிவபுத்திரரை நோக்கிச் செய்யப்படுவனவும், தேவியை நோக்கிச் செய்யப்படுவனவுமாக மூன்றுவகைப் படும். இவற்றுள் சிவவிரதம் எட்டு. சிவ விரதங்களுள் விசேஷித்தது சிவராத்திரி விரதம். இது மாசிமாசத்துக் கிருஷ்ணபட்சத்து சதுர்த்தசி திதியிலே சிவபெருமானை நினைத்து அனுஷ்டிக்கும் விரதமாம். இதில் உபவாசம் செய்து நாலு சாமமும் நித்திரையின்றி சிவபூசை செய்தல் வேண்டும். சிவராத்திரி விரதம் சைவசமயிகள் யாவராலும் அவசியமாய் அனுஷ்டிக்கத்தக்கது.

தேவிவிரதம்:—இவற்றுள் விசேஷமானது நவராத்திரி உற்சவம். புரட்டாசிமாசம் சுக்கிலபக்ஷம் பிரதமி முதல் நவமி யீறாகவுள்ள ஒன்பதுநாளும் பார்வதிதேவியாரைக் கும்பத்திலே பூஜைசெய்து அனுஷ்டிக்கும் விரதமாம். இதிலே முதல் எட்டுநாளும், பணிகாரம், பழம் முதலியவை உட்கொண்டு மகா நவமியில் உபவாசம் செய்யவேண்டும்.

சிவபுத்திர விரதமென்பது சிவபுத்திரராகிய விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் எனும் நால்வருள் ஒருவரை நினைத்துச் செய்யப்படுவது.

விநாயக விரதத்துள் விநாயக சதுர்த்தி விசேஷமானது. இது ஆவணிமாசம் சுக்கிலபக்ஷ சதுர்த்தியிலே விநாயகக் கடவுளைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதமாம்.

இதில் ஒருபொழுது பகலில் போஜனம்செய்து, இரவில் பழமேனும், பணிகாரமேனும் உட்கொள்ளவேண்டும்.

சுப்பிரமணிய விரதம் மூன்றினுள் விசேஷித்தது. கார்த்திகை விரதம். கார்த்திகை மாசத்துக் கார்த்திகை நட்சத்திரம் துடங்கி ஒவ்வொரு மாசத்துக் கார்த்திகை நட்சத்திரந்தோறும் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதமாம். இதில் உபவாசம், உத்தமம். அது கூடாதவர்கள் இரவில் பழம் உட்கொள்ளவேண்டும். இவ்விரதம் 12 வருஷம் அனுஷ்டிக்கவேண்டும். வைரவவிரதமும் வீரபத்திர விரதமும் அவ்வளவு விசேஷமில்லை.

விரதம் அனுஷ்டிப்பவர் அவ்விரததினத்தில் நீக்கவும், அனுஷ்டிக்கவும் வேண்டிய பல விஷயங்கள் உள. காமம், கோபம் முதலிய குற்றங்கள் எல்லாவற்றையும் பற்றறக் களைதல்வேண்டும். தவறாது வைகறையிலே நித்திரையை விட்டு எழுந்துவிடவேண்டும். புண்ணிய தீர்த்தத்தையடைந்து விபூதி, வில்வத்தடி மண், தர்ப்பை, கோமயம் என்பவைகளை சிரசிலே வைத்து ஸ்நானம் செய்தல்வேண்டும். தியானம், ஜெபம், பூஜை, ஆலயதரிசனம், பிரதக்ஷணம், புராணசிரவணம் முதலியன விசேஷமாகச் செய்தல்வேண்டும். திருக்கோயிலிலே இயன்றமட்டும் நெய் விளக்கேற்றி அபிஷேக நைவேத்திய திரவியங்கள் கொடுத்தல்வேண்டும். உபவாசதினத்திற்கு அடுத்த நாள் மஹேஸ்வரப்பூசை செய்யவேண்டும்.

இவ்வாறு சைவமதமானது இந்தப் பருவத்தில் அதிக விர்த்தியடைந்து, விசேஷமாய்த் தென்னிந்தியாவில் மிகுந்த செல்வாக்குடையதாயிற்று. இக்காலத்தில் தோன்றிய தமிழ் நூல்களும் நித்திய நைமித்திய அனுஷ்டான முறைகளுமே இதற்குச் சான்றாகும்.

---

சைவசமயமாகிய இப்பகுதியைப்பற்றி எழுதும்பொழுது பல இடங்களில் சைவசமய நூல்களின் போக்கையும் சைவ சித்தாந்தப் பெரியார்களுடைய பாஷை நடையையும் ஓரளவு தழுவியே இங்கு எழுதப்பட்டிருக்கின்றது.

## II. வைஷ்ணவம்.

புனர் நிர்மாண பர்வத்தில் தோன்றிய இரண்டாவது மதம் வைஷ்ணவம். விஷ்ணுவைத் தெய்வமாயுடையது. இப்பதம் ஒரு தத்திதாந்த நாமம். விஷ்ணு ருக் முதலிய வேதங்களில் சொல்லப்பட்ட ஒரு தெய்வம். வேத தேவர்களில் விஷ்ணு அத்தனை சிரேஷ்ட ஸ்தானமுடையவரல்ல. ஆயினும் சிவனைக்காட்டிலும் உயர்ந்தவர். காலே, அந்தி, சந்தி என்னும் மூன்றடிகளால் விஷ்ணு உலகத்தை அளப்பதாகவே சங்கீதங்களில் கூறப்பட்டிருக்கிறது. சூரிய தெய்வமாகிய விஷ்ணு இந்திய பூர்வ குடிகளால் தத்தம் தெய்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது எப்படி என்பது நாம் ஆராயத்தக்கது. இந்திய பூர்வ குடிகள் வணங்கிவந்த தெய்வங்களுள் மால், திருமால், பெருமாள் என்று வணங்கப்படுவது இதுவே. இது முல்லை நிலத்துக்குரியது; காவல் தொழிலில் வல்லது; கரிய நிறமுடையது.

ஆரியர் பூர்வ குடிகளை ஜெயித்து அவர்களைத் தங்கள் செல்வாக்குக்குக் கீழ் கொண்டுவந்த காலத்து தங்கள் மதத்தை அவர்கள் ஒப்புக்கொள்ள முயற்சித்தனர். இந்திய பூர்வீக தெய்வங்களில் ஒன்முன பெருமாளும் வேத தெய்வமாகிய விஷ்ணுவும் ஒன்றுதானெனும் கொள்கை தோன்றியது. திராவிட சிவனும் வேத ருத்திரனும் ஒன்றெனக் கூறியதுபோல, விஷ்ணு விஷயத்திலும் கூறினர்.

எவ்வித மதானுசாரத்துக்கும் வேதம் ஆதாரமாயிருத்தல் நலமெனக் கருதிய காலத்தில் இவர்கள் இப்புதிய உபதேசத்தை ஒப்புக்கொண்டது ஆச்சரியமல்ல.

### ஸ்ரீ வைஷ்ணவ ஆச்சாரியார்

நாம் ஆராய்ச்சிசெய்யும் இக்தருணத்தில் வைஷ்ணவ மதத்தை உயர்வு பெறச்செய்து அதற்கு வைதீகமுறைகளை அமைத்து ஒழுங்குபெறச்செய்தவர் ராமானுஜாச்சாரியார். இவர் கி. பி. 1107-ஹு செங்கற்பட்டு ஜில்லா ஸ்ரீபரம்புத்தூரில் பிறந்தவர். ஸ்ரீசங்கராச்சாரியாருக்கு

முந்நூறு வருஷங்களுக்குப் பின்னுனவர். ஆகையால் சங்கரர் அத்வைதத்தையும் மாயா உபதேசத்தையும் மறுத்து, வைஷ்ணவ சித்தாந்தத்தை ஸ்தாபித்தார்.

தமிழ்நாட்டில் வைஷ்ணவ மதப்பிரச்சாரம் செய்து வந்த பன்னிரண்டு ஆழ்வார்களின் உபதேசத்தையே ஆதரித்தார். வைஷ்ணவமதப் பிரசாரத்தை அனுசரித்த ராமானுஜர் விடாமுயற்சியுடையவர். குடும்பம் தடை என்று நினைத்து மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுச் சந்நியாசியானுர். சாதாரண வைஷ்ணவ மார்க்கப்படி சூத்திரர் முதலிய தாழ்ந்த ஜாதிகளுக்கு வேதத்தைக் கற்பியாமலிருப்பது தப்பிதம் என்பதை உணர்ந்தவராய், அவர்களுக்குள் உழைத்தார். ஒருநாள் காஞ்சிபுரத்திலுள்ள கோபுரம் ஒன்றில் ஏறி அதனின்று வேத மந்திரங்களை இழிகுலத்தவர் உள்பட சகல ஜாதியாருக்கும் உபதேசம்பண்ணினுர்.

கோவில் அதிகாரிகளான பிராமணர் இதைத் தடுத்தும் கண்டித்தும் பயமுறுத்தியும் தான் செய்யத் துணிந்ததை செய்தேமுடித்தார். இவ்வாறு தாம் இழிகுலத்தவர்களுக்கு வேத உபதேசம் செய்வதால் அவர்களில் ஆயிரக்கணக்கானவர் முத்திபெறுவதே விசேஷமென்றும், இப்பாவத்தின் பலனுகத் தான் நரக லோகத்தில் தள்ளப்பட்டாலும் பரவாயில்லை என்றும் கூறினர். இத்தகைய இவருடைய செய்கைகள் ஜனங்களுக்குப் பிரீதியை உண்டாக்கிற்று. திரளான ஜனங்கள் அவருடைய போதனையைக் கேட்கும்படி ஓடிவந்தனர்.

இவர் தமது மிஷனெரி வேலையைச் செவ்வையாய் நடத்தும்பொருட்டு, மிஷனெரிகளை நியமித்து தேசத்தின் பல பாகங்களிலும் மடங்கள் கட்டிமுடித்து, சிறந்த வைதீக நூல்களையும் இயற்றுவித்தார். திருச்சிறுப்பள்ளிக்கு அருகிலுள்ள திருவரங்கம் என்ற ஸ்ரீரங்கத்தைத் தமக்கு மைய ஸ்தானமாக்கிக்கொண்டார்.

எழுபத்துநான்கு சீஷர்களைத் தெரிந்துகொண்டார், இவர்கள் யாவரும் ஆன்ந்த வைதீக ஞானமுடையவர்க

ளும் சிறந்த சன்மார்க்கமுடையவர்களுமா யிருந்தனர். இவர் இருந்த காலத்தில் சாதாரண ஹிந்துமதம் மிகுந்த தாழ்ந்த நிலைமையிலிருந்தது. சாதாரண தெய்வ வணக்கத்துடன் துன்மார்க்கம் கலந்திருந்தது.

இவரும் இவரைப்போன்ற இதர சீர்திருத்தக்காரரும் இவ்வித துன்மார்க்கத்தையுடைய பாமர மதத்தையும் சீர்திருத்தினர். இவர் வேதாந்த சூத்திரத்துக்கு ஓர் வியாக்கியானம் செய்திருக்கிறார். இதற்கு ராமானுஜ பாஷியம் என்று பெயர். அதில் வைஷ்ணவமதக் கோட்பாடு இன்னதென வியார்த்திசெய்திருக்கிறார்.

## வைஷ்ணவமத சித்தாந்தம்

சைவ சித்தாந்திகளைப்போலவே வைஷ்ணவர்களும் தங்கள் மதக்கோட்பாடுகளை வெகு நுட்பமாகவும் திட்டவட்டமாகவும் ஆராய்ச்சி செய்திருக்கின்றனர். சைவமதக் கோட்பாடுகளை விளக்குகிறதற்கு சைவ சித்தாந்தத்தில் பல பதத்தொடர்கள் உபயோகிக்கப்பட்டிருப்பதுபோல வைஷ்ணவமத சித்தாந்தத்திலும் வேறு வகையான பதத்தொடர்களும் பரிபாஷைச் சொற்களும் உபயோகிக்கப்பட் டிருக்கின்றன. இப்பதத்தொடர்கள் சற்றே கஷ்டமாயிருப்பினும் அவற்றைக் கற்றுக்கொள்ளுதல் மதச்சரித்திர மாணவர்களுக்கு பெரிதும் பயன்படுமாதலின், அதே சொற்றொடர்கள் இங்கு உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

சைவ சித்தாந்தத்தில் போலவே, வைஷ்ணவமத சித்தாந்தத்திலும் பதார்த்தம் மூன்று. அவை சித்து, அசித்து, ஈஸ்வரன் என்பனவாகும். இவற்றுள் சித்து என்பது ஆன்மா, அசித்து என்பது உலகம், ஈஸ்வரன் என்பது கடவுள்.

பசு, பதி, பாசம் என்னும் மூன்றனுள் சைவர்கள் தங்கள் மதசித்தாந்தத்தை அடக்குவதுபோல வைஷ்ணவர்களும் சித்து, அசித்து, ஈஸ்வரன் என்னும் இத்திரி பதார்த்தங்களுள் தங்கள் மதக்கோட்பாடுகள் அனைத்தையும் அடக்குவர்.

வைஷ்ணவர்களுள் பல மதபேதங்கள் உள. இவற்றுள் அதிமேலானது விசிஷ்டாத்வைதம் என்று பெயர் பெறும். ஸ்ரீராமானுஜாச்சாரியார் வியார்த்திசெய்தது இந்த விசிஷ்டாத்வைத மதமே. இது விசிஷ்ட அத்வைதம் என்னும் இருபதங்களால் ஆகியது. விசிஷ்டம் என்னும் பதத்துக்கு கூடினது என்று பொருள். அதாவது ஸ்மார்த்தமத ஸ்தாபகராகிய ஸ்ரீசங்கராச்சாரியார், சர்வமும் பிரமம் என்றும், பிரமமே யல்லாது வேறொன்றும் இல்லை என்றும் போதித்த சுத்த அத்வைதத்தைப் போலில்லாமல், அதினின்று வித்தியாசப்பட்ட அத்வைதம் என்பது இதன் பொருள். அத்வைதம் என்ற சொல்லுக்கு இரண்டல்லாமை என்றருத்தம்.

இனி, இந்த விசிஷ்டாத்வைத சித்தாந்தப்படிக்கு சித்து, அசித்து, ஈஸ்வரன் என்னும் திரிபதார்த்தங்களைப்பற்றிப் பார்ப்போம்.

'சித்து' சித்து என்பது ஆத்மா. இந்தச் சித்து ஞானேந்திரிய மனோபுத்தி விலக்ஷணமாய், அஜடமாய், ஆநந்தரூபமாய், நித்தியமாய், அணுவாய், நிரவயவமாய், நிர்விகாரமாய், ஞானாசிரியமாய், ஈஸ்வரனுக்கு சேஷமாயுள்ளது என்பர். இதன்பொருள் யாதெனச் சற்றுக் கவனிப்போம்.

ஞானேந்திரிய மனோபுத்தி விலக்ஷணமாய் = ஆத்மா அறிவுடையதாய், ஞானேந்திரியங்களையும் மனம் புத்தி முதலியவற்றையும் உடையதாய்,

அஜடமாய் = ஜடப்பொருள் அல்லாததாய், Material

ஆனந்தரூபமாய் = ஈஸ்வரனைப்போலவே ஆத்மாவும் இயற்கையாகவே ஆனந்த சொரூபமாய்,

நித்தியமாய் = என்றும் இருப்பதாய்,

அணுவாய் = மிக நுண்ணிய பரிமாணமுடையதா யிருப்பினும் அந்தந்த இடங்களில் சுகதுக்கங்களை அனுபவிக்கும் தன்மையை யுடையதாய்,

நிர் அவயவமாய் = அவயவங்கள் இல்லாததாய்,

நிர்விகாரமாய் = விகாரமில்லாததாய்,

ஞானாசிரியமாய் = விளக்கு ஓரிடத்திலிருப்பினும் அதன் காந்தி எங்கும் வியாபிக்கிறதுபோல வியாபிக்கும் ஞானத்தை உடையதாய்,

ஈஸ்வரனுக்கு சேஷமாயுள்ளது = ஆத்மா ஈஸ்வரனுக்கு ஓர் பாகமாயுள்ளது என்பதைக் குறிக்கும். ஈஸ்வரனுக்கு சித்தும் அசித்தும் சரீரம். அதாவது இப்பிரபஞ்சமனைத்தையும் ஒரே வஸ்துவாக எடுத்துக்கொண்டால் ஈஸ்வரன் அதற்கு ஆத்மாவாகின்றான், சித்தும் அசித்தும் அதற்குச் சரீரமாகின்றன. நம்முடைய சரீரத்தை ஆத்மா அதிஷ்டித்து (நிலைக்களமாகக்கொண்டு) நிற்பதுபோல ஈஸ்வரன் ஜீவான்மாக்களையும் சரீரத்தையும் அதிஷ்டித்து நிற்கின்றானாகையால் ஆத்மா (சித்து) ஈஸ்வரனுக்கு சேஷமாயிற்று. சேஷம் என்பது மீத பாகம்.

ஆத்துமா பத்தன், முத்தன், நித்தன் என மூவகைப் படுவான். பத்தன் ஜனன மரணாதிரூபமான சம்சாரத்தை (அதாவது உலக ஜீவியத்தை) அனுபவிக்கும் ஆத்மா. முத்தன் என்றால் பகவத் பக்தியால் சம்சார (உலக ஜீவிய) துக்கத்தை ஒழித்து மோக்ஷத்தை அடைந்த ஆத்துமா, இதை முத்திநிலை என்பர் சைவர். ஜீவன் முத்தர் என்பதும் இதுவே. நித்தன் ஒருகாலத்தும் சமுசார பந்தமில்லாத ஆத்துமா.

2. அசித்து. இது ஜடம் (Matter), அசித்து ஞான சூன்யமாய், விகாராஸ்பதமாயுள்ளது. ஜலத்துக்கு அக்கினி சம்பந்தத்தால் உஷ்ணமுண்டாவதுபோல இந்தப் பத்த ஆத்துமாவுக்கு அசித்து சம்பந்தத்தால் அவித்யா, கர்ம வாசனை ருசிகளுண்டாகின்றன.

இதன் பொருள்:

ஞான சூன்யமாய் = அறிவு கொஞ்சமும் இல்லாததாய்; விகாராஸ்பதமாய் = பற்பல விகார விகற்பங்களை யுடையதாய்; ஜலத்துக்கு அக்கினி சம்பந்தத்தால் உஷ்ண முண்டாவதுபோல இந்தப் பத்த ஆத்மாவுக்கு அசித்து சம்பந்தத்தால் அவித்யா, கர்ம, வாசனை, ருசிகளுண்டாகின்றன = என்பது ஜலத்துக்கு அக்கினி சம்பந்தத்தை உண்டுபண்ணும்பொழுது, அக்கினியின் குணமாகிய உஷ்ணம் ஜலத்தில் ஏறிக்கொள்ளுவதுபோல ஆத்மாவாகிய சித்துக்கு உலகமாகிய அசித்தினுடைய சம்பந்தத்தை உண்டுபண்ணும்பொழுது, இந்த ஆத்மாவுக்கு அவித்யை, கர்மம், வாசனை, ருசி என்ற குணங்கள் தோன்றுகின்றன. இவற்றுள் அவித்யை என்பது நான் எனது என்னும் அகங்கார மமகாரங்கள். கர்மம் என்பது புண்ணிய பாவங்கள். வாசனை என்பது கன்மங்களால் உண்டாகும் சம்ஸ்காரம் (பற்றுதல்), ருசி என்பது விஷயங்களை அனுபவித்தலில் மகிழ்ச்சி.

இந்த அசித்து பிரகிருதி என்றும் அவித்யை என்றும், மாயை என்றும் வேறு பெயர்களையும் பெறும்.

3. ஈஸ்வரன். பதி என்றும் கடவுள் என்றும் பிற மதத்தினர் கூறுவதும் இதுவே.

ஈஸ்வரன் லட்சணங்கள் வைஷ்ணவ நூல்களில் விரிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன.

ஈஸ்வரன் நிகில ஹேய ப்ரத்ய நீகனும், அநந்தனும், ஞானாநந்த சொரூபனும், ஞானசக்தி முதலிய கல்யாண குண பரிபூரணனும், சகல ஜெகத்தின் சிருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்குக் கர்த்தாவாய், சதுர்வித புருஷார்த்தப் பிரதனும், விலக்ஷண விக்கிரக முத்தனும் விளங்குபவன்.

இனி இவ்வரையறை வாக்கியத்தைச் சிறிது ஆராய்ச்சிசெய்வோம்.

நிகில கேய ப்ரத்ய நீகனும் = அந்தகாரத்துக்குத் தேஜஸைப்போல விகாராதி தோஷங்களுக்கு விரோதியா யிருப்பவனும்.

அநந்தனும் = முடிவுகளில்லாதவனும், அதாவது ஆதியும் அந்தமுமில்லாதவனும், ஆதிமத்யாந்த ரகிதர் என்பதும் இதே கருத்து.

ஞானனந்த சொரூபமாய் = ஞானத்தையும் ஆனந்தத்தையும் தனக்கு ரூபமாகக் கொண்டவனும், சச்சிதானந்தன் என்னும் பதத்திலும் இக்கருத்து அமைந்திருப்பதைக் காண்க.

ஞானசக்தி முதலிய கல்யாணகுண பூரணனும் = ஞாசக்தி முதலிய புதுமையான குணங்கள் நிறையப்பெற்றவனும், கல்யாணகுணம் என்பது மங்களகரமான புதிய குணங்கள்; யாணரே புதுமை தச்சர் எய்திய வனப்பு நன்மை என்பது நிகண்டு.

ஜெகத்தின் சிருஷ்டி ஸ்திதி லயம். இவைகளுக்குக் கர்த்தாவாய் = ஆக்கல், காத்தல், ஒடுக்கல் என்னும் முத்தொழிலுக்கும் தலைவனும், லயம் என்பது ஒடுக்கல். அது பிரளயகாலத்தில் பூதபௌதிகங்களை மூலப்பிரகிருதியில் ஒடுங்கச்செய்தல்.

சதுர்வித புருஷார்த்த பிரதனும் = தர்மார்த்த காமமோக்ஷமாகிய நால்வகைப் புருஷார்த்தங்களையும் அனுக்கிரகிப்பவனும். தர்மார்த்த காமமோக்ஷம் என்பது அறம் பொருள் இன்பம் வீடு.

விலக்ஷண விக்ரக முக்தனும் = அப்பிராகிருத திவ்விய சரீரமுடையவனும், அதாவது பூதபௌதிகங்களாலாகிட பிரபஞ்சத்தையே சரீரமாக உடையவனும், ஈஸ்வரன் விசித்திர ரூபமாக பரிணமிக்கத்தக்க பிரகிருதியை (அண்ட பகிரண்டமாகிய பிரபஞ்சத்தை) அதிஷ்டித்திருப்பது (நிலைக்களமாகக் கொண்டு நிற்பது) இங்கே குறிப்பிக்கப்பட்டது.

ஈஸ்வரனுக்கு சித்தும் (ஆன்மாவும்) அசித்தும் (ஜடமும்) சரீரம் என்று உபநிஷத்துக்களில் கூறப்பட்டிருக்கின்றது. நமது ஆத்மாவானது நம் சரீரத்தை அதிஷ்டித்து நிற்பதுபோல ஈஸ்வரன் ஆன்மாவையும் சரீரத்தையும் அதிஷ்டித்து நிற்கின்றான். ஆகவே ஈஸ்வரன் ஆத்மாவுக்கு ஆத்மாவாவான்.

ஈஸ்வரரூபம்.—ஈஸ்வரனுக்கு ஐந்து ரூபங்கள் உண்டு. அவை பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்பன.

1. பரம்.—நித்திய விபூதியில் சுத்த சத்துவமயமாய் விளங்கும் திவ்ய மங்கள சொரூபம். பரபிரமம் என்று பிறர் கூறுவது இதுவே. (God the Absolute.)

2. வியூகம்.—சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் நிமித்தம் பிரதிகிரத்த ரூபங்கள். அபரபிரமம் என்று பிறர் கூறுவது இதுவே. (God in Creation, &c.)

3. விபவம்.—இராமகிருஷ்ணாதி அவதார சொரூபம். (God in Incarnation.)

வைஷ்ணவமத உபதேசத்தில் அதி முக்கியமான உபதேசம் அவதார உபதேசம். இதன் உற்பத்தி, விருத்தி, விபரம் இவைகளைப்பற்றி வேறொரு பருவத்தில் பார்த்திருக்கின்றோம். வைஷ்ணவர்களால் மிகுதியாய்க் கொண்டாடப்படும் பகவத்கீதையின் உபதேசப்படி ஈஸ்வரனுடைய அவதாரங்களுக்குக் கணக்கில்லை. அவற்றுள் விசேஷமானவற்றை எண்ணும்பொழுது அவற்றின் தொகை முப்பத்திரண்டு என்றும், பதினெட்டு என்றும், பதினைந்து என்றும், பத்து என்றும் பலவாறு கூறுவர். ஆயினும் சாதாரணமாய் வைஷ்ணவர்களாற் கூறப்படும் தொகை பத்து. அவையாவன:—மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராகாவதாரம், நரசிம்மாவதாரம், வாமனாவதாரம், பரசுராமாவதாரம், ஸ்ரீராமாவதாரம், பலராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், கற்கியவதாரம் என்னும் பத்துமாம். இதன் விபரத்தை ஸ்மிருதி பருவத்துள் முன்னேயே படித்திருக்கின்றோம்.

இந்த அவதாரங்களில் ஒரு விஷயம் நாம் கவனிக்கத் தக்கது. மிகுந்த தாழ்ந்த வர்க்கமாகிய மீனாக முதலில் பிறந்து அப்பால் அதிலும் உயர்ந்த ஆமை, அப்பால் அதிலும் உயர்ந்த பன்றி, அப்பால் மிருகமும் மனுஷனும் கலந்த நரசிங்கம், அப்பால் பூரணத்துவம் பெறாத மனுஷனாகிய வாமனம், அதற்கப்பால் தெய்வாம்சத்தை குறையாகவே பெற்றிருந்த ராமர்கள், கடைசியில் தெய்வத்துவத்தை பரிபூரணமாய்ப் பெற்றிருந்த கிருஷ்ணன், இனிமேலோ உலகத்தில் என்றும் நிலைவரமாக நிற்கக்கூடிய நெறிமுறைகளை இயற்றி தர்ம சம்ஸ்தாபனார்த்தம் செய்யப்போகின்ற கற்கி, ஆக இவ்வாறு மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போகிற ஒருவகை விருத்தியை இங்கு காண்கின்றோம்.

இனி நிகழவிருக்கும் பத்தாம் அவதாரத்தைப் பற்றி பலவித அபிப்பிராய பேதங்கள் உள. அவற்றுள் சிலவற்றைப்பற்றி பிரமஞான சங்கக் கொள்கைகள் சம்பந்தமாய்ப் பார்ப்போம்.

4. *அந்தர்யாமி.*—ஜீவர்களில் பிரவேசித்திருப்பதும் சுபாசிரயமான (அடைக்கல வடிவான) விக்கிரகங்களோடு அவர்களுக்கு தியானிக்கும்படி அவர்கள் இருதயத்தில் வசிப்பதுமான ரூபம். (God in Human Heart.)

5. *அர்ச்சை.*—பூஜை, பலி முதலிய அர்ச்சனாதி விஷயங்களில் மந்திரம் மூலமாக விளங்கும் ரூபம். (God in Worship.)

*முத்தி.*—யாருக்கு முக்தி சித்திக்கும் என்பதற்கு வைஷ்ணவர் கூறுவதாவது:—"பக்த ஜீவர்கள் விஷய வைராக்கியாதிகளால் மோக்ஷாபேக்ஷையுண்டாகி, ஆச்சாரியனால் வேதாந்தார்த்தத்தைக் கேட்டு, மனனஞ்செய்து, வர்ணாஸ்ரமங்களுக் கேற்ப கர்ம ஞானங்களோடுகூடி சம்சாரபந்தம் நீங்கி, இம்மைக்கும் மறுமைக்கும் இடையிலுள்ள விரஜை என்னும் நதியில் மூழ்கி, திவ்விய சரீரமுற்று, நித்திய முக்தர்களோடு ஈஸ்வரனுடைய கல்யாண (=புதுமையான, என்றும் பழமைபடாத)

குணங்களை அனுபவித்துக்கொண்டு, எல்லாவகைப்பட்ட கைங்கரியங்களையும் செய்துகொண்டு பிறவியில்லாத நிர் அதிசயானந்தத்தை அனுபவித்துக்கொண்டிருப்பான்.”

வைஷ்ணவமதப் பிரிவுகள்.—இவர்களுள் இருபிரிவார் உண்டு. இவர்களுக்கு வடகலையார் தென்கலையார் என்று பெயர். இவர்களுள் தென்கலையார் தங்கள் நெற்றியில் எழுதும் திருநாமத்தில் மத்தியகோடு கீழே இழுக்கப் பெறும். வடகலையாருக்கு அவ்விதம் கால் நீண்டிராது, இது புறம்பான அடையாளம். இவ்விருவருக்கும் உபதேச விஷயத்தில் மிகுந்த வேறுபாடும் உள. அவற்றுள் சிலவற்றை இங்கே கூறுவோம்.

1. ஈஸ்வர கடாக்ஷம் யாவரிடத்தும் காரணமின்றி உண்டாம் என்பர் தென்கலையார், வடகலையார் காரணத்தாலேயே உண்டாம் என்பர். ஆகவே வடகலையாருக்குக் கிருபையிலும் கிரியை விசேஷமாயிற்று.

2. மோக்ஷலாபம் ஈஸ்வரனுக்காகவேயன்றி ஜீவனுக்காக அல்ல என்பர் தென்கலையார், வடகலையார் ஜீவனுக்கேயன்றி ஈஸ்வரனுக்கன்று என்பர்.

3. கருமஞான பக்தியோகங்கள் மோக்ஷத்திற்கு உபாயங்கள் என்பர் தென்கலையார். வடகலையார் அவை மோக்ஷத்துக்கு அங்கங்களேயன்றி உபாயங்கள் அல்ல என்பர்.

4. பக்தன் இழிகுலத்தவனாயினும் உயர்குலத்தவனைப்போலவே கௌரவப்படுத்தவேண்டியவன் என்பர் தென்கலையார். வடகலையாரோ வர்ணாஸ்ரம தர்ம விரோதமின்றி வார்த்தைகளால் மாத்திரம் கௌரவப்படுத்த வேண்டும் என்பர்.

5. தென்கலையார் ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் பிரணவ சகிதமாய் மந்திரோபதேசம் செய்வார். வடகலையார் பிரணவ சகிதம் உபதேசியார்.

உபதேச விஷயத்திலும் மதானுஷ்டான விஷயங்களிலும் இவ்விருபிரிவாருக்கும் வேறு பல வித்தியாசங்களும் உண்டு. இவ்விருபிரிவாருக்கும் எக்காலத்தும் ஒற்றுமை

இல்லை. ஸ்ரீரங்கம் முதலிய வைஷ்ணவ ஸ்தலங்களில் இவ்விருதிறத்தாருடைய சண்டையின் பலனாக ஆராதனைகள் நிறுத்தப்பட்டு ஆலயங்களும் சாத்தப்பட வேண்டியிருந்தன.

## வைஷ்ணவ வேதாகம நூல்கள்.

வைஷ்ணவ வேதாகம நூல்களில் சில சமஸ்கிருதத்தில் இருக்கின்றன; சில தமிழில் இருக்கின்றன.

**சமஸ்கிருதத்தில் உள்ளன.**

1 நான்கு வேதங்கள்.

2. பிரம்ப சூத்திரம். ராமானுஜாச்சாரியார் பாஷியம்.

3. பகவத்கீதை. ராமானுஜ வியாக்கியானம்.

4. வைஷ்ணவ புராண இதிகாச நூல்கள், பாகவதம் முதலியன.

இவற்றின் விபரங்களை நாம் முன்னேயே படித்திருக்கின்றோமாகையால் அதைத் திருப்பிக் கூறாது விடுத்தோம்.

**தமிழில் உள்ளன.**

5. தென்னிந்தியாவிலுள்ள தமிழ் வைஷ்ணவர்களுக்கு வேதமாகவுள்ள நூல் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் எனப் பெயர்பெறும். இது செந்தமிழ் பாசுரங்களால் ஆக்கப்பட்ட சிறிதும் பெரிதுமான பிரபந்தங்களின் திரட்டு. இதை இயற்றியவர் தமிழ் நாட்டில், ஏழாம் நூற்றாண்டுமுத லிருந்தவர். வெவ்வேறு ஜாதியினர். இவர்களுக்கு ஆழ்வார் என்று பெயர். இதற்கு பகவத்பக்தியில் ஆழ்ந்தவர்கள் என்று பொருள். ஆழ்வார்கள் பன்னிருவர். இந்தப் பன்னிரு ஆழ்வார்களுடைய செல்வாக்கு தமிழ் வைஷ்ணவர்கள்மேல் மிகுதியா யிருக்கின்றபடியால், ஆழ்வார்கள் சரித்திரத்தை அறிவது அவசியமே.

1. பெரியாழ்வார்.—இவர் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிராமண குலத்தில் பிறந்து பாண்டியராஜனால் உபசரிக்கப்பட்டவர். இவர் செய்த பிரபந்தங்கள் இரண்டு. திருப்பல்

லாண்டு என்ற ஒரு சிறு பிரபந்தமும், பெரியாழ்வார் திருமொழி என்னும் பெரிய பிரபந்தமுமாம். பெரியாழ்வார் திருமொழியில் கிருஷ்ணனுடைய திரு அவதார முதலாகப் பலவிஷயங்கள், விசேஷமாக கிருஷ்ணனின் குழந்தை பருவத்திற்குரிய செயல்கள் அதிகமாய் பாராட்டப்படுகின்றன.

### கண்ணனை நீராட அழைத்தல்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

பிலகரி ராகம்—ஜம்பை தாளம்.

வெண்ணெ யளைந்த குணுங்கும் விளையாடு புழுதியுங் கொண்டு
திண்ணென இவ்விரா உன்னைத் தேய்த்துக் கிடக்கநான் ஒட்டேன்:
எண்ணெய் புளிப்பழம் கொண்டு இங்கெத்தனை போது மிருந்தேன்
நண்ண லரிய பிரானே நாரணா நீராட வாராய்.

கறந்தநற் பாலும் தயிரும் கடைந்துறி மேல்வைத்த வெண்ணெய்
பிறந்தது வேமுத லாகப் பெற்றறி யேன்எம்பி ரானே!
சிறந்தநற் றாய்அலர் தூற்றும் என்பதனால் பிறர் முன்னே
மறந்தும் உரையாட மாட்டேன் மஞ்சன நீராட வாராய்.

2. ஆண்டாள்.—இவருக்கு சூடிக்கொத்த நாச்சியார் என்றும் பெயர். பெரிய ஆழ்வாரின் புத்திரி. இவள் திருவரங்கத்திலுள்ள பெருமாளையே விவாகம் செய்யக் கருதி அவ்வாறே செய்துமுடித்தவள். ஆண்டாளியற்றிய நூல்கள் இரண்டு. (1) திருப்பாவை. (2) நாச்சியார் திருமொழி.

நாச்சியார் திருமொழி என்னும் இப்பிரபந்தம் முழுதும் அகத்தமிழ் சார்பாய் பாடப்பட்டது. இது மிகுதியும் தனக்கு பெருமாள்மீது இருந்த அளவில்லாத காதலை பலவாற்றால் வெளியிடுவது.

### கன்னியர் கண்ணனைக் கவர்ந்த சேலைகளை இரத்தல்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

செஞ்சுருட்டி ராகம்—அட தாளம்.

கோழி அழைப்பதன் முன்னம் குடைந்துநீ ராடுவான் போந்தோம்
ஆழியஞ் செல்வன் எழுந்தான் அரவணைமேற் பள்ளி கொண்டாய்
ஏழைமை யாற்றவும் பட்டவும் இனியென்றும் பொய்கைக்கு வாரோம்
தோழியும் நானும் தொழுதோம் துகிலைப் பணித் தருளாயே.

3. குலசேகராழ்வார்.—இவர் சேரநாட்டில் கோழிக்கூடு என்னும் ராஜதானியிலரசாண்ட அரசனது புத்திரன். தனது பராக்ரமத்தால் சோழபாண்டிய நாடுகளையும் ஜெயித்து தமிழ் நாட்டுக்குத் தலைமை பூண்டு, கொல்லிக் காவலன், கூடல்நாயகன், கோழிக்கோன், குலசேகரன் என்னும்படி பல விருதுகளைப் பெற்றவர்.

ராமாயண காலக்ஷேபத்தில் மிக்க பிரீதியுடையவர். இவர் இயற்றிய நூல்கள் முகுந்த மாலை என்னும் வடநூலும், பெருமாள் திருமொழி என்னும் தமிழ்நூலுமாம். இப்பெருமாள் திருமொழி நூற்றுப்பத்து பாடல்களால் முடிந்த ஓர் பிரபந்தம். இப்பிரபந்தம் முழுவதும் ராமாயண சாரமானது.

ஸ்ரீ ராமாயண கதைச் சுருக்கம்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

*கல்யாணி ராகம்—ஆதி தாளம்.*

அங்கண்நெடு மதில்புடைசூழ் அயோத்தி யென்னும்
அணிநகரத் துலகனைத்தும் விளக்குஞ் ஜோதி
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உயக்கொண்ட வீரன் தன்னை
செங்கண்நெடுங் கருமுகிலை இராமன் தன்னை
தில்லைநகர் திருச்சித்ர கூடந் தன்னுள்
எங்கள்தனி முதல்வனையெம் பெருமான் தன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே.

4. திருமழிசை ஆழ்வார்.—இவருக்கு பக்திசாகரர் என்றும் பெயர். இவர் இயற்றிய நூல் திருசந்தவிருத்தம் என்பது. இது 120 ஆசிரிய விருத்தங்களால் ஆக்கப்பட்ட ஓர் பிரபந்தம்.

கண்ணனே பரத்துவம் என்பது.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

*கங்காபரண ராகம்—ரூபக தாளம்.*

ஊனில் மேய ஆவி நீ உறக்கமோ டுணர்ச்சி நீ
ஆனில் மேய ஐந்தும் நீ அவற்றுள் நின்ற தூய்மை நீ
வானி னோடு மண்ணும் நீ வளங்க டற்ப யனு நீ
யானு நீய தன்றி யெம்பி ரானு நீஇ ராமனே.

இதுவரை நாம் பார்த்த இந்த ஏழு ஆழ்வார்களால் பாடப்பெற்ற பிரபந்தங்களின் செய்யுள்தொகை ஆயிரம். ஆதலால் இதற்கு முதல் ஆயிரம் என்று பெயர். இவை தனிநூலாகவும் அச்சிட்டு வழங்கப்படுகின்றது.

5. தொண்டர் அடிப்பொடியாழ்வார்.—இவரின் இயற்கை பெயர் விப்பிரநாராயணர். பகவத் பக்தியில் மிகவும் ஆழ்ந்திருந்த இவர் தாசியின் மயக்கில் சிக்கி நாட்கழித்து வரும்போது ஸ்ரீரங்கநாயகியின் முயற்சியால் மீட்டு அடிமைகொள்ளப்பட்டார். தாம் செய்த பாவத்திற்கு பிராயசித்தமாக ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸ்ரீபாததீர்த்தத்தை உட்கொண்டு ஸ்ரீபாததூளியாய் அவர்களுக்கு கீழ்படிந்து அடிமைசெய்து, தொண்டர் அடிப்பொடி என்று பெயர் பெற்றார். இவர் இயற்றிய நூல்கள்—திருமாலை—திருப்பள்ளி எழுச்சி என இரண்டுமாம்.

திருமாலை யென்பது.—65 விருத்தங்களால் தொடுக்கப்பட்ட ஓர் பிரபந்தம். திருவரங்கத்து பெருமாள் விஷயமானது.

திருப்பள்ளி எழுச்சி என்பது.—பத்துப் பாடல்களால் ஆகிய பிரபந்தம். இது சயன கிரகத்தில் நித்திரை செய்துகொண்டிருக்கிற தெய்வத்தை எழுப்புதல்.

ஸ்ரீ ரங்கநாதனைத் துயிலுணர்த்துதல்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

பூபாள ராகம்—அட தானம்.

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
 கனையிருள் அகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
 வானவர் அரசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
 இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
 அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே.

6. திருப்பாணாழ்வார்.—இவர் திருச்சிராப்பள்ளியின் ஓர் பாகமாகிய உறையூரில் பஞ்சமஜாதியில் பாணர்குலத்

தில் பிறந்தவர். பாணர் என்றால் பாலை நிலமாக்களாகிய எயினருள் ஓர் பிரிவார். தற்கால பறையரைச் சேர்ந்தவர். யாழ் முதலிய வாத்தியங்களை வாசித்து, பாடலையே தமது குலத்துக்கு தொழிலாக உடைய குலம். தமிழரசர் யாவராலும் பெரிதும் கொண்டாடப்பெற்ற குலம். இந்த பாணர் குலத்தில் பிறந்த ஆழ்வார் ஸ்ரீரங்கநாதனுக்கு பாடல் திருத்தொண்டு செய்ய உத்தேசித்து, புறப்பட்டுத் தாம் தாழ்ந்த குலத்தில் வந்தவராதலால் உபய காவேரி மத்தியிலுள்ள ஸ்ரீரங்கத் திவ்ய க்ஷேத்திரத்தில் அடியிடுதற்கும் துணியாமல், காவேரிக்கரையில் நின்று பெருமாளை பாடிக்கொண்டிருக்க, பெருமாளின் கட்டளைப்படி ஒரு வைஷ்ணவ முனிவர் அவரை தமது தோளில் சுமந்து ஸ்வாமி சந்நிதானத்திற்கு கொண்டுவந்தனர். ஆழ்வார் திருமுன்பு நின்று அவரைப் பாடிய அளவில் ஸ்ரீரங்கநாதனது திருவடிகளில் 'காய்ந்த இரும்பு உண்ட நீர்போல்' ஆழ்ந்து மறைந்தார். இவர் பாடிய பிரபந்தம் அமல ஆதிப்பிரான் என்ற பத்துப் பாடல்கள் கொண்ட ஓர் சிறு பிரபந்தம். அழகிய மணவாளனது திருமேனி அழகில் ஜீவான்மா பாதாதி கேசாந்தமாக ஈடுபடுதலை இப்பிரபந்தத்துள் வெகு அழகாய்ப் பாடுகின்றார்.

### அழகிய மணவாளனது திருமேனி அழகில் பாதாதி கேசாந்தமாக ஈடுபடுதல்.

ஆசிரியத்துறை.

*யமுனாகல்யாணி ராகம்—திரிபுடை தாளம்.*

அமலன் ஆதிப்பிரான் அடியார்க் கென்னை யாட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரையார் பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதில் அரங்கத்தம்மான் திருக்
கமல பாதம்வந்து என்கண்ணி னுள்ளன வொக்கின்றதே.

7. மதுரகவியாழ்வார்.—இவர் பாண்டியநாட்டில் ஆழ்வார் திருநகரி என்னும் திருக்கூருக்குச் சமீபத்திலுள்ள திருக்கோளூர் என்ற ஸ்தலத்திலே அவதரித்தார். சிறந்த பாடகராகையால் மதுரகவி என்ற பெயர் பெற்றவர். சடகோபர் என்னும் ஆழ்வாருக்கு

சிஷன். தமது குருபக்தி காரணமாக மதுரைத் தமிழ் சங்கத்தோடு (4–ம் சங்கம்) வாதித்து ஜெயம் பெற்ற வர். இவர் இயற்றியது ஒரே ஒரு பிரபந்தம்.

நம்மாழ்வார் விஷயம்.

கலிவிருத்தம்.

ஆரபி ராகம்—ஆதிதாளம்.

நம்பி னேன்பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பு னேன்மட வாரையும் முன்னெலாம்
செம்பொன்மா டத்தி ருக்குரு கூர்நம்பிக்கு
அன்ப னாய்அடி யேன்சதிர்த் தேன்இன்றே

8. திருமங்கையாழ்வார்.—திருமங்கை என்பது ஒரு நாடு. இந்நாட்டில் பிறந்தமையால் இவருக்கு இப்பெயர் உண்டாயிற்று. இவர் இயற்பெயர் நீலன். இவர் வைஷ்ணவ ஆழ்வார்களில் விசேஷித்தவர். இவர் சோழ நாட்டு கள்ளர் ஜாதியார். இவரிருந்தது அபயராஜன் காலத்தில். இவர் சோழராஜனின் சேனாபதியாகவிருந்து, திருமங்கை என்னும் குறுநாட்டிற்கு அரசனானார். இவர் குமுதவல்லி என்னும் அழகிய பெண்ணை மனைவியாகக் கொள்ளும்பொருட்டு சங்குசக்கிர முத்திரைகளைப் பெற்று நித்தமும் 1008 பாகவதர்களை போஷித்துவந்தார். இவர் தமக்கு முட்டு வந்தகாலத்தில் தம் ஜாதிக் கேற்ப வழிப்பறிசெய்து தமது பொருத்தனைகளை நிறைவேற்றுவார். திருவரங்கத்து விமானம், மண்டபம், கோபுரம், பிராகாரம் முதலிய வைஷ்ணவ கைங்கரியங்களை செய்தல்பொருட்டு இவர் நாகபட்டணம் சென்று அங்கிருந்த பொன்னினாலாகிய புத்த விக்கிரகத்தை திருடிக்கொணர்ந்தார்.

இவர் ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நாலுவகை கவிகளையும் பாடும் பாண்டித்தியமுடையவர். இவர் பாடல்கள் மனத்தை உருக்கக்கூடியது. இவர் செய்த நூல்கள் ஆறு. இதில் பெரிய திருமொழி என்பதும் திரு எழுகூற்றிருக்கை என்னப்படும் ரதபந்தம் ஆகிய சித்திரக்கவியும் விசேஷித்தவை. இவர் செய்த ஆறு நூல்களும் நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் விசேஷபாகமாகக் கொண்டாடப்படும்.

பெரிய திருமொழி ஆயிரத்து எண்பத்துநாலு பாசுரங்களை உடையது, பக்திரஸம் பெருக்குந் தன்மையது. இப்பாசுரங்களில் பாப உணர்ச்சியும் இப்பாவ நிலைமையிலிருந்து மீட்கப்படுவதற்கு பகவத்கடாக்ஷம் அவசியம் என்பதும் வெகு தெளிவாகின்றது.

9-ம் திருமொழி—தாயே தந்தை.

திருவேங்கடம். (2)

கலிநிலைத்துறை.

முகாரி ராகம்—அடதாளம்.

தாயே தந்தை யென்றும் தார மேகிளை மக்கள் என்றும்
நோயே பட்டொழிந்தேன் நுன்னைக் காண்பதோர் ஆசையினால்
வேயேய் பூம்பொழில்சூழ் விரையார் திருவேங் கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கி யாளென்னைக் கொண்டருளே.

மானேய் கண்மடவார் மயக்கிற் பட்டு மாநிலத்து
நானே நானாவித நரகம்புகும் பாவஞ் செய்தேன்
தேனேய் பூம்பொழில்சூழ் திருவேங்கட மாமலை என்
ஆனாய் வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண் டருளே.

குலந்தான் எத்தனையும் பிறந்தே இறந்தெய்த் தொழிந்தேன்
நலந்தான் ஒன்றும் இல்லேன் நல்லதோரறஞ் செய்துமில்லேன்
நிலந்தோய் நீள்முகில்சேர் நெறியார் திருவேங் கடவா
அலந்தேன் வந்தடைந்தேன் அடியேனை ஆட்கொண் டருளே.

9. பொய்கையாழ்வார்.—இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர். இவர்பாடிய பிரபந்தம் இயற்பா—முதல் திருவந்தாதி.

ஸகானா ராகம்—திரிபுடை தாளம்.

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று.

10. பூதத்தாழ்வார்.—இவர் தொண்டை நாட்டிலே மஹாபலிபுரத்திலே பிறந்தவர். இவர் பாடிய பிரபந்தம் இயற்பா—இரண்டாம் திருவந்தாதி.

பைரவி ராகம்—திரிபுடை தாளம்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகுஞ் சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

11. பேயாழ்வார்.—இவர் திருமயிலையில் (மைலாப்பூரில்) பிறந்தவர். இவர் செய்த நூல் மூன்றும் இயற்பா—திருவந்தாதி.

மோஹன ராகம்—திரிபுடை தாளம்.

பாற்கடலும் வேங்கடமும் பாம்பும் பனிவிசும்பும்
நூற்கடலும் நுண்ணூல தாமரைமேல்—பாற்பட்
டிருந்தார் மனமும் இடமாகக் கொண்டான்
குருந்தொசித்த கோபால கன்.

மேற்கண்ட மூவருக்கும் முதல் ஆழ்வார் என்று பெயர். இவர்கள் இயற்றிய மூன்று திருவந்தாதிகளும் இயற்பா என்னப்படும்.

12. நம்மாழ்வார்.—இவர் வேளாளகுலத்தில் பிறந்தவர். பிறந்தபொழுது அழுதல் பாலுண்ணல் முதலிய லோககாரியங்கள் ஒன்றுமில்லாவிட்டாலும் வாட்டமுறாமல் பரிபூரணமாயிருந்தபடியால் மாறன் எனப் பெயரிடப்பெற்று திருக்குருகூரிலுள்ள புளியமரத்தடியில் வளர்ந்தார். இவருக்கு சடகோபர் என்றும், நம்மாழ்வார் என்றும் வேறு பெயர்களுமுண்டு. இவர் தமது பதினாறும் வயதில் பரிபூரண ஞானமுடையவராய் மதுரகவியாழ்வாருக்கு (7-ம் ஆழ்வார்) ஞானோபதேசம் செய்தார். பன்னிரு ஆழ்வார்களுக்கும் இவரே தலைமை என்பது வைஷ்ணவர் கோட்பாடு. இவரியற்றிய நூல்கள் நாலு. இவை நாலும் வேதசாஸ்திரம் என்பார்.

ருக், யஜுர், அதர்வம் என்ற மூன்று வேதங்களின் சாராம்சத்தை (1) திருவிருத்தம் (2) திருவாசிரியம் (3) பெரிய திருவந்தாதி என்னும் மூன்று பிரபந்தங்களின் மூலமாக வெளியிட்டதுபோல், அந்த வேதங்களில் சிறந்த சாமவேதத்தின் தத்துவப்பொருளை திருவாய்மொழி என்னும் நூலால் அருளிச்செய்தார் நம்மாழ்வார்.

வேதங்களினுடைய தத்வார்த்தத்தை தமிழில் அருளிச்செய்ததனாலே நம்மாழ்வார் என்னும் இவரை வைணவர் மிகப் பெரிதும் கொண்டாடுவர். இவர் பாண்

டிய நாட்டிலே தாமிரபரணி நதிக்கரையிலே திருக்குருகூர் என்ற ஸ்தலத்திலே பிறந்தவர்.

இவர் இயற்றிய திருவாய்மொழி ஆயிரத்து நூற்றிரண்டு பாசுரங்கள் கொண்டது.

### 4—ஆம் திருவாய்மொழி.

ஸ்ரீ கிருஷ்ணனது சர்வாத்ம பாவத்தைப் பேசி அடிமை செய்தல்.

யமுனா கல்யாணி ராகம்—ரூபக தாளம்.

புகழுநல் லொருவன் என்கோ! பொருவில்சீர் பூமி என்கோ!
திகழுந்தண் பரவை என்கோ! தீஎன்கோ! வாயு என்கோ!
நிகழும் ஆகாசம் என்கோ! நீள்சுடர் இரண்டும் என்கோ!
இகழ்விலிவ் வனைத்தும் என்கோ! கண்ணனைக்கூவு மாறே.

பங்கயக் கண்ணன் என்கோ! பவளச்செவ்வாயன் என்கோ!
அங்கதிர் அடியன் என்கோ! அஞ்சன வண்ணன் என்கோ!
செங்கதிர் முடியன் என்கோ! திருமறு மார்பன் என்கோ!
சங்குசக் கரத்தன் என்கோ! ஜாதிமா ணிக்கத் தையே.

[என்கோ! = என்று சொல்லுவேனோ!]

இவ்வாறாக இப்பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களின் தொகுதியே நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்று பெயர் பெறும். இதுவே வைஷ்ணவர்களுக்கு தமிழில் வேதமாக உள்ளது. சமஸ்கிருதத்திலுள்ள நாலு வேதங்களின் ஸாரமானது இந்த நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் அடங்கியிருக்கின்றதென வைஷ்ணவர் கூறுவர்.

### வைஷ்ணவமத அநுஷ்டானங்கள்.

வைஷ்ணவர்கள் தங்கள் மதசம்பந்தமாய் அநுசரிக்கவேண்டிய விஷயங்கள் பெரும்பாலும் சைவ மதத்தினருக்கு விதிக்கப்பட்டிருக்கின்றவைகளைப் போன்றவையே. ஆயினும் சில விஷயங்கள் வைஷ்ணவர்களுக்கு மட்டுமே உரியவையாகையால் அவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுவோம்.

1. திருநாமம் எழுதுதல்.—சைவர்கள் தங்கள் நெற்றியில் திருநீற்றை அணிந்துகொள்வதைப்போல, வைஷ்ணவர்கள் மகாவிஷ்ணுவின் திருநாமத்தைத் தங்கள் நெற்றி

யில் எழுதிக்கொள்ளவேண்டும். வடகலை வைஷ்ணவர் நாமம் எழுதும்பொழுது நடுக்கோட்டுக்குக் கால் இழுக்காமல் எழுதுவார்; தென்கலையார் நடுக்கோட்டுக்குக் கால் இழுத்து எழுதுவார்.

2. அஷ்டாக்ஷர ஜெபம்.—சைவர்களுக்கு பஞ்சாக்ஷர ஜெபம் எப்படியோ அப்படியே வைஷ்ணவர்கள் விஷயத்தில் அஷ்டாக்ஷர ஜெபம் இருக்கின்றது. அஷ்டாக்ஷர ஜெபம் என்பதும் எட்டெழுத்து மந்திரம் என்பதும் ஒன்றே. இது நாராயணாயநம: என்பது. இதற்கு நாராயணனுக்கு நமஸ்காரம் என்று பொருள். இதைப் பெரிய திருமந்திரம் என்றும் கூறுவர்.

### பெரிய திருமந்திரத்தின் மகிமை

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா வெனும் நாமம்.

(திருமங்கை யாழ்வார்)

3. சங்கு சக்கரம் பொறித்தல். வைஷ்ணவ பக்தர்கள் மஹாவிஷ்ணுவுக்கு அடையாளமாகிய சங்கு சக்கர வடிவங்களை சூட்டிருப்பினால் குருமுகமாகத் தங்கள் புஜத்தில் பொறித்துக் கொள்ளுவார்கள். இது தாங்கள் பெருமாளுக்கு அடிமை என்பதற்கு அறிகுறியாகும்.

4. சகஸ்திர நாம ஸ்மரணை.—பெருமாளின் ஆயிரம் திருநாமங்களைத் தியானித்துக்கொண்டிருத்தல் விசேஷ பலனைத் தரும் என்று வைஷ்ணவ நூல்கள் கூறும். "நாமம் ஆயிரம் ஏத்தநின்ற நாராயணா" என்றார் நாச்சியாரும்.

5. க்ஷேத்திர தரிசனம்—வைஷ்ணவர்களுக்கு நூற்றெட்டுத் திருப்பதிகள் உள. இவை யாவும் பன்னிரு ஆழ்வார்களில் சிலராலும் பலராலும் தரிசிக்கப்பெற்று பாடலும்

பெற்றவை. இவற்றைத் தரிசித்தல் பெரிய புண்ணியம் என்று கூறப்பட்டிருக்கின்றது. இந்த நூற்றெட்டுத் திருப்பதிகளின் விபரமாவது:

ஈரிருப தாஞ்சோழம் ஈரொன்ப தாம்பாண்டி
ஓர்பதின்மூன் றும்மலைநாடு ஓரிரண்டாம்—சீர்நடுநாடு
ஆறோடீ ரெட்டுத்தொண்டை அவ்வடநாடு ஆறிரண்டு
கூறுதிரு நாடு ஒன்றாக் கொள்.

இந்த நூற்றெட்டுத் திருப்பதிகளுள் விசேஷமான சிலவற்றைமட்டும் இங்கு கூறுவோம்.

திருவரங்கம்.—ஸ்ரீரங்கம் பெரிய கோயில் என்றும் பூலோக வைகுண்டம் என்றும் சிறப்பித்துச் சொல்லப்படுவதுவும் இதுவே. "கோயில் (ஸ்ரீரங்கம்) திருமலை (திருப்பதி) பெருமாள் கோயில்" (கஞ்சிபுரம்) என்று பிரதானமாக எடுத்துச் சொல்லப்படுகிற மூன்று ஸ்தலங்களில் இதுவே விசேஷித்தது. இந்தியாவிலுள்ள ஆலயங்களிலெல்லாம் இதுவே பெரியதென்று கூறுவர். ஸ்வாமி ஸ்ரீரங்கநாதன், தேவி ஸ்ரீரங்க நாச்சியார். நதி—காவேரி, வடிவம் புஜங்க சயநம். திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கே மூன்று மைலில் உள்ளது.

திருமாலிருஞ்சோலை.—அழகர்மலை யென்றும் சோலைமலை என்றும் வேறு பெயர்கள் உள. பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டனுள் விசேஷித்தது. ஸ்வாமி அழகர், தேவி—சுந்தரவல்லி நாச்சியார். நதி—சிலம்பாறு, வடிவம்—நின்ற திருக்கோலம். இது மதுரைக்கு வடகிழக்கே பன்னிரண்டு மைலில் உள்ளது.

திருப்புல்லாணி.—ஸ்வாமி—கல்யாண ஜகந்நாதன், தேவி—கல்யாணவல்லி, வடிவம்—வீற்றிருந்த திருக்கோலம். ராமநாதபுரத்துக்குத் தெற்கே ஆறு மைலில் உள்ளது.

திருமோகூர்.—ஸ்வாமி—காளமேகப் பெருமாள், தேவி—மேகவல்லி நாச்சியார், வடிவம்—நின்ற திருக்கோலம். யானை மலைக்குத் தெற்கே, மதுரைக்கு வடகிழக்கே ஏழு மைலில் உள்ளது.

திருக்கூடல், (மதுரை).—ஸ்வாமி—கூடலழகர், தேவி—மரகதவல்லி நாச்சியார். மதுரைவல்லி, வடிவம்—வீற்றிருந்த திருக்கோலம், மதுரை மேலவாசலில் உள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர்—ஸ்வாமி ரங்கமன்னர், தேவி—கோதை நாச்சியார், வடிவம்—நின்ற திருக்கோலம், திருநெல்வேலி ஜில்லாவில் சாத்தூருக்கு மேற்கே 22 மைலில் உள்ளது.

திருவனந்தபுரம்.—ஸ்வாமி—அனந்த பத்பநாபன், தேவி—ஸ்ரீ ஹரி லக்ஷ்மி, வடிவம்—புஜங்க சயநம், இது திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ளது. மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றனுள் இது விசேஷித்தது.

திருக்கச்சி, (காஞ்சிபுரம்).—இது தொண்டைநாட்டுத் திருப்திகள் இருபத்திரண்டனுள் விசேஷமானது. பெருமாள் கோயில் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதும் இதுவே, ஸ்வாமி—வரதராஜபெருமாள். தேவி—பெருந் தேவித் தாயார். நதி—வேகவதி, வடிவம்—நின்ற திருக்கோலம். இது காஞ்சிபுரத்துக்குத் தெற்கே மூன்று மைலில் உள்ளது.

திருவேங்கடம், (திருமலை, திருப்பதி).—இது வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டனுள் தலைமையாயது, ஸ்வாமி—திருவேங்கடத்தான், தேவி—அலர்மேல் மங்கைத்தாயார். வடிவம்—நின்ற திருக்கோலம்.

பரமபதம், (ஸ்ரீவைகுண்டம்).—இது திருநாட்டிலுள்ளது. ஸ்வாமி—பரமபதநாதன், தேவி—பெரிய பிராட்டியார். நதி—விரஜாநதி, வடிவம் வீற்றிருந்த திருக்கோலம். மஹாவிஷ்ணுவினுடைய ஐவகை நிலைகளில் பரத்வம் விளங்கும் பதி இதுவே.

பன்னிரு ஆழ்வார்களால் மங்களசாஸனம் பண்ணப் பெற்ற இந்த நூற்றெட்டுத் திருப்பதிகள் தவிர, முனிவர் முதலியோரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு கீர்த்தி யெய்திய புராதன ஸ்தலங்களும், ஆழ்வார்கள் அவதரித்த ஸ்தலங்களும் வைஷ்ணவர்களால் பெரிதும் பாராட்டப்படும்.

[குறிப்பு.] [வைஷ்ணவ மதத்தை விளக்கும்பொழுது அம்மதப் பெரியார்கள் உபயோகிக்கும் பதத்தொடர்களையே இங்கு உபயோகித்திருக்கிறது. இது மாணவர்களுக்குச் சிறிது கஷ்டமாயினும், இவற்றைச் சிரமப்பட்டுக் கற்றுக்கொள்வது பெரிதும் பலன் தரும்.

## III. ஸ்மார்த்தம். (அத்வைதம்)

ஸ்மார்த்தம் எனும் பதம் ஸ்மிர்தி என்னும் பதத்தின் தத்திதாந்தம். இம்மதஸ்தாபகர் சங்கராச்சாரியார்.

இந்தியாவில் சர்வ தத்துவசாஸ்திரிகளிலும் சங்கராச்சாரியரே அதிகச் சிறந்தவர். இந்தியாவிலுள்ள சாஸ்திர விற்பனர்களில் நூற்றுக்கு எண்பது பெயர் இவரையே தங்கள் பிரதம குருவாக கொண்டாடுகிறார்கள். இவர் கி. பி. 758—ல் மலையாள தேசத்தில் பிறந்தவர். முப்பத்திரண்டு வயதுக்குள் அவர் இவ்வளவு மகத்தான வேலை செய்திருப்பது மிகவும் கொண்டாடத்தக்க விஷயமே.

இவர் தமது இளம்பிராயத்திலேயே இவ்வுலக சந்தோஷங்களைத் துறந்து சந்நியாசம் புகவேண்டுமென்ற பிரீதியையுடையவர். ஆயினும் இவ்வாறு செய்வதற்கு அவருடைய தாயார் சம்மதிக்கவேயில்லை. ஒருநாள் தாயாரும் மகனுமாக ஆற்றில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தபோது ஒரு முதலை சங்கரருடைய காலை கௌவிப் பிடித்தது. உடனே அவர் அலறி தன் தாயாரைக் கூப்பிட்டு தானொரு சந்நியாசி என்கிற எண்ணத்துடன் சமாதானமாய் மரணமடைய தன் தாயாரிடம் உத்தரவு கேட்டார். மரணத்தறுவாயிலிருக்கிற தன் புத்திரன் கேட்கிற வேண்டுகோளை மறுக்க தாயார் மனமற்றவளாய் 'ஆம் நீ சந்நியாசிதான்' என்ருள். உடனே முதலை அவரை விட்டுவிட்டது. சங்கரரும் அந்நாள் முதல் சந்நியாசி ஆனுர். அப்பால் சங்கரர் நர்பதை நதி தீரத்திற்குச் சென்று கோவிந்தர் என்னும் ஒரு மகா சந்நியாசியை அடுத்து அவரிடம் உபதேசம் பெற்ருர். அப்பால் காசிக்குச்சென்று அங்கே சாஸ்திரவிற்பன்னராய் விளங்கிஞர். இவரிடம் சாஸ்திர ஆராய்ச்சி செய்யும்படியாக இந்தியாவின் நாலாபக்கங்களிலிருந்தும் மாணுக்கர் திரண்டுவந்தனர். இவர் காசியிலிருக்கும்போது இயற்றிய நூல்கள் சில உபநிஷதங்களுக்கு வியாக்கியானமும், பகவத்கீதைக்கு வியாக்கியானமும், வேதாந்த சாஸ்திரத்துக்கு வியாக்கியானமுமாகும். தமது இருபத்தைந்தாம் வயதுக்குள் சங்கரர் தமது அதிக விசேஷமான புஸ்தகங்களை இயற்றி முடித்தவராய், காசியைவிட்டு புறப்பட்டு இந்தியாவில் ஓர் சுற்றுப்பிரயாணம் செய்தார். அக்காலத்தில் இவர் பௌத்தர், வைதீகர், புறச்சமயிகள் இவர்களுடன் வாதம்செய்து அவர்களை வென்ருர். இவ்வாறு அவரோடு வாதம்செய்தவருள் மந்தனர் என்பார் ஒருவர்.

இம்மந்தனர் ஓர் வைதீகர். வேத ஆசாரம், வேத ஆராதனை முதலியவற்றைத் தவிர பிற்காலத்திலுண்டான வேறெதையும் ஒப்புக்கொள்ளாதவர். இவரோடு சங்கரர் வாதம் செய்யும்போது இவர்களிருவருக்கும் நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டது மந்தனருடைய மனை

வியும் மாக பண்டிதையுமான பாரதியம்மாள். ஒப்பந்தம் யாதெனில்: சங்கரர் தோற்றுப்போனால் அவர் கலியாணம்செய்து இல்லறம்புகவேண்டும், மந்தனர் தோல்வியடைந்தால் அவர் சந்நியாசம் புகவேண்டியது என்பதே. அநேகநாள் வாதம் நடந்தபிறகு மந்தனர் தோல்வியடைந்தார். அக்காலே பாரதி எழுந்து சங்கரர் மந்தனரின் ஒரு பாதியைமட்டும் தோற்கடித்ததாகவும், மற்ற பாதியாகிய தன்னைத் தோற்கடித்தால்மட்டும் அச்செயம் பூரணமாகுமென்றும் கூறினார். அவ்வாறே இருவருக்கும் 12 நாள் விவாதம் நடந்தது. சகல சாஸ்திரங்களிலும் சங்கரர் மேல்பட்டவர் என்று கண்ட பாரதி அவரைக் காதல் விஷய சார்பாகச் சில கேள்விகள் கேட்டாள். இவர் சந்நியாசியாதலின் இந்த சாஸ்திரத்தைப்பற்றி அனுபவ அறிவில்லாமல் ஒருமாதத் தவணைகேட்டு, நர்பதை ஆற்றுக்குப்போய், தம் சரீரத்தை ஒரு காட்டுமரத்தில் வைத்து, தம் சீஷரை காவல் வைத்துவிட்டு, தம் அற்புத சக்தியால் அன்றுதான் இறந்து சுடுகாட்டிற்கு கொண்டுபோகப்பட்ட அரசனின் சரீரத்தில் புகுந்தார். உடனே அரசன் எழுந்தான். உடனே மந்திரி பிரதானிகள் அகமகிழ்ந்து அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். மகாராணியோடு கூடிவாழ்ந்த சங்கரர் இப்புதிய சாஸ்திரத்திலும் அனுபவமடைந்து வந்தாலும், ஒரு மாதத்தவணை கடந்துபோகிறதை மறந்துவிட்டார். அவரின் சீஷர் அவரைத்தேடி அப்பட்டணத்திற்கு வந்து அவரியற்றிய சில உபநிஷத கவிகளைப்பாட, அதைக் கேட்ட மாத்திரத்தில் சங்கரர் திடுக்கிட்டு இப்புதிய சரீரத்தை விட்டு பாரதியினிடத்திற்குச் சென்று, அவளை வாதில் இலேசாக வென்றார்.

உடனே மந்தனரும் பாரதியும் அவருக்குச் சீஷரானார்கள். இவருடைய கல்வி அறிவு ஒழுக்கங்களைக் கண்டவர்கள் இவர்மேல் மிகுந்த பயபக்தி யுடையவர்களாய் இவரை சிவனுடைய அவதாரமாகக் கொண்டாடினார்கள். தமது மதத்தை பிரஸ்தாபம் பண்ணும் பொருட்டு ஆங்காங்கு சில மடங்களை ஸ்தாபித்தார்.

அவற்றில் சில இந்நாள்வரை நிலைபெற்றிருக்கின்றன. இம்மாடாதிபதிகளுக்குசங்கராச்சாரியார் என்றும், ஜகத் குரு என்றும், லோககுருவென்றும் பெயர். மைசூரி லுள்ள சிரிங்கேரியில் உள்ள மடம் விசேஷித்தது.

சங்கரர் உபதேசம்.

சங்கராச்சாரியாரின் உபதேசத்தைப் பூரணமாய் படிப்பதற்கு இடம் போதாது. சுருங்கக் கூறினால்:

1. பிரமம் ஒன்றே உண்டு. மற்றொன்றும் இல்லை. உயிருள்ளதும் உயிரற்றதுமான இயற்கை யனைத்தும் பிரமமே.

2. நமது அக்கியானத்தினால் அவை வித்தியாசமாய் தோன்றுகின்றன. ஒருவன் சொப்பனம் காணும்போது அச்சொப்பனத்தின் அனுபவம் அது நிகழும்போது எவ்வாறு உண்மைபோல தோன்றுகிறதோ, அவ்வாறே பிரபஞ்சமும் இந்த ஜீவியத்தில் நமக்குத் தோன்றுகின்றது. ஆகவே நம் உலக ஜீவியம் ஒரு சொப்பனம். இச்சொப்பனத்தின் முடிவில் பிரமம் தவிர பிறிதொன்றுமிராது. அக்கினியைச் சூழ்ந்து அதைச் சிறிதுநேரம் மறைக்கின்ற புகையைப்போன்றது. இது அக்கியானம். இதற்கு மாயை என்று பெயர்.

3. இந்த மாயையை விளக்குவதற்கு இரண்டொரு திருஷ்டாந்தம் கூறப்படும். மாயை சிப்பியை வெள்ளியெனவும், கயிற்றை பாம்பு எனவும் நினைப்பதுபோலிருக்கிறது. தன் வழியே செல்லுகின்ற ஒருவன் தரையில் ஒரு சிப்பி (முத்துச் சிப்பியின் ஓடு) கிடக்கின்றதைக் கண்டவுடன் மிக்க ஆத்திரத்துடன் அதை எடுத்து அது ஒரு வெள்ளித்துண்டு என்னும் நினைவால் அதை வெகு பத்திரமாகப் பாதுகாத்துவருகிறான். அது தன் வசத்திலிருக்குங்காலத்தில் அவ்வுடைமையால் மிகவும் மகிழ்ச்சியடைகிறான். ஆயினும் இது வெள்ளி அல்ல, இது சிப்பி என்னும் அறிவு அவனுக்கு உண்டாகும்பொழுது, தன் இன்ப அனுபவம் அஞ்ஞானத்தினால் உண்டாயிற்றி என்பதைத் தெரிந்துகொள்ளுகிறான். அவ்வாறே இரவில்

தன் வழியே செல்லுகின்ற இன்னொருவன் தரையில் ஒரு கயிறு கிடக்கிறதைக் காண்கிறான். கண்டமாத்திரத்தில் திடுக்கிட்டுத் திகிலடைந்து கோவென்றலறி அவ்விடத்தினின்று குதித்தோடி விடுகின்றான். உண்மையான ஒரு விஷசர்ப்பத்தைக் கண்டால் எப்படியோ அப்படிப்பட்ட அனுபவத்தையே அடைகின்றான். ஆனால் தான் கண்டது பாம்பு அல்ல, அது கயிறு என்ற அறிவு அவனுக்கு உண்டாகும்பொழுதுதான் தான் கொண்ட துன்ப அனுபவம் அஞ்ஞானத்தினால் ஆகியது என்பதை அறிந்துகொள்ளுகிறான். இவ்விதமாக அஞ்ஞானத்தினாலேயே மனிதனுக்கு இன்பமும் துன்பமும் உண்டாகின்றன. இப்படி நினைப்பதினால் உண்டாகும் அனுபவமானது அந்த நினைப்பு தப்பிதம் என்பதை அறியும் வரைக்கும் நமக்கு இன்பதுன்பத்தை யுண்டாக்குவதுபோல, அவித்தையும் நமக்கு இன்பதுன்பங்களை உண்டாக்குகின்றன.

4. ஆகையால் ஜீவியத்தின் விசேஷ நோக்கம் யாதெனில்' அக்கினியை புகை சூழ்ந்திருக்கிறதுபோல், ஆத்மாவை சூழ்ந்திருக்கின்ற சரீரதொடர்பை நீக்கி, பரமான்மாவுக்கும், இந்த ஜீவான்மாவுக்கும் உள்ள ஒற்றுமையை உணர்வதேயாம்.

5. இப்பரபிரமத்திற்கு. எவ்விதக் குணமும் கற்பித்தல் இயலாது. அதைக்குறித்து மூன்று காரியங்கள் மட்டும் கூறலாம்.

1. பரப்பிரமம் இருக்கின்றது.

2. அது ஞானமயமானது.

3. அது ஆனந்தசொரூபம்.

இம்மூன்றும் சச்சிதானந்தம் என்னும் பதத்தால் குறிக்கப்படும். சத் = உள்ளது. சித் = அறிவு. ஆனந்தம் = மகிழ்ச்சி.

6. உலகமும், அதிலுள்ள யாவும் பிரமத்தின் பிரதிரூபங்களே.

7. மாயையோடுகூடிய பிரமம் ஈஸ்வரன் எனப்படுவான். ஈஸ்வரனுக்கு குணமுண்டு.

8. நற்கிரியைகளைச் செய்கிறதினால் ஒருவன் முத்தி பெறமுடியாது. நற்கிரியைகள் உயர்ந்த ஜன்மத்தில் பிறப்பதற்கு ஏதுகரமேயன்றி மற்றப்படியல்ல.

9. ஒருவனுக்கு முத்திதர வல்லது ஞானம். ஒன்றே ஆயினும் பாமர ஜனங்கள் நன்மைசெய்வதினால் அவர்களுடைய அறிவு விசாலப்பட்டு கடைசியில் அவர்கள் ஞானமார்க்கத்தை அனுஷ்டிப்பதற்கு ஏதுவாக இருக்கலாம்.

சங்கரரின் செல்வாக்கு.

சங்கரர் தமது கல்வியாலும், ஊழியத்தாலும் அக்காலத்தில் மட்டுமல்ல, தற்காலமட்டும் செல்வாக்கு செலுத்தியவராகவே இருக்கின்றார். அதிபாலிய பிராயத்திலேயே இறந்தும் உலகத்தில் மிகுந்த செல்வாக்கு செலுத்துகிறவர்களில் சங்கரரும் ஒருவர். இவர்காலத்திற்கு பிற்பாடு எழுதப்பட்ட நூல்களிலும், வியார்த்தி செய்யப்பட்ட சித்தாந்தங்களிலும், இவரது கொள்கைகளும், உபதேசங்களும் அதிகமாய்க் காணப்படுகின்றன. தற்காலத்தில் கல்வி கற்ற ஹிந்துக்களில் பெரும்பான்மையோர் இவரது உபதேசத்தைத் தழுவினவர்களே.

இவருடைய குருசிஷ்யபாரம்பரை சிரிங்கேரி என்னும் ஸ்தலத்திலுள்ள சங்கராச்சாரியாரே. தற்காலத்தில் இந்தியாவிலுள்ள சகல குருக்களிலும் விசேஷித்தவர் இவரே.

## IV. மத்துவம்.

### மத்வாச்சாரியார் சரித்திரம்.

இம்மத ஸ்தாபகர் மத்வாச்சாரியார். இவருக்கு ஆனந்த தீர்த்தர் என்றும் பெயர். இவர் கி. பி. 1119 வரு தென்கன்னடம் ஜில்லாவில் உடுப்பி நகருக்கு அருகிலுள்ள பாசக க்ஷேத்திரத்தில் பிறந்தவர். எண்பது வருஷம் உயிரோடிருந்தார். இவரும் வைஷ்ணவ மதஸ்தாபகராகிய இராமானுஜாச்சாரியாரும் ஏககாலத்தவர்.

இவரது ஜீவியசரித்திரத்தில் நாம் காணும் ஒரு விசேஷம் யாதெனில் இவரது சரித்திர சார்பான சில

சம்பவங்களுக்கும் இயேசுநாதருடைய சரித்திர அம்சங்களுக்கும் உள்ள ஒற்றுமையே. இவர் பையனாயிருக்கும் பொழுதே இவரிடம் அநேக அற்புத சக்திகள் விளங்கினதாம். ஒருநாள் இவர் காணாமற்போய்விட இவருடைய பெற்றோர்கள் மூன்றுநாள் அதிகக் கவலையோடு இவரைத் தேடித்திரிந்து கடைசியாக இவரை ஆனந்தேஸ்வரருடைய ஆலயத்தில் கண்டார்கள். அங்கே இவர் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் வேதத்தை விளக்கிக் காட்டி, கடவுளை எவ்வாறு வணங்கவேண்டும் என்பதைப்பற்றி உபதேசித்துக் கொண்டிருந்தார். தமது இருபத்தைந்தாம் பிராயத்தில் தம் வேத கல்வியினைத்தையும் முடித்துக்கொண்டு, உலக வாழ்க்கையைத் துறந்து சந்நியாசியானார். இவ்விஷயம் வயது சென்றவர்களான இவரது பெற்றோர்களுக்கு மிகுந்த விசனத்தையும் கோபத்தையும் உண்டுபண்ணியது.

சங்கராச்சாரியாரது அத்வைத மதம் இவருடைய மனதுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அக்காலத்து வைதிக பண்டிதர்கள் பெரும்பாலும் இந்த அத்வைத மதக் கோட்பாட்டையே பெரிதும் ஒப்புக்கொண்டுவந்தாலும் மத்வாச்சாரியார் அவ்வுபதேசத்தை எதிர்த்தார். இதன்பொருட்டு அவர் தேசமெல்லாம் சுற்றித்திரிந்து மததர்க்கங்கள் நடத்திக்கொண்டு வந்தார். சில சமயங்களில் அவரும் அவருடைய சிஷர்களும் வனாந்தரமான இடங்களில் இருக்கும்பொழுது அவர்கள் பசியாயிருந்ததினால் அவர் சில அப்பங்களை எடுத்து அவர்களெல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடையத்தக்கதாக அவைகளை அற்புதார்த்தமாய் அதிகப்படுத்தினாராம். ஸ்மார்த்தமத ஸ்தாபகராகிய சங்கராச்சாரியாரைப்போலவும் சைவமத ஸ்தாபகராகிய நீலகண்ட சிவாச்சாரியாரைப்போலவும், வைஷ்ணவமத ஸ்தாபகராகிய ராமானுஜாச்சாரியாரைப்போலவும், இவரும் வேதாந்த சூத்திரத்துக்கும் உபநிடதங்களுக்கும் வியாக்கியானம் எழுதினார். இதற்கப்பால் இவர் இந்துஸ்தானம் என்ற வட இந்தியாவுக்குப் பிரயாணஞ் செய்தார். இவர் சென்ற பாதையில் துஷ்டமிருகங்கள் அதிகமாய் இருந்தன. ஒரு சமயத்

தில் அவர் கடக்கமுடியாத ஒரு ஆறு குறுக்கிட்ட பொழுது, அவர் அந்த ஆற்று ஜலத்தின்மேல் நடந்து அதைக் கடந்து சென்றாராம். வட இந்தியாவில் இவர் மிலேச்ச பாஷையாகிய பெர்சிய பாஷையைக் கற்று, அங்கே இருந்த மகமதிய அரசர்களுடன் மதசம்பந்தமான தர்க்கங்கள் நடத்தி, அவர்களுடன் ஸ்நேகமாயிருந்தார். ஹரித்வாரம் என்ற க்ஷேத்திரத்தில் இவர் அநேக நாள் மௌனமாயிருந்து உபவாசம் பண்ணினார். இமய மலைக்குச் சென்று பிரார்த்தனை செய்தார். இவருடைய முயற்சியினால் அநேகர் இவர் போதித்த துவைத மதத்தைத் தழுவினார்கள். இவர் ஒரு நதிதீரத்தில் ஆஸ்ரமம் அமைத்து, அநேக புஸ்தகங்களை எழுதி, பல இடங்களுக்கும் மிஷனெரிகளை அனுப்பினார். ஒருதரம் இவர் கடலில் ஸ்நானம் செய்துகொண்டிருக்கும்பொழுது கடல் கொந்தளித்து அலை கோஷ்டமாயிருந்ததினால், இவர் கோபத்தோடு கடலைப்பார்த்தவுடன் கடல் அமைதியாயிற்றாம். இவர் இமாலயமலைப் பிரதேசத்தில் இறந்ததாகத் தெரிகின்றது.

மத்வமத உபதேசம்.

சங்கரருடைய அத்வைத மதத்தைக் கண்டிப்பதே மத்வாச்சாரியாருடைய பெரிய முயற்சி. ஒரே ஒரு வஸ்து உண்டு என்றும், அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்றும், அஞ்ஞானத்தினாலேயே இந்த உலகம் வேறாகத் தோன்றுகின்றதென்றும், இந்த அஞ்ஞானம் நீங்கியவுடன் சர்வமும் பிரமம் என்ற உணர்வு தோன்றும் என்றும் சங்கரர் போதித்தார். இராமானுஜர் இதைச் சிறிது மாற்றி, சித்து அசித்து ஈஸ்வரன் என்று மூன்று பதார்த்தங்கள் உண்டு என்றும், இவற்றுள், சர்வத்துக்கும் ஈஸ்வரன் ஆத்மா என்றும், சித்தும் அசித்தும் (ஆன்மாக்களும் பிரபஞ்சமும்) ஈஸ்வரனுக்குச் சரீரமென்றும் போதித்தார். மத்வாச்சாரியாரோ இவை இரண்டையும் ஒப்புக்கொள்ளாமல், அத்வைத வாதத்தை மிகவும் அழுத்தமாய்க் கண்டித்தார். சர்வமும் பிரமம், தத்வம் அஸி (= நீயே அது), அகம் பிரமாஸ்மி (= நான் பிரமம்) என்னும் இத்தகைய வாக்கி

ங்களால் கூறப்படும் வாதம் அறியாதார் வாய் உளறு தலே ஒழிய வேறல்ல என்பது மத்வர் கோட்பாடு. கடவுள் வேறு, உலகம் வேறு, இவை இரண்டும் ஒன்றல்ல. மத்வமதத்தின் விசேஷ போதனையாவன:

1. கடவுள் வேறு, உலகம் வேறு, இவை இரண்டும் ஒன்றல்ல. உலகமும் ஆத்மாவும் (=சித்தும் அசித்தும்) கடவுளின் ஓர் பாகம் என்று சொல்வது தவறு.

2. ஆத்ம ரக்ஷிப்புக்கு ஈஸ்வரகடாக்ஷம் (=தேவ கிருபை) அவசியம். இந்த ஈஸ்வரகடாக்ஷம் ஜீவான்மாவும் பரமான்மாவும் ஒன்றுதான் என்றுணரும் ஞானத்தினுலே உண்டாகாது. அது தெய்வீக மகிமையைக் கண்டுணர்வதினுலேயே உண்டாகும்.

3. உலகத்திலுள்ள தெய்வங்களெல்லாம் அழிவுக்குரியனவாய், மஹாவிஷ்ணுவுக்கு கீழ்ப்பட்டு அவர் ஆஞ்ஞையின்படி நடக்கவேண்டியவை. என்றும் அழியாமல் ஸ்வதந்திரராக இருக்கின்றவர் மஹாவிஷ்ணு ஒருவரே.

4. இப்பிரபஞ்சமானது நித்தியகாலமாயுள்ளதாயினும், இதை உருப்படுத்தி ஒழுங்கினுள்ளும் பிரமாணத்தினுள்ளும் அமைத்தவர் ஈஸ்வரனே.

5. மஹாவிஷ்ணுவானவரே சர்வேஸ்வரனுக இருந்தாலும், அவருடைய ஒரே குமாரனுகிய வாயு பகவானை (=காற்று, ஆகாயம், ஆவி) பக்தி செய்கிறதினுல்தான் முக்தி (=ரக்ஷிப்பு) உண்டாகும். ஆகாய தெய்வமாகிய இந்த வாயுவானவர் அனுமானுகவும் பீமனுகவும் மத்வாச்சாரியாகவும் அவதரித்திருக்கின்றுர்.

6. இரத்த பலிகள் ஆகாது. மாவினுல் ஆடு முதலிய உருவங்கள் செய்து அவற்றைப் பலியிடலாம்.

### மத்வமதத்தில் கிறிஸ்தவ செல்வாக்து.

மத்வாச்சாரியாரின் சரித்திரத்தையும் மத்வமத போதனையையும் ஆராய்ச்சி செய்யும்பொழுது கிறிஸ்து மதத்துக்கும் மத்வமதத்துக்கும் உள்ள ஒற்றுமையைப் பற்றி நாம் நினைக்காமல் இருக்கமுடியாது. இந்த ஒற்றுமைகளில் சிலவற்றை இங்கே எடுத்துக்கூறுவோம்:

1 ஈஸ்வர குமாரனாகிய வாயுபகவானால்மாத்திரம் முக்தி கிடைக்கக்கூடும் என்னும் சித்தாந்தம் இந்தியாவிலுள்ள வேறெந்த மதத்திலும் கிடையாது. தேவ குமாரனாகிய இயேசுபகவான் மூலமாகமாத்திரம் முக்தி (ரக்ஷிப்பு) உண்டாகும் என்னும் கொள்கை கிறிஸ்து மதத்தில்மட்டுமே உண்டு.

2 வாயுதேவனை விசேஷித்ததில் இன்னொரு கருத்தும் உண்டு. வாயு காற்று ஆகாயம் இவை ஒருபொருட் சொற்கள். கிறிஸ்தவ சித்தாந்தத்தில் பரிசுத்தாவி என்னப்படுவதும் இதுவும் ஒன்று. ஆங்கிலத்தில் ஸ்பிரித்து என்பதும் கிரேக்குபாஷையில் ப்னூமா என்பதும் சமஸ்கிருதத்தில் வாயு என்பதும் தமிழில் காற்று என்பதும் ஒரே பொருளைக் குறிக்கும். இவ்வாறாக இது திரித்துவத்தில் மூன்றாம் தத்துவமான பரிசுத்தாவியைக் குறிக்கலாம். ஆகவே இவ்விஷயத்திலும் ஸ்மார்த்த மதத்துக்கும் கிறிஸ்துமதத்திற்கும் சம்பந்தமிருக்கின்றது.

3 மத்வருடைய சரித்திர சம்பந்தமான சில சம்பவங்கள் கிறிஸ்துவின் சரித்திரத்துக்கு ஒத்திருக்கின்றன. உதாரணமாக ஆச்சாரியர் பையனாயிருக்கும்பொழுது அவர் காணமற்போதல், பெற்றோர் தேடித் திரிந்து தேவாலயத்தில் போதகம்பண்ணிக்கொண்டிருக்கையில் காணுதல், (2) தமது மதத்தைப் பிரசாரஞ்செய்வதற்கு முன் உபவாசம்பண்ணி ஜெபித்துக்கொண்டிருத்தல், (3) சில அப்பங்களை அதிகப்படுத்தி அவைகளால் அநேகரைப் போஷித்தல், (4) காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்தல் [மாற்கு 1; 13,] (5) ஆற்று ஜலத்தின்மேல் நடந்து கடந்து செல்லுதல், (6) காற்றையும் கடலையும் அதட்டி அமர்த்துதல்.

4 சில பதத்தொடர்கள்கூட இவ்விரண்டு மதங்களுக்கும் பொதுவாயிருக்கின்றன. இவற்றை இந்தியாவிலுள்ள வேறு மதங்களில் காணமுடியாது; உதாரணம் சுவிசேஷ செய்தியை (நல்ல செய்தியை) அறிவித்தல், மீன் பிடிப்பதுபோல மனுஷரைப்பிடித்தல் முதலியன.

இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது இந்த ஒற்றுமைகள் தற்செயலாய் நேர்ந்தவை யென்று சொல்லுதல் பொருந்தாது. ஒன்றினிடத்திலிருந்து மற்றொன்று இவற்றைப் பெற்றிருக்கவேண்டும். இது வாஸ்தவமென்றால், மத்வாச்சாரியாரும் அவரது சிஷ்ய பரம்பரையாரும் இவ்விஷயங்களைக் கிறிஸ்தவர்களிடமிருந்துதான் பெற்றிருக்கவேண்டும். மத்வாச்சாரியாரின் வாசஸ்தானமாகிய உடுப்பி நகருக்கருகில் அக்காலத்தில் ஏராளமான கிறிஸ்தவர்கள் இருந்தனர். இக்கிறிஸ்தவர்கள் அதி பூர்

வீக காலமுதலே இங்கிருந்திருக்கின்றனர். இந்தியா வின் மற்றைய இடங்களில் இருந்த கிறிஸ்தவர்கள் அற்றுப்போன காலத்திலும்கூட இவர்கள் மலையாளம் கன்னடம் முதலிய நாடுகளில் அதிகமாய் இருந்தனர். இவர்களுக்கு தோமைக் கிறிஸ்தவர்களென்றும் சீரிய கிறிஸ்தவர்களென்றும் பெயர். இவர்களிடத்திலிருந்து மத்வ மதத்தினர் பல விஷயங்களைப் பெற்றிருக்கலாம். இவ்வாறு நினைப்பதற்கு அனுகுணமான இரண்டொரு விஷயங்கள் அவருடைய சரித்திரத்தில் காணப்படுகின்றன. அவர் மத்வ சித்தாந்தத்துக்கு வேறான இருபத்தொரு மத சித்தாந்தங்களைக் கற்று அவற்றின் நயங்களையும் குறைகளையும் அறிந்திருந்தார் என்பதாக அவர் சரித்திரங் கூறுகின்றது. இந்த இருபத்தொரு மதசித்தாந்தங்களில் கிறிஸ்தவமதம் ஒன்றாயிருத்தல் கூடியதே. கிறிஸ்துமதம் இவரது பார்வையில் ஓர் மிலேச்ச மதமாயிருந்தமையால் இதை அவர் கற்றிருக்க மாட்டார் என்று நினைப்பது பொருந்தாது. ஏனெனில் மகமதியரோடு சம்வாதம் செய்யும்பொருட்டு மிலேச்ச பாஷையாகிய பெர்சிய பாஷையைக் கற்ற இப்பெரியார் தமது வாசஸ்தானத்திலேயே அதிகச் செல்வாக்குச் செலுத்தி வந்ததும் சிறந்த சன்மார்க்க தத்துதத்தையும் உயர்ந்த ஆத்மீக லக்ஷியங்களையும் உடையதுமாகிய கிறிஸ்துமதம் தமது ஆராய்ச்சிக்கு தகுந்ததல்லவென்று தள்ளிவிட்டிருக்கமாட்டார். இவ்வாறாக கிறிஸ்தவ செல்வாக்கு மத்வ மதத்துக்குள் சென்றிருந்ததென்பதற்கு ஆதாரங்கள் இல்லாமற் போகவில்லை.

கிறிஸ்து சமயச்செல்வாக்கு மத்வ மதத்தின்மேல் இத்துணைதூரம் சென்றதற்கு இன்னொரு காரணத்தையும் கூறலாம். நாம் சாதாரணமாய் நினைக்கிறதைவிட அதிக விஸ்தாரமாக முன்காலத்தில் கிறிஸ்துமதம் இந்தியாவில் பரவியிருந்தது. இந்தியாவில் மட்டுமல்ல, ஆசியா கண்டத்திலேயே கிறிஸ்து சகாப்த ஆரம்ப நூற்றாண்டுகளில் கிறிஸ்துமதப் பிரபல்லியம் அதிகமாக இருந்தது. கிறிஸ்தவ சபைகளும் மிக்கச் வசழிப்பாயிருந்தன. கிறிஸ்தவ பக்தியும் மிக அபிவிர்த்தி அடைந்திருந்தது.

சீரியா மொசொப்பொத்தாமியா, அரேபியா, பெர்சியா, பாக்திரியா, காந்தாரம், துர்க்கிஸ்தானம் முதலிய தேசங்களிலும் இந்தியாவின் பல மாகாணங்களிலும் கிறிஸ்து மதம் கி. பி. ஏழாம் நூற்றுண்டுவரைக்கும் மிகவும் செழித்தோங்கி வளர்ந்திருந்தது. ஆசியாவிலுள்ள பல அரசரும் கிறிஸ்துமதத்தைத் தழுவியிருந்தனர். இந்தோ—பாக்திரிய தேசத்து அரசனை கந்தோ போரஸ் என்பவன் அப்போஸ்தலனுகிய தோமாவின் சுவிசேஷ கைங்கரியத்தின் பலனுக தான் கிறிஸ்தவனுனது மல்லாமல், கிறிஸ்துமதத்தைப் பிரபல்லியப்படுத்துகிறதற்கும் பலவித முயற்சிகளைச் செய்துவந்தான் என்று சரித்திரவாயிலாய் அறிந்திருக்கின்றோம். கிறிஸ்து சகாப்தம் ஏழாம் நூற்றுண்டுவரையிலும் செழித்தோங்கியிருந்த ஆசியாக்கண்டத்துக் கிறிஸ்தவ சபைகளும் இந்தியா தேசத்துக் கிறிஸ்தவ சபைகளும் எங்கே என்பது கேள்வி. அரேபியா பெர்சியா முதலிய தேசங்களிலிருந்த கிறிஸ்தவர்களைப்போல வேறு அநேக இடத்திலும் இருந்த கிறிஸ்தவர்கள் பல வேறு காரணங்களால் மகமது மதத்தை ஏற்றுக்கொண்டிருக்கலாம். இவர்களில் பலர் மகமது மார்க்கம் என்பது ஒருவகையான கிறிஸ்துமதந்தானே என்ற நினைவினுலேயே இப்படிச் செய்திருக்கலாம். ஆனுல் மற்றச் சபைகள் விஷயத்தில் இந்தச் சமாதானம் கூறுதல் பொருந்தாது. இந்தியாவில் அக்காலத்தில் மகமதிய செல்வாக்கு அத்தனை அதிகமகா இல்லை. ஆகையால் மைலாப்பூர், கல்யாணி முதலிய இடங்களில் இருந்த கிறிஸ்தவர்கள் சிறிது சிறிதாய் இந்துமார்க்கத்தின் செல்வாக்குக்குள்ளாகி, கிறிஸ்து மதத்தின் விசேஷ கோட்பாடுகளை மறந்துபோன காலத்தில், கிறிஸ்தவ போதனைகளில் சிலவற்றையும் கிறிஸ்தவ கதைகளில் சிலவற்றையும், கிறிஸ்தவ சடங்காசாரங்களில் சிலவற்றையும் தாங்கள் இப்பொழுது சிறிது சிறிதாய்த் தங்களை அறிந்தும் அறியாமலும் பிரவேசஞ் செய்த ஹிந்துமார்க்கத்துக்குள் கொண்டுவந்திருக்கலாம். மலையாளக்கரையில் கன்னடம் ஜில்லாவில் உயர்குல ஹிந்துக்களில் பலர் கிறிஸ்தவர்களாகிப் பல தலை

முறை கடந்தபின்பு மேற்கூறிய நிலைமையில் திரும்பவும் தங்களை அறிந்தும் அறியாமலும் சிறிது சிறிதாக ஹிந்துக்களாக மாறிய காலத்தில், மத்வாச்சாரியாரும் அவரது சிஷ்ய பரம்பரையாரும் அவ்வித ஜனசமூகத்தினின்று தோன்றியிருக்கலாம் என்றும், இது காரணம் பற்றித்தான் குமாரவணக்கம் பரிசுத்தாவியின் மகத்துவம் முதலிய கிறிஸ்தவ கொள்கைகளும் கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தை ஒட்டிய சம்பவங்களும் அவருடைய போதகத்தில் காணப்படுகின்றன என்றும் அபிப்பிராயப்படுகின்றதற்கு ஏது இருக்கின்றது. இங்கு வியார்த்தி செய்யப்பட்ட இக்காரியத்தில் அதிக உண்மை இருக்கலாமென்று தோன்றுகின்றது. ஆயினும் இதுபோன்ற விஷயங்கள் அபிப்பிராய பேதத்துக்கு இடமானவைகளாகவே இருக்கும். இவற்றை ஒருதலையாய்த் துணிந்து சொல்லுதல் சாத்தியமல்ல.

ஒரு விஷயம் நிச்சயம். கிறிஸ்துமதத்துக்கே சிறப்பாயுள்ள பல விஷயங்கள் கிறிஸ்தவ ஜனசமூகத்துக் கருகாமையில் தோன்றிய மத்வ மதத்தில் காணப்படுகின்றது. இதற்கு காரணம் என்னவென்பதை நாம் சொல்லியே தீரவேண்டும். மேற்கூறப்பட்ட காரணத்தைவிட வேறு நல்ல காரணம் எதுவும் இதுவரை கூறப்படவில்லை.

## V. மீமாஞ்சை

வேதம் ஒன்றையே தனக்கு ஆதாரமாகக் கொண்டபடியால் இம்மதத்திற்கு வைதீகம் என்றும் பெயர். இந்துமார்க்க சம்பந்தமான சகல உபமார்க்கங்களுக்கும் மூலாதாரமாகவுள்ளது வேதங்கள். அவை நான்கு. இந்த வேதமார்க்கத்தை இக்காலத்தில் அதிகமாய் பிரபல்லியப்படுத்தி வந்தவர் குமாரிலபட்டர். இவர் 8-ம் நூற்றாண்டின் முதல் பாகத்திலுள்ளவர். புத்தமார்க்கத்தின் வல்லமையைக் கெடுத்து அது இந்தியாவினின்றோடுவதற்குக் காரணமாக இருந்தவர். புத்தமார்க்கத்திற்கு விரோதமாக அநேக புத்தகங்களை எழுதி, தம்முடைய பிரயாசங்களால் ஜனங்களை அம்மதத்திற்கு விரோதமாய் எழுப்பிவிட்டவர்.

புத்தமார்க்கத்தின் உபதேசத்தை நன்றாய் அறிவதற்காக இவர் ஒரு பௌத்தனைப்போல் வேஷம்போட்டுக்கொண்டு, ஒரு மகாவிசேஷித்த பௌத்த குருவையடைந்து அவரிடம் உபதேசம் பெற்றார். ஒருநாள் தனது பௌத்தகுரு வேதமார்க்கத்தை மிகவும் அசட்டையாய்ப் பேசியபோது இவரின் கண்களினின்று கண்ணீர் வடிந்தது. இதைக் கண்டு இவரது உடன்மாணாக்கர் இவர் ஓர் பதிதன் என்று தீர்மானித்து, ஓர் மேல் மாடியினின்று இவரைத் தள்ளிவிட்டனர். வேதங்கள் உண்மையானால் அவை என்னைக் காப்பாற்றுக என்று சொல்லிக்கொண்டே கீழே விழுந்தார். ஓர் அபாயமும் இவருக்கு நேரிடவில்லை. சிறிது சந்தேகமட்டு மிருந்தபடியால் ஓர் கண்மாத்திரம் குருடாய்விட்டது.

அதுமுதல் இவர் பௌத்தர்களுக்கு விரோதமாய் சகல விடங்களிலும் ஊழியம் செய்தார். இவர் காலத்தில் புத்தர்களுக்கு விரோதமாக ஓர் பெரிய உபத்திரவம் உண்டானது. அதை நடத்தியவர் இவரே. இமாலய மலைமுதல் ராமர்பாலம் வரைக்குமுள்ள சகல புத்தர்களையும் கொலைசெய்யும்படி ஒரு அரசன் இவருக்கு அனுமதிகொடுத்தான். இந்த அனுமதி எவ்வளவு தூரம் அனுஷ்டிக்கப்பட்டதென்று சொல்வதற் கிடமில்லை. ஆனால் ஒன்று நிச்சயம். இக்காலமுதல் புத்தமதம் இந்தியாவைவிட்டு நீங்கியது.

## VI. லோகாயதம்.

லோகாயதம் என்பது ஒருவகை நிரீச்சுரவாதம். மிகுந்த சாஸ்திரீயமான ஆராய்ச்சி செய்து இம்மதத்தினர் ஈஸ்வரன் என்று ஒரு வஸ்துவே கிடையாதென்பர். இம்மதத்தினர் சாங்கிய தத்துவ சாஸ்திரத்தை அனுஷ்டிப்பவர். உலகம் தானே இயங்குகின்றது. அதை சிருஷ்டித்தவர் ஒருவருமில்லை. உலகத்தை நடத்தும் தெய்வம் ஒன்றுமில்லை. மார்க்கம் என்பது மனுஷன் வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்படுத்திய ஓர் வழி. அரசனுடைய ஆணைவழி நிற்பதே சன்மார்க்கம். உலகத்தையும், உலகப்பொருளையும் அனுபவிப்பதே மனுஷனு

டைய பிரதான நோக்கம். இதுவே லோகாயதரின் விசேஷ கொள்கை.

லோகாயத மதத்துக்கு நூல் செய்தோன் பிரகஸ்பதி என்னும் பெயருடையான். இவனுடைய கொள்கை வருமாறு:—

பிரத்தியக்ஷம், அனுமானம் உவமம் சாத்தம் என்னும் நால்வகைப் பிரமாணத்துள் பிரத்தியக்ஷப் பிரமாணம் ஒன்றையே லோகாயதர் ஒப்புக்கொள்வார்கள். காணப்படுகின்றவைகள் மாத்திரமே இவர்களுக்கு உண்மை வஸ்துக்கள். காணப்படுகின்றவைகளாகிய நிலம் நீர் தீ காற்று (பிருதிவி அப்பு தேயு வாயு) என்னும் இந்த நான்குமட்டுமே தத்துவங்கள். இவைகள் நித்தியமாய் என்றைக்கும் இருப்பன. இந்த நாலு தத்துவங்கள் ஒன்றுடன் ஒன்று கூடுவதினாலேயே உடம்பு தோன்றுகின்றது. வெற்றிலைபாக்குடன் (பாகடையுடன்) சுண்ணாம்பைக் கூட்டியபொழுது சிவப்பு நிறம் தோன்றுகின்றது போல, மேற்கூறிய நாலு வஸ்துக்களும் ஒன்றோடொன்று கூடும்பொழுது அக்கூட்டுறவின் பயனாக உணர்வு உண்டாகின்றது. அந்த உணர்ச்சியானது உடம்பு வளரும் பொழுது அதனுடன் வளர்ந்து அது தேயும்பொழுது தானும் தேய்ந்து விடுதலினால், உடம்புக்கு வேறாக உயிர் என்று ஒரு பொருள் இல்லை. உடம்புக்கு இன்ப துன்பங்களும் சுகதுக்கங்களும் இயல்பாய் உண்டாகின்றன. இவற்றிற்குக் காரணம் நல்வினை தீவினை என்று சொல்வது பொய். மயிலைச் சித்திரித்தாரும் குயிலைக் கூவித்தாரும் இல்லாமையால், உலகத்தோற்றத்துக்கு ஒரு கடவுள் உண்டென்பதும் பொய். மங்கையரோடு கூடிவாழ்ந்து உண்டு உடுத்தி இவ்வுலகத்தை எவ்வளவு அனுபவிக்கக்கூடுமோ அவ்வளவு அனுபவித்தலே சுவர்க்கம். இம்மையில் அனுபவிக்கக்கூடிய இந்த வாழ்வை அனுபவியாமல், பகைவராலும் வியாதியினாலும், தரித்திரத்தினாலும் கல்வியினாலும் பிறவாற்றானும் வருத்தமுறுவதே நரகம். இவ்வாறன்றி வேறு சுவர்க்கம் நரகம் உண்டென்று சொல்வது சுத்தப்பொய். மேலேசொன்ன நாலு பூதக்கூட்டத்தினின்று பிராண

வாயு நீங்குமேயானால் உணர்விழந்து உடம்பு ஒழியும். இதுதான் மோக்ஷம் (= வீடு, விடுதலை), இஃதன்றி வேறு மோக்ஷம் உண்டென்பது பொய். இந்த உண்மையை உணராத அறிவிலிகள் மறுமை என்று ஒன்றிருப்பதாக நினைத்துக்கொண்டு, தபங்கள் ஜெபங்கள் பசிபட்டினி முதலியவற்றால் வருத்தமுறுகின்றார்கள். கற்புமுதலிய நூல்கள் மங்கையர்மேல் பற்றற்ற பண்டிதர்களால் இயற்றப்பட்டனவாகும். பொன் நிலம் உணவு முதலிய தானங்களை உயர்த்திக் கூறுகின்ற நூல்கள் பசியால் வருந்திய தரித்திரரால் செய்யப்பட்டவை. தேவஸ்தலம் தண்ணீர்ப்பந்தல் கிணறு குளம் நந்தவனம் முதலியவற்றை உயர்த்திக்கூறும் நூல்கள் வழிச்செல்வோரால் இயற்றப்பட்டன. ஆகையால் நல்லோர் இவற்றையெல்லாம் ஒழித்துவிட்டு, உழவுத்தொழில், பசுமேய்த்தல், வியாபாரம், ராஜாங்க உத்தியோகம் முதலிய துறைகளில் ஈடுபட்டு, இம்மை இன்பங்களை அனுபவித்து வாழக்கடவர்கள்.

மேற்கூறியவையே லோகாயத மதத்தினர் கோட்பாடு. நிரீச்சுரவாதமாகிய இக்கோட்பாடு இந்தியாவில் நெடுங்கிலும் இருந்திருக்கின்றது. கல்விமான்களில் பலர் லோகாயத மதானுஷ்டானிகளா யிருந்திருக்கின்றனர். தமிழ்நாட்டில் பிரபல சைவாத்துவித ஞானியாக இருந்த தாயுமானஸ்வாமி, தாம் லோகாயத சமய நடையைச் சாருந்தறுவாயில் இருந்ததாகவும், கடவுளுடைய பேரருளால் தான் அதினின்று தப்பி வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலையை அடையும் வண்ணம் தடுத்தாட்கொள்ளப்பட்டதாகவும், தமது நூல்களில் கூறியிருக்கின்றார். இதை,

> மின்னனைய பொய்யுடலை நிலையென்றும் மையிலகு
> விழிகொண்டு மையல் பூட்டும்
> மின்னார்கள் இன்பமே மெய்யென்றும் வளர்மாட
> மேல்வீடு சொர்க்கம் என்றும்
> பொன்னையழி யாதுவளர் பொருள் என்றும் போற்றியிப்
> பொய்வேடம் மிகுதி காட்டி
> பொறையறிவு துறவீத லாதிநற் குணமெலாம்
> போக்கிலே போக விட்டு

தன்னிகரில் லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத்
 தரணிமிசை லோகாயதன்
சமயநடை சாராமல், வேதாந்த சித்தாந்த
 சமரச சிவானு பூதி
மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத்தாண்டு அன்பின்
 வாழ்வித்த ஞானகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
 மரபில்வரு மௌன குருவே

என்னும் விருத்தத்தால் உணர்க.

## VII. கௌமாரம்.

கௌமாரம் என்னும் பதம் குமாரன் என்னும் பதத்தினின்று தோன்றியது. குமரனை வணங்கும் வணக்கம் என்பது இதன் பொருள். குமரன், சுப்பிரமணியன், முருகன், கார்த்திகேயன், ஷண்முகன் (ஆறுமுகன்) முதலிய பல பெயர்கள் இவருக்குண்டு. குமரன் என்னும் சமஸ்கிருத பதத்துக்கு இளமையை உடையோன் என்று அர்த்தம். முருகன் என்னும் தமிழ்ப்பதத்துக்கும் இதே அர்த்தம்.

இந்தியாவில் வணங்கப்படும் தெய்வங்களில் முருகன் ஒரு விசேஷ தெய்வம் என்னும் விஷயம் நாம் அறியத்தக்கது. பூர்வகாலத்திலேயும் தமிழ்நாட்டில் வணங்கப்பட்டுவந்த ஐம்பெருந் தேவர்களில் முருகன் விசேஷித்தவர். ஐம்பெருந் தெய்வங்களாவன:

குறிஞ்சி (மலை)................முருகன்
முல்லை—காடு..................பெருமாள்
மருதம் (நஞ்சை)...........இந்திரன்
பாலை (வனம்)...............காளி
நெய்தல் (கடற்கரை)......வருணன்

இதுகாரணம் பற்றித்தான் முருகனுடைய வாசஸ்தானம் மிகுதியாய் மலைகளிலும் மலையடிவாரங்களிலும் இருக்கின்றன.

பழந்தமிழரின் சரித்திரத்தை ஆராய்ச்சி செய்யும் பொழுது முருகனே தமிழரின் விசேஷ தெய்வமாகத்

தெரிகின்றது. பழந்தமிழ் நூல்களிலொன்றாகிய பத்துப் பாட்டு என்னும் விசேஷ நூலில் ஒருபாகம் முழுவதும் சுப்பிரமணியர் விஷயமாகவே இருக்கின்றது. சுருக்க மாய்ச் சொன்னால் முருகனே காதல் தெய்வம், முருகனே யுத்த தெய்வம், முருகனே கல்விக்கு குரு, முருகனே வேண்டுவனவெல்லாம் தருபவன்.

முருகனைப்பற்றிய புராண வரலாறு:

சூரபத்மனாதிய அசுரர்களால் விளைந்த துயரைப் பொறுக்கமாட்டாது தேவர்கள் சிவனிடஞ்சென்று முறையிட, சிவன் தன் நெற்றிக்கண்ணினின்று ஆறு பொறிகளை உண்டுபண்ணினார். அக்கினி அவற்றை கங்கையில் சேர்த்தது. கங்கை அவற்றைச் சரவணத்தில் சேர்த்தது. அங்கே அவைகள் ஆறு குழந்தைகளாகி விளையாடிக்கொண்டிருக்க, மஹாவிஷ்ணு முதலிய தேவர்கள் இவர்களைப் பத்துத் திசையிலும் காத்துவந்தனர். கார்த்திகைப் பெண்கள் அறுவரும் இவர்களுக்கு முலைப் பாலூட்டி வளர்த்துவந்தனர். ஒருநாள் உமாதேவியுடன் சிவன் அங்கு சென்றபொழுது, உமாதேவி ஆறு குழந்தைகளையும் ஒன்றாக எடுத்து ஆறுமுகமும் பன்னிரு கையும் ஒரே உடலுமாக ஸ்கந்தன் என்று பெயரிட்டுக் கைலாசகிரிக்கு எடுத்துச்சென்றார்.

புராணங்களில் சுப்பிரமணியருடைய பராக்கிரமம் அதிகமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவர் பிரமதேவனைச் சிறையிலிட்டவர். சிவனுக்கு பிரணவமந்திரத்தின் அர்த்தத்தை உபதேசித்தவர். தாரகாசுரனைக் கொன்றவர். சூரபத்மனாதியோரைக் கொன்று தேவர்களைச் சிறையினின்று விடுவித்தவர்.

தற்காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கும் பக்திக்குரிய பாடல்களில் முக்கால்வாசிப் பாடல்கள் சுப்பிரமணிய ஸ்வாமிமேல் பாடப்பட்டவை என்பதை நாம் நினைத்துப் பார்ப்போமென்றால், தென்னிந்திய ஜாதிகளுக்கு இத்தெய்வத்தின்மேலுள்ள பிரீதி தெரியவரும்.

முருகர் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களுக்கு கணக்கில்லை. அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் என்னும்

தோத்திரப்பாவில் எண்பத்தைந்து ஸ்தலங்கள் காணப்படுகின்றன. இவ்விடங்களிலன்றி சுப்பிரமணியர் சகல குன்றுகளிடத்திலும், காடுகளிலும் வனங்களிலும் ஆறுகளிலும் குளங்களிலும் முச்சந்திகளிலும் நாற்சந்திகளிலும் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே
அதா அன்று
சிறுதினை மலரொடு விரைஇ, மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்படி நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்

(திருமுருகாற்றுப்படை.)

## கௌமார நூல்கள்

சைவ வைஷ்ணவாதி மதத்தினருக்கிருப்பது போலவே குமாரஸ்வாமியை வழிபடும் கௌமார மதத்துக்கும் ஏராளமான மதநூல்கள் உள. இவற்றுள் சிலவற்றைப்பற்றி மட்டும் இங்கே கூறுவோம்.

1. கந்தபுராணம். — இது பதினெண் புராணங்களில் ஒன்று, வேதவியாசர் செய்தது என்பர். இதைத் தமிழில் பலர் மொழிபெயர்த்திருக்கின்றார்கள். இதன் முதல் ஆறு காண்டங்களை கச்சியப்ப சிவாச்சாரியார் பன்னீராயிரம் செய்யுளாக தமிழில் இயற்றியிருக்கிறார். இந்நூல் சுப்பிரமணியருடைய அவதாரம் பராக்கிரமம் முதலிய விஷயங்களை விரித்துரைக்கும்.

2. திருமுருகாற்றுப்படை.—இது பழந்தமிழ் நூலாகிய பத்துப்பாட்டனுள் ஒன்று. கடைச்சங்கப் புலவராகிய நக்கீரரால் பாடப்பட்டது. சுப்பிரமணியருடைய சிறப்பையும் அவர் எழுந்தருளியிருக்கும் விசேஷ ஸ்தலங்களாகிய திருப்பரன் குன்றம் திருச்செந்தூர் (திருச்சீரலை

வாய்) பழநி (திருவாவினன்குடி) திருவேரகம் (ஸ்வாமி மலை) கள்ளழகர் கோயில் (பழமுதிர் சோலை) முதலிய இடங்களின் சிறப்பையும் வர்ணித்துக் கூறுவது.

3. திருப்புகழ்.—இது முருகக்கடவுளின்மேல் பாடப் பெற்ற தோத்திரம். சந்தச் செய்யுள்களாலாகிய வண்ணப்பாக்களினால் ஆக்கப்பட்டது. இது படிப்போர் கேட்போருடைய மனதைப் பரவசப் படுத்தத்தக்க இனிய சுவைவாய்ந்தது, இதனை இயற்றியவர் அருணகிரிநாதர். தொண்டை வளநாட்டிலே திருவண்ணாமலை என்னும் ஸ்தலத்திலே பிரபுட தேவராஜர் காலத்தில் இன்றைக்கு 480 வருஷங்களுக்கு முன்னே இருந்தவர். வாலிபபருவத்திலே இவர் சிற்றின்பத்துறையிலே மூழ்கி, அதினால் வறுமையும் நோயுங்கொண்டு வருத்தமுறுகின்ற காலத்தில் குருகடாக்ஷத்தால் தடுத்தாட்கொள்ளப் பட்டு, ஞானோபதேசம் செய்யப்பெற்று, எல்லாப்பற்றும் அற்றவராய், சுப்பிரமணிய ஸ்வாமிமீது அருட்பாக்களாகிய திருப்புகழ் பாடித்திரிந்தார். இவ்வாறு முருகர் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்கள்தோறும் சென்று பாடிய பாடல்களின் தொகுதியே திருப்புகழ். இதன் சிறப்பை

> வேதம்வேண் டாம்சகல வித்தைவேண் டாம்கீத
> நாதம்வேண் டாம்ஞான நூல்வேண்டாம்—ஆதி
> குருப்புகழை மேவுகின்ற கொற்றவன்தாள் போற்றும்
> திருப்புகழைக் கேளீர் தினம்.

என்னும் பெரியார் வாக்கினால் உணர்க.

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்த் தொகை பதினாறாயிரம் என்பர். இதில் ஒரு பகுதியே இக்காலத்தில் கிடைக்கக்கூடியவை.

> சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
> தவமுறைதி யானம்வைக்க அறியாத
> சடகசட மூடமட்டி பவவினையி லேஜனித்த
> தமியன்மிடி யால்மயக்கம் உறுவேனோ
> கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
> கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
> கடகபுய மீதிரத்ன மணியணிபொன் மாலைசெச்சை
> கமழுமண மார்கடப்ப மணிவோனே

4. கந்தர் அலங்காரம். — இதுவும் அருணகிரிநாதர் செய்தது.

பந்தாடும் மங்கைய செங்கையில் பார்வையில் பட்டுழலும்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றில்நிற்கும்
கந்தா இளங்குமரா அமராவதிக் காவலனே.

5. கந்தர் அனுபூதி.—இதுவும் அருணகிரிநாதர் இயற்றியது. மனுஷனுடைய பாபநிலைமையையும் தெய்வத்தின் அருள் தேவை என்பதையும் தெளிவாய்க் காட்ட வல்ல மன்றாட்டுகளை யுடையது.

கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொன்ன
எந்தை அருள்நாடி இருக்குநாள் எந்நாளோ.

என்று தாயுமானவரே இதைத் துதித்திருப்பாரானால், இந்த நூலின் பெருமைக்கு வேறு சாட்சி வேண்டியதென்னே?

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூர் படவேல் எறியும்
சூரா சுரலோ கதுரந் தரனே.

மேற்கூறிய நூல்களைத்தவிர குமரகுருபர ஸ்வாமிகளியற்றிய கந்தர் கலிவெண்பா முதலிய வேறு அநேக நூல்களும் போற்றப்பட்டு வருகின்றன.

சுப்பிரமணியரே தமிழருக்கு விசேஷித்த தெய்வம். முற்காலத்தில் இம்மார்க்கம் சைவ மார்க்கத்தின் ஓர் கிளையாயிராமல் பிரத்தியேகமா யிருந்தது. சில விடங்களில் முருகர் சிவனிலும் பெரியவர் என்று சொல்லியிருக்கிறது. தற்காலத்தில் இம்மார்க்கம் சைவமார்க்கத்தின் பகுதியாகவே காணப்படுகிறது. கௌமாரம் என்னும் இப்பகுதியுள் விநாயகர் முதலிய இதர சிவபுத்திரர்களின் விஷயங்களை அடக்கிக் கூறுவாரும் உளர்.

## VIII. சாக்தம்

சாக்தம் என்பது சக்தி என்னும் பதத்தினின்றே தோன்றியது. இம்மதத்துக்கு வாமம் என்றும் தாந்திரீயம் என்றும் வேறு பெயர்களும் உள. சக்தி என்பது

சிவனுடைய பெண் பாகம். பாதி ஆணும் பாதிப் பெண்ணுமாக இருக்கிற சிவனுடைய பெண்பாதிக்கே இப்பெயர் உரியது. அந்த சக்தியை வணங்கும் மத மாகலின் இது சாக்தம் எனப்பட்டது. சாக்தர்களுக் குள் இரண்டு பிரிவுகள் உள.

1. தக்ஷிண மார்க்கம்.—இதற்கு வலங்கை மார்க்கம் என்று பொருள். இவர்கள் தெய்வத்தின் பெண்சக்தி யை வணங்குகிறவர்களாயினும், இவை இரண்டிலும் அவ ருடைய ஆண் தன்மையே விசேஷம் என்று கூறுவர். இவர்கள் சிவன் மனைவியாகிய காளியையும் வெவ்வேறு ஸ்தலங்களிலுள்ள அம்மன்களையும் வணங்கும்பொழுது, இவ்வணக்கமானது பக்திக்குரியதாக இருக்கின்றதே யன்றி மற்றெவ்விதமான துர்க்காரியங்களுக்கு இங்கே இடமே இல்லை.

2. வாம மார்க்கம்.—இதற்கு இடங்கை மார்க்கம் என்று பொருள். இவர்கள் தெய்வத்தின் பெண்பாகத் தை மிகப் பெரிதும் பாராட்டுவார்கள். இவர்களுடைய ஆராதனையில் மிருகபலி அதிகமாய் செலுத்தப்படும். மிருகங்களை பலியிடும்பொழுது அரிவாளினால் ஒரே வெட்டாக வெட்டித், தலையைத் துண்டுபடுத்தி, அத் தலையை காளிதேவியின் சிலைக்குமுன் வைப்பார்கள். விக்கிரகத்துக்குமுன் திருவிளக்கு எரிந்துகொண்டிருக் கும். பலியிடப்பட்ட மிருகத்தை சமைத்து முடிந்த பின் சக்திபூஜை நடைபெறும். இதற்குமேல் நடைபெ றும் விஷயங்கள் பஞ்சமகாரம் என்னும் பதத்தினால் குறிக் கப்படும். பஞ்சமகாரம் என்பதற்கு ம என்னும் எழுத் தை முதலாகவுடைய ஐந்து பதங்கள் என்று பெயர். இவை மாம்சம், மச்சம், மது, மைதுனம், முத்ரை என் பவை. பலியிடப்பட்ட மாம்சத்தையும் மீனையும் நன் றாய்ச் சாப்பிட்டுவிட்டு, மனங்கொள்ளுமட்டும் கள்ளை யும் சாராயத்தையும் குடித்துவிட்டு, சகல ஜாதி ஸ்திரீ களுடனும் துன்மார்க்கமாய் நடந்துகொள்வதே சாக்த மார்க்கத்தின் விசேஷ மகிமை. முத்ரை என்பது இந்த ஆராதனையில் அநுஷ்டிக்கப்படுகிற சில சைகைகளும் அடையாளங்களும் ஆகும். சக்தி பூஜையை வியந்து

இந்த அசங்கிய ஆராதனைக்குரிய சகல விஷயங்களையும் விவரிக்கும் நூல்களுக்கு தந்திரம் என்று பெயர். இதனாலேயே இம்மதம் தாந்திரீயம் பெயர் பெற்றது. இந்நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறபடி இந்த ஆராதனையின் ஒழுங்கீனங்களையும் ஆபாசங்களையும் விவரிக்கப் புகுவது வாசிப்போரிடத்தில் மனக்கறை படுக்கும் என்றஞ்சி இதை விவரியாது நிறுத்தினோம்.

ஒருகாலத்தில் மிகப் பிரபல்லியமாயிருந்த இந்த வாமமதம் சங்கராச்சாரியார் முதலிய பெரியோரின் முயற்சியால் பெரும்பான்மையாய் நீங்கிவிட்டாலும், வங்காளம் முதலிய சில மாகாணங்களில் இன்னும் நடைபெற்றுவருவதாகத் தெரிகின்றது. தமிழ்நாட்டிலும் இது சிற்சில இடங்களில் நடைபெறுவதாகத் தோன்றுகிறது. வரம்புகடந்தான் திருவிழா முதலிய வைபவங்களில் சக்திபூஜையைப்போன்ற சில காரியங்கள் நடந்தேறுவதாகச் சொல்லுகிறார்கள்.

## IX. பௌத்த ஜைன மதங்கள்.

குமரிலபட்டர் முதலானோருடைய அரு முயற்சியின் பலனாகவும், ஹிந்து மார்க்கத்துள்ளேயே ஏற்பட்ட பலவித சீர்திருத்த முயற்சிகளின் பலனாகவும் பௌத்த மதமானது இக்காலத்தில் இந்தியாவிலேயே இல்லாமற் போய்விட்டது. தன் ஜனன தேசத்தைவிட்டுத் துரத்துண்ட பௌத்தமானது இலங்கை பர்மா சீயாம் சீனா கொரியா, ஜப்பான் முதலிய தேசங்களில் முன்னிலும் அபிவிர்த்தியடைந்தது. இந்தியாவில் பௌத்தர்களால் எழுதப்பட்ட காவியங்களும் மதநூல்களும் மற்ற மதத்தினரால் பரிபாலிக்கப்பட்டுவந்தன. பௌத்த சமய நூலாகிய மணிமேகலை முதலிய காவியங்கள் சகல மதத்தைச் சேர்ந்த தமிழர்களாலும் இந்நாள்வரைக்கும் மிகுதியும் பாராட்டப்படுகின்றன.

இக்காலத்தில் ஜைனமதம் சற்றே க்ஷீணத்தை அடைந்ததென்றாலும் புத்தமதத்துக்கு நேர்ந்த துர்க்கதி அதற்கு நேரிடவில்லை. இதற்கு ஒரு விசேஷ கார

ணம் ஜைன மார்க்கத்தின் நூல்களும் தத்வ சாஸ்திரமும் மதாநுஷ்டானங்களும் ஹிந்துமதத்தோடு ஒத்திருந்ததேயாகும்.

## X. அந்நிய மதங்கள்.

அந்நியமதங்கள் என்றது இந்தியாவுக்குப் புறம்பே தோன்றிய மதங்கள். அவை கிறிஸ்து மதமும் இஸ்லாம் மதமும்.

கிறிஸ்து மார்க்கம் அதிபூர்வீக காலத்தில், முதலாம் நூற்றாண்டிலேயே இந்தியாவுக்குள் பிரவேசித்த வரலாற்றையும் அதன் சரித்திரத்தையும் இரண்டொரு இடங்களில் குறிப்பிட்டோம். இப்பருவத்தின் ஆரம்பகாலத்திலேயே வட இந்தியாவில் கிறிஸ்துமதம் இல்லாமற் போய்விட்டது. தென்னிந்தியாவில் மாத்திரம் மலையாளக்கரையில் மலையாளம் கன்னடம் கொச்சி என்னும் நாடுகளில் செழித்திருந்தது. மேற்குக் கரையிலிருந்த சிரிய கிறிஸ்தவர்களுக்கு பல விசேஷ சிலாக்கியங்கள் அந்நாட்டு அரசர்களால் கொடுக்கப்பட்டிருந்தது. சோழமண்டலக் கரையில் மைலாப்பூருக்கருகிலிருந்த கிறிஸ்தவ சபை மிகவும் க்ஷீணித்த நிலைமையிலிருந்ததாகத் தெரிகின்றது. கிறிஸ்துமதம் ஹிந்துமதத்தின் மேற்செலுத்திய செல்வாக்கு எத்தன்மையது என்பதை இனிவரும் இரண்டு பருவங்களினும் காணலாம்.

மகமது மார்க்கம் இப்பருவத்தில்தான் இந்தியாவுக்குள் பிரவேசஞ்செய்தது. இக்காலத்தில் மகமதியர் வட இந்தியாவில் அதிகாரம் செலுத்த ஆரம்பித்தனர். ஆயினும் மகமதிய ராஜ்யங்களின் அபிவிர்த்தியும் இஸ்லாமிய மத செல்வாக்கும் அடுத்த இரண்டு பருவங்களுக்கே உரியவை.

இத்தனை அபிவிர்த்திகளும் புனர்நிர்மாண பருவமாகிய இக்காலத்தில் தோன்றியவை. மிகவும் பலஹீனமடைந்திருந்த ஹிந்துமதமானது சைவ வைஷ்ணவாதி மதங்கள் அடைந்த முன்னேற்றத்தினால் நல்லுருக்கொண்டு, செழிப்புடன் எழுந்தது.

# IX

# THE BHAKTI PERIOD.

ஒன்பதாவது

## பக்திமத பருவம்.

கி. பி. 1200—1700

ஒன்பதாவது

# பக்திமதபருவம்

## கி. பி. 1200—1700

பக்தி என்பது அன்பு. அது ஜீவான்மாவானது தனது எளிமையை உணர்ந்து பரமான்மாமேல் வைக்கும் வணக்கத்தோடுகூடிய நேசம். இவ்வித பக்தியைப் பற்றி இதற்கு முந்திய புனர் நிர்மாண பருவத்தில் பார்த்தோமெனினும், நாம் ஆராய்ச்சிசெய்யப் புகுந்திருக்கின்ற இந்த ஐந்நூறு வருஷக் காலத்திலேதான் பக்தியையே ஆதாரமாகக்கொண்ட பல மதங்கள் வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் தோன்றியபடியால் இப்பருவத்துக்கு பக்திமத பருவம் என்று பெயரிட்டோம்.

### I. சரித்திரம்.

இந்த ஐந்நூறு வருஷச் சரித்திரம் இந்தியாதேசச் சரித்திரத்திலேயே அதிவிசேஷித்தது. இக்காலத்தில் தான் மகமதிய ராஜ்யம் இந்தியாவில் அதிகமாய்ப் பரவி, ஹிந்து ராஜ்யங்களை மேற்கொண்டது. வட இந்தியாவில் மகமதிய வல்லமை ஸ்திரமாய் ஸ்தாபகமாயிற்று. தென் இந்தியாவில் சிலபல மாகாணங்கள்மட்டும் ஜெயிக்கப்பட்டன. மகமதிய அரசர்கள் ஆரம்ப காலத்தில் அதிகக் கொரோ அரசாட்சியும் யுத்தத்தில் மிக்க ரத்தப் பிரீதியும் உடையவர்களாய் இருந்தாலும், பிந்தியகாலத்தில் அக்பர் முதலிய சக்கிரவர்த்திகளின் காலத்தில் அதிக ஞானமாயும் நீதியாயும் ராஜ்யபாரம்பண்ணி வந்தனர்.

விஜயநகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஹிந்து ராஜ்யமானது இருநூறு வருஷங்களாக மகா வல்லமையோடும் கீர்த்தியோடும் நிலைபெற்றிருந்து, மகமதிய அரசர்களின் பலத்துக்கு எதிர்த்துநின்று போராடி

யதால், ஹிந்துமதத்தையும் ஹிந்து கல்வியையும் ஹிந்து நாகரீகத்தையும் விசேஷமாய்ப் பாதுகாத்து வந்தது. ஆயினும் 1565–ஆு தலைக்கோட்டையில் நடந்த யுத்தத்தில் மகமதிய அரசர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து விஜயநகர ராஜ்யத்தை கவிழ்த்து அழித்துவிட்டனர். விஜயநகர ராஜ்யத்தின்கீழ் தென்னிந்தியாவின் பல பாகங்களில் சிற்றரசர்களாகவும் தேசாதிபதிகளாகவும் இருந்த பலர் தாமே சுயாதீனமாக அரசு செலுத்தத் தலைப்பட்டார். ஆயினும் இவர்களும் சீக்கிரம் மகமதிய போர் வீரரோடு எதிர்த்துநின்று தோல்வியுற்றுர். இது முதலாக மகமதிய செல்வாக்கு இந்தியா முழுவதிலும் அதிகப்பட்டது.

பதினும் நூற்றுண்டுமுதல் சில புதிய ஜாதியார் இந்தியாவுக்குள் நுழைந்தனர். அவ்வாறு முதல் முதல் வந்தவர்கள் போர்த்துக்கேசியர். இவர்கள் இந்தியாவுடன் வியாபாரம் செய்யும்பொருட்டே இங்கு வந்தனர். இதற்கப்பால் டச்சுக்காரர். பிரஞ்சுக்காரர், இங்கிலீஷ்காரர் முதலிய வேறு ஐரோப்பிய ஜாதியினரும் இந்தியாவுக்குள் பிரவேசஞ்செய்தனர். ஆயினும் ஐரோப்பிய செல்வாக்கு இந்தக்காலத்தில் அதிகமாக இல்லை. அடுத்த பருவத்தில்தான் மேற்குத்திய செல்வாக்கு ஹிந்து மதத்தின்மேல் அதிகமாகச் சென்றது.

## II. மார்க்கம்.

இந்த ஐந்நூறு வருஷங்களுள் ஹிந்து மார்க்கத்தில் அநேக புதுமையான மார்க்கங்கள் தோன்றின. மேற்கு இந்தியா, தென் இந்தியா, வங்காளம், பஞ்சாப், மத்திய இந்தியா முதலிய மாகாணங்களில் ஓர் புது கிளர்ச்சியுண்டானது. அது பக்தி மதம். பல தெய்வங்களிடத்து தம் சிந்தனைகளை சிதறவிடாமல், ஓர் தெய்வத்தைத் தெரிந்துகொண்டு, அது ஒன்றையே பூசித்து, அன்புசெய்து வருதலே உத்தம மார்க்கம் என்னும் உணர்வு இக்காலத்தில்தான் அதிகமாய் பிரபல்யமானது. இதற்கு முந்தின பருவத்திலேயே இது ஆரம்பமானது என்பதை சைவ வைஷ்ணவமத சரித்திரங்களால் அறிந்திருக்கிறோம்.

ஆயினும் இப்பருவத்தில்தான் இது முதிர்ச்சியடைந்தது. இப்புதிய உணர்ச்சி ஓங்கியதற்கு ஒரு காரணம் கூறலாம். அது யாதெனில் மகமதிய மார்க்கத்தின் செல்வாக்கு. பத்தாம் நூற்றாண்டு முதல் மகமதியர் இந்தியாவிலிருந்தாலும் அவர்களின் செல்வாக்கு நாம் ஆராய்ச்சி செய்கிற இப்பருவத்தில்தான் அதிகப்பட்டது. மகமதிய மார்க்கத்தில் அழுத்தமாய் பாராட்டப்படுகிற விஷயம் தெய்வத்தின் ஏகத்துவமே. ஒரே தெய்வம் உண்டு, பிற தெய்வம் இல்லை என்னும் இக்கோட்பாடு மகமதிய அரசராலும் குருக்களாலும் அதிகமாய் கொண்டு செலுத்தப்பட்டதின் பலனாக, ஹிந்து மார்க்கத்துள்ளும் இவ்விஷயம் அதிகமாய் கவனிக்கப்பட்டது.

பக்திமதத்திற்கு உற்பத்தி தமிழ் நாடே. முந்திய பருவத்தில் நாம் பார்த்தபடி சங்கரரின் தத்துவஞானத்திற்கு விரோதமாக ராமானுஜாச்சாரியார் உண்டு பண்ணிய கிளர்ச்சியே தென்னிந்தியாவிலிருந்து மேல் இந்தியாவுக்கும் வட இந்தியாவுக்கும் சென்று, அக்காலத்தில் அங்கே பிரபல்யமாகி வந்த மகமதிய மார்க்கத்தோடு உரசி, பலவிடங்களிலும் தனித்தனியான மதக் கிளர்ச்சிகளை விளைவித்தது. இம்மதக் கிளர்ச்சிகளை மூன்றுபிரிவாகப் பிரிக்கலாம்.

1. ராமபக்தி.

2. கிருஷ்ணபக்தி.

3. பொதுவான தேவபக்தி.

இவ்வாறாக மூன்று பிரிவாகியும் இம்மார்க்கங்களுக்கெல்லாம் பொதுவான பல கொள்கைகள் உள. அவற்றுள் சிலவாவன:—

1. சர்வ புருஷத்துவமுடைய சர்வேசுவரன் ஒருவர் இருக்கிறார். அவர் தம்மை நம்பி வணங்குகிறவர்களிடத்து மிக அன்பும் இரக்கமுமுடையவர்.

2. ஜீவான்மா பரமான்மாவின் ஓர் அம்சம். ஆயினும் நித்திய காலமாய் இவையிரண்டும் துண்டாகவே இருக்கின்றன.

3. ஈஸ்வரனிடத்து பக்தி செய்கின்ற யாவருக்கும் முக்தியுண்டு. முக்திப்பேறு விஷயத்தில் ஜாதிவித்தியாசம் இல்லை.

4. சமஸ்கிருதத்திற்கு பதிலாக சுயபாஷைகளே ஆராதனையில் உபயோகமாகவேண்டும்.

5. குருக்களுக்கு மிகவும் உயர்ந்த ஸ்தானம் உண்டு. குரு இவர்களை அம்மார்க்கங்களுக்குள் பிரவேசம் செய்விக்கும்போது ஓர் மந்திரத்தை அவர்கள் காதுகளில் ஓதுவார்.

6. இம்மார்க்கத்தில் சேர்ந்தவர்களுக்கு ஓர்விதமான பரிசுத்த விருந்துண்டு.

7. ஒவ்வொரு பக்தி மதத்திற்கும் வெவ்வேறான சன்னியாச வகுப்புகள் உண்டு.

இனி இம்மூவகைப்பட்ட பக்தி மதங்களையும் ஒவ்வொன்றாய்ப் பார்ப்போம்.

## I. இராமபக்தி.

இம்மத வேறுபாட்டை முதல் முதல் வியார்த்தி செய்தவர் இராமானந்தர் என்பவர். குருசிஷ்ய பரம்பரையில் இவர் ராமானுஜருடைய சிஷ்யர்.

இவருடைய மதத்தில் ஜாதிபேதம் கிடையாது. இவர் தாமே எந்த ஜாதியாரோடும் சமபந்தியிருப்பர். விஷ்ணுவினுடைய அவதாரங்களுள் ஒன்றான ராமரை பூஜிப்பதே விசேஷபக்தி. இவர் ஜனங்களோடு அவர்களுடைய சுயபாஷையில் பேசுவார். இவருக்கு பன்னிரு சீஷர் (அப்போஸ்தலர்) உண்டு. இவர்களுக்குள் ஒருவன் சக்கிலியன், இன்னொருவன் அம்பட்டன், இன்னொருவன் ஓர் மகமதிய நெசவுகாரன், அவ்வப்போஸ்தலருள் ஓர் பெண்ணும் இருந்தாள். இவ்வாறு இராமானந்தர் பிராமண மதத்திற்கு நேர்விரோதமான காரியங்களை செய்தாலும், சாதாரண ஜனங்கள் இவர்மேல் விசேஷ பிரீதிகொண்டார்கள்.

துளசிதாசர் குருசிஷ்ய பரம்பரையில் இராமானந்தரிடத்தினின்று 7-ம் தலைமுறையில் தோன்றியவர். துளசி

தாசர் இருந்தகாலம் 1532–1623. இந்தியாவில் தோன்றிய மகா போதகருள் துளசிதாசர் ஒருவர். இந்தியாவில் இவரைக்காட்டிலும் பெரிய கவிராயராவது மத சீர்திருத்தியாவது இருந்ததில்லை என்பது சில ஆசிரியர் கொள்கை. இவர் பாடிய ஸ்ரீராமச் சரித்திர மானசம் என்பது ஓர் காவியம். சமஸ்கிருத ராமாயணத்தை ஹிந்திய பாஷையில் ஒவ்வொரு பாட்டிலும் அடியிலும் பக்தி ஒழுகத்தக்கதாக பாடப்பெற்றது. இப்போது வட இந்தியாவிலுள்ள நூறு லக்ஷம் ஜனங்கள் இவரெழுதிய இக்காவியத்தையே தங்கள் வேதாகமமாகப் பாராட்டுகின்றனர்.

இவரது சரித்திரம் விசேஷமானது. இவர் அசுப நக்ஷத்திரத்தில் பிறந்ததினால் இவர் பெற்றோர் இவரை தெருவில் எறிந்துவிட்டனர். அவ்வழியே சென்ற ஓர் சந்நியாசி அக்குழந்தையை எடுத்து வளர்த்து கல்வி கற்றுக்கொடுத்தான். அவர் வளர்ந்து விவாகம் செய்தார். தமது ஏகபுத்திரன் மரணமடைந்தபோது பிரிவாற்றாதவராய் ஓர் வைஷ்ணவமத சந்நியாச வகுப்பைச் சேர்ந்தார். அதுமுதல் இவரின் பக்தியும் விருத்தியடைந்தது. இவரின் சித்தாந்தப்படி சர்வலோக கர்த்தாவாகிய ஒரே கடவுள் உண்டு. அவரின் அவதாரமே ராமர். இவர் திருஅவதரித்து, தம் அடியவர்கள்மேல் வைத்த அன்பு காரணமாக அனேகநன்மைகளை செய்தார். ராமர் தாழ்மையுள்ளவர்களுக்கு நீதியும் கிருபையும் இரக்கமுமுடையவர். அவர் கிருபையுள்ளவராகையால் தம்மவர்களுக்கு விரோதமாய் கோபங்கொள்ளுகிறவரல்லர். அவரே அநாதரக்ஷகர், சர்வநன்மையின் சொரூபி. இவ்வாறு லோகசஞ்சாரம் செய்த ராமர் அப்பால் பரமபதத்திற்குச்சென்று, அங்கு ராமராகவே இருக்கிறார். ஆகவே அளவற்ற கிருபை நிறைந்தவராயிருப்பதோடு, மனுஷ ஜாதியின் பெலவீனங்களோடும், சோதனைகளோடும் அனுதாபப்படக்கூடிய ஒரு தெய்வம் இவர். இவர் தாமே பாவமற்றவராயிருப்பினும், தம்மை நோக்கி கூப்பிடுகிற எவ்வகைப் பாவிக்கும் உதவிசெய்ய ஆயத்தமாய் இருக்கிறார்.

துளசிதாசருடைய உபதேசங்களில் மிகுதியானவை அவருக்கு முன்னிருந்த அம்மதக் குருக்களால் உபதேசிக்கப்பட்டிருப்பினும், இருவிஷயங்கள் அவரால் முதல் முதல் இந்து மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டது.

1. பாவத்தின் தன்மை.

2. பரமபதத்திலுள்ள ராமரது மனுஷீகம்.

இவ்விரண்டையும் துளசிதாசர் அக்காலத்திலிருந்த நெஸ்தோரிய கிறிஸ்தவர்களிடமிருந்து பெற்றிருக்கலாமென்று பல சரித்திர ஆராய்ச்சிக்காரர் அபிப்பிராயப் படுகின்றனர். இன்னும் இவரது உபதேசத்தில் வேறு பல கிறிஸ்தவ செல்வாக்குகளையும் காணலாம்.

துளசிதாசருடைய காலத்திலிருந்த நாபாதாசர் பக்தமாலை என்னும் நூலை யியற்றினார். இதில் பல பக்தர்களின் சரித்திரம் கூறப்பட்டிருக்கிறது.

## II. கிருஷ்ணபக்தி.

பதினைந்தாம் பதினாறும் பதினேழாம் நூற்றாண்டுகளில் வடஇந்தியாவில் பல பக்தர்களும் வித்துவான்களும் எழும்பி கிருஷ்ண பக்தியை அதிகமாய் பிரஸ்தாபித்தார்கள். இவர்களுள் ஒருவர் மீராபாய் என்னும் அரசி, இன்னொருவர் துக்காராம் என்பவர். இவர் ஓர் சிறந்த மராட்டிய கவிராயர், உயர்ந்த பக்திமான். இவரின பாடல்கள் சிவாஜி மகாராஜாவின் காலத்தில் மராட்டியருக்குள் பெரிய கிளர்ச்சியை உண்டுபண்ணினது.

இப்பாடல்கள் தற்காலத்திலும் அதிகமாய் பாராட்டப்படுகின்றது.

கிருஷ்ணபக்தி சம்பந்தமாய் முதலிரண்டு ஸ்தானங்களும் வல்லபாச்சாரியார் சைத்தன்னியர் என்னு மிருவருக்கும் கொடுக்கப்படவேண்டும்.

வல்லபர்.—இவர் தென்னிந்தியாவில் 1479—ல் பிறந்தவர். ஆயினும் அவரின் ஊழியம் வட இந்தியாவிலும், மேல் இந்தியாவிலுமே நடைபெற்றது. அவரின் மதத்தர் தற்காலத்தில் பம்பாய் மாகாணத்தில் மிகுதியாய் உளர். இவரின் சித்தாந்தப்படி உலகம் தெய்வீக

முடையது. ஆகையால் அதை அனுபவியாமல் நிற்றல் தப்பு. ஐம்புலன்களையும் அடக்கி யொடுக்கல் தெய்வத்திற்கு அருவருப்பான விஷயம். மனிதர் அனுபவிக்கும் படிக்கே கடவுள் உலகத்தின் நல்ல காரியங்களை சிருஷ்டித்தார். வல்லபாச்சாரியாரின் மதத்தில் அதிவிசேஷமாகக் கொண்டாடப்படுகிற தெய்வம் பாலகிருஷ்ணன். வல்லபாச்சாரி போதித்த உபதேசங்கள் பிற்காலத்தில் அதிக இழிவான நிலைமைக்கு வந்தன. அவரின் பின்னடியாருக்கு ஆராதனை என்பது துன்மார்க்கத்திற்குரிய ஓர் விஷயமாயிற்று.

வல்லபருடைய மருமகன் சைத்தன்யர் என்பார் 1485—ஆவங்காளத்தில் பிறந்தார். இவரின் ஊழியம்வங்காளம் ஒரிசா மாகாணங்களில் நடைபெற்றது. இம்மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இப்போதும் வங்காளத்தில் தான் அதிகமாயிருக்கிறார்கள். கிருஷ்ணபக்தியின் அதிக உச்சநிலைமை சைத்தன்ய மதத்தினரிடத்தில்தான் காணப்படுகிறது. ஸ்திரீ புருஷருக்குள்ள சினேகத்தைக் கொண்டு பரமான்மாவுக்கும் ஜீவான்மாவுக்குமுள்ள சம்பந்தத்தைக் காட்டுவது இம்மார்க்கத்தின் விசேஷ அம்சம். இவர்களுக்குள் ஆடல்பாடல் மிகுதியாய் பாராட்டப்படுகிறது. ஆடிக்கொண்டு வரும்போது பக்தன் மூர்ச்சைகொண்டு கீழே விழுந்துவிட்டால், தெய்வம் அவனது பக்தியை ஒப்புக்கொண்டதென்பதற்கு அது அடையாளம் ஆகும். பக்தர்களுக்குள் ஜாதிபேதம் இருக்கக்கூடாது என்பது சைத்தன்னியர்களின் உபதேசம். தற்காலத்தில்கூட அவரின் மதத்தினர் ஆராதனை காலத்திலும் மதவிஷயங்களிலும் யாதொரு ஜாதிபேதமும் பாராட்டுகிறதில்லை. ஆனால் ஜனசங்க விஷயங்களிலும், இதர விஷயங்களிலும் மற்ற இந்துகளைப்போலவே ஜாதிவித்தியாசம் அதிகமாய் கவனிக்கப்படுகிறது.

வல்லபாச்சாரியாரின் அடியார்களைப் போலவே சைத்தன்ய மார்க்கத்தாரும் காலாகாலத்தில் க்ஷீணதசையடைந்தார்கள். இப்போது வங்காளத்தில் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள் பாமரஜனங்களே. இவர்களின் ஆராதனைகளில் சன்மார்க்கம் மெத்தக் குறைவு.

## III. பொதுவான தேவபக்தி.

கபீர், நானக் என்னும் இருவரும் இம்மதத்தில் சம்பந்தப்பட்டவர்கள். இஸ்லாம் மார்க்கத்தின் செல்வாக்கு இங்கே அதிகமாய் காணப்படுகிறது. தெய்வம் ஒன்றே என்பது இஸ்லாம் மார்க்கத்தின் விசேஷ கற்பனை.

### 1. கபீர் பந்திகள்.

கபீர் 1380–ஷு பிறந்து 1420–ஷு இறந்தவர். ராமானந்தரால் நியமிக்கப்பட்ட அப்போஸ்தலரில் ஒருவர் இவர். தன் குருவின் உபதேசத்தையும் வேலையையும் பிரஸ்தாபித்தார். மகமது ஹிந்து மார்க்கங்களை, இவரின் உபதேசம் இணைக்கிறது. இவர் ஜாதியில் நெசவுகாரர். இவரின் எஜமானைப்போலவே, இவரும் ஜாதிவித்தியாசம் ஆகாது என்று கண்டித்தார். விக்கிரக ஆராதனையைத் தள்ளிவிட்டார்.

விக்கிரகங்கள், ஸ்தலயாத்திரைகள், வேதாகமங்கள் முதலிய யாவும் வீணானவைகள். இவைகளால் யாதொரு பிரயோஜனமுமில்லை. அவசியமானதொன்றே. அது ஈஸ்வரன்மேல்தான் வைக்கவேண்டிய பக்தி. மகமதியர் ஆலி அல்லது அல்லாவெனக் கூறுவதும் ஹிந்துக்கள் ராமா என்று கூறுவதும் அந்த ஈஸ்வரனையே. தலை மொட்டையடிப்பதும் தரையில் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்குவதும் ஜலத்தில் மூழ்குவதும் வீண். உன்னுடைய இருதயத்தில் வஞ்சகம் இருக்க சரீரசுத்தி செய்து ஜெபமாலையையெண்ணி ஆலயங்களை வணங்குவதினாலும், ஜெபங்கள் சொல்லி மெக்கா மெடினாவுக்கு யாத்திரை செய்வதினாலும் பயன் என்ன? ஹிந்து 11–ம் நாள் அதாவது ஏகாதசியன்று விரதம் அனுசரிக்கிறான், மகமதியன் ரம்ஸான் காலத்தில் விரதம் அனுஷ்டிக்கிறான், இந்நாட்களை மட்டும் ஆசரிக்கிறதாயிருந்தால் மற்ற நாட்களை யார் சிருஷ்டித்தது?

கபீர் இறந்த பிறகு அவரின் சரீரத்தை என்ன செய்வதென்று சீஷருக்குத் தெரியவில்லை. ஹிந்து சீஷர்

அதைத் தகனிக்கவேண்டுமென்றார்கள். மகமதிய சிஷர் அதை புதைக்கவேண்டுமென்றார்கள். இக்குழப்பத்தில் கபீர் அவர்களுக்குத் தரிசனமாகி, பிரேதத்தை மூடியிருந்த துணியை எடுக்கச் சொன்னார். அப்படியே எடுத்துப் பார்த்தபோது அவரின் சரீரத்தை காணுமல் ஓர் புஷ்பக்குவியல் மட்டும் இருக்கக்கண்டார்கள். ஹிந்து சிஷர் பாதி புஷ்பத்தை எடுத்து, காசியில் அதை தகனித்து, அந்தச் சாம்பலை பத்திரமாக வைத்திருக்கிறார்கள். மீதி புஷ்பத்தை மகமதியர் புதைத்து, அதற்குமேல் ஓர் சமாதி கட்டியிருக்கின்றனர்.

கபீரின் உபதேசத்தில் குருபக்தி அதிவிசேஷமாய் பாராட்டப்படுகிறது.

கபீர் இறந்து கொஞ்சக்காலத்துக்குள்ளே அவரின் சிஷர் அவருக்கு விக்கிரகம் நிர்மாணித்து பூஜிக்கத்தலைப்பட்டனர். இப்போது வட இந்தியாவிலும் மத்திய இந்தியாவிலும் $2\frac{1}{2}$ லக்ஷம் கபீர் பந்திகள் இருக்கின்றனர்.

2. தாது என்பார் ஒருவர் கபீரின் உபதேசத்தைப் போன்ற ஒரு உபதேசத்தை 16-ம் நூற்றாண்டில் உபதேசித்தார். தாது பஞ்சரைக்கும் தொழிலாளி. தாது பந்தியர் பிரேதங்களை தகனிக்காமல் பாரசிகரைப்போல வெளியான இடத்தில் விட்டுவிடுவார்கள்.

## 2. சீக்கிய மதம்.

நானக் **1469-1538** வரை.—நானக் கபீரின் உபதேசத்தில் மிகவும் பிரீதியுடையர். இவர்தான் சீக்கிய மதத்தை ஸ்தாபித்தவர். இம்மத சித்தாந்தத்தின்படி வேதங்களாவது கொரானுவது ஒருவனை ரக்ஷிக்கமாட்டாது. அவ்வாறே பூணூல் தரித்துக்கொள்வதும் விருத்தசேதனம் பண்ணிக்கொள்வதும் முக்திக்கு வழியல்ல. ஒரே தெய்வம் உண்டு. வேறு தெய்வங்களில்லை. விக்கிராராதனை ஆகாது. புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்வதினுல் பலனில்லை. மந்திரங்கள் பேய்க்கோரணி முதலியவை நம்பத்தகாதவை. ஜனனமரணங்களில் அசுத்தமென்பது கிடையாது. ஜனசமூகத்தில்

ஜாதிவித்தியாசம் பார்க்கக்கூடாது. பிராமணர்களை குருக்களாக ஒப்புக்கொள்ளக்கூடாது என்பதே. நானக் இறந்தபிறகு இம்மார்க்க பரிபாலனம் அவருக்குப் பின் வந்த குருக்களைச் சார்ந்திருந்தது. இவருக்குப்பின் குருசிஷ்ய பரம்பரையில் 10–வது தலைமுறையில் தோன்றிய குரு கோவிந்து என்பவரின் காலத்தில் சீக்கியமதத்தில் ஓர் பலத்த மாறுதல் காணப்பட்டது. இம்மதத்திற்கு ஒருபக்கத்தில் மகமதியரும், மற்றப்பக்கத்தில் ஹிந்துக்களும் சத்துருக்களாக ஏற்பட்டபடியால், குரு கோவிந்தர் சிக்கிய சபையையே ஓர் இராணுவப்படையாக மாற்றி, அதற்குத் தாமே குருவும் ராஜாவும் ஆனார். இந்த இராணுவப்படைக்கு கால்சா என்று பெயர்.

ஆவிக்குரிய ஒரு ஜனசமூக முழுவதும் யுத்தம்செய்ய வல்ல ஒரு இராணுவப்படையாக மாறி, தன்னை எதிர்த்த மகமதியர்களைத் தாக்க தலைப்பட்டது. ஜாதி வித்தியாசம் முழுதுமாக தள்ளப்பட்டது. மகமதியரோ, ஹிந்துவோ, பிராமணரோ, பறையரோ யாராயிருந்தாலும் சரி, சீக்கியமதத்திற்குரிய ஆணையைச் செய்து, தான் ஒரு இராணுவ வீரனாகத் தன்னுடைய ஜனனமுதல் மரணம் வரைக்கும் உருக்கு ஆயுதத்தைத் தன் சரீரத்தில் சுமந்து செல்வதாக அவன் பிரதிக்கினை செய்யவேண்டும். குரு கோவிந்தர் நியமித்த ஆராதனை உருக்காயுதமும் புஸ்தகமுமே. அவரின் கட்டளை யாதெனில் ஒரு மகமதியனைச் சந்தித்தால் அவனைக் கொல்லு, ஒரு ஹிந்துவைச் சந்தித்தால் அவனை யடித்து அவன் பொருளைக் கொள்ளையிடு என்பதே. குரு கோவிந்தர் தனக்குப்பின் ஒரு குருவை நியமிக்கமாட்டேன் என்று மறுத்துவிட்டார். தமக்குப்பின் சீக்கிய மார்க்கத்தின் வேதமாகிய கிரந்தமே அம்மார்க்கத்திற்கு தலைமையாய் இருக்கவேண்டுமென்று தீர்மானித்தார். இவ்வாறே காலாகாலத்தில் சீக்கிய வேதாகமகிரந்தம் அதிகமாய் மதிப்பு பெற்றது. அப்புஸ்தகத்தையே ஒரு விக்கிரகத்தைப் போல வணங்கவும், ஹிந்து திருவிழாக்களில் செய்வது போல அதற்குப் பலவித சிறப்புச்செய்யவும் தலைப்பட்டனர்.

## 3. சித்தர் மதம்.

சித்தர் என்று சிறப்பெய்தியவர்கள் தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் 16—ம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு வகைக் குருக்கள். இவர்கள் வயித்தியம், வேதாந்தம், தர்க்கசாஸ்திரம், தத்துவஞானம் முதலிய துறைகளில் முதிர்ந்தவர். இவர்களின் தொகை 18 என்பார். இவர்கள் ஒரே தெய்வத்தை வழிப்பட்டவர்கள். அத்தெய்வத்திற்கு சிவம் என்னும் பெயரையிட்டாலும் சைவமார்க்கத்திற்கும் சித்தமார்க்கத்திற்கும் சம்பந்தமில்லை. சடங்காச்சாரங்கள் பயனற்றவை. பிராமணர்களின் மேம்பாடும் அதிகாரமும் ஆகாது. ஜாதிவித்தியாசம் என்பது கிடையாது. விக்கிரக பூஜை மதியீனம். வேதமந்திரங்கள் பயனற்றவை. இவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குப் பல சிஷ்ரைச் சேர்த்துக்கொண்டு மலைகளிலும் குகைகளிலும் காடுகளிலும் வாசம் செய்து, சிற்சில காலத்தில் உள்நாட்டுக்குச் சென்று, அங்கே தமது சித்தாந்தத்தை பிரஸ்தாபிப்பது வழக்கம்.

சித்தர் பாடல்களிலிருந்து சில திருஷ்டாந்தங்களைப் பார்ப்போம்.

**விக்கிரக வணக்கக் கண்டனம்.**

உளியிட்ட கல்லும் உருப்பிடித்த செஞ்சாந்தும்
புளியிட்ட செம்பும்போய்ப் பொருளா தெல்லாம்

(பத்திரகிரியார்)

ஓசை பெற்ற கல்லைநீர் உடைத்துருக்கள் செய்கிறீர்
வாசலில் பதித்த கல்லை மழுங்கவு மிதிக்கிறீர்
பூசை பெற்ற கல்லிலே நீர் பூவும் நீரும் சாற்றுறீர்
ஈசனுக் குகந்தகல் இரண்டு கல்லு மல்லவே,

(சிவவாக்கியர்)

**ஜாதிபேத கண்டணம்**

நால்வகை ஜாதியிந் நாட்டினில் நாட்டினீர்
மேல்வகை கீழ்வகை விளங்குவ தொழுக்கால்
பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே
அவ்விரு ஜாதியில் ஆண்பெண் மாறி
கலந்து கருப்பெறல் கண்ட துண்டோ

ஒருவகை ஜாதியாம் மக்கட் பிறப்பிலீர்
இருவகை யாக இயம்பிய குலத்துள்
ஆண்பெண் மாறி அணைதலும் அணைந்தபின்
கருப்பொறை உயிர்ப்பதும் காண்கின்றி லீரோ
தென்னிசைப் புலவன் வடதிசைக் கேகில்
பழுதற ஓதிப் பார்ப்பான் ஆவன்
வடதிசைப் பார்ப்பான் தென்திசைக் கேகில்
நடையது கோணிப் புலைய னுவான். (கபிலர்)

புனர்ஜென்ம கண்டனம்

கறந்தபால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர்புகா
உடைந்து போன சங்கி னோசை உயிர்களும் உடல்புகா
விரித்தபூ உதிர்ந்த காயும் மீண்டுபோய் மரம்புகா
இறந்து போன மானிடர் இனிபிறப்ப தில்லையே (சிவவாக்கியர்.)

சாஸ்திர கண்டனம்.

சாஸ்திர சூத்திரமும்—அகப்பேய்
சங்கற்ப மானதெல்லாம்
பார்த்திட லாகாதே—அகப்பேய்
பாழ்பலங் கண்டாயே. (அகப்பேய்ச் சித்தர்.)

புண்ணிய யாத்திரை கண்டனம்.

கச்சிக்கு ஓடில் வினை போமோ—அந்தக்
கங்கை யாடில்கதி தானும் உண்டாமோ
பிச்சுறு கன்மங்கள் சாமோ—பல
பேதம் பிறப்பது போற்றினும் போமோ, (கடுவெளிச் சித்தர்.)

சதுர்வேத கண்டனம்.

சதுர்வேதம் ஆறுவகை சாஸ்திரம்பல
தந்திரம் புராணங்கலை சாற்றும் ஆகமம்
விதம்வித மானதான வேறு நூல்களும்
வீணான நூல்களென் றூடு பாம்பே. (பாம்பாட்டிச் சித்தர்.

பல விஷயங்களில் இவர்களுடைய உபதேசத்திற்கும் கிறிஸ்துமத உபதேசத்திற்கும் நெருங்கிய சம்பந்த முண்டு. இது காரணம்பற்றிச் சில ஆசிரியர்கள் இவர்கள் கிறிஸ்துமதத்தை அறிந்திருத்தல் வேண்டும் என்று நினைக்கிறார்கள். அவ்வாறு நினைப்பது பொருத்த மற்றதல்ல. பல நூற்றாண்டுகளாக தென்னிந்தியாவில் விசேஷமாய் மேற்குகரையில் கிறிஸ்தவ செல்வாக்கு அதிகமாயிருந்தது.

# X

# THE PERIOD OF CONTACT WITH THE WEST.

பத்தாவது

# ஐரோப்பிய சம்பந்த பருவம்.

கி. பி. 1700—தற்காலம் வரை.

பத்தாவது

## ஐரோப்பிய சம்பந்த பருவம்.

### கி. பி. 1700—தற்காலம் வரை.

ஐரோப்பியர் என்றது பொதுவாக ஈரோப் அமெரிக்கா என்ற மேல்தேசங்களினின்று வந்த வெள்ளைஜாதியினரையும், சிறப்பாக இங்கிலாந்து தேசத்திலிருந்து வந்த ஆங்கிலேயரையும் குறிக்கும். சம்பந்தம் என்பது இணைப்பு அல்லது உறவு. கடந்த இருநூற்று முப்பது வருஷங்களில் அரசாட்சி, கல்வி, வியாபாரம், முதலிய, காரணங்களின் பலனாக ஹிந்துமதமானது மேற்குறித்த மேற்கு ஜாதியினருடைய மதம் கல்வி நாகரீகம் என்பவற்றோடு பற்பல இடங்களில் உரசிக்கொண்டதன் பலனாக பொதுவாய் இந்தியாவிலும் சிறப்பாய் ஹிந்துமதத்திலுள்ளும் தோன்றிய மதக்கிளர்ச்சிகளை எடுத்துக் கூறும் பருவமாதலின் இது ஐரோப்பிய சம்பந்த பருவம் என்னும் பெயர் பெற்றது.

## I சரித்திரம்.

இக்காலத்து சரித்திரம் நமக்குத் தெரிந்த விஷயமே. இந்த இரண்டு நூற்றாண்டுகளிலும் ஐரோப்பிய செல்வாக்கு இந்தியாவில் அதிகமாயிருந்தது. முதல் முதல் இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியர் போர்த்துக்கேசியர். இவர்கள் 15-ம் நூற்றாண்டின் மத்தியில் (1448) ஆப்பிரிக்காவின் தென்முனையைச் சுற்றி கள்ளிக்கோட்டைக்கு வந்து வியாபாரம்பண்ணத் துவங்கினார்கள். காலஞ் செல்லச் செல்ல அவர்களின் வல்லமை கடற்கரை யோரத்திலுள்ள சகல நாடுகளிலும் பரவியது. இதைக்கண்ட இதர ஐரோப்பிய ஜாதியார் இந்தியாவோடு வர்த்தகஞ்செய்ய ஆரம்பித்தனர். பிரெஞ்சுக்காரர், இங்கிலீஷ்காரர், டச்சுக்காரர். டென்மார்க்குக்காரர் முதலிய பலஜாதிகள் இந்தியாவோடு வியாபாரம்

செய்யப் புறப்பட்டனர். இவர்கள் இந்தியாவில் தங்களுக்கு வர்த்தகசாலைகளைக் கட்டிக்கொண்டு, ஒருவரோடொருவருக்கு ஏற்படும் வியாபாரச் சண்டைகளிலும் மற்ற சண்டைகளிலும் இந்தியாவிலுள்ள சிற்றரசர்களின் உதவியை நாடினர். அவ்வாறே இந்தியவரசர்களும் தங்களுக்குள் ஏற்படும் யுத்தங்களில் ஐரோப்பிய ஜாதியாரின் உதவியைத் தேடினர். இவ்வாறு எழுந்த சண்டைகள் நூற்றுக் கணக்கானவை. இச்சண்டையில் மிகுதியாய் இங்கிலீஷ்காரரே ஜெயம்பெற்றனர். பல நாடுகளும் இவர்களுக்குக் கிடைத்தது. போதிய நாடுகள் இவர்களுக்குக் கிடைத்தவுடன் இவர்கள் வியாபாரத்தை விட்டுவிட்டு, நாடு ஆளுவதையே பிரதானமான தொழிலாகக் கொண்டனர். இவ்வாறு காலாகாலத்தில் இந்தியா முழுவதும் இமயமலைமுதல் கன்னியாகுமரி வரை இங்கிலீஷ்காரர் அதிகாரத்திற்குட்பட்டது.

## II. மார்க்கம்.

இக்காலம் அன்னிய ஜாதியாரின் ஆதீனகாலமாயினும் பலவிதமான மார்க்க எழுச்சிகள் உண்டாயின. அதோடு பூர்வீக மார்க்கங்களாகிய இந்துமதத்திலும் மகமதுமார்க்கத்திலும் பல மாறுதல்களும் புத்துணர்ச்சிகளும் காணப்பட்டன. இதன்றி இப்பருவத்துள் மிகுதியானகாலம் அரசாட்சி செய்துவந்த ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் தாமே இந்துமார்க்கத்திற்கு அனுகூலமான சில காரியங்கள் செய்வாராயினர். அவற்றுள் சிலவற்றை இங்கு எடுத்துக்கூறுவது நலம்.

(1) இந்து ஆலயங்களின்மேல் பார்வையையும் தர்மகர்த்தாத் தன்மையையும் ஈஸ்ட் இந்தியா கம்பெனி ஏற்றுக்கொண்டது. கோவில்களைக் கட்டுவதற்கும் இடிந்த ஆலயங்களை பழுதுபார்க்கவும் முன்பணம் கொடுத்துதவினர். தேவஸ்தான உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் ஆலயத்தில் நடனமாடும் தாசிகளுக்குங்கூட கம்பெனியாரே சம்பளம் கொடுத்தனர். பலியிடுவதற்காகவும் தேர் திருவிழாக்களுக்காகவும் பிராமண போஜனத்திற்காகவும் ஏராளமான திரவியத்தை செல

விட்டனர். விசேஷத் திருநாள்களில் பிரிட்டிஷ் இராணுவ மரியாதைக் குண்டுகள் போடப்பட்டன. செதில் குத்தியாடுதல், உடன்கட்டை யேறுதல் முதலிய பயங்கரமான சடங்குகளையும் பிரிட்டிஷாரே முன்னின்று நடத்தினர். இச்செலவுகளுக்காக யாத்திரை வரி என்று ஓர் வரி விதிக்கப்பட்டது. இதனால் கம்பெனியாருக்குப் பெருத்த லாபம் வந்தது. 1862–ஆம் தான் கடைசியான கோவில் கம்பெனியார் கையினின்று ஜனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டது.

(2) எந்த மிஷனெரியும் தங்கள் எல்லைக்குள் வரக் கூடாதென்று கண்டிப்பாய்க் கட்டளையிட்டனர்.

கேரி என்னும் மிஷனெரி ஒரு அவுரி பயிரிடுகிற தோட்டக்காரனாக வந்துசேர்ந்தார். அவர் இந்நிலைமையில் கிறிஸ்தவ ஊழியம் செய்ய முடியவில்லை என்பதைக் கண்டபோது, கல்கத்தாவுக்கு 12 மைலுக்கப்பாலுள்ள டென்மார்க்குக்குச் சொந்தமான சிராம்பூர் பட்டணத்தில் குடியேறி, அங்கே தம் ஊழியத்தைச் செய்துவந்தார். பிரிட்டிஷாரும், அமெரிக்கருமான அநேக மிஷனெரிமார் இந்தியாவிற்குவர, அவர்களைக் கம்பெனியார் உடனே திருப்பியனுப்பிவிட்டார்கள். இந்த அநியாயமான கோட்பாடு 1813–ஆம் தான் நிறுத்தப்பட்டது.

(3) சுதேசக் கிறிஸ்தவர்களை சர்க்கார் உத்தியோகத்தில் வைக்கப்படாதென்று கம்பெனியார் தடுத்தனர். சுதேசக் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக இந்து சட்டங்கள் உபயோகமாயின.

இவ்வாறு இந்தியாவில் ஆரம்பமான இங்கிலீஷ் அரசாட்சி கிறிஸ்துமத அபிவிர்த்திக்கு மிக்க விரோதமாயும், ஹிந்து மதத்துக்கு மிக்க உதவியாயும் இருந்தது.

இக்காலத்தில் தோன்றின புத்துணர்ச்சிகளையும் மதக் கிளர்ச்சிகளையும் நாம் ஆராய்ச்சி செய்யும்பொழுது இரண்டு விஷயங்களை நாம் நோக்கவேண்டும். இவை,

ஆங்கிலக்கல்வியும் கிறிஸ்தவ மிஷன்கள் மூலமாயுண்டான கிறிஸ்துமத பிரஸ்தாபமும். இவை இரண்டும்

மிகவும் விசேஷமானவை. மேலும் இவை இரண்டின் பயனாகத்தான் இந்தியாவில் நமது ஆராய்ச்சிக்குட்பட்ட இக்காலத்தில் பலவிதமான மத எழுச்சிகள் தோன்றின. ஆகையால் இவ்விரண்டு விஷயங்களையும் நாம் சிறிது விரிவாய் ஆராய்ச்சிசெய்தல் நலம்.

(1) ஆங்கிலக்கல்வி.—வர்த்தக சங்கத்தாராகிய ஈஸ்ட் இந்திய கம்பெனியார் தேசத்தை ஆளும் சர்க்காராக மாறிக்கொண்டு வந்த காலத்தில், அவர்கள் தேசத்தின் கல்வியைப்பற்றியும் கவனம் செலுத்த ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் கல்வி சுதேசபாஷைகளில் கொடுக்கப்பட்டது. விசேஷமாய் இந்துஸ்தானி பாஷையே பாராட்டப்பட்டது. காலாகாலத்தில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் பலர் இங்கிலீஷ் படிக்க ஆரம்பித்தனர். இங்கிலீஷ் படித்தவர்களுக்கு சர்க்காரில் உயர்ந்த பதவி கிடைத்ததினால் அநேகர் இங்கிலீஷ் படிக்க ஆரம்பித்தனர். சில விசேஷ பட்டணங்களில் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இங்கிலீஷ்கார உபாத்தியாயர்கள் இதற்கு நியமிக்கப்பட்டனர். காலாகாலத்தில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஓர் இங்கிலீஷ் பாடசாலை ஏற்படுத்தப்பட்டது. அதற்கு ஜில்லா ஸ்கூல் என்று பெயர். அப்பால் சிப்பாய் கலகத்திற்குப் பிறகு இந்தியாவின் அரசாக்ஷி ஆங்கில மன்னர்களுக்குக் கீழ்ச்சென்ற பின்னர், ஆங்கிலக்கல்வி அதிகமாய் விருத்தியடைந்தது. இந்தியாவிலுள்ள மூன்று இராஜதானிப் பட்டணங்களிலும், (சென்னபட்டணம், பம்பாய், கல்கத்தா), சர்வகலாசாலைகள் நியமிக்கப்பட்டன. ஜில்லாப்பள்ளிக்கூடங்களில் கற்றுத்தேறிய மாணுக்கர் இந்த சர்வகலாசாலைகளுக்குச் சென்று, அங்கே சகலவிதக் கல்விகளையும் ஆங்கிலத்தில் அடைவாராயினர். பூகோள சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், உயர்தர கணிதம், இயற்கை சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், வைத்தியம் முதலிய சாஸ்திரங்களை அதிநுட்பமாய் ஆராய்ச்சி செய்தனர். இவைகளைக் கற்ற மாணுக்கர் தாங்கள் அனுசரித்த மதங்களின் புராண இதிகாச கதைகளையும், இதரக் கோட்பாடுகளையும் கைவிட ஆரம்பித்தனர். இந்தியாவில் பலவிதமான

மதக்கிளர்ச்சிகள் தோன்றுகிறதற்கு ஆங்கிலக்கல்வி விசேஷ காரணம்.

2. கிறிஸ்துமதப் பிரச்சாரம். இதுவே இரண்டாவது காரணம், இந்தியாவில் அதிபூர்வகாலந் தொடுத்தே கிறிஸ்துமதம் இருந்திருக்கிறது. ஆங்கிலர் ஜெர்மானியர் முதலிய ஜாதியார் அக்ஞானிகளாயிருந்த காலத்திலேயே இந்தியாவின் பல பாகங்களில் கிறிஸ்துமதம் செழித்திருந்தது. அப்பாகங்களில் ஒன்ருகிய மலையாளக்கரையில் கிறிஸ்துமதம் இன்றையவரைக்கும் இடையீடில்லாமல் நிலைத்திருக்கிறது. கம்பெனியார் இந்தியாவிற்கு வந்தபோதோ பலவேறு காரணங்களினுல் ஜனங்கள் கிறிஸ்துமார்க்கத்தை நேர்மையாய்ப் பாராட்டவில்லை. ஜனங்களின் பிரியவீனத்தை அடைவதற்கு மனமற்றிருந்த கம்பெனியார் கிறிஸ்துமதத்திற்கு விரோதமாய் தாங்கள் செய்யக்கூடியதை யெல்லாம் செய்தனர். இந்தியாவுக்கு வந்த மிஷனெரிகளை யுடனே அடுத்த கப்பலில் ஏற்றி சொந்த தேசத்திற்கு அனுப்பிவிட்டனர். இது காரணம்பற்றி பூர்வீக மிஷனெரிமார் குடகு, கொச்சி, மலையாளம், திருவாங்கூர் முதலிய சுதேச ராஜ்ஜியங்களுக்கும், போர்த்துக்கேசியர், பிரெஞ்சுக்காரர், டென்மார்க்கர், டச்சுக்காரர் பட்டணங்களுக்கும் சென்று அங்கே கிறிஸ்துமதத்தைப் பிரஸ்தாபம் செய்தார்கள். பார்லிமெண்ட் இவ்விஷயத்தை யோசித்து மிஷனெரிமார் பிரசங்கிப்பதைத் தடுக்கக்கூடாதென்று கட்டளையிட்ட பின்னர்தான் மிஷனெரிமார் இந்தியாவில் பல இடங்களிலும் சென்று பிரசங்கித்தார்கள். அதுமுதல் கிறிஸ்துமார்க்கம் இந்தியாவில் எங்கும் பிரசங்கிக்கப்பட்டுவந்தது. இப்பிரசங்கத்தைக் கேட்டவர்களின் மனதில் உண்மையாகவே ஓர்வித உணர்ச்சி யுண்டானது. பிரசங்கங்களின் மூலமாகவோ, தனித்த சம்பாஷணைகளின் பலனுகவோ, பத்திரிகை மூலமாகவோ, பள்ளிக்கூட வேலையின் பலனுகவோ, கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றி ஆயிரக்கணக்கான பேர் அறியலாயினர். கிறிஸ்துமதத்தையும் தங்கள் மதத்தையும் ஒத்துப்பார்க்க ஆரம்பித்தனர். படிப்பாளிகளான உயர்ந்த ஜாதி ஹிந்துக்கள் கிறிஸ்தவ

வேதாகமத்தை உண்மையாய் ஆராய ஆரம்பித்தனர். இப்படிப்பட்டவர்களில் அநேகர் மத உணர்ச்சியை யடைந்து தங்கள் மார்க்கத்தைச் சீர்திருத்தவோ அல்லது புதிய மார்க்கத்தை ஸ்தாபிக்கவோ ஆரம்பித்தனர்.

இவ்வித மதக்கிளர்ச்சிகளில் சில சம்பூரணமான சீர்திருத்தங்களாகும். அதாவது தங்கள் பழைய மார்க்கத்தில் முக்தி கிடைத்தல் அரிதென்று நினைத்து, சீர்திருத்தத்தை நாடுதல். சில முயற்சிகள் தங்கள் பழைய மத பக்தியை விடாமல், சிற்சில குறைவுகளைமட்டும் சீர்திருத்த முயலுதல். வேறு சில முயற்சிகளோ தங்கள் பூர்வீக மார்க்கத்தில் எவ்வித பழுதுமில்லையென்று எடுத்துரைத்ததற்கு எழும்பிய கிளர்ச்சிகள். இவையன்றி தேசீக சேவை, ஜனசமூக ஊழியம் முதலியவை காரணமாக எழும்பிய கிளர்ச்சிகளும் உள. இவற்றின் தொகை அநேகம். இவற்றுள் சில மிகவும் பெரியவை. சில ஒவ்வொரு மாகாணத்திற்கே உரியவை. இனி இந்த மதக் கிளர்ச்சிகளை ஒவ்வொன்றாய் ஆராய்ச்சி செய்வோம்

## I. பிரமசமாஜம்.

ராஜா ராம மோஹன ராயர்.

இதன் ஸ்தாபகர் ராமமோகனராயர் 1772–1833. 19–ம் நூற்றாண்டில் இந்து ஜனசமூகத்தில் தோன்றிய சகல உணர்ச்சிகளுக்கும் இவரே முதல்காரணமாவார். ஜாதியில் பிராமணர். இவரின் முன்னோர் வங்காள நவாப்புகளுக்கு மந்திரியாக இருந்தவர்கள். இவரின் தகப்பன் சைதன்ய வைஷ்ணவர். தாய் சக்திமதத்தைச் சார்ந்தவள். இவ்வாறாக இவருடைய பெற்றோரிருவரும் வெகு பக்தியுள்ளவர்கள். சிறு பையனாக யிருக்கும்போதே இவருக்கு விவாகம் செய்துவைத்தனர். சிசுவாக இருந்த மனைவி இறந்த பின், இவருக்கு வேறு இரண்டு சிறு பெண்களை விவாகம் செய்துவைத்தனர்.

இவருக்கு 12 வயதாயிருக்கும்போது பாடலிபுரத்திலுள்ள மகமதிய கலாசாலையில் கல்விபயிற்சி யடைய

அனுப்பப்பட்டார். அக்கல்வியின் பயனாக அவர் சர்க்கார் உத்தியோகத்தில் பிரவேசிக்கக்கூடும். மகமது மார்க்கத்தின் செல்வாக்கு இவர்மேல் அதிகமாய்ச் சென்றது. தமது 15-ம் வயதில் இவர் வீட்டுக்குத் திரும்பிவந்தார். விக்கிரகாராதனை விஷயத்தில் தம்க்கும் தகப்பனாருக்கும் விவாதமுண்டானபோது இவர் வீட்டைவிட்டு புறப்பட்டு, சில வருஷங்களாக அங்குமிங்கும் அலைந்து திரிந்தார். அப்பால் தம் தகப்பனாரோடு ராசியாகி காசிக்குச் சென்று, அங்கு சமஸ்கிருத புஸ்தகங்களைப் படித்தார். அதன்பின் இங்கிலீஷ் படிக்க ஆரம்பித்தார். இதற்கப்பால் அவர் ஜான் டிக்பி என்னும் ஓர் ஆங்கிலேய துரையின் உதவியால் ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் வேலையில் கலெக்டர் உத்தியோகம் வகித்தார். இக்காலத்தில் இங்கிலீஷ் பாஷையையும் ஆங்கிலேய புஸ்தகங்களையும் படித்தார். மதசம்பந்தமான ஆராய்ச்சியை வெகு மும்முரமாய் நடத்தினார். ஹிந்துக்கள் ஜையினர் முதலியவர்களோடு பலவித தர்க்கங்களை நடத்தினார். இதற்கப்பால் அவரின் தாயார் அவருக்கு விரோதமாகத் திரிந்து இவரை துன்பப்படுத்த, இவரின் இரண்டு மனைவியரும் இவருடன் வாழ மறுத்துவிட்டனர். சர்க்கார் உத்தியோகத்தில் இவருக்கு திரண்ட சொத்துண்டானது. அதோடு ஆங்கிலேய பாஷையில் அபிவிர்த்தியும் உண்டானது.

1816-ம் வருஷத்தில் இவர் கல்கத்தாவுக்கு வந்து, தனது ஜீவியத்தின் மிகுதியான பாகத்தையெல்லாம் மதவிஷய சீர்திருத்தத்தில் செலவிட தீர்மானித்தார். ஆத்மீய சபை என்ற ஓர் சபையை ஸ்தாபித்து, அதிலே ஹிந்து வேதபாராயணம் முதலியவற்றை நடத்தினார். சில காலத்துக்குப்பின் இச்சபை நின்றுபோனது. அதற்கப்பால் உபந்நியாசங்கள் செய்தார். வேதாந்த சூத்திரத்துக்கு ஆங்கிலத்தில் ஒரு மொழிபெயர்ப்பு எழுதினார். இவரின் சித்தாந்தப்படி உபநிடதங்களில் கற்பிக்கப்படுவது சுத்த ஏகேஸ்வரவாதம். விக்கிரகாராதனை கிடையாது. ஆகையால் ஹிந்துக்கள் யாவரும் தங்கள் பூர்வீக சுத்த மதத்துக்கு திரும்பவேண்டுமென்றே போதித்

தார். இதினால் அவருக்கு மிகுந்த உபத்திரவம் உண்டாயிற்று. இந்த உபத்திரவங்கள் அனைத்தையும் ராஜா ராமமோஹன ராயர் வெகு பொறுமையுடன் சகித்து வந்தார்.

இக்காலத்தில் அவருக்கு சிராம்ப்பூர் மிஷனெரிமார்களுடன் சிநேகம் ஏற்பட்டது. அவர் கிறிஸ்து மதத்தை அதிக முயற்சியாப் படித்தார். இதற்காக எபிரேய கிரேக்க பாஷைகளையும் கற்றார். கிறிஸ்துமத ஆராய்ச் செய்ததின் பலனாக அம்மார்க்கத்தின்மேல் இவருக்கு விசேஷ பற்றுதல் உண்டானது. உலகத்திலுள்ள வேறெந்த மார்க்கத்தைப் பார்க்கிலும் கிறிஸ்து மார்க்கமே சன்மார்க்கப் பிரமாணத்திற்கு அமைந்தது என்றும், புத்தி சித்தமுள்ள மனுஷஜாதியாருக்குப் பிரயோஜனம் உள்ளது என்றும் உணர்ந்தார். இந்த உணர்ச்சியை தம்மட்டில் அடக்கிவைக்காமல் அவற்றை புஸ்தகவாயிலாக பிரஸ்தாபம் பண்ணினார். இப்படிப்பட்ட ஓர் புஸ்தகம் விசேஷமானது. அதற்கு சமாதானத்திற்கும் பாக்கியத்திற்கு அனுகூலமான இயேசுகிறிஸ்துவின் பிரமாணங்கள் எனப்பெயர். சுவிசேஷங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பாகங்கள் அடங்கியது. ஆனால் ராமமோகனராயர் இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத்தை

---

* சிராம்பூர் என்பது கல்கத்தாவுக்கு மேலே பன்னிரண்டு மைல் தூரத்தில் ஹுக்ளி நதிக்கரையில் உள்ள ஓர் புராதான நகரம். இதற்கு ஸ்ரீராமபுரி என்பது பழைய பெயர். ஈஸ்ட் இந்தியக் கம்பெனியார் காலத்தில் இது டென்மார்க்கு தேசத்துக்குச் சொந்தமான ஒரு வியாபார ஸ்தானம். இந்தியாவுக்கு வந்தமுதல் ஆங்கிலேய மிஷனெரியாகிய கேரி ஐய்யர் பிரிட்டிஷ் எல்லைக்குள்ளே மிஷனெரி வேலைசெய்யக் கூடாதென்று கண்டிப்பான தடை ஏற்படுத்தப்பட்டிருந்ததால், அந்நிய ஜாதியாருக்குச் சொந்தமான இந்த சிராம்ப்பூருக்கு வந்து இங்கே சுவிசேஷவேலையைத் துவக்கி வெகு சித்தியோடு செய்துவந்தார். மார்ஷ்மன், வார்ட் என்னும் இருவரும் கேரி ஐயருக்கு விசேஷ உதவிபுரிந்து வந்தனர். இவர்களால் ஸ்தாபிக்கப்பட்டதுதான் சிராம்ப்பூர் கலாசாலை. அக்காலத்தில் டென்மார்க் அரசராக இருந்த மாட்சிமை தங்கிய பிரடரிக் மகாராஜா உயர்தர கல்விக்குரிய பட்டங்கள் அளிக்கும் உரிமையை (Degrees in Theology, Arts and Science) சிராம்பூர் கலாசாலைக்குக் கொடுத்திருந்தார். சமீபகாலத்தில் கனம் ஜியார்ஜ் ஹவல்ஸ் பண்டிதருடைய (Geo. Howells, M.A., B.D., Ph.D.) அரும்பெரும் முயற்சியால் இக்கலாசாலை திரும்பவும் புனருத்தாரணம் செய்யப்பட்டது. வங்காள சட்ட நிரூபண சபையில் இதைப்பற்றி ஒரு சட்டம் நிறைவேறினது. (The Serampore College Act of Bengal). இதன் பலனாக இது ஓர் சர்வகலாசாலையாகி (University) வேதசாஸ்திரப் பட்டங்களை அளித்து வருகின்றது.

நம்பவில்லை. அவரின் சிஷர் அவரை தப்பிதமாய் விளங்கி கொண்டார்கள் என்பது இவரின் கொள்கை. ஆகையால் இவருக்கும் சிராம்ப்பூர் மிஷனெரிமார்களுக்கும் பலத்த விவாதம் உண்டானது. ராமமோஹனராயர் பொதுவான கல்வியிலும், ஹிந்துகுடும்ப சீர்திருத்தத்திலும் அதிக சிரத்தை கொண்டார். கல்கத்தாவில் பெரிய ஆங்கில கலாசாலை உண்டாவதற்கு முயற்சித்தார். ஜாதிவித்தியாசம் தப்பு என்று உணர்ந்தார். ஆயினும் அதை ஒழிப்பதற்கு எவ்வித முயற்சியும் செய்யவில்லை. பலதார விவாகத்தைக் கண்டித்தார். உடன்கட்டையேறல் ஆகாதென்று கூறினார்.

உடன்கட்டை ஏறுதலுக்கு விரோதமாய் இவர் செய்த முயற்சியின் பலனாக 1829-ஆ உடன்கட்டையேறுதல் உல்லியம் பெண்டிங் கவர்னர்ஜெனரலால் நிறுத்தப்பட்டது. இதற்கப்பால் சிராம்ப்பூர் மிஷனெரிமார் வேதாகமத்தை சுதேசபாஷையில் திருப்புகிற விஷயத்தில் இவர் அவர்களுக்கு மிகவும் உதவிசெய்தார். ஆயினும் பல தர்க்கங்களும் குழப்பங்களும் இது விஷயத்தில் உண்டானது. மிஷனெரிகளில் ஒருவரான ஆதாம் என்றவர் பிரிந்து ராமமோஹனரை சேர்ந்துகொண்டார். இருவருமாக ஒரு *யூனிட்டேரிய மிஷனை ஸ்தாபித்தார்கள். இதில் ஐரோப்பியர்களும் இந்தியர்களும் சேர்ந்தனர். ஞாயிறுதோறும் இங்கிலீஷில் ஆராதனை நடைபெற்றது. அச்சுயந்திரசாலை ஸ்தாபிக்கப்பட்டது. கல்வி அபிவிர்த்திக்காக பல முயற்சிகள் நடைபெற்றன. ஆயினும் ராமமோஹனராயரும் ஆதாம்பாதிரியாரும் ஒத்துவராததால் இம்மிஷன் நின்றுபோயிற்று.

---

* யூனிட்டேரிய மதம் (Unitarian Christianity) என்பது கிறிஸ்துமதத்தில் ஒரு பிரிவு. பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்னும் மூவரும் ஒன்றுதான் என்னும் திருத்துவ உபதேசத்தை ஒப்புக்கொள்ளாமல் பிதா ஒருவரே கடவுள் என்றும் இயேசுநாதரிடத்தில் தெய்வீகம் இருக்கிறதே யொழிய தெய்வதத்துவம் இல்லையென்றும் பரிசுத்தாவி மனிதர்களிடத்தில் கடவுள் செய்கிற கிரியையே யொழிய பிரத்தியேகமான புருஷர் அல்ல என்றும் இவர்கள் கூறுவர். இவர்களுக்கு ஏகத்துவ மதத்தினர் என்று பெயர். இவ்வாறு இவர்கள் சாதித்தாலும் இயேசுநாதர்மேல் மிகுந்த பக்தியும் உயர்ந்த மதிப்பும் உடையவர்கள். இயேசுநாதர் பாபிகளின் இரக்ஷகர், உலகத்துக்கு மீட்பர், யாவருக்கும் வழிகாட்டி, அவரே கர்த்தர்; ஆயினும் அவர் கடவுளல்ல என்பது இம்மதத்தினருடைய சித்தாந்தம்.

அப்பால் 1828-ஆம் ராமமோஹனரும் அவரின் சிநேகிதரும் கல்கத்தாவில் ஒரு வீடு வாடகைக்கு அமர்த்தி, பிரமசமாஜம் என்னுமோர் சபையை ஸ்தாபித்தனர். மூன்று செல்வவான்கள் இவருக்குதவினர். மூவரில் ஒருவர் துவாரகநாதத்தாகூர். இந்த சமாஜம் சனிக்கிழமை இரவு 7 மணிமுதல் 9 மணிவரை நடைபெற்றது. முதலாவது சமஸ்கிருதத்தில் உபநிஷதங்கள் பாடப்பட்டன. இதை பிராமணர் மட்டும் ஓர் திரைக்கு உட்புறமிருந்து பாடினர். அப்பால் இந்த உபநிஷதங்கள் வங்காள பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டன. வங்காள பாஷையில் ஓர் பிரசங்கம் நடைபெற்றபின் ராமமோஹனரும் அவரின் சிநேகிதரு மியற்றிய பாட்டுகளை பாடுவார்கள். இவைகள்தான் ஆராதனை ஒழுங்குகள். சமாஜத்திற்கு வேறு எவ்விதமான ஒழுங்கும் கிடையாது. யாரும் இக்கூட்டத்திற்குப் போகலாம். 1830-ஆம் பிரமசமாஜத்திற்கென்று ஒரு கட்டடம் கட்டப்பட்டது. அதன் தஸ்தவேஜில் கீழ்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:—யாவரும் எவ்வித வித்தியாசமுமின்றி இவ்விடத்தில் அமைதியாகவிருந்து, நித்தியரும், அறியக்கூடாதவரும், அழிவில்லாதவருமாய், இவ்வுலகங்களுக்கெல்லாம் சிருஷ்டிகர்த்தாவுமாயிருக்கிற கடவுளை வணங்கிச் செல்லலாம். ஆனால் இத்தெய்வத்திற்கு எவ்வித பெயரும் இடப்படாது. இக்கட்டிடத்திற்குள் எவ்வித வார்ப்பு சிலையாவது, கற்சிலையாவது, மரவெட்டுச் சித்திரமாவது, படங்களாவது கொண்டுவரப்படக்கூடாது. எவ்வித பலியும் இவ்விடத்தில் உதவாது. உயிருள்ளனவும் உயிரற்றதுமான எவ்வித ஜீவஜந்தையாவது, இவ்விடத்தில் வணங்கப்படாது. யாரையும் தீதாய்ப் பேசக்கூடாது, சர்வலோக கர்த்தாவாகிய ஈஸ்வரனின் தியானத்திற்கும், பக்திக்கும் அநுகூலமாகயிருக்கக்கூடிய பிரசங்கங்களையே இவ்விடத்தில் செய்யவேண்டும், என்பதே.

1830-ஆம் ராமமோஹனர் இங்கிலாந்துக்குச் சென்றார். பிரிட்டிஷாரிடத்து பென்ஷன் வாங்கிவந்த மொகலாய வம்சத்தைச்சார்ந்த ஒருவர் இவரை இங்கிலாந்துக்கு தன் விஷயமாயனுப்பி, அவருக்கு ராஜா என்ற பட்டத்

தையும் கொடுத்தார். ராஜாராமமோஹனராகிய இவர் தான் இங்கிலாந்து போன முதல் ஜாதி இந்து ஆவர். இவர் இங்கிலாந்திலிருந்தபோது பிரிஸ்டல் பட்டணத்தில் இறந்துபோனார்.

தேவேந்திரநாதத்தாகூர்.

இவருக்கப்பால் சமாஜத்தின் காரிய நிர்வாகத்தை வகித்தவர் தேவேந்திரநாதத்தாகூர் என்பவர். இவர் துவாரகநாதத்தாகூர் என்ற பிரபுவின் புதல்வர். ராமமோஹனரைப்போலவே இளம்பிராயத்தில் ஆத்தும விஷயமாய் பல முயற்சிகளைச் செய்தவர். அப்பால் இவரும் இவரது சிநேகிதரும் தத்துவபோதினி என்ற ஓர் சபையை ஸ்தாபித்தனர். சில வருஷங்களுக்கு அப்பால் இவரும் இவரது சிநேகிதரும் சமாஜத்தைச் சேர்ந்தனர். இவருக்கு விசேஷத்திறமை இருந்தபடியாலும் ஜாதியில் பிராமணனானபடியாலும் இவர் சமாஜத்தின் ஓர் ஆச்சாரியனானார். தத்துவபோதினி பத்திரிகை என்ற ஓர் மாதாந்தரப் பத்திரிகையை பிரசுரித்தார். பிரமசமாஜ மிஷனெரிகளை பயிற்சிசெய்யவும் இப்போது கல்கத்தாவில் அதிக பிரபல்யமாகி நின்ற கிறிஸ்துமதத்தை தடுக்கவும் தத்துவபோதினி பாடசாலை என்ற வேத கலா சாலையை ஸ்தாபித்தார். ஹிந்துமார்க்கம் சுத்தமான மார்க்கம் என்று இவர் நம்பினார். உபநிஷதங்கள்மேல் மிகுந்த உற்சாகமுடையவர். கிறிஸ்துவைப்பற்றி அவ்வளவு விசேஷ மதிப்புடையவரல்லர். இந்தியாவுக்கு கிறிஸ்துமதம் அவசியமில்லை என்பது இவரது நம்பிக்கை. இவர் ஒருபோதும் பைபிள் வசனங்களை எடுத்துரைத்ததாகத் தெரியவில்லை. பிரமசமாஜத்திற்குச் சரியான சட்டங்களும் நிலைவரமான அமைப்பும் இல்லாமல் அது ஒரு வாராந்தக்கூட்டமாக இருக்கிறதை இவர் கண்டு, பிரமசமாஜத்திற்கு ஒரு விசுவாசப் பிரமாணத்தை உண்டுபண்ணினார். அதில் இரண்டு முக்கிய வாக்குகள் உள. 1. விக்கிரஹ ஆராதனையைத் தள்ளுதல். 2. ஈஸ்வரனை நேசித்து அவர் விரும்பும் காரியங்களை மட்டும் செய்தல். இவ்விரண்டு விஷயங்களையும் ஒப்புக்

கொள்ளுகிறவர்கள் மட்டும் பிரமசமாஜத்துக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். அப்பால் ஜெபதியானங்கள் ஏற்பாடாயின.

தேவேந்திரநாதரும் அவருடைய உடன் மிஷனெரிமார்களும் செய்த பெருமுயற்சியின் பயனாக பிரமசமாஜம் கல்கத்தாவிலும் சுற்றுப்புறங்களிலும் மிகுந்த செல்வாக்கு அடைந்தது. ஒரு கஷ்டமட்டும் ஏற்பட்டது. இதுவரை சமாஜத்தில் வேதங்கள் அதிக விசேஷமாய் பாராட்டப்பட்டுவந்தன. ஆனால் இப்போது வேதங்களைப்பற்றிய சந்தேகம் பலருக்கு உண்டாயிற்று. இச்சந்தேகத்தைத் தீர்க்கும்படி நாலு மாணாக்கர் காசிக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் அங்கு சென்று வேதங்களைக் கற்று அவற்றை எழுதிக்கொண்டு வந்தனர். இவர்கள் ஆராய்ச்சியின் பலனாக வேதங்களில் பல தப்பிதங்கள் இருப்பதாகவும், ஆதலால் அவைகளைமாத்திரம் நம்புவது நல்லதல்லவென்றும் தீர்மானித்தனர். ஆகையால் திரும்பவும் வேதங்களைவிட்டு இயற்கையையும் மனச்சாட்சியையுமே விசேஷமாய் பாராட்ட ஆரம்பித்தனர். என்றாலும் உபநிஷதங்கள் மிகுதியாய் மதிக்கப்பட்டன. உபநிஷதங்களிலிருந்து பல பாகங்களைத் திரட்டி அவற்றை ஓர் புஸ்தகமாக தேவேந்திரநாதர் பிரசுரம் பண்ணினார். இதற்கு பிரமதர்மம் என்று பெயர். 1857-ஆ கேசவச்சந்திரசேனன் என்னும் ஓர் வைஷ்ணவன் இச்சமாஜத்தை சேர்ந்தார். சீக்கிரத்தில் இவர் அதிக முயற்சியுள்ளவரானார். தேவேந்திரநாதருக்கும் இவர்மேல் அதிக பிரீதி. இவருடைய செல்வாக்கினால் சமாஜத்தினரின் வீடுகளில் எவ்வித விக்கிரக ஆராதனைக்குரிய சடங்குகளும் நடைபெறக் கூடாதென்று தீர்மானமானது. அவ்வாறே தேவேந்திருடைய வீட்டில், துர்க்கைதேவியின் சிலை அவர் அறையைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டது. அவ்வாறே ஜாதியாசாரம் தப்பிதமென்று உணர்ந்து அதை அகற்றிவிட்டனர்.

தேவேந்திரர் தமது பூணூலை அறுத்து எறிந்துவிட்டார். கிறிஸ்தவ பரோபகாரச் செய்கைகளை சமாஜத்தாரும் செய்யவேண்டுமென்று கேசவர் முயற்சித்ததின்

பலனாக மிகுந்த திரவியம் சம்பாதிக்கப்பட்டு, பஞ்சத்தால் கஷ்டப்பட்டவர்களுக்கு உதவி செய்துவந்தனர். இதற்கப்பால் கேசவர் தாம் வகித்துவந்த உயர்ந்த சர்க்கார் உத்தியோகத்தை விட்டுவிட்டு சமாஜத்தில் ஒரு மிஷனெரியானார். இவர் ஓர் பாபிரமணரல்லாதவராக இருந்தபோதிலும் ஆச்சாரியராக (போதகர்) நியமிக்கப்பட்டனர். பிரமசமாஜத்தின் ஆச்சாரியராயிருந்தாலும் அவர்கள் பூணூல் தரிக்கப்படாதென்று கண்டிப்பான சட்டம் உண்டானது. இதற்கப்பால் சமாஜத்திற்கென்று பிரம வித்தியாலயம் என்ற வேதசாஸ்திர பாடசாலை உண்டானது. இந்திய வர்த்தமானம் என்ற பத்திரிகை பிரசுரமானது. பிரமசமாஜத்தார் சென்னை பம்பாய் முதலிய இடங்களுக்குச் சென்று, பிரசங்கங்கள் செய்து, கிளைச்சங்கங்களை ஸ்தாபித்தனர்.

கேசவரின் முயற்சிகள் மட்டுக்குமிஞ்சிய வேகத்துடன் செல்லுவதாக தேவேந்திரருக்கும், மற்றும் பழைய அங்கத்தினருக்கும் தோன்றியது. ஆத்தும தாகத்திற்குப் பதிலாக ஜனசங்க சீர்திருத்தம் மிகுதியும் பாராட்டப்படுவதாக தேவேந்திரர் முறையிட்டார். ஜாதியாசாரத்தை ஒழித்துவிடுவதும், பல ஜாதிகள் விவாகம் பண்ணிக்கொள்வதும், விதவைகளின் மறுவிவாகமும் இந்தியாவில் பல காரியங்களும் பிரமாணத்தில் நல்லவையாக இருப்பினும், யாரையும் கட்டாயப்படுத்தக் கூடியவை அல்ல என்பது தேவேந்திரரின் கொள்கை. மேலும் கேசவர் கிறிஸ்துமதத்தின்பேரில் மிதமிஞ்சிச் சார்வதாக, தேவேந்திரருக்குத் தோன்றியது. இவ்வாறு இவ்விருவருக்கும், பல விஷயங்களில் மாறுபாடு ஏற்பட்டதின் பலனாக சமாஜத்தில் ஓர் பிளப்பு உண்டானது. 1864-ல் உண்டான பெரும் புயல்காற்றின் பலனாக பிரமசமாஜ ஆலயம் இடிந்துபோனது. ஆகையால் ஆராதனை தேவேந்திரரின் வீட்டில் நடைபெற்றது. பூணூல்தரித்த ஆச்சாரியர்கள் பிரசங்கிக்க தேவேந்திரர் இடங்கொடுத்தார். கேசவரும் அவரின் சிநேகிதரும் சமாஜத்தைவிட்டுப் பிரிந்தனர். இப்போது அவருக்கு வயது 24. இதற்கப்பால் பழைய சமாஜம் ஆதி சமாஜம்

என்னும் பெயரால் நடைபெற்றது. வரவர இந்துமார்க்கம் ஆதிசமாஜத்தின்பேரில் அதிக செல்வாக்கைச் செலுத்தியது. தேவேந்திரநாதர் சிலகாலம் உழைத்த பிறகு இமாலயமலைக்குச் சென்று, அங்கு தியானம் செய்தனர். இவருடைய குணவிசேஷத்தை முன்னிட்டு இவருக்கு மகாரிஷி என்னும் பட்டம் பிரமசமாஜத்தின் பேரால் கொடுக்கப்பட்டது.

### கேசவ சந்திர சேனர்.

இதுமுதல் சமாஜத்தில் அதிக செல்வர்க்குச் செலுத்தியவர் கேசவசந்திரசேனன். இக்காலத்தில் இவர் கிறிஸ்தவ நூல்களை அதிகமாக வாசித்தனர். கிறிஸ்து மதம் இவர்மேல் அதிக செல்வாக்கைச் செலுத்தியது. இவர் வாசித்தவை ராபர்ட்ஸன் ஐயர் பிரசங்கங்கள், சீலிதுரை எழுதிய 'இதோ இந்த மனுஷன்' என்னும் எக்சிஹோமோ (Eccehomo) என்ற புஸ்தகம்.

1866—ஹு 'இயேசுகிறிஸ்து' ஐரோப்பாவும் ஆசியாவும் என்ற ஓர் பிரசங்கம் செய்தார். இதில் கிறிஸ்து ஓர் ஆசியா நாட்டார் என்றும், ஆகையால் ஆசியா நாட்டார் ஐரோப்பியர்களைக் காட்டிலும், கிறிஸ்துவை நன்றாய் விளங்கிக்கொள்ளக் கூடுமென்றும் காட்டி, இந்துக்களும் ஐரோப்பியருமான சகலரும் கிறிஸ்துவின் மேலான சன்மார்க்க விதிகளைக் கைக்கொள்ள வேண்டுமென்று போதித்தார். இவருடைய சீஷரில் அநேகர் கிறிஸ்தவ வேதாகமத்தை வெகு பிரியத்தோடு படிக்க ஆரம்பித்தனர். அநேகர் மிகுந்த சுயவெறுப்புக் காட்டினர். எளியவர்களைப்போல ஜீவித்து கஷ்டமான ஜீவியம் செய்தனர்.

1866—ஹு கேசவர் தமது சங்கத்திற்கு இந்தியா பிரமசமாஜம் அல்லது பரத வர்ஷ பிரம சமாஜம் என்று பெயரிட்டார். பழைய சமாஜத்திற்கு ஆதிசமாஜம் என்று பெயர். பிரமசமாஜத்தாரில் மிகுதியானவர் கேசவரின் சமாஜத்தையே சேர்ந்தனர். இந்தப் பரத வர்ஷ பிரம சமாஜத்திற்கு திட்டமான சட்டங்களும் ஒழுங்குகளுமில்லை. எல்லாம் கேசவரின் கையிலிருந்தது. அப்பால் கேசவர் இந்துக்கள் புத்தர், யூதர், கிறிஸ்தவர், மக

மதியர் ஆகிய இவர்கள் வேதாகமங்களிலிருந்து பல வசனங்களைத்தெரிந்தெடுத்து, சுலோக சங்கீதம் என்னும் பெயருடன் பிரசுரம்பண்ணி, அதை சமாஜத்தின் ஆராதனைகளில் உபயோகித்தார். தேவேந்திரரிடத்திலிருந்து பிரிவுற்றது கேசவருக்கு மனச்சஞ்சலமாயிருந்தது. ஆகையால் அவர் ஈஸ்வர சகாயத்தை மிகுதியும் தேடலானார். இவரும் இவரது உடன் ஊழியரும், பலதினங்களைச் ஜெபத்தில் கழிப்பர். ஈஸ்வர பலத்திற்காகவும், தைரியத்திற்காகவும் ஆவலோடு பிரார்த்திப்பர். சமாஜத்தின் மார்க்க ஜீவியத்தையும் பக்தியையும் அபிவிர்த்தி செய்யும்படியாக, அவர் பல புதிய சடங்குகளை ஏற்படுத்தினார். இவற்றை சைதன்ய வைஷ்ணவ மதத்திலிருந்தும், கிறிஸ்து மதத்திலிருந்தும் தெரிந்துகொண்டார். வைஷ்ணவர்களைப்போல சமாஜத்தினரும் பக்தியை அபிவிருத்திசெய்ய மிகவும் உழைத்தார். இவரது உடன் ஊழியர்களுள் ஒருவரான கிருஷ்ணகோசாமி என்பவர் சைத்தன்யரது உடன்ஊழியர்களின் சந்ததியினர். சங்கீர்த்தனம் என்னும் பஜனைக்கோலத்தை சமாஜத்தில் பழக்கும்படி, கேசவர் கோசாமிக்கு கட்டளையிட்டார். இதன்றி நகர் கீர்த்தனம் என்ற ஊர்கோலங்களையும் அதிகமாய் வழங்கினார். சமாஜத்தின் உபயோகத்திற்காக, ஓர் ஆராதனை ஒழுங்கும் பிரசுரமானது. இரண்டு மூன்று நாட்கள் நடைபெறும் திருவிழாக்கள் ஏற்பாடாயின. இவ்வாறு சமாஜம் ஈஸ்வரபக்தியில் முன்னேறியது. சமாஜத்திற்காக தனிப்பட ஓர் கட்டிடம் கட்டி முடிந்தது.

இதற்கப்பால் கேசவச்சந்திரசேனர் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு பல பிரசங்கங்களைச் செய்தார். கிறிஸ்தவ குடும்பங்களின் செல்வாக்கை இங்கிலாந்தில் இவர் கவனித்தார். பல ஆய்ந்த எண்ணங்களுடன் அவர் இங்கிலாந்தைவிட்டு இந்தியாவுக்குத் திரும்பினார். சமாஜத்தின் அங்கங்கள் ஜனசமூக சீர்திருத்தத்தை ஆதிமுதலாகவே மிகவும் பாராட்டிவந்தனர். பெண்களுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பதிலும், ஸ்திரீகளுக்கு இருந்த பலவித

தடைகளை நீக்குவதிலும், இவர்கள் அதிக உழைப்புள்ளவர்கள். பிரம பெண்களுக்கென்று ஓர்வகையான உடை தயாரிக்கப்பட்டது. விவாகத்திற்கென்று ஆராதனை முறைகளும் சடங்குகளும் நியாமிக்கப்பட்டன. இது கிறிஸ்தவ முறையைப்போலவே இருந்தது. சிசு விவாகம் மறுக்கப்பட்டது. விதவைகளுக்குத் திரும்பவும் விவாகம் செய்தனர், பலஜாதி விவாகங்களும் சில நடந்தன. பிரமசமாஜத்தார்க்கென்று 1872-ஞ் ஒரு விவாக சட்டம் சர்க்காரால் ஏற்பாடானது.

இந்த ஆக்டு உண்டானதிலிருந்து இதர ஜனசமூக சீர்திருத்தங்களுக்கு புது ஊக்கம் பிறந்தது. கேசவர் பெண்களின் கல்விக்காக ஒரு நார்மல் பள்ளிக்கூடத்தையும், பையன்களுக்கு ஒருதொழில் பள்ளிக்கூடத்தையும் ஸ்தாபித்தார். இந்த சமாஜத்தின் மிஷனெரிமார் தேசமெங்கும் சுற்றித்திரிந்து பிரசங்கம் பண்ணிவந்தனர். ஆயினும், சமாஜத்தில் ஐக்கியக்குறைவு ஏற்பட்டது. பெண்களுக்கு ஆண்களைப்போலவே பி.ஏ., எம்.ஏ., படிப்புக்கற்றுக்கொடுப்பது கேசவருக்குப் பிரியமில்லை. சமாஜத்தின் ஓர் பகுதியார் தங்கள் பெண்மக்கள் உயர்ந்தரக் கல்வி கற்றுக்கொள்ள விரும்பினர். மேலும் கேசவர் சமாஜத்தில் மிதமிஞ்சிய அதிகாரம் வகிப்பதாகவும் சிலர் நினைத்தனர். தமது பிரசங்கமும் ஜீவியமும் மற்றவர்கள்மேல் அதிக செல்வாக்கு செலுத்தியதினால், தாம் மற்றவர்களைவிட விசேஷித்தவர் என, அவரும் நினைத்தார். அவருடைய விசேஷ சீஷர் அவரின் பாதத்தில் வீழ்ந்து அவரை வணங்குவார்கள். இதெல்லாம் பிறருக்குப் பிடிக்கவில்லை. கடைசியாய்க் கேசவர் ஆதேசம் என்னுமோர் கொள்கையை விர்த்திபண்ணினார். அதன்படி ஈஸ்வரன் தமக்கு விசேஷ வெளிப்படுதல்களை அருளிச்செய்ததாக அவர்தாமே கூறிவந்தார். இதினால் ஐக்கியக்குறைவு அதிகப்பட்டது. இதெல்லாம் இவ்வாறிருப்பினும் பொதுவாகக் கேசவரின் செல்வாக்குக் குறையவில்லை. இக்காலத்தில் இவர் கல்கத்தாவிலிருந்த ராமகிருஷ்ணபரமஹம்சா என்னும் சன்னியாசியோடு விசேஷப் பழக்கமுள்ளவராய், அவருடன் சம்பா

ஷித்து, அவரிடமிருந்து அநேக க்ாரியங்களைக் கற்றுக் கொண்டார். சமாஜத்திலிருந்த ஐக்கியக்குறைவு அதிகப்பட்டு சமாஜம் பிளவுபடத்தக்கதாய் ஒரு காரியம் நடந்தது. அது யாதெனில்:

வடவங்காளத்திலுள்ள குச்பீஹார் சமஸ்தானத்து ராஜகுமாரனுக்கு சர்க்கார் ஆங்கிலக்கல்வி கற்றுக்கொடுத்து, அவர் இங்கிலாந்துக்குப் போகும்படி ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் அவரின் தாயார் ராஜகுமாரன் இங்கிலாந்து போகுமுன் கல்லியாணம் செய்து கொண்டு போகவேண்டுமென்று கேட்டபடியால், சர்க்கார் அவருடைய படிப்புக்கு ஏற்கப் படித்தபெண்ணைக் கல்யாணம் செய்விக்கும்படி விரும்பி, கேசவரின் மகளைக் விவாகம்பேச ஆரம்பித்தனர். கல்யாணத்திற்குப் பல தடைகளிருந்தன. கேசவரின் மகள் விவாக ஆக்டபடி வயதிற்குக் குறைந்தவள். சிசுவிவாகம் ஆகாதென்பது பிரமசமாஜத்தின் கொள்கை. குச்பீஹார் ராஜகுடும்பம் விக்கிரக ஆராதனைக்காரர். ஆகையால் இக்கல்யாணம் நடப்பது கூடாதென்பது சமாஜத்தின் பொது எண்ணம். ராஜகுமாரன் தாம் ஒரு மனைவிக்குமேல் கல்யாணம் செய்வதில்லையென்று வாக்குக் கொடுத்தார். விவாகச் சடங்கில் விக்கிரகாராதனைக்குரிய அம்சங்கள் நீக்கப்படுமென்றும், ராஜகுமாரன் இங்கிலாந்து போய்வந்த பின்தான் இவ்விருவரும்கூடி வாழ்வார்களாகையால் இது ஒரு நிச்சயார்த்தமே என்றும் அக்காலத்திலிருவரும் வயதுக்கு வந்துவிடுவார்களென்றும் சர்க்கார் கூறினர். கேசவருக்கு இதைப்பற்றித் திகைப்பாக இருந்தது. அப்பால் அவர் திடீரென்று கடவுள் ஆதெஸ் என்னும் வெளிப்படுத்தல்மூலமாய் இக்கல்யாணத்தை நடத்தும்படித் தமக்கு உத்திரவு கொடுத்ததாகச் சொல்லி, கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வாராயினர்.

விவாகம் முழுவதும் ஒரு ஹிந்து விவாகத்தைப்போலவே யிருந்தது. விக்கிரக ஆராதனைக்குரிய பல சடங்குகள் பந்தலில் மும்முரமாய் நடைபெற்றன. கேசவரும் அவரின் மகளும் அச்சமயத்தில் அவ்விடத்தை

விட்டு எழுந்து போய்விட்டாலும், மாப்பிள்ளைக்குமுன் ஹிந்து புரோகிதர் சகல சடங்குகளையும் நடத்தினார். கல்கத்தாவில் இதுகாரணமாகப் பெரிய அதிர்ச்சி உண்டானது. கேசவரின் விரோதிகள் அவரைத்தள்ளிச் சமாஜத்தின் கட்டிடங்களைக் கைப்பற்ற முயன்றனர். அது முடியாதபோது அவர்கள் சமாஜத்தைவிட்டு விலாகிப் போயினர். மிஷனெரிமார்களும் சில விசேஷித்த சிநேகிதர்களும் தவிர மிகுதியான பாகம் விலகிக்கொண்டது. மற்ற மாகாணங்களிலுள்ள கிளைச்சங்கங்களும் விலகிவிட்டன. இவைகளெல்லாம் ஒன்றுபட்டு சாதாரண பிரமசமாஜம் என்ற பெயருடன் நடைபெற்றது. யாராவதொருவர் மிதமிஞ்சிய அதிகாரம் செலுத்தாதபடிக்கு சமாஜத்திற்கு ஒரு திட்டவட்டமான சட்டம் ஏற்பட்டது. அநேக மிஷனெரிமார் நியமிக்கப்பட்டார். அவர்களில் பண்டித சிவநாத சாஸ்திரி என்பவர் விசேஷித்தவர்.

இவ்வாறு சமாஜம் திரும்பவும் பிளவுபட்டாலும் கேசவரின் ஊக்கம் குறையவில்லை. தமது சமாஜத்திற்கு (New Dispensation) புதிய ஏற்பாடு என்று பெயரிட்டார். ஈஸ்வரன் பூர்வகாலத்தில் அநேக ஏற்பாடுகளை அருளினார். இப்பொழுதோ கேசவர் மூலமாய் இந்தப் புதிய ஏற்பாட்டை அருளிச்செய்கிறார். இதில் சர்வ மதங்களும் சமரசப்படுகின்றன. சர்வ மனிதருக்கும் இதுவே சமரஸாலயம். அவரும் அவரது மிஷனெரிமாரும் இந்தப் புதிய சபைக்கு அப்போஸ்தலர். 1881-ஞு இவர் தமது பன்னிரு சீஷரும் தன்னைச் சுற்றிநிற்க நவ விதானம் என்னும் எழுத்துக்கள் வரையப்பெற்றிருந்த ஒரு கொடியின்கீழ் நின்றனர். அக்கொடியில் ஹிந்து வைஷ்ணவ நாமம், கிறிஸ்தவ சிலுவை, இஸ்லாமியச் சந்திரப்பிறை, எழுதிவைக்கப்பட்டிருந்தன. அவருக்கு முன்னிருந்த மேஜையின்மேல் ஹிந்து, புத்த, கிறிஸ்தவ, மகமது மர்க்கங்களாகிய நாலு மதங்களின் வேதாகமமும் வைக்கப்பட்டிருந்தன. அதுமுதல் இந்த பிரமசமாஜப் பிரிவுக்கு நவவிதான சபை என்று பெயர் வழங்கிற்று. இக்காலமுதல் கேசவர் தமது சபையில் அநேக நூதன காரியங்களை சேர்க்க முயற்சித்தார். அவையாவன:—

(1) ஆதேசம் என்னும் கொள்கையின் விருத்தி. இதின்படி இவருக்கு அவசியமாயிருந்தகாலத்தில், கடவுளின் சமுகத்தை அடைந்து, தியானத்திலமர்ந்து, அங்கிருந்து தாம் வெளிப்படுதலே அடைந்ததாகக் கூறினர். உலகத்தின் சகல பாகத்திலும் எழும்பிய பெரியவர்களின் சரித்திரத்தைத் தியானித்து, அதாவது தியானஸ்தல யாத்திரை செய்து, அவர்களின் ஜீவியத்தாலும், உபதேசத்தாலும் ஆகிய நன்மைகளே அடையவேண்டும் என்பது இதன் கருத்து.

(2) ஹிந்துமார்க்கத்திலிருந்தும் பல புதிய கொள்கையை எடுத்துக்கொள்ளப்பட்டன. விசேஷமாய் 1875-ஹு ராமகிருஷ்ண பரமஹம்சா என்ற பரம சாதுவோடு இவர் சிநேகங்கொண்டு, அக்காலத்தில் அவரின் உபதேசத்தில் பலவற்றை புது பிரமசமாஜத்தில் நுழைத்தார். இவற்றிலொன்று ஈஸ்வரன் நமது மாதாவென்பது. ஹோமம் ஆலாத்தி என்னும் சடங்குகளே ஏற்றுக்கொண்டார். சைத்தன்ய மதத்தினருடைய நடனம்போன்ற நடனத்தை ஒப்புக்கொண்டார்.

(3) கிறிஸ்துமதத்திலிருந்தும் அநேக விஷயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஞானஸ்நானம், ராப்போஜனம் என்னுமிரண்டும் ஒப்புக்கொள்ளப்பட்டன. ஆனல் இவைகளேக் காட்டிலும் விசேஷமானது யாதெனில், கேசவச்சந்திரசேனர் இக்காலமுதல் இயேசுகிறிஸ்துவின் தன்மையைப்பற்றி வெளிப்படுத்திய நற்காரியங்களே. இயேசுநாதர் இந்தியாவின் மார்க்கத்திற்கு அவசியமென்பதை உணர்ந்தனர். தத்துவசாஸ்திர விஷயமாய் பூர்வ வேதாந்தம் இந்தியாவுக்கு போதுமென்றூலும், சன்மார்க்க சாஸ்திரவிஷயமாய் கிறிஸ்துவின் அதிக மேலான உபதேசம் இந்தியாவுக்கு இன்றியமையாத அவசியமென்று சொல்லி, ஜனங்கள் அவரின் ஜீவியத்தைப் படித்து அதின்படி ஜீவிக்கத் தூண்டினர். இயேசுகிறிஸ்துவின் உபதேசம் சமாதானத்திற்கும் சந்தோஷத்திற்கும் வழி என்பது அவரின் சித்தாந்தம். இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியான நடக்கையைப்பற்றியும், கிறிஸ்தவ ஜீவியத்தைப்பற்றியும் இவர் தம் பிரசங்கங்களிலும்

புஸ்தகங்களிலும் மிகுதியாக கூறியுள்ளார். அவர் கிறிஸ்துவின் செல்வாக்கைப்பற்றி கீழ்வருமாறு கூறுகிறார். "நான் 25 வருஷமாக கிறிஸ்துவைக் கற்றுவருகிறேன். அந்த தேவமனுஷன் (God—Man) இமாலய பர்வதம் முதல் கன்னியாகுமரி வரையிலுமுள்ள இப்பெரிய தேசத்தில் தினந்தோறும் உலாவுகிறார். உலாவி, அதிலுள்ளவர்களைப் பிரகாசிப்பித்து, பரிசுத்தப்படுத்துகிறார். அவர் நமக்கு ஜீவனுள்ள ஓர் ஆவி. நாம் அவரால் பார்க்கிறோம். அவரோடு தியானம்பண்ணுகிறோம். அவர் நமது ஜனசங்கத்திற்குள் ஜீவனை ஊதி, நம்முடைய தினசரி ஜீவியத்தைச் சந்தோஷமாக்குகிறார்."




திரியேகத்துவ திரிகோணம்.

கிறிஸ்துவினுடைய தெய்வீகத்தை கேசவர் ஒப்புக்கொண்டார். ஹிந்துமார்க்கத்தின் நிறைவேறுதல் இயேசுகிறிஸ்து என்பது இவரது கொள்கை. 1882–ஆ திரித்துவத்தைப்பற்றி இவர் செய்த பிரசங்கம் நாம்

கவனிக்கத்தக்கது. திரித்துவ உபதேசத்தை ஒரு முக்கோண வடிவைக்கொண்டு விளக்கினார்.

கேசவச் சந்திர சேனர் செய்த திரியேகத்வ வியாக்கியானம்.

இதன் உச்சி கடவுள்.—யெகோவாவும் வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிற பிரமாவும் இவரே. தாமாகத் தமது சிறந்த மகிமையில் அவர் வசிக்கிறார். அவரிடத்திலிருந்து குமாரனாகிய கிறிஸ்து வருகிறார், அவர் தெய்வத்திலிருந்துண்டானவர். ஆகவே தெய்வமே கீழே இறங்கி லோகத்தின் ஓர் முனையை தொடுக்கிறார். அப்புறம் உலகத்தின் நெடுக நடந்துசென்று, தமது சக்தியையும், வெளிச்சத்தையும், மகிமையையும் உலகத்துக்கு கொடுத்து, அதன் மறுமுனைவரைக்கு வந்து, பரிசுத்த ஆவியாக, இந்த வல்லமையினாலே புத்துயிர் அடைந்த ஜீவான்மாக்களை தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளுகிறார். ஜீவான்மாக்களிடத்திற்கு இறங்கிவருகிற தேவன் தெய்வ குமாரன். ஜீவான்மாக்களை தெய்வத்தினிடத்திற்கு மேல் நோக்கி இழுத்துக்கொள்பவர் பரிசுத்த ஆவி.

சில சமயத்தில் அவர் தம்மை கடவுள் ஒரு விசேஷித்த நோக்கத்தோடு அனுப்பியிருப்பதாகவும் கூறினார். பூர்வ ஏற்பாடு இஸ்ரவேலர் மூலமாய் வந்தது. புதிய ஏற்பாடு கிறிஸ்துவின் மூலமாய் வந்தது. மூன்றும் ஏற்பாடாகிய கடைசி ஏற்பாடு கேசவசந்திரசேனர் மூலமாய் வந்தது என்று சொன்னார். நவவிதானம் என்னும் இப்புது மதத்தைப்பற்றி உபந்நியாசஞ் செய்யும்பொழுது 'கிறிஸ்து புதிய ஏற்பாட்டுக்கு மையம் என்றால், நான் ஏன் இந்த நவவிதானத்துக்கு மையமாயிருக்கக் கூடாது?' என்று கேட்டுவிட்டு, உடனே கிறிஸ்துவுக்குத் தான் எந்தவிதத்திலும் ஒப்பிடப்படக்கூடியவனல்ல என்பதைத் தெளிவாய்க் காட்டினார்.

"ஒரு பாவி கிறிஸ்துவோடு தன்னை ஒப்பிடலாமா? இயேசு பரிசுத்தனாய்ப் பிறந்தவர், நானோ மஹா பாபி. "ஆசீர்வதிக்கப்பட்ட இயேசுவே! நான் உன்னுடையவன். நான் என்னை, என் உடம்பையும் உயிரையும், உனக்கே தத்தஞ்செய்கிறேன். இந்தியா என்னை தூஷித்து என்னைத் துன்பப்படுத்துமானா

னும், துளிதுளியாக என் இரத்தத்தை என்னை விட்டெடுக்குமாளுனும், இயேசுவே! நான் இன்னும் உனக்கு அடிமையாகவே இருப்பேன். தேவகுமாரனே! நான் உண்மையாகவே உன்னை நேசிக்கிறேன்."

"இயேசுக்கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எனக்கு சம்பந்தமுண்டு. நான் அதில் ஒரு விசேஷ ஸ்தானம் வகிக்கிறேன். கிறிஸ்து குறிப்பிட்ட காணமற்போன குமாரன் நானே. மனஸ்தாபமடைந்தவனுக நான் என் பிதாவினிடம் செல்லப் பிரயாசப்படுகிறேன். இன்னும் தெளிவாகச் சொன்னல் நான் இயேசு அல்ல, நான் யூதாஸ். இயேசுவைத் துன்பப்படுத்திய சத்துருக்கள் கையில் அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் நான்தான். யூதாஸின் ஆவி என்னிடத்தில் இருக்கிறது. சத்தியத்துக்கு விரோதமாகவும், இயேசுவுக்கு விரோதமாகவும் பாவஞ் செய்த பயங்கரமான யூதாஸ் என் இருதயத்தில் இருக்கிறன். என் சிரசின்மேல் தீர்க்கதரிசியின் கிரீடம் இல்லை. என் ஸ்தானம் இயேசுவின் திருப்பாதங்கள் அண்டைதான்."

இவர் மரிக்கும்போது கிறிஸ்தவராக மரித்தார் என்பது இவரது கிறிஸ்தவ சிநேகிதரின் அபிப்பிராயம். கல்கத்தா சர்வகலாசாலையின் ரிஜிஸ்டராராகவிருந்த காளிச்சரணபோனர்ஜி என்ற வங்காள கிறிஸ்தவர் வெகுகாலமாக இவரோடு சிநேகமாகயிருந்தவர், இவ்வித அபிப்பிராயப்படுகிறர். கேசவசந்திரசேனர் தாம் செய்த ஒரு பிரசங்கத்தில் கிறிஸ்துவைக் குறித்துக் கொடுத்த சாட்சி இங்கு எடுத்துக் கூறத்தக்கது. அது வருமாறு:—

"என் கிறிஸ்துவை, எனக்கு இன்பமான கிறிஸ்துவை, என் ஹிருதயத்தின் மகாப்பிரகாசமான ரத்னத்தை, என் ஆத்துமாவுக்கு சரப்பளிபோன்றவரை, இருபது வருஷமாக நான் இவரை எனது கேவலமான ஹிருதயத்தில் வைத்து ஆனந்தமடைந்திருக்கின்றேன். உலகத்தால் அடிக்கடி நிந்திக்கப்பட்டு

துன்புறுத்தப்பட்டாலும், என் எஜமாளுகிய இயே சுவில் நான் இன்பத்தையும் சொல்லமுடியாத சந் தோஷத்தையும் அடைந்திருக்கிறேன்.

பிதாவானவர் குமாரத்துவத்துக்கு திருஷ்டாந்தமா யிருக்கமுடியாது. குமாரன் மாத்திரமே புத்திர ருடைய கடமையைக் காட்டக்கூடும். குமாரத்து வம் இன்னதென்பதைக் கற்றுக்கொள்வதற்கு சதுர் வேதங்களண்டையாவது யூதமார்க்கத்தண்டையா வது போகிறது வீண். என் பிதாவின் பிரிய குமா ரளுகிய என் நேசமுள்ள கிறிஸ்துவின் திருப்பாதங் கள் அண்டைதான் நான் இதைக் கற்றுக்கொள்ளு கிறேன்.

என் சரீரம் முழுவதிலும் என் உள்ளிந்திரியங்களிற்கூட நான் கிறிஸ்துவைக் காண்கிறேன். அவர் எனக்கு உபதேசம் மாத்திரம் அல்ல. பவுல் சொல்லுகிறது போல 'கிறிஸ்து எனக்கு ஜீவன்' என்று நானும் சொல்லக்கூடும். ஆம், கிறிஸ்து எனக்கு ஆகாரம், அவர் எனக்கு பானம், என்னைக் கழுவி சுத்திகரிக் கிற ஜலமும் அவரே.

கேசவர் 1884–ல் ஜனுவரிமீ 8–ம் தேதி இறந்தார்.

சாதாரண பிரமசமாஜமானது கல்வியும் பக்தியும் உடைய பலருடைய தலைமையின்கீழ் இந்நாள்வரைக்கும் விருத்தியடைந்து வருகிறது. தேசத்தின் பல பாகங்களி லுமுள்ள கிளைச்சங்கங்கள் இதோடு இணைக்கப்பட்டிருந் தது. இப்போது பல மிஷனெரிமார் இருக்கிறுர்கள். ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகளும், மத்தியவார ஆரா தனைகளும் இன்னும் பல முயற்சிகளும் நடைபெறுகின் றன. மலைவாழ் ஜாதியாருக்குள்ளும் இவர்கள் வேலை செய்து பலன் பெற்றிருக்கிறுர்கள்.

பிரமசமாஜக்கோள்கை.

ஆதி பிரமசமாஜம் சாதாரண பிரமசமாஜம், நவ விதான சபை என்னும் இம்மூன்று பிரிவினருடைய மத சித்தாந்த வேறுபாடுகளை கீழ்வருமாறு கூறுவார் ஆசிரி யர் பார்க்குஹார்.

1. கடவுள் சிறந்த சன்மார்க்க தத்துவங்களையுடைய புருஷர்.

2. அவர் அவதாரம் எடுப்பதில்லை.

3. கடவுள் ஜெபங்களையும் பிரார்த்தனைகளையும் கேட்டு அவற்றுக்குப் பதில் அளிக்கின்றார்.

4. ஆவிக்குரிய பிரகாரமட்டுமே கடவுளை ஆராதிக்க வேண்டும். சர்வ ஜாதியாரும் சர்வ ஜனங்களும் அவரை வணங்கலாம்.

5. பாபத்தை உணர்ந்து அதை விட்டுவிடுகிறதுதான் பாபமன்னிப்புக்கும் முக்திக்கும் வழி, வேறு வழி இல்லை.

6. இயற்கையும் இயற்கை அறிவுந்தான் கடவுளை அறிகிறதற்கு ஆதாரம். எந்தப் புஸ்தகமும் இவ்விஷயத்தில் அதிகாரம் உடையன அல்ல.

[ஆதிசமாஜத்தார் சந்த ஆறு விஷயங்களைமட்டுமே ஒப்புக்கொள்ளுவார்கள்.]

7. சர்வ மனிதருக்கும் கடவுள் பிதா. மனிதர் யாவரும் சகோதரர்.

8. ஆத்மா நித்தியமானது. அதன் விருத்தியும் நித்திய காலத்துக்குரியது.

9. கடவுள் நன்மை செய்கிறவர்களுக்கு நற்பயன் அளித்து தீமை செய்கிறவர்களைத் தண்டிக்கிறார், அவருடைய தண்டனைகள் பழிவாங்குகிறதற்கல்ல, மனிதனைச் சீர்படுத்துகிறதற் கேதுவாகவே இருக்கின்றன.

[சாதாரண பிரம சமாஜத்தார் இந்த ஒன்பது விஷயங்களைமட்டுமே ஒப்புக்கொள்ளுவார்கள்.]

10. கடவுள் ஒருத்துவத்தில் திரித்துவர் — பிதா, குமாரன், பரிசுத்தஆவியாகிய திரியேகர். கடவுள் பிதாவாயிருப்பதுபோலவே மாதாவாகவும் இருக்கிறார்.

11. பிரமசமாஜம் சர்வதேசங்களுக்கும் சர்வகாலங்களுக்கும் உரிய மதம் (Universal Religion). கடவுள் கடைசியாய்ச் செய்தருளிய ஏற்பாடு பிரமசமாஜமே. இதன் மிஷனெரிகள் இதன் அப்போஸ்தலரே.

12. இயற்கையின் மூலமாகவும் இயற்கை அறிவின் மூலமாகவும் வருகிறதுபோலவே, தேவ ஆவியின் சகாயானுக்கிரகம் பெற்ற பெரியோர் மூலமாகவும் ஞானம் உண்டாகிறது. ஆதேஷ் என்னும் ஆஞ்ஞையின் மூலமாக அவர் தமது சித்தத்தைத் தம் அடியார்களுக்கு வெளிப்படுத்துகிறார்.

[நவவிதான சங்கத்தினர் இந்தப் பன்னிரு விஷயங்களையும் ஏற்றுக்கொள்வார்கள்].

## 2. ஆரிய சமாஜம்.

இதுவரை கிறிஸ்துமதத்தை அதிகமாக மதித்து அதினிடத்தினின்று ஊக்கத்தையும், உற்சாகத்தையும் பெற்ற ஒரு மதத்தின் சரித்திரத்தைப் பார்த்தோம். இப்போது நாம் பார்க்கப்போகும் மதமோ அவ்வாறின்றி, கிறிஸ்துமத சம்பந்தம் பெறாமல், கிறிஸ்தவர்க்கும் கிறிஸ்துமதத்துக்கும் பெரிய விரோதியாயிருக்கிற ஓர் மதத்தைப்பற்றி படிக்கப்போகிறோம்.

ஸ்வாமி தயானந்த சரஸ்வதி

மேல் இந்தியாவில் கத்தியவார் மாகாணத்தில் ஒரு சிறு கிராமத்தில் அம்பாசங்கர் என்ற பெயரோடு ஸ்ரீவந்தரான பிராமணர் ஒருவர் இருந்தனர். அவர் அப்பட்டணத்து ஜமேதார். பக்தியுள்ள ஹிந்து மதாபிமானி. இவருக்கு 1824–ல் ஒரு குமாரன் பிறந்தார். அவருக்கு மூலசங்கரன் என்று பெயர். இவர் மதவிஷயத்தில் முயற்சி எடுத்து, விருத்தியடையவேண்டுமென்னும் நோக்கத்தை பெற்றோருடையராய், அவருக்கு கல்விப் பயிற்சி செய்வித்துவந்தனர். தமது 14–ம் பிராயத்தில் இவர் வேதங்களில் மிகுதியான பாகத்தை மனப்பாடமாகச் சொல்லக்கூடும். இவர் தமது மத விஷயங்களில் அதிக கவனம் செலுத்திவந்தார். ஒருநாள் மஹாசிவராத்திரியன்று ஓர் இரவுமுழுவதும் தன் தகப்பனுருடன் விழித்திருந்தார். உறக்கங்கொண்டால் புண்ணியமெல்லாம் போய்விடுமென்று நினைத்து, அடிக்கடி முகத்தை கழுவி விழித்திருந்தார். அப்போது தமக்கு எதிரே

இருந்த விக்கிரகத்தைப் பார்த்து, சர்வலோகாதிபதியாகிய மகாதேவன் இந்த கல்லில்தானே இருக்கிறா ரென்று இவர் மனதில் ஐயம் உண்டானது. தூங்கிக் கொண்டிருந்த தன் தகப்பனை எழுப்பி, தம் சந்தேகத்தை நிவிர்த்திக்கும்படி கேட்டார். தகப்பனார் கூறியவை இவர் மனதை திருப்திசெய்யவில்லை. அவர் வீட்டுக்குப்போய் தாயாரிடத்தில் பலகாரம் வாங்கிச் சாப்பிட்டு நித்திரைபோந்தார். நாலு வருஷத்திற்குப்பின் இவருடைய சகோதரி திடீரென்று இறந்துபோக, இவர் மரணத்தின் பயங்கரத்தை யுணர்ந்தார். மோக்ஷம் அடையவேண்டுமென்னும் ஆசை மிகுந்தது. அதிக முயற்சியாய் மதநூல்களை கற்றார். தம் 22-ம் வயதில் இவருக்கு விவாகம் செய்விக்கும்படி பெற்றோர் நிச்சயித்தபொழுது, அவர் தமது வீட்டைவிட்டு ஓடிப்போனார். இவர் அங்குமிங்கும் அலைந்து திரிந்த காலத்தில் சில சந்நியாசிகளைச் சந்தித்து, அவர்களுள் ஒருவரானார். இக்காலத்தில் ஸ்ரீபரமானந்தர் என்ற ஓர் சந்நியாசியை சந்தித்து, ஜீவான்மாவும் பரமான்மாவும் ஒன்று என்னும் வேதாந்த உபதேசத்தை ஒப்புக்கொண்டார். அப்பால் நர்பதை ஆற்றங்கரைக்குச் சென்று, அங்கு பல சந்நியாசிகளைக் கண்டு தாம் ஜாதி, வீடு, கலியாணம், உடைமை, பணம், நெருப்பு இவற்றை விட்டுவிடுவதாகவும், அலைந்துதிரியும் ஜீவியத்தை ஒப்புக்கொள்வதாகவும் வாக்குக் கொடுத்தபின் பரமானந்தர் என்னும் சந்நியாசியால் சரஸ்வதி சந்நியாசி கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அதுமுதல் அவருக்கு தயானந்த சரஸ்வதி என்று பெயர். தாம் சாகும்வரை அவர் தமது இயற்பெயரைச் சொல்லவில்லை.

இதற்கப்பால் தமக்கு யோகசாஸ்திரம் கற்றுக்கொடுக்கக்கூடிய உத்தம உபாத்தியாயரைத் தேடி 8-வரு அங்குமிங்கும் அலைந்தார். சங்கரரின் வேதாந்தத்தில் இவருக்கு நம்பிக்கையில்லை. ஈஸ்வரன் ஓர் புருஷன் என்றும், (Person) ஜீவான்மா பரமான்மாவினின்று வேறு என்றும், உலகம் உண்மையாக இருக்கிறது என்றும் நம்பினார். இவர் யோகாப்பியாச சாஸ்திரம் படிக்கும்படி

பெரும் முயற்சிசெய்து, அநேக புஸ்தகங்களை வாசித்து வந்தார். யோகாப்பியாசத்திற்கு ஆரம்பமாக கூறப் பட்டிருக்கும் உடற்கூறு வகையைப்பற்றி அவருக்குச் சந்தேகமுண்டானது. அச்சமயத்தில் ஆற்றில் ஒரு பிரதேம் மிதந்துகொண்டு போனது. அவர் அப்பிரே தத்தைக் கரைக்கு இழுத்து, அதைக் கத்தியினால் வெட் டித் திறந்து பார்த்தார். நரம்பு, நாடி முதலியவற்றைப் பற்றி யோகசாஸ்திரத்தில் சொல்லியிருப்பதற்கும், மனித சரீரத்திலுள்ளவைகளுக்கும் சம்பந்தமில்லை யென்று கண்டார். யோகசாஸ்திரநூல்கள் பொய் யென்று தீர்மானித்து, அப்பிணத்தையும் அப்புஸ்தகங் களையும் சேர்த்து ஆற்றில் எறிந்துவிட்டார்.

இதுமுதல் யோகசாஸ்திரத்தில் நம்பிக்கை அற்றுப் போயிற்று. இதற்குப்பின் நாலைந்து வருஷங்களாக அதாவது சிப்பாய்க் கலககாலத்தில் இவர் என்னசெய் தார் என்று தெரியவில்லை. 1857–1860-ௐ இவர் தமக்கு ஆசிரியரைத் தேடித் திரிகையில், வடஇந்தியாவில் மதுரா புரிக்கு வந்து அங்கே ஒரு குருட்டுப் பிராமணரிடத்தில் சேர்ந்தார். அவர் பெயர் விரஜானந்தர். இவர் சிறந்த இலக்கணி, பிற்காலத்திய சமஸ்கிருத நூல்களைத் தள்ளி, அதிபூர்வ நூல்களையே பாராட்டுகிறவர். தயானந்தர் தமது புஸ்தகங்களை எல்லாம் யமுனையாற்றில் எறிந்த பிறகுதான் அவரைத் தமது சிஷ்ராக ஒப்புக்கொண் டார். அவர் மிகவும் கண்டிப்புள்ளவர். தம் சிஷரைப் பிரம்பினால் அடிப்பார். தயானந்தரை ஒருநாள் இவர் அதிகக் கொடுமையாய் அடித்த காயத்தின் தழும்பு அவ ரின் ஜீவியகாலமெல்லாமிருந்தது. இவரின் செல்வாக்கு தயானந்தர்மேல் மிகுதியாயிற்று. விசேஷமாய் இவர் வேதாந்த சூத்திரத்தைக் கற்றார். “வேதங்கள் உண் மையானவை, பாரதகண்டத்தில் அவைகளைப் படிப் பாரில்லை, நீ போய் அவற்றைப் படிப்பி, உண்மை சாஸ்திரங்களைக் கற்றுக்கொடு” என்பது விரஜானந்தர் தயானந்தருக்குக் கொடுத்த உத்திரவு. மூன்று வரு ஷத்துக்குபின் இவர் அவ்விடத்தைவிட்டுச் சென்றார். சாதாரணமாய் சமஸ்கிருதத்தில் பேசினார். தாம் இது

வரை தரித்துவந்த ருத்திராக்ஷமாலையையும், நீற்றுப்பூச்சையும் ஒழித்துவிட்டார். இக்காலத்தில் அவர் பல கிறிஸ்தவ மிஷனெரிமாரோடு சம்பாஷித்தார், விக்கிர காராதனைக்கு விரோதமாய்ப் பிரசங்கித்தார்.

கிறிஸ்தவமிஷன்கள் செய்ததுபோல அநேக பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி அவற்றை நடத்திவந்தார். பல இடங்களில் உபந்நியாசம் செய்தார். புஸ்தகங்களை எழுதினார். வேதங்களைப் புதுமாதிரியாக வியாக்கியானம் செய்தார். சமஸ்கிருத பண்டிதர்களோடு தர்க்கம் செய்து அவர்களை வென்றார். வேதங்களில் விக்கிரக ஆராதனை இல்லை என்பது இவரின் விசேஷ கொள்கை. 1872–ஷு கல்கத்தாவுக்குப் போய் கேசவசந்திரசேனரைப் பார்த்தார். அவரோடு பழகியதன் பயனாக இரண்டு மாறுதல்கள் தயானந்தரிடத்தில் காணப்பட்டன:—

(1) இதுவரை உடை சிறிதேயுடைய இவர் இப்போது சரீரம் முழுவதும் மறையத்தக்க உடை யுடுத்தினார்.

(2) சமஸ்கிருதத்திற்குப் பதிலாக ஹிந்திபாஷையில் பேசினார்.

இதுமுதல் இவரின் கீர்த்தி வட இந்தியாவெங்குஞ் சென்றது. அதற்கப்பால் அலகபாத், பம்பாய் முதலிய பட்டணங்களுக்குச் சென்றார். 1887–ஷுத்தில் விக்டோரியா மாகாராணி இந்திய சக்கரவர்த்தியாக பட்டஞ்சூட்டப்பட்ட காலத்தில், தயானந்தர் சில சுதேச அரசர்களோடு லார்ட் லிட்டன் துரையின் தர்பாருக்கு டில்லிப்பட்டணம் சென்றார். அங்கே இவரைக் கண்ட சில ஹிந்துக்கள் இவரைப் பஞ்சாப்புக்கு வரும்படி அழைக்க, இவர் அங்கு சென்று லாகூர் பட்டணத்தில் ஆரிய சமாஜம் என்னும் சங்கத்தை ஸ்தாபித்தார்.

இதற்கப்பால் தயானந்தர் ஆறு வருஷம் ஜீவனோடிருந்து, ஆரிய சமாஜத்திற்காக ஊழியஞ்செய்துவந்தார். இக்காலத்தில் நடந்த இரு விஷயங்கள் குறிப்பிடத்தக்கன.

(1) பிரமஞான சபை என்ற தியாசபிக்கல் சங்கத்தோடு இவருக்கிருந்த சம்பந்தம். 1878-ஆம் இச்சங்கத்துத் தலைவர்களாகிய கர்னல் ஆல்காட், பிளாவட்ஸ்கி அம்மை என்னும் இருவரும் தயானந்தருக்குக் கடிதமெழுதி, இவ்விரு இயக்கங்களையும் ஒன்றுப்படுத்த முயற்சித்தனர். தயானந்தரும் இதற்கிணங்கினார். பிரமஞான சபைத்தலைவர் இருவரும் இந்தியாவுக்கு வந்தனர். இவ்வியக்கங்களின் ஐக்கியம் இரண்டுவருஷம் நிலைத்து, பின்பு பிளவுபட்டது.

(2) தயானந்தரின் பொதுவான முயற்சி.—இக்காலத்தில் தயானந்தர் ஹிந்துக்களைக் கிறிஸ்துமதத்திற்கும், மகமது மதத்திற்கும் விரோதமாக எழுப்பிவிட்டார். மகமதியர் மாட்டிறைச்சி சாப்பிடுவதின் காரணமாக இவர் எழுதிய புஸ்தகங்கள், செய்த பிரசங்கங்கள் முதலியவற்றின் பலன் இன்றையவரைக்கும் கிரியை செய்கின்றது. இவ்வித முயற்சி செய்துகொண்டிருந்த காலத்தில் தான் 1783-ஆம் அக்டோபர்மீ தமது 59-ம் வயதில் தயானந்தர் லாகூரில் இறந்தார்.

## ஆரிய சமாஜ கொள்கைகள்.

தயானந்தரின் விசேஷக் கொள்கைகளை பின்வருமாறு கூறலாம்:

1. ஈஸ்வரன் ஒருவனே. அவரை விக்கிரகங்களைக் கொண்டு வணங்காமல் ஆவிக்குரிய பிரகாரமாய் வணங்கல் வேண்டும்.

2. நான்கு வேதங்கள் அறிவுக்கு ஆதாரம். அவற்றுள் சகலமத சம்பந்தமான அறிவும், சாஸ்திரீய (Scientific) அறிவும் அடங்கியுள்ளன. அவை ஈஸ்வரனின் நித்திய வாக்கு. ஏதோ ஒரு தேசத்திற்கும், ஏதோ ஒரு காலத்திற்குமே உரிய விஷயங்கள் வேதங்களில் இல்லை. வேதங்களில் பல தெய்வ வணக்கமில்லை. வேதங்களில் காணப்படும் பல தெய்வ நாமங்கள் ஒரு தெய்வத்தின் பற்பல நாமங்களாகும். வேதங்கள் என்பது வேதமந்திரத்தையே குறிக்கும். வேத பிராமணங்களுக்கு அவ்வளவு மதிப்பில்லை. உமத்த ரிஷிகளால் எழுதப்பட்ட நல்ல

புத்தகங்கள் பல விருப்பினும் அவை எல்லாம் வேதங்களைப்போல் அதிகாரமுடையன அல்ல. வேதத்திற்கும், அவைகளுக்கும் முறண் ஏற்படும்போது அவற்றைத் தள்ளிவிடவேண்டும்.

3. வேதங்களில் புனர்ஜன்மத்தைப்பற்றியும், கர்ம உபதேசத்தைப்பற்றியும் கூறியிருக்கிறது.

4. பாவமன்னிப்பென்று ஒன்று கிடையாது.

5. புனர்ஜன்மத்தினின்று மீட்படைவதே முக்தி.

6. சாதாரண ஹிந்துமார்க்கத்தில் பிராமண, க்ஷத்திரிய வைசியர்களே வேதத்தைப் படிக்கலாம். ஆரிய சமாஜத்திலோ சர்வஜாதியினரும், ஸ்திரீகளும்கூட படிக்கலாம், ஜாதிபேதமே கிடையாது.

7. கடவுள் அவதாரமெடுப்பது இல்லை.

8. சிரார்த்தம், ஸ்தலயாத்திரை, தீர்த்தயாத்திரை பிரயோஜனமற்றவை.

9. விவாக விஷயத்தில் சிசுவிவாகம் தடுக்கப்படுகிறது. சிசுவிவாகஞ் செய்யப்பெற்றுப் புருஷனோடு கூடிவாழும் முன்னே விதவையாய்விட்ட கன்னிகா விதவைகள் (Virgin-widows) கலியாணம் செய்துகொள்ளவேண்டும். அவ்வாறே சிசுவிவாகஞ்செய்து மனைவியோடு கூடிவாழுமுன்னே மனைவியை இழக்கக்கொடுத்த புருஷர்களும் மறுவிவாகம் செய்துகொள்ளவேண்டும்.

10. கல்யாணஞ்செய்து புருஷனோடுகூடி வாழ்ந்து, அப்புறம் விதவையான ஸ்திரீகள் கல்யாணம் செய்துகொள்ளலாகாது. அவ்வாறே விவாகமாகி மனைவியுடன் கூடிவாழ்ந்து, பிறகு தாரமிழந்த புருஷர்களும் மறுவிவாகஞ்செய்துகொள்ள வேண்டியதில்லை. ஆனால் அவர்களின் நன்மைக்காகவும் சில புருஷ மனைவியரின் நன்மைக்காகவும் நியோகம் என்ற ஒரு விநோத கொள்கை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. நியோகம் என்பது கலியாணமில்லாமல் தங்களிஷ்டம்போல் சிலகாலம் கூடிவாழ்வது. இதைப்பற்றிய விபரங்களெல்லாம் சத்தியார்த்தப் பிரகாசிகை முதலிய ஆரிய சமாஜ நூல்களில் காணலாம்.

தயானந்தர் இறந்தபின் அவரின் சிஷ்ர்கள் அதிக முயற்சியா யுழைத்துவந்தனர். பிரமசமாஜம் முதலிய இயக்கங்கள் சிறிது சிறிதாய் க்ஷீணித்துக்கொண்டுவர, ஆரிய சமாஜம் அதிகமாய் வளர்ந்துவருகிறது. கிறிஸ்தவர்களுக்குள் போலவே ஆரிய சமாஜத்தாருக்குள்ளும் கைப்பிரதி சங்கம், ஸ்திரீகள் சங்கம், ஆரிய குமாரர் சங்கம், அநாதசாலைகள், ஒடுக்கப்படுகிறவர்களுக்கு உதவும் சங்கம் முதலியவைகளும் உண்டு. ஆரியமத ஸ்தாபகராகிய தயானந்த சரஸ்வதியின் காலத்துக்குப் பிறகு ஆரிய சமாஜத்தின் தலைவர் லாலா லஜபதி ராயர் என்னும் பெரியார். இவர் மிக்க மதாபிமானமும் தேசாபிமானமும் உடையவர். இவரது தலைமையின்கீழ் ஆரிய சமாஜம் மிக்க விருத்தியடைந்தது. கிறிஸ்துமதத்தில் இரக்ஷணிய சேனை (Salvation Army) செய்கிற வேலையை இவர் பார்த்து, அதைப்போலவே ஆரியசமாஜ ரக்ஷணிய சேனை என்ற பெயருடன் ஓர் சங்கத்தை ஸ்தாபித்து நடத்தினார். அமெரிக்கா ஐரோப்பா முதலிய தேசங்களுக்குப் போய்வந்தவர். சிறந்த தேசாபிமானியாய் நாட்டிற்கு மிகுந்த சேவை ஆற்றிய இவர் இரண்டு வருஷங்களுக்கு முன்னர் இறந்தார்.

## 3. ராம கிருஷ்ண மிஷன்.

இக்கடைசிப் பருவத்தில் இனி நாம் படிக்கப்போகும் இயக்கங்கள் ஹிந்துமார்க்கத்தை நிலைநிறுத்தும்படி எழும்பியவை. இவற்றுள் அதிவிசேஷமானது ராம கிருஷ்ண மிஷன். இதை ஸ்தாபித்தவர் விவேகாநந்த சுவாமிகள். இவர் ராமகிருஷ்ண பரமஹம்சாவின் சிஷ்யர்.

**ஸ்ரீ ராம கிருஷ்ண பரம ஹம்ஸர்.**

ராம கிருஷ்ணன் என்பவர் வங்காள தேசத்தில் பிராமண குடும்பத்தில் 1834–ஆம் பிறந்தவர். இவரின் பிறப்பு வளர்ப்பைப்பற்றி பல கதைகள் கூறுகிறார்கள். சிறு வயதிலேயே ஞாபகசக்தி அதிகம். மதசம்பந்தமான பாடல்களும், கதைகளும், வெகு பிரீதி. இவருக்குப் படிப்பில்லை. தகப்பன் இறந்தபின் இவரும்

தமயனுரும் கல்கத்தாவுக்குப் போனூர்கள். அங்கே சில ஹிந்துவீடுகளிலுள்ள வீட்டுத் தெய்வங்களுக்கு பூசாரியாக இவர்கள் நியமிக்கப்பட்டனர். அதற்கப்பால் இவரின் தமயன் தக்ஷணீஸ்வர ஆலயத்தின் பூசாரியாக நியமிக்கப்பட்டபோது, இவர் உதவியாளாக நியமிக்கப்பட்டார். இதுமுதல் இவர்களின் தரித்திரம் நீங்கியது. ஆனூல் இதேகாலத்தில் ராமகிருஷ்ணனது ஜீவியத்தில் ஓர் புது உணர்ச்சி காணப்பட்டது. ஆலயத்தின் காளிவிக்கிரகத்தின்மேல் விசேஷ பக்தியுண்டாயிற்று. காளியே தன் தாயென்றும், அவளே லோகமாதாவென்றும் உணர்ந்தார். இவரது பக்தி மேலீட்டினூல் இவர் ஸ்மரணையற்று சமாதி நிலைக்கு வருவார். சில சமயங்களில் அநேக மணிநேரம் உணர்ச்சியில்லாமல் உட்கார்ந்துகொண்டிருப்பார். அதுசமயம் அவருக்கு அவரின் நாடியாவது இருதயமாவது கிரியை செய்வதில்லை. இவர் இந்நிலைமைக்குவந்தது இவரின் இனத்தவருக்கு வருத்தம். ஆகையால் இவரை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய், விவாகம் செய்துவைத்தனர். இது 1859–ஷு நடந்தது. இவருக்கு வயது 25. மனைவிக்கு வயது 6. மனைவியை அவள் தகப்பன் வீட்டில் விட்டுவிட்டு, ஆலயத்திற்குத் திரும்பினூர். இவரின் பக்தி முன்னிலும் அதிகரித்தது. காளியைப்பார்த்துத் "தாயே! உன் சத்தியத்தை எனக்குக் காண்பி, நீ எங்கே யிருக்கிருய், நீ இருக்கிறது வாஸ்தவமா? வாஸ்தவமென்றூல் நான் என் அறியாமையிலிருக்கவேண்டும், உன்னை நான் ஏன் அனுபவிக்கலாகாது; வார்த்தைகளும் ஞானமும், வீண், அவை எனக்கு வேண்டாம்; சத்தியமே எனக்கு வேண்டும், சத்தியத்தையே நான் பெறுவேன், சத்தியத்தையே தடவிப்பார்க்க நான் நாடுகிறேன்" என்று பலதரம் வாய்விட்டலறுவார். இவ்வாறுகூறி சமாதியில் பிரவேசிப்பார். அநேக மணிநேரம் ஸ்மரணையற்றிருப்பார். இவர் இவ்வாறு செய்யவே ஆலயத்தில் இவர் செய்தவேலை திருப்தியில்லாதபடியால் தள்ளிவிட்டார்கள். அவர் பக்கத்திலுள்ள காட்டில் குடியிருந்தார். 12–ஷு இவர் அவ்விடத்தில் ஜெபத்திலும், தபத்திலும்

நின்றார். 12—ம் வருஷமும் இவரின் மனதில் ஓர் பெரிய போராட்டம் நடந்தது. இக்காலமெல்லாம் கண்ணை மூடினதேயில்லை. ஜனங்கள் இவர்மேல் கவலைப்படவே இல்லை. இவரின் நிலைமையை ஆராய்ச்சிசெய்து இவருக்கு உதவ முதலில் ஆரம்பித்தது ஓர் பிராமண சந்நியாச ஸ்திரீ. இவள் அந்த ஆலயத்திற்கு வந்து, சிலகாலம் தங்கினாள். இவள் மிகுந்த அழகுள்ளவள், கல்வியறிவுள்ளவள், யோகசாஸ்திர அறிவும் அப்பியாசமுமுடையவள். இவள் ராமகிருஷ்ணருக்கு அநேக விஷயங்களைப் போதித்தாள். சிலகாலம் அங்கிருந்து அப்பால் எங்கேயோ போய்விட்டாள். அவளைப்பற்றி அப்புறம் ஒன்றும் தெரியாது. ராமகிருஷ்ணருக்கு இன்னும் மனம் திருப்தியாகவில்லை. இன்னுமதிக ஞானத்தை நாடினார். அக்காலத்தில் தோட்டாபுரி என்னும் ஓர் சந்நியாசி அங்குவந்தார். மிக வளர்ந்தவர், பலசாலி, திடகாத்திரமுள்ள சந்நியாசி, வஸ்திரந்தரியாதவர்; வீடு குடிசைகளில் படுக்காமல், எப்போதும் வெளியே படுப்பவர், எப்போதும் அக்கினியை வளர்த்துக்கொண்டிருப்பவர். இவர் எந்த சந்நியாசி வகுப்பையும் சேர்ந்தவரல்லர். இவரின் தத்துவசாஸ்திரம் சங்கரர் போதித்த வேதாந்தத்தைப் போன்றது. அதாவது கடவுள் புருஷரல்லர், மானிட ஜீவான்மா கடவுளோடு சம்பந்தமுடையது, உலகம் மாயை என்பது. இதனை ராமகிருஷ்ணர் ஒப்புக்கொண்டார். மேலும் ஒரு மனிதன் அடையக்கூடிய அதி உன்னதமான நிலைமை நிர்விகர்ப்ப சமாதி, அதாவது ஒரு சிறிதும் உணர்ச்சியில்லாமல் யோக நிலையில் அமர்தல். இவ்விஷயத்தில் குரு தம்மாணுக்கரிடமிருந்து மிகுதியும் கற்றுக்கொண்டார். அதுமுதல் ராமகிருஷ்ணர் ஓர் சந்நியாசியாகி, வீடு, சொத்து, ஜாதி, பொருள் முதலிய யாவையும் துறக்க ஒப்புக்கொண்டார். தாம் விவாகம் செய்திருக்கிற ஞாபகம்கூட அவருக்கு இல்லை. சந்நியாசியான கால முதல்தான் இவருக்கு ராமகிருஷ்ணன் என்று பெயர். அதற்குப்பின் தோட்டாபுரி சந்நியாசி அவரைவிட்டுப் போனபிறகு, ராமகிருஷ்ணன் சமாதி நிலையிலேயே வெகுகாலமிருந்தார். ஒரு சமயத்தில் 6மீ

இந்நிலையில் இருந்ததாகக் கூறுகிறார்கள். அதைப்பற்றி அவர் தாமே சொல்லுவது: "அந்நாட்களில் உலகத்தைப் பற்றி எவ்வித உணர்ச்சியும் எனக்கில்லை. ஆகாரமில்லாமல் நான் இறவாதபடிக்கு ஒரு சாது என்னைக் காப்பாற்றினார். என் சமாதி நிலையை அறிந்து, என்னைப் பலவாறு தொந்தரவுப்படுத்தி, பெரிய தடியால் அடித்து, எனக்கு சிறிது ஸ்மரணையுண்டாகிறபோது கொஞ்சம் ஆகாரத்தை ஊட்டுவார்" என்பதே.

இந்த சமாதி முடிந்தபிறகே அவருக்கு வியாதியுண்டானது. ஆயினும் அதினின்று தப்பித்துக்கொண்டார். ராமகிருஷ்ணருடைய ஜீவியத்தில் அதிகமாய் கிரியை செய்த இன்னொருவிஷயம் ஈஸ்வரபக்தியே. இதை அவர் அபிவிர்த்தி பண்ணும்பொருட்டு தம்மைக் கிருஷ்ணன் மனைவியருள் ஒருத்தியாகப் பாவித்துக்கொள்வார். சில சமயங்களில் ஸ்திரீகளுக்குரிய ஆடையைத் தரித்து கிருஷ்ணன்மேல் தனக்குள்ள அன்பை பெருப்பிப்பார். இவ்வாறு செய்யும்போது, ஒருநாள் ஒரு சமாதியில் கிருஷ்ணனை தரிசித்து, திருப்தியடைந்ததாகக் கூறுகிறார். இவ்வாறு 12—வரு கழிந்தபிறகு அவருக்கு சமாதானமுண்டாயிற்று. அது 1871—ம் வரு. இப்போது 18 பிராயத்தையடைந்த அவரது மனைவி அவரின் கீர்த்தியைப்பற்றிக் கேள்வியுற்று அவரைப் பார்க்கவந்தாள். தாம் அவளுக்கு புருஷனாயிருக்க முடியாதென்று ராமகிருஷ்ணர் சொல்ல, அவள் தாம் அவரோடுகூடவந்து, அவரால் ஞானமடைந்து, ஈஸ்வரனைத் தரிசித்து, அவருக்கு ஊழியஞ்செய்ய இவர் உதவிசெய்தால் அதுவே போதும் என்றாள். அதுமுதல் அவள் அந்த ஆலயத்திலேயே தங்கி, அவருடைய சீஷியாளாள். அவருடைய ஜீவியத்தில் அதிகமாய்க் கிரியைசெய்த இன்னொருவிஷயம் ஜாதியாசாரத்தைப் பொறுத்தது. இவர் ஒரு சந்நியாசியாதலால் இவருக்குச் சட்டப்படி ஜாதி கிடையாது. ஆனாலும் பிராமணனாகப் பிறந்த தம்மிடத்தில் ஜாதிப்பெருமை ஒட்டிக்கொண்டிருந்ததாக உணர்ந்தார். மற்றவர்களைத் தாழ்வாக எண்ணும் எண்ணத்தை நிவிர்த்திக்க முயற்சித்தார். இதற்காக அவர் சண்டா

ளர் செய்யும் ஈனத்தொழில்களை தாமே ஏற்றுக்கொண்டார். இரவில் எழுந்து விளக்குமாறு தொட்டி முதலியவற்றை எடுத்துக்கொண்டு, கக்கூசுகளுக்குப்போய் தாமே அவற்றைச் சுத்தம்செய்து, தமது ஜடையால் அவ்விடங்களைத் துடைப்பார். இதுமட்டுமல்ல, அந்த ஆலயத்தில் பிட்சைக்காரருக்கு ஒவ்வொருநாளும் சாப்பாடு போடுவார்கள். மகமதியர், தீண்டாச்சாதியார் இவர்களைச்சேர்ந்த பிட்சைக்காரர் சாப்பிட்டபிறகு அவர்கள் சாப்பிட்ட எச்சிலையை எடுத்து, அந்த எச்சில் சாதத்தை தாம் சாப்பிட்டு, அவ்விடத்தையும் தாமே சுத்தம் செய்வார்.

இதற்கப்பால் இதரமதங்களை அறியவேண்டுமென்னும் ஆசை இவருக்குண்டாயிற்று. ஒருதரம் ஒரு மகமதிய பீர் அண்டைபோய், மகமது மார்க்கத்தைக் கற்ருர். இதற்காக மகமதிய உடைதரித்து, எவ்விஷயத்திலும் சிறிதுகாலம், மகமதியரைப்போல இருந்தார்.

இயேசுநாதரை ஒருதரம் தரிசனத்தில் கண்டார். அதிலிருந்து மூன்று நாளாக, கிறிஸ்துவைக்குறித்தும், அவரின் அன்பைக்குறித்துமே யல்லாது, வேறெதைக் குறித்தும் அவர் பேசவுமில்லை, நினைக்கவுமில்லை. இவ்வித மார்க்க ஆராய்ச்சியின் பலனுக சர்வமத சமரசத்தை அவர் நம்பினர். சர்வமதங்களும் உண்மையே, அவை ஒரே இடத்திற்குச் செல்லும் பல வழிகளே என்பது இவரது சித்தாந்தம். சர்வமத சமரசத்தைப்பற்றி இவரின் கொள்கையை, இவரது சிஷரில் ஒருவராகிய ஒரு தனவந்தர் ஓர் சித்திர சாஸ்திரியைக்கொண்டு வெளியிட்டிருக்கிருர். இப்படம் அதிக வல்லமையுடையது. கேசவசந்திரசேனர் அப்படத்தைப் பார்த்தவுடன் இப்படத்தின் சத்தியங்களைத் தெரிந்துகொண்டவர்களே பாக்கியவான்கள் என்று கூறினர். இப்படத்தின் விவரமாவது:—

பின்பாகத்தில் சில கட்டிடங்கள் இருக்கின்றன. ஓர் கிறிஸ்தவ கோயில், மகமதிய மசூதி, ஹிந்து கோயில், அதற்கு முன்னே சில மனிதர்கள் நிற்கின்ருர்கள்.

கிறிஸ்தவ ஆலயம் வெகு அலங்காரமாய் சிலுவை, சித்திரக்கண்ணுடி முதலியவற்ருேடு தோன்றுகிறது. அதற்கு முன்னே கேசவரும், ராமகிருஷ்ணரும் நிற்கின்ருர்கள். கேசவர் கையில் ஒரு நீண்ட தடி இருக்கின்றது. அதின் நுனியில் ஒரு சிலுவை, ஒரு சூலாயுதம், ஒரு சந்திரப் பிறை இவைகள் காட்டப்பட்டிருக்கின்றன. ராமகிருஷ்ணன் கேசவரைப்பார்த்து, ஹிந்துகோவிலுக்கும், மகமதிய மசூதிக்கு முன்னே நிற்கிற ஆட்களைக் காட்டிக் கொண்டிருக்கிருர்.

படத்தின் மத்தியில் ஒரு மகமதியன், ஒரு கன்பூஷியன், ஒரு சீக்கியர், ஒரு பார்ஸிக்காரன், ஒரு ஆங்கிலக் குரு ஆகிய இவர்கள் தங்கள் தங்கள் மதக்குறிகளைக் கையில்கொண்டு நிற்கின்றனர். இவர்களுக்கு மத்தியில் சைத்தன்னியரும் இயேசுக்கிறிஸ்துவும் கைகோர்த்து நடனமாடுகின்றனர். சர்வமத சமரஸத்தை விளக்குகின்ற இந்தப் படத்தை பிரமசமாஜ சங்கத்தினரும் ராமகிருஷ்ணமிஷன் சங்கத்தின் அங்கத்தினரும் மிகவும் பாராட்டி வருகின்றனர்.*

இவ்வாறு பிரக்கியாதி பெற்ற அவரைக் கண்டு பேசும்படி பெரிய சீமான்களும் கல்விமான்களும் அடிக்கடி அவரிடம் வருவார்கள். பிரம்சமாஜ தலைவர்கள் அவரிடம் வந்து சம்பாஷிப்பதுண்டு. அவரின் செல்வாக்கு அவரண்டை வந்தவர் மேலெல்லாம் சென்றது. அவரின் சிஷரில் அநேகர் அவரை தெய்வத்தைப்போல் கொண்டாடினர். இவர் சந்நியாசியாக இருந்தாலும், சாதாரண வங்காள உடை தரித்திருப்பார். இவருக்குச் சமஸ்கிருதம் தெரியாது, இங்கிலீஷ் தெரியாது, வங்காள பாஷையிலும் அதிக சமர்த்தரில்லை. ஆயினும் அவரது சம்பாஷணை மெத்த ருசிகரமாயிருக்கும். நாம் ஒருவருக்கும் குரு அல்லோம், யாவருக்கும் சிஷன் என்பது அவர் தம்மைக்குறித்து அடிக்கடி கூறிய ஓர் விஷயம்.

---

*ஆசிரியர் பார்க்குஹார் இயற்றிய "இந்தியாவிலுண்டான தற்கால மத இயக்கங்கள் (Modern Religious Movements in India) என்னும் நூலில் இந்தப் படத்தைக் காணலாம்.

**ஸ்வாமி விவேகானந்தர்.**

ராமகிருஷ்ண பரமஹம்சர் இறந்தபிறகு அவரின் உபதேசத்தை விருத்திபண்ண அவரின் சீஷர்கள் பிரயத்தனித்தனர். அவர்களுள் விசேஷித்தவர் சுவாமி விவேகானந்தர் என்பார். இவர் காயஸ்த ஜாதி. கல்கத்தாவிலுள்ள மிஷன் பாடசாலையில் படித்து பட்டம் பெற்றவர். தத்துவசாஸ்திர மாணுக்கர், சிறந்த சத்தமுடையவர். இனிமையாய்ப் பாடக்கூடியவர். மாணுக்களுயிருக்கும்போதே ஒருவாறு பிரம சமாஜத்தில் செல்வாக்கு அடைந்தவர். இவர் பி. எல். பரீட்சைக்குக் கற்றுக்கொண்டிருக்கும்போது இவரது சிற்றப்பன் ராமகிருஷ்ணரைப் பார்க்கும்படி அழைத்துச் சென்ருர். அந்நிமிஷமுதல் இவர் ஜீவியம் மாறியது. தமது எஜமானிறந்தபின் 6 வருஷ இவர் இமாலய மலைச்சாரவில் தங்கி, திபேத்து தேசத்துக்ருப் போய் புத்த மதத்தைக் கற்ருர். 1892–வருஷ அவர் இமாலய பர்வதத்திலிருந்து தெற்கே திருவனந்தபுரம்வரை யாத்திரை செய்தார். அங்கிருந்து திரும்பிப் போகும்வழியில் சென்னைக்கு இவர் சென்றபோது, எதிர்பாராத காரியம் ஒன்று நிகழ்ந்தது. அதாவது அமெரிக்காவில் சிக்காகோ பட்டணத்திலிருந்து படிப்பாளியான கிறிஸ்தவர்கள் மத ஆராச்சி செய்யும்பொருட்டு சர்வமத சமரசச் சங்கம் என்ற ஓர் சங்கத்தை ஸ்தாபித்து, உலகத்திலுள்ள சர்வ மதங்களின் பிரதிநிதிகளை அழைத்தனர். ஹிந்து மார்க்கப் பிரதிநிதியாக விவேகானந்தசாமி போக வேண்டுமென்று சென்னையிலுள்ள சில சிநேகிதர் அவரைத் தூண்டி, வேண்டிய பண உதவியும் செய்து, ஜப்பான் வழியாய் அமெரிக்காவுக்கு அனுப்பினர்.

1893–வருஷ செப்டம்பர்மீ இச்சங்கம் சிக்காகோவில் நடந்தது. விவேகானந்தர் இயற்கையாகவே வாக்கு சாதுரியமுள்ளவர். ஹிந்துமார்க்கத்தை இவர் புது மாதிரியாக உபதேசித்தார். இவரது வாக்கு சாதுரியமும், அறிவோடு விளங்கிய முகமும், காவி உடுப்பும் ஜனங்களின் மனதைக் கவர்ந்தன. சில அமெரிக்கப் பத்திரி

கைகள் கூறியபடி சமரச சங்கத்தில் விவேகானந்தரே அதி விசேஷித்தவராக எண்ணப்பட்டனர். இவர் அமெரிக்காவில் செய்த பிரசங்கங்கள் கிறிஸ்துமார்க்கத்துக்கு விரோதமாக விருந்தன. சங்கம் முடிந்தபின் சிலகாலம் இவர் அமெரிக்காவிலே தங்கி, பிரசங்கங்கள் செய்து, சில இடங்களில் வேதாந்த சங்கங்களை ஸ்தாபித்தார். அக்காலத்திலிவர் உயர்தர ஹோட்டல்களில் தங்கி பலவித மாம்சங்களைப் புசித்தார் என்பர். இவரது உபதேசத்தின் பலனாக அமெரிக்காவில் இருவர் இவரோடு சேர்ந்து கொண்டனர். ஓர் அமெரிக்க மாது இவருக்கு சீஷியாகி சுவாமி அபயானந்தர் என்னும் பெயர் கொண்டார். இன்னொருவர் சுவாமி கிருபானந்தர் என்ற பெயரோடு இவருக்கு சீஷரானார்.

இவர் அமெரிக்காவை விட்டு இங்கிலாந்து வந்தபோது மிஸ் மார்கரெட் நோபிள் என்னும் ஆங்கிலமாது, சகோதரி நிவேதிதை என்னும் பெயருடன் இவரது சீஷியானாள். 1897–ஹு விவேகானந்தர் தம் சீஷரோடு கொழும்புக்கு வந்து, அங்கிருந்து இந்தியா வந்து சேர்ந்தார். சகல விடங்களிலுமுள்ள ஹிந்துக்கள் அவரை தங்கள் மத ரக்ஷகராகப் பாராட்டி, இவருக்குத் தெய்வீக மரியாதைச் செலுத்தினர். அமெரிக்காவும், இங்கிலாந்தும் கூடிய சீக்கிரம் ஹிந்துமதத்திற்கு வந்துவிடுமென்று பல ஹிந்துக்கள் எண்ணினர். விவேகானந்தரோ தாம் இந்தியா சேர்ந்தது முதல் ஹிந்துமதத்தை ஸ்திரப்படுத்துவதற்கான முயற்சிகள் செய்யத்தொடங்கி இரண்டு மடங்களை ஸ்தாபித்தார்.

1. கல்கத்தாவுக்குச் சமீபத்திலுள்ள பேலூர்.

2. இமயமலை சாரலிலுள்ள மாயாவதி.

**ராமகிருஷ்ண மிஷன்.**

தாம் ஸ்தாபித்த ராமகிருஷ்ண மிஷன் என்னும் சங்கத்திற்கு இவ்விரண்டு மடங்களும் விசேஷித்த பயிற்சி சாலைகள். பேலூர் தலைமை ஸ்தானம். ராமகிருஷ்ண மிஷன் மூலமாய் விவேகானந்தர் பல பரோபகாரமுயற்

சிகளையும் தொடங்கினார். பஞ்ச நிவிர்த்திக்காக அதிகம் உழைத்தார். இதற்கப்பால் அவருக்கு சிறிது சுகவீனம் நேர்ந்ததால் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய தேசங்களுக்குப் போனார். சகோதரி நிவேதிதை கூடப் போனாள். அங்கே அவருக்குச் சுகமுண்டானது. சான் பிரான் சிஸ்கோவில் வேதாந்த சபையையும், சாந்தி ஆஸ்ரமம் என்னும் ஓர் ஆஸ்ரமத்தையும் ஸ்தாபித்து, நியூயார்க் பட்டணம்போய், அங்கே ஒரு வேதாந்த சபையை ஸ்தாபித்து, கப்பல் ஏறி, பாரீஸ் பட்டணம் வந்து, அங்கே நடந்த சர்வமத சங்கத்தில் பங்குபெற்று, இந்தியாவிற்குத் திரும்பினார். சென்னையில் மைலாப்பூரில் இன்னொரு மடத்தை ஸ்தாபித்தார். அதற்கப்பால் காசி, மூர்ஷிடபாட் என்ற விடங்களிலும் விசேஷ வேலைகள் துவங்கினார். சுயவெறுப்பு தம் சங்கத்திற்கு அவசியம் என்பதை உணர்ந்து உழைத்தார். 1902–ௗ ஜுலைமீ 4–தேதி திடீரென மரித்துப்போனார். வயது 40. இவரது உபதேசத்தில் நாலு காரியங்களை நாம் கூறலாம்:—

1. சர்வமதங்களும் சத்தியமே. ஆகையால் ஒவ்வொருவனும் தான் தான் பிறந்த மார்க்கத்தி லிருக்க வேண்டும்.

2. கடவுள் அறியப்படாதவர், சன்மார்க்கப் பிரமாணத்திற்கு மேலானவர், சடப்பொருளிலும் ஜீவப்பொருளிலுமிருப்பவர். அவர் சர்வலோகத்திலும் சர்வமனிதரிடத்திலும், சர்வதேவர்களிடத்திலும், சர்வ அவதாரங்களிலும் வெளிப்படுகின்றவர். ஜீவான்மா உண்மையாகவே தெய்வீகமுடையது. மனுஷர் பாவிகளல்லர், அவர்களைப் பாவிகளென்பதே பாவம். சர்வ மனிதரும் பரிசுத்தவான்கள். விக்கிரக ஆராதனை நல்லதும் ஆத்தும பலனடைவதற்குக் கருவியானதுமான ஓர் விஷயம். ஹிந்துமத சீர்திருத்திகளைப் பின்பற்றக்கூடாது. களைகளைப் பிடுங்க அவர்கள் முயற்சித்து, அத்துடன் பயிரையும் பிடுங்கிவிடுகிறார்கள்.

3. ஹிந்து நாகரீகம் அழகும் ஆத்துமதத்துவமும் பொருந்தியது. ஏனெனில் அது அதிபூர்வீகமான

சிறந்த மதத்தினின்று உற்பத்தியானது. அந்நிய ஜாதியார் இதை விளக்கிக்கொள்ளமுடியாது. ஐரோப்பியர்களும் மிஷனெரிகளும் ஹிந்துமார்க்கத்தை வீணே அவதூறு செய்கிறார்கள். ஹிந்துக்கள் மதஞான பிரீதியுடையவர். இந்தியாவானது பூர்வ காலத்தில் உலகத்திற்கு உபாத்தியாயராயிருந்தது. இனிவருங் காலத்திலும் அப்படியே இருக்கும்.

4. ஐரோப்பிய ஜாதியாரும், மேற்குத்திய நாகரீகமும் ஆகாதவை. அவை லோகார்த்தமானவை. தன்னயமானவை. சுகபோகப் பிரீதியுள்ளவை. ஒரு ஹிந்துவுக்கு ஐரோப்பிய செல்வாக்கு தகாது. மேற்குத்திய நாகரீகத்தின் விஷமானது ஹிந்துக்களின் மதத்தையும், ஜன சங்கத்தையும் கெடுத்துவிடாதபடி சாவதானமாயிருத்தல்வேண்டும். ஆனாலும் மேற்குத்தியாரின் முறையையும், கல்வியையும் நாம் பின்பற்றவேண்டும். அவசியமானால் ஓர் ஹிந்து மாம்ச போஜனத்தையும் அருந்தலாம்.

5. கிழக்கே சீனாவும், மேற்கே கிரேக்க ரோமதேசங்களும் தங்கள் தத்துவசாஸ்திரத்தையும் ஆத்மீக ஞானத்தையும் இந்தியாவிடமிருந்தே பெற்றார்கள் என்பது விவேகானந்தருடைய கொள்கை. இந்தியர் தைரியமடைந்து எழுந்துநின்று முயற்சிக்கவேண்டுமென்பதே இவரின் கோரிக்கை.

விவேகானந்தரின் மரணத்திற்குப்பின் அவரின் ஆங்கில சிஷ்யாகிய சகோதரி நிவேதிதை கல்கத்தாவில் ஒரு சிறு வீட்டில் குடியிருந்து, சுற்றிலுமுள்ள ஹிந்துக்களுக்கு பள்ளிக்கூடம் மூலமாகவும், வேறு விதமாகவும், பலவித முயற்சிசெய்து வந்தாள். நிவேதிதை சிறந்த பண்டிதை. இந்துமதம் இந்திய ஜீவியம் முதலியவற்றைப் பெரிதும் பாராட்டியவர். 1911–ல் நிவேதிதை இறந்தபோது வங்காளத்திலுள்ள ஹிந்துக்கள் மிகவும் அனுதாபம் காட்டினர்.

இனி விவேகானந்தர் ஸ்தாபித்த ராமகிருஷ்ண மிஷனுடைய வேலையைப்பற்றி சிறிது பார்ப்போம். விவேகா

நந்தரின் மரணத்திற்குப்பின் மிஷன்வேலை பெருகிவந்திருக்கிறது. ஆரம்பத்தில் எதிர்பார்த்த அவ்வளவு பலன் கிடைக்காவிட்டாலும், இவரது முயற்சியினால் ஹிந்து மார்க்கம் தைரியத்தையடைந்து, பலவித முயற்சிக்குள் பிரவேசித்திருக்கிறது. இச்சங்கத்தின் முயற்சியின் பலனாக ஆயிரக்கணக்கான ஹிந்துக்களுக்கு தங்கள் மார்க்கத்தில் திருப்தியுண்டாயிருக்கிறது. இந்த மிஷனில் சுயவெறுப்புள்ள தலைவர்களிருக்கிறார்கள். மேலும், காசி, அலகபாத், மாயவதி, பெங்களூர், சென்னை என்னும் இடங்களில் இவர்களுக்குமடங்களுண்டு. பலவிடங்களில் சேவாஸ்ரமம் என்னும் ஊழியஸ்தானங்களும் உண்டு. ஏழைகளைத் தாபரிப்பதும், வைத்திய சிட்சை கொடுப்பதுவும் இந்த ஆஸ்ரமங்களின் விசேஷ முயற்சி. அநேக பள்ளிக்கூடங்கள் நடைபெறுகின்றன. அமெரிக்காவில் விவேகானந்தரின் செல்வாக்கு இன்னுமிருக்கிறது. நியூயார்க், பாஸ்ட்டன், உவாஷிங்டன் என்னுமிடங்களில் ஹிந்துமதத்தைக் கற்றுக்கொடுக்க பல சங்கங்களுண்டு. சான் பிரான்சிஸ்கோவில் இவர் செல்வாக்கதிகம், அங்கே ஒரு அழகான ஹிந்து கோவிலிருக்கிறது. இதில் பிரசங்கங்கள் செய்யப்பட்டு, புஸ்தகங்கள் விற்பனையாகின்றன.

## 4. பிரமஞான சபை

கடந்த ஐம்பது வருஷங்களாக இந்தியாவில் மிகுந்த செல்வாக்குச் செலுத்திவந்திருப்பதாகிய இந்த பிரம ஞான சபை 1875-ஆம் அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கு பட்டணத்தில் ஸ்தாபகமானது. இதை ஸ்தாபித்தவர்கள் பிளாவட்ஸ்கி அம்மையும் கர்னல் ஆல்காட் துரையும். இதற்கு தியாசபிக்கல் சங்கம் (Theosophical Society) என்று பெயர். இது நூதனமாகக் கிளம்பிய ஒரு ஸ்தாபனம் என்று நாம் நினைக்கவேண்டியதில்லை. கிறிஸ்து சகாப்தம் இரண்டாம் நூற்றாண்டு முதலாகவே ஞானத்தைப் பெரிதாகப் பாராட்டிய ஒருவகை மதபேதத்தினர் இருந்திருக்கிறார்கள். இவர்களுக்கு குனோஸ்தீகர் (Gnostics) என்று பெயர். இவர்கள் கிறிஸ்துமத உபதேசங்களைத் திரித்துக்கூறி

இதர மதங்களின் சித்தாந்தங்களையும் அவற்றுடன் கலந்து, தத்துவசாஸ்திரம் பௌதிகசாஸ்திரம் முதலிய வற்றை இவற்றுக்கு ஆதாரமாக்கி, இவ்வாறு சுத்தமான கிறிஸ்தவ சித்தாந்தத்துக்கு விரோதமான பல விஷயங் களைப் போதித்து வந்தவர்கள். பிரமஞான சபையாரை இவ்வித குஞேஸ்தீக மதத்தினரின் தற்கால சந்ததியா ரென்றே சொல்லலாம்.

பிளாவட்ஸ்கி அம்மையாருக்கு இயற்பெயர் ஹெலிஞ பீற்ராவஞள், ஓர் உயர்ந்த ருஷிய குடும்பத்தைச் சேர்ந் தவர். இவருடைய தகப்பஞர் ஓர் ராணுவ உத்தியோ கஸ்தர். இவர் சிறுமியாயிருக்கும்பொழுதே ஆவேசக் கோரணிகள் நேரிடுவதுண்டு. பதினேழு பிராயமாயிருக் கும்பொழுது பிளாவட்ஸ்கி என்னும் ருஷிய உத்தியோ கஸ்தரை மணம்புரிந்தார். ஆஞல் மூன்று மாதம் புருஷ ஞேடிருந்து அப்புறம் ஓடிவிட்டார். இதற்குப் பிந்திய ஜீவியம் மிகவும் ஒழுங்கீனமானது. ஐரோப்பாவின் பல தேசங்களிலும் அலைந்து திரிந்து பலவிதமான வேலைக ளைச் செய்து, எங்கும் நிலைவரமாயில்லாமல் சுற்றிஞர். ருஷியாவில் இவருடைய ஜீவியத்தை அறிந்தவர்கள் இவர்மேல் வெறுப்புக்கொண்டனர். 1872–ல் இவர் எகிப்து தேசத்துக்குப்போய் அங்கே தமது ஆவேச சித்திகளில் சிலவற்றைப் பிரஸ்தாபித்தார். இதுவும் பலன்படவில்லை. அடுத்த வருஷம் அமெரிக்காவுக்குச் சென்று நியூயார்க் பட்டணஞ் சேர்ந்தார். அங்கே சில குடும்பத்தினரோடு நண்புகொண்டு அவர்களுக்குத் தம் அபூர்வ சக்திகளைப்பற்றிக் கூறிஞர். இக்காலத்தில் இவர் அர்மீனிய ஜாதியைச் சேர்ந்த ஒரு அமெரிக்கனைத் திரும்பவும் விவாகஞ் செய்துகொண்டார். சில காலத் துக்குப் பிறகு இந்த விவாகமும் ரத்தாகியது.

அமெரிக்கர்களிடத்தில் தமது விசேஷ ஆவேச சக்தி களைக்குறித்தும் தாம் அடைந்துள்ள குப்தசாஸ்திர (Occult Science) ஞானத்தைக் குறித்தும், இறந்தா ருடன் சம்பாஷணை செய்தல்போன்ற அபூர்வ சித்திக ளைக்குறித்தும் பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தார். இந் நாட்களில் இதைப்பற்றி விசாரித்துப் புதின பத்திரி

கைகளுக்கு எழுதும்படி ஒருவர் வந்தார். அவர் தான் கர்னல் ஆல்காட் என்ற மாஜி அமெரிக்க ராணுவ உத்தியோகஸ்தர். இவ்விருவருக்கும் அந்நேரமுதல் நட்பு உண்டானது. இந்நட்பின் பயனாகத்தான் தியாசபிக்கல் சங்கம் அமெரிக்காவில் 1875-ஆம் ஸ்தாபகமானது. கர்னல் ஆல்காட் இச்சங்கத்து அக்ராசனபதியாகவும், ஜட்ஜ் என்னும் ஒருவர் உப அக்ராசனபதியாகவும் மாடம் பிளாவட்ஸ்கி அம்மையார் லிகிதகாரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டனர்.

இந்தச் சங்கமானது அமெரிக்காவில் பலவிதமாய் வேலை செய்ய ஆரம்பித்தது. பலவித ஆவேசாப்பியாசங்களை நடத்துவதும், இறந்துசென்ற பெரியாருடன் சம்பாஷணை நடத்துவதும், இக்கோட்பாடுகள் அடங்கிய புஸ்தகங்களை எழுதுவதும், அற்புத சமாஜங்கள் (Miracle Clubs) ஏற்படுத்துவதும், கிறிஸ்துமத கண்டனமாகப் பல முயற்சிகளைச் செய்வதும், கீழ்நாட்டு மதங்களாகிய ஹிந்துமதம் புத்தமதம் கன்பூசியஸ் மதம் முதலியவற்றைச் சிலாக்கித்துப் பிரஸ்தாபித்தலுமாகிய இத்தகைய பிரச்சாரங்கள் மும்முரமாய் நடந்தன. சாதாரண ஜனங்களும் பத்திரிகா நிருபரும் இதில் மிக்க கவனம் செலுத்தினர். வர வர ஜனங்களுடைய உற்சாகங் குறைந்தது. பிளாவட்ஸ்கியைப்பற்றிச் சந்தேகங்கள் கிளம்பின.

இச்சமயத்தில்தான் இந்தியாவுக்குச் செல்லவேண்டும் என்னும் எண்ணம் இவர்களுக்குண்டாயிற்று. ஆரிய சமாஜ ஸ்தாபகராகிய ஸ்வாமி தயானந்த சரஸ்வதியாருடன் கடிதப் போக்குவரவு நடந்தது. தியாசபிக்கல் சங்கமாகிய பிரமஞான சபையையும் ஆரிய சமாஜத்தையும் ஒன்றாய் இணைப்பதே இவர்கள் நோக்கம். 1878-ஆம் இவர்கள் அமெரிக்காவைவிட்டுப் புறப்பட்டனர்.

1879-ஆம் இவர்கள் பம்பாய் வந்து சேர்ந்தார்கள் அப்பால் மூன்று வருஷங்களுக்கு பம்பாய் நகரமே இவர்களுக்கு தலைமை ஸ்தானமாயிருந்தது. தியாசபிக்கல் இரட்டையராகிய இவர்கள் இந்தியாவுடன் மிக்க

அனுதாபமுள்ளவர்களாகக் காட்டிக்கொண்டனர். தாங்கள் இருவரும் புத்த மதானுஷ்டானிகள் என்று இவர்கள் கூறியது இந்தியர்களுக்கும் இலங்கையிலுள்ள பௌத்தர்களுக்கும் மிகப் பிரீதியாயிருந்தது. இக்காலத்தில்தான் திபேத்து தேசத்திலிருப்பதாகச் சொல்லப்படுகிற வெள்ளியம்பல மஹா சகோதரத்வம்(The Great White Brotherhood and Lodge in Tibet) என்னும் கோட்பாடு அபிவிர்த்தியடைந்தது. இவர்களுடைய தொகைக்குக் கணக்கில்லை. இவர்களுக்கு மஹாத்மாக்கள் என்று பெயர். பிளாவட்ஸ்கி அம்மையாருக்கு விசேஷ உதவி புரிந்து ஞானத்தை அனுக்கிரகித்துவந்த வெள்ளியம்பல மஹாத்துமாவுக்கு மோரிய மஹாத்மா என்று பெயராம். கூட் ஹூமி முதலிய இதர மஹாத்மாக்களும் அம்மைக்கு மிகுந்த உதவிபுரிவார்கள். இவர்களிடமிருந்துதான் பிரமஞானதர்மத்தை பிளாவட்ஸ்கி அம்மையார் கற்றுக் கொண்டனராம். மோரிய மஹாத்மாவை அநேக வருஷங்களுக்கு முன்னேயே தமது சொப்பனங்களில் தரிசித்திருப்பதாகவும், அதன்றி ஏழுவருஷம் திபேத்து தேசத்தில் இந்த மஹாத்மாவிடம்தான் உபதேசம் பெற்றதாகவும் பிளாவட்ஸ்கி கூறினார். இவைகள் சாதாரண ஜனங்கள் நம்பத்தக்கவைகளாய் இல்லை.

கர்னல் ஆல்காட்டும் பிளாவட்ஸ்கி அம்மையாரும் இந்தியா முழுமுதிலும் பிரயாணம்பண்ணி பிரமஞான சபையின் கோட்பாடுகளைப் பிரச்சாரஞ்செய்து திரிந்தார்கள். ஹிந்துக்களை பொதுவாக இவர்கள் மிக்க மிக்க குதூகலத்துடன் வரவேற்றனர். இக்காலத்தில் தியாசபிக்கல் சங்க சார்பாக அநேக புஸ்தகங்கள் பிரசுரமாயின.

1882-ஞ இச்சங்கத்தின் தலைமைஸ்தானம் சென்னைபட்டணத்தைச் சேர்ந்த அடையாற்றுக்கு மாற்றப்பட்டது. இக்காலத்தில் பிரமஞானசபையின் பிரஸ்தாபம் அதிகமானது. திபேத்து தேசத்திலுள்ள மஹாத்மாக்களிடமிருந்து தான் அடிக்கடி ரகஸ்ய கடிதங்களைப் பெறுவதாக பிளாவட்ஸ்கி அம்மை சொல்லிவந்ததை சாமானிய ஜனங்கள் நம்பினார்கள். இரண்டு மூன்று

வருஷங்களுக்குள் இந்தியா முழுவதிலும் நூற்றுக்கணக்கான கிளை ஸ்தாபனங்கள் உண்டாயின. இதன் பலனாக ஹிந்துமார்க்கத்துக்கு ஓர் புத்துயிர் தோன்றியது. ஆனால் பிளாவட்ஸ்கி அம்மை வெள்ளியம்பலக் கடிதங்களின் போக்குவரவு சம்பந்தமாகக் கையாடிய தந்திரங்களையும் உபாயங்களையும் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைப் பத்திரிகையின் ஆசிரியர் வெளிப்படுத்தினதின் பலனாக இச்சங்கத்தைப்பற்றிக் கல்விமான்களுக்கிருந்த வியப்பு குறைய ஆரம்பித்தது. இக்காலமுதல் தியாசபிக்கல் சங்கத்தலைவர்கள் அற்புதங்கள் ஆகாது, அவைகள் அவசியம் இல்லை, அவைகளை வற்புறுத்துவது அபாயகரமானது என்னும் சித்தாந்தத்தை வற்புறுத்தினார்கள். இக்காரியங்களுக்குப் பின் பிளாவட்ஸ்கி அம்மையும் அவருடைய சகாக்களும் இந்தியாவை விட்டு புறப்பட்டுவிட்டனர்.

பிளாவட்ஸ்கி அம்மையார் ஐரோப்பாவிலிருந்த காலத்தில் இரண்டு விசேஷ காரியங்கள் நிகழ்ந்தன.

(1) ஐசிஸ் தேவதை வெளிப்படுத்தின விஷயம். ஐசிஸ் ஓர் பூர்வீக எகிப்திய தேவி. பரிசுத்தமான ஜீவியஞ் செய்தவர்களுக்கு மாத்திரம் இந்தத் தேவதையின் தரிசனமும் அனுக்ரகமும் கிடைக்கும். பிளாவட்ஸ்கி அம்மையார் ஜெர்மனிதேசத்திலே வூர்ஸ்பர்க் என்னும் பட்டணத்திலிருக்கையில், இந்த தேவதையின் அனுக்ரகமும் ஞானமும் தனக்கு அளவில்லாது கிடைக்கத்தக்கதாக வெள்ளியம்பலத்து மகாத்துமாக்கள் தன்னையே தெரிந்தெடுத்திருக்கிறார்களென்றும், இதினாலேயே தனது மாசற்ற ஜீவியம் தெரியவருகிறதென்றும் கூறினார். தான் ருஷியாவில் பிளாவட்ஸ்கியை கல்யாணம் செய்திருந்தாலும், தன் ஜீவியத்தைப்பற்றி பற்பலவிதமான கதைகள் பரவியிருந்தாலும், அமெரிக்காவில் தான் ஒரு அர்மீனியனைக் கலியாணம் செய்திருந்தாலும், இந்நிலைமைகளிலெல்லாம் தான் தன்னுடைய கன்னிகாத்தன்மையைக் காப்பாற்றி, எவ்வித களங்கமுமற்றவளாக நடந்துகொண்டிருப்பதாகத் தனது சிநேகிதரிடத்திலும் பிறரிடத்திலும் பிரஸ்தாபித்தார்.

(2) 1888–ஞு பிளாவட்ஸ்கி அம்மை ரகஸ்ய உபதேசம் என்று ஒரு புஸ்தகம் எழுதினார். இதுவே அவர் எழுதிய அதி விசேஷமான புஸ்தகம். இக்காலமுதல் பிரமஞான சபையில் அந்தரங்க உபதேசம் விசேஷமாய்ப் பாராட்டப்பட்டு வருகின்றது. இவ்வுபதேசம் சிறு சிறு வகுப்புகளில் நடைபெறும். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு விகிதர் உண்டு. இதைச்சேர்ந்த ஒவ்வொருவரும் இரண்டு ஆணைகள் செய்யவேண்டும்.

i. தன்னாலானமட்டும் தியாசபிக்கல் சங்கவிஷயங்களைக் காப்பாற்றுதல்.

ii. அந்தரங்க வகுப்புகளில் நடைபெறும் எந்த விஷயத்தையும் வெளியிடாதிருத்தல்.

மேலும் இந்த உபதேசத்தைப்பெறுகிற ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்குரிய வெள்ளியம்பல மஹாத்மாவினுடைய படம் கொடுக்கப்படும். இப்படத்தை இவர்கள் ஒவ்வொருநாளும் கூர்ந்து கவனித்துப்பார்த்து, தங்கள் அறையின் மூலைகளில் அவ்வுருவத்தைத் தங்கள் கண்முன் நிறுத்தல்வேண்டும்.

பிளாவட்ஸ்கி அம்மையார் 1891–ஞு தமது அறுபதாம் வயதில் இறந்தார்.

அனிபெஸண்ட் அம்மையார்.

இவர் இங்கிலாந்து சபையைச் சேர்ந்த பெஸண்ட் பாதிரியாருடைய மனைவி. இவர் புருஷனோடு கூடிவாழுங் காலத்தில் பலகாரணத்தினால் குடும்பத்தில் ஒற்றுமையற்றுப் போய்விட்டபடியால், தன் புருஷனைவிட்டு நீங்கினார். பின்னர் இவர் தமது படிப்பையும் அறிவையும் அபிவிர்த்தி செய்துவந்தார். பல தத்துவ சாஸ்திரங்களைக் கற்றார். கடைசியில் தெய்வமே இல்லை என்று கூறி நிரீச்சுரவாதத்தை ஏற்றார். இந்தக்காலத்தில் இவர் கையில் ஒரு புஸ்தகம் கிடைத்தது. இது மாடம் பிளாவட்ஸ்கி அம்மையார் எழுதிய ரகஸ்ய உபதேசம் என்னும் புஸ்தகம். இந்த புஸ்தகத்தை வாசித்தபிறகு நிரீச்சுரவாதத்திலிருந்து ஒரே தாண்டாக பிரமஞான

சபையில் இறங்கிவிட்டார். இவருடைய வேலை மிகுதியாய் இந்தியாவிலேயே செய்யப்பட்டது. இவர் இந்தியா முழுவதிலும் சுற்றி, பெரிய பட்டணங்களில் கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, பழைய ஸ்தாபனங்களை ஸ்திரப்படுத்தி, ஆங்கு உபந்நியாசங்கள் செய்து, இவ்விதமாய் தியாசபிக்கல் சங்கப் பிரச்சாரம் நடத்திக் கொண்டு வருகிறார். பிளாவட்ஸ்கி அம்மையும் கர்னல் ஆல்காட்டும் தாங்கள் பௌத்த சமயிகள் என்று சொன்னால், அனிபெஸண்ட் அம்மை தன்னை ஒரு ஹிந்து என்கிறார். இவருடைய பெருமுயற்சியால் காசியில் ஒரு ஹிந்து கலாசாலை ஏற்படுத்தப்பட்டு, பிறகு ஒரு ஹிந்து சர்வகலாசாலையாக உயர்ந்தது. பகவத்கீதை முதலிய ஹிந்துமத நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, ஆயிரக்கணக்காய்ப் பிரசுரம்பண்ணினார். இன்னும் ஜனசங்க சீர்திருத்தம் பெண்கல்வி முதலிய துறைகளில் இவர் பெரிதும் உழைத்து வந்திருக்கிறார்.

மேற்கூறப்பட்டவையெல்லாம் பொதுவான வேலை. அனிபெஸண்ட் அம்மையார் பிரமஞானசபைக்கு விசேஷமாய்ச் செய்த ஊழியம் அச்சபையின் அந்தரங்க பிரிவோடு சம்பந்தமுடையது. இந்த வேலையில் இவருக்கு உதவியாயிருந்தது லெட் பீட்டர் என்னும் ஒரு இங்கிலீஷ்காரர். இவர் முன்னே இங்கிலாந்து சபையில் ஓர் உபகுருவாய் இருந்தவர். இவ்விருவரும் சேர்ந்து தங்களுக்கிருந்த மனோசக்தியையும் குப்தசாஸ்திர (Occult Science) ஞானத்தையும் மற்றும் பல அபூர்வ சித்திகளையும் உபயோகித்து, பண்டைக்காலச் சரித்திரத்தில் இன்னும் நன்றாய் அறியப்படாத விஷயங்களை அறியப் பிரயாசப்பட்டனராம். இப்பிரயாசத்தின் பலனாக சில விஷயங்கள் இவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டனவாம். அவற்றுள் ஒன்று இயேசுக்கிறிஸ்துவை பற்றியது; அது வருமாறு:—

இயேசு என்பாரும் கிறிஸ்து என்பாரும் வெவ்வேறு புருஷர், அவ்விருவரும் மனுஷரே. அவர்கள் தேவ வாக்கும் அல்லர், தேவ குமாரரும் அல்லர். இயேசு

கி. மு. 105-ஆ பிறந்தார். இயேசுவின் சரீரத்தை கிறிஸ்து வாஹனமாக உபயோகித்தார். பன்னிரு அப்போஸ்தலர் கிடையாது. சுவிசேஷங்களில் சரித்திர ஆதாரமான விஷயங்கள் கிடையாது, இதே இயேசு பிற்காலத்தில் அப்பொலோனியாவாக அவதரித்தார்.

அனிபெஸண்ட் அம்மை எழுதிய அந்தரங்க கிறிஸ்து மதம் என்னும் நூலிலும் லெட்பீட்டர் எழுதிய கிறிஸ்தவ விசுவாசம் என்னும் நூலிலும் மேற்குறித்த கோட்பாடு வியார்த்தி செய்யப்பட்டிருக்கின்றது.

தியாசபிக்கல் சங்கத்தினுதரவில் பண்டிதை அனிபெஸண்ட் அம்மாள் செய்த இன்னொரு வேலையைப் பற்றி நாம் குறிப்பிடவேண்டும். கிறிஸ்தவர்கள் ஹிந்துக்கள் பௌத்தர்கள் என்னும் இவர்களெல்லாருடைய கவனத்தையும் சேர்ந்தாற்போல் இழுக்கவல்ல ஒரு காரியம் திடீரென்று அறிவிக்கப்பட்டது. கிறிஸ்தவர்களால் இனி வரப்போகிறதாய் எதிர்பார்க்கப்படும் இரண்டாம் கிறிஸ்துவும், பௌத்தர்களால் எதிர்பார்க்கப்படுகிற மைத்திரேயர் என்னப்பட்ட போதிசத்வரும், ஹிந்துக்களால் எதிர்பார்க்கப்பட்ட மஹாவிஷ்ணுவின் பத்தாம் அவதாரமாகிய கற்கியும், ஒரே புருஷோத்தமன்தான் என்றும், அந்த மஹாநுபாவர் இந்தியாவில் பிறந்துவிட்டார் என்றும் பிரஸ்தாபம் பண்ணினுர்கள். இவ்வாறு சர்வலோக மஹா குருமூர்த்தமாக எழுந்தருளிவரும் புருஷோத்தமர் யார் என்று கேட்டால், சென்னை பிராமணர் ஜி. நாராயண ஐயருடைய மூத்த குமாரனுகிய ஜே. கிருஷ்ணமூர்த்தி என்பவரே. வயதுக்குட்பட்டவனுக இருந்த இந்தப் பையனை இவர்கள் பெற்ருேரிடமிருந்து வாங்கி, கல்விபுகட்டி பிரமஞான சபையின் உபதேசத்தைப் போதித்து, அப்பால் இங்கிலாந்துக்கு அனுப்பி, ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் கல்விப் பயிற்சி யளித்துவந்தனர். கிறிஸ்துவின் வருகைக்காக உலகத்தை ஆயத்தப்படுத்துகிறதற்கு சூரியோதயச் சங்கம் என்று ஒருசங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. மூன்று

மாசத்துக்குள் அதன் பெயர் கிழக்கு நக்ஷத்திர சங்கம் (Order of the Star in the East) என்று மாற்றப் பட்டது. கிருஷ்ணமூர்த்தி தமது படிப்பையெல்லாம் முடித்து, இந்தியாவுக்கு வந்து சுற்றிப்பார்த்துவிட்டு இப்போது ஐரோப்பாவுக்குப் போயிருக்கின்றார். பிரம ஞானசபைக் கூட்டங்களில் உபந்நியாசங்கள் நடத்தி வருகிறார். கிறிஸ்துவின் ஆவேசம் தனக்குள் பிரவே சித்து தன்னை வாஹனமாக உபயோகிக்கும் வரைக் கும் அவர் யாதொரு விசேஷவேலையும் தொடங்காமல் அமைதியாய்க் காத்துக்கொண்டிருக்கின்றார்.

பிரமஞான சபையின் விசேஷ உபதேசங்களை இங்கே தொகுத்துக் கூறுவோம்.

1. சர்வ வியாபகரும் நித்தியருமாகிய பாபிரமவஸ்து ஒன்று இருக்கிறது. இந்த வஸ்து இருக்கிறது என் பதைத்தவிர இந்த வஸ்துவைப்பற்றி தமக்கு வேறே ஒன்றும் தெரியாது.

2. இந்தப் பரப்பிரம வஸ்துவுக்குள் கணக்கற்ற அண்டசராசர மண்டலங்கள் (Universes) இருக்கின் றன. ஒவ்வொரு மண்டலத்திலும் எண்ணில்லாத சூரிய மண்டலங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சூரிய மண்ட லத்துள்ளும் இருந்து அதை நடாத்துபவர் ஒருவர் உளர். அவருக்கு லோகாஸ் (Logos) என்றும் தேவ வாக்கு என்றும் சூரியதேவதை என்றும் பெயர். கட வுள் என்றும் சர்வேஸ்வரன் என்றும் அபரபிரமம் என்றும் சாதாரணமாக நாம் சொல்லுவது இந்தச் சூரிய மண்டல மஹாவஸ்துவே. இவரிலிருந்துதான் இந்தச் சூரியமண்டலம் தோன்றியது. அவருடைய ஜீவனின் துண்டுகளாகவும் அவரது தெய்வீக அக்னியின் பொறி களாகவும் நாம் இருக்கிறோம். நாம் எல்லாம் அவ ரிடத்தினின்று வந்தவர்கள். அவரண்டைக்கே நாமெல் லாம் திரும்பிச் செல்லவேண்டும்.

3. சூரியமண்டல தேவதையாகிய இந்த சர்வேஸ் வரனுக்குக் கீழே ஏழுமந்திரிகள் உளர். இந்த எழுவரும் சர்வேஸ்வரனின் அம்ஸமே.

4. சூரியமண்டல தெய்வாம்சமான இந்த ஏழு மந்திரிகளுக்குக்கீழே தேவதூதர்கள் (Angels) என்றும் தேவர்கள் என்றும் பெயருடைய ஆவிகள் உளர்.

5. நாம் வசிக்கிற இந்த உலகம் ஒரு உலகமாக நமக்குத் தோன்றினாலும் உண்மையில் இவ்வுலகத்திலேயே ஏழு உலகங்கள் இருக்கின்றன. தெய்வலோகம், ஆவேசலோகம், மானஸலோகம், பௌதிகலோகம் முதலான இந்த ஏழு லோகங்களும் ஒன்றுக்கொன்று பிரத்தியேகமாக நிற்காமல், ஒன்றையொன்று ஊடுருவிச்செல்லுந் தன்மையுடையவை. இவை சாதாரண மனுஷருடைய கண்களுக்கு தெரியாது. ஆனால் குப்தசாஸ்திர (Occult Science) ஞானம் அடைந்து முதிர்ந்தார்க்குப் பிரத்தியக்ஷமாம்.

இந்த உலகமானது சூரியமண்டல தேவதையின் பிரதிநிதிகள் ஒருவருடைய ஆதிக்கத்தில் உள்ளது. இவ்வுலகத்தில் நடக்கிற சகல அபிவிர்த்திகளெல்லாம் அவருடைய ஆதீனத்தில்தான் இருக்கிறது. லோகராஜன் என்னும் பெயர் அவருக்குப் பொருந்தும். இவருக்குக் கீழே அநேக மந்திரிகள் இருந்து ஜனசமூகம், மதம், கல்வி முதலிய சகல இலாகாக்களையும் பரிபாலித்து வருகிறார்கள்.

6. எல்லா மதங்களும் சத்தியத்தையே நாடுகின்றன. ஒரு மதாச்சாரியார் இன்னொரு மதாச்சாரியாரை விட சிறந்தவர் என்று சொல்வது மடமையாகும்.

7. இந்த உலகத்தில் மனுஷன் தோன்றின கால முதல் அவனைச் சன்மார்க்கத்திலும் ஞானவழியிலும் நடத்தும் பொருட்டும், அவனை மோக்ஷசாம்பிராஜ்யப் பதவிக்கு அருகனாக்கும் பொருட்டும், ஞானிகள் சங்கம் அல்லது மஹாத்மாக்களின் சபை என்னப்பட்ட ஒரு மகாசபையானது இவ்வுலகத்தில் இடையறாமல் இருந்துகொண்டே வருகிறது. இச்சங்கத்துக்கு வெண் சகோதரத்துவம் அல்லது வெள்ளியம்பலம் (The White Brotherhood) என்றும் பெயர். இந்த வெண்சபையில் பாபத்தினின்று முழுவதும் நீங்கிய ஜீவன்முக்தர்களும்,

வெவ்வேறு ஜாதியினரைச் சேர்ந்த மஹாயோகிகளும், சித்தர்களும் அங்கமாயிருக்கின்றனர்கள். சூக்ஷம சரீர முடைய இம்மஹாத்மாக்கள் ஜனசமூகத்தில் சத்தியங் குறைந்து அசத்தியம் அதிகப்பட்ட காலங்களிலும், அல்லது உலகத்துக்கு ஞானோபதேசம் செய்வதற்கு அவசியம் நேரிடுங் காலங்களிலும், அப்போதைக்கப் போது தங்களில் ஒருவரை உலகம் நன்மையடையும் பொருட்டு அவதரிக்கும்படியாகச் செய்திடுவார்கள். இவ்வாறு அவதரித்தவர் தமது ஊழியம் நிறைவே றின பின்பு மறைந்து, வெள்ளியம்பல சங்கத்தில் சேர்ந்து விடுவார்கள். இவ்விதமாகத்தான் உலகத்தில் மதஸ்தா பகர்கள் தோன்றி மறைந்திருக்கிறார்கள். இதினால்தான் சர்வ மதங்களின் உட்கருத்துக்களை ஆராய்ச்சிசெய்து பார்க்குங்கால், தத்துவவிஷயங்களிலும் சன்மார்க்க விஷ யங்களிலும் அதிகமாகவித்தியாசங்கள் காண்பது அரிதா யிருக்கின்றது.

8. அதர்சன ரூபிகளாகவுள்ள இந்த வெள்ளியம்பல சகோதரத்துவத்தைச் சேர்ந்த சில மஹாத்மாக்கள் இவ்வுலகத்தின் க்ஷேமத்தையே கருதியவர்களாய், இவ்வுலகத்தின் நன்மைக்காக பர பரோபகார்த்தமாய்ச் சம்பூர்ண சேவை செய்துகொண்டு வருகிற சிலரைத் தங்களின் பயிற்சி–ஊழியராக (Apprentice) ஏற்றுக்கொள் ளச் சித்தங்கொண்டிருக்கின்றார்கள். இந்தச் சிறந்த நிலைமைக்கு அருகராய், ஏற்றுக்கொள்ளப் பட்டவர் களுக்கு எஜமானர் (Masters) என்று பெயர். பிரம ஞான சபையின் ஸ்தாபகராகிய பிளாவட்ஸ்கி அம்மை யார் இப்படிப்பட்ட உயர்ந்த நிலைமையை அடைந்த எஜமானருள் ஒருவர்.

9. இவர்களுக்கு அடியாராகிச் சேவைசெய்து உலகத் தின் க்ஷேமத்தின் பொருட்டு உழைப்பதே பிரமஞான சபை அங்கத்தினர் ஒவ்வொருவருடைய விருப்பமாகும்.

**இயேசுக்கிறிஸ்துவும் பிரமஞான சபையும்.**

10. இயேசுநாதரைப்பற்றி தியாசபிக்கல் சங்கத்தினர் மிகவும் மிக்க விநோதமான கோட்பாடுடையர். நாலு

சுவிசேஷங்களிலுமில்லாத அநேக விஷயங்களைச் சேர்த்துக் கூறுவர். இவ்விஷயங்கள் இவர்களுக்கு எவ்வாறு தெரியவந்தது என்று கேட்டால் பிரமஞானம் பெற்ற பிளாவட்ஸ்கி முதலான குப்தசாஸ்திர (Occultism) விற்பன்னர்களால் சூக்ஷ்மதர்சனமாய் கண்டுணரப்பெற்றவை என்பர். இனி இவர்கள் கொள்கை இன்னதென்பதைச் சிறிது நோக்குவாம்.

(1) இயேசு என்னும் நாமம் உடையவர் கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்தில் பிறக்கவில்லை. அவர் பிறந்தது கி. மு. 4—ம் வருஷமும் அல்ல. கி. மு. 105—ம் வருஷம். பாலஸ்தீனம் என்னும் நாட்டிலே சாதாரண மனிதர்போலவே அவதரித்தார். அவருடைய பெற்றோர் சிறந்த குணசீலர். ஆயினும் மிக்க எளியவர். தக்க காலத்தில் கல்வியாரம்பித்து, யூதமத சாஸ்திரங்களை செவ்வனே கற்றுணர்ந்தார். அவரது பாலியப் பிராயத்திலேயே ஜீவகாருண்யம் முதலான சற்குணங்கள் அவரிடத்தமர்ந்து வளர்ந்து செழித்தன. இயல்பாக அவர் சாந்தகுண சீலராகையால், அவரது பெற்றோர் அவரைச் சந்நியாச மார்க்கத்தில் செலுத்தும்படி விரும்பினார்கள். இயேசுவும் யூதர்களின் புண்ணியஸ்தலமாகிய எருசலேம் என்ற திருநகரஞ்சென்று, பல சாஸ்திரங்களை ஆய்ந்து கற்று, ஞானம் அடைந்து அங்கிருந்த தேவாலய மதாச்சாரிகளோடு பழகி, சாஸ்திர விற்பன்னராயினார்.

(2) இதற்குப்பின் அவர் யூதேயாதேசத்துவனாந்தரங்களின் தென்பக்கத்தில் ஸ்தாபகமாயிருந்த எஸ்ஸேனர் (Essene) என்ற தத்துவசாஸ்திர சபையை அடுத்து, அங்கே பல விஷயங்களைத் தெரிந்துகொண்டு அச்சபையின் அனுஷ்டான முறைகளையுங் கைக்கொண்டுவந்தார்.

(3) அப்பால் செர்பால் என்ற எஸ்ஸேனர் மடத்தை அடைந்தார். அப்போது அவருக்கு பத்தொன்பது வயது. பார்சிகம் இந்தியா முதலிய தேசங்களினின்று எகிப்து தேசத்துக்குச் செல்லுகிற ஞானிகளும் தத்வசாஸ்திரிகளும் சித்தர்களும் இம்மடத்தில்

தங்கிச் செல்வது வழக்கம். ஹிமாலயப் பிரதேசத்தினின்று சேகரிக்கப்பட்ட உயர்ந்த ஞானசாஸ்திர நூல்களும் ரகஸ்யமான தத்துவ சாஸ்திரநூல்களும் அம்மடத்தில் இருந்தன. இயேசு இந்த அற்புதமான குப்த சாஸ்திரங்களை (Occult Science) சந்தேக விபரீதமறக் கற்றுத்தேறினார்.

(4) அப்பால் அவர் எகிப்துதேசத்துக்குச் சென்றார். அக்காலத்தில் எகிப்து கல்விநிலையம். பலதேசத்துஞானிகளும் சித்தர்களும் தத்வசாஸ்திரிகளும் துறவிகளும் இந்நாட்டுக்குச் சென்றுகொண்டே இருப்பார்கள். மகாப்பிரக்யாதி பெற்ற ஓர் தத்வஞான சபை அங்கே இருந்தது. இயேசுவும் இச்சபையில் ஓர் அங்கத்தினராய்ச் சேர்ந்து, அதில் தாமும் அதன் சிஷ்வர்க்கத்தில் ஒருவரானார். தாம் இதில் தத்வஞானோபதேசம் பெற்றதுமல்லாமல், இந்த ஞானத்தைப் பிறருக்கும் ஊட்டும் வண்ணம் ஆச்சாரியாபிஷேகமும் பெற்றார்.

(5) அவர் அருங்குண சிரேஷ்டர், மிகப் புனிதர், பெரும் பக்தர், காருண்யர். அக்காலத்திலிருந்த யூதர்களோ உலகப்பற்றுடையார், வீண் பிடிவாதக்காரர், இயேசுநாதர் தன்னுயிரினும் மன்னுயிரை பெரிதும் பாராட்டுபவர், அழகிய பார்வையும், முகமலர்ச்சியும், சிறந்த சத்தமும் இவரிடம் விளங்கின. இவரது பரிசுத்தமான ஒழுக்கத்தால் இவரைச் சூழ ஒரு தேஜஸ் விளங்கினது. பெரும் பொருள் அடங்கிய விஷயத்தை சில வார்த்தைகளில் சொல்லக்கூடியவர். இவ்வாறு தெய்வீக லட்சணங்கள் இவரிடத்தில் விருத்தியாகிக்கொண்டு வந்தன. இவ்வாறு தமது இருபத்தொன்பதாவது வயது வரை இவர் வாழ்நாள் சென்றது.

(6) இவ்வாறு பரிசுத்தமும் தேவபக்தியும் பெற்றிருந்த இயேசுவின் சரீரமானது ஒரு மகாத்மா இவ்வுலகத்தில் அவதரித்து தங்குவதற்கேற்ற நல்லிடமாக அமையப் பெற்றிருந்தது. மேலும் ரோமராஜாங்கம் க்ஷீணித்துபல்வகை தவறுதல்களும் கஷ்டங்களும் பாவங்களும் அதிகமாக வியாபித்திருந்தமையால், இந்த நிலையைத்தவிர்த்து, லோகத்திற்கு ரக்ஷணார்த்தம் செய்யும்

பொருட்டு ஒரு மகா புருஷனது வரவை உலகம் எதிர் பார்த்திருந்தது.

(7) இக்காலத்தில்தான் முன்னால் விவரிக்கப்பட்ட வெள்ளியம்பல சகோதரத்துவத்தின் (White Brotherhood) விசேஷ மகாத்மாக்களில் ஒருவரும் மேனாட்டாரின் வைதீக சன்மார்க்க தத்வநெறிகளைக் காப்பாற்றுவோருமாகிய ஒரு மகா புருஷர் இயேசுவினுடைய சரீரத்தை நாடி அதில்வந்து இறங்கினார். இவ்வாறு இரங்கிய மகா புருஷர்தான் கிறிஸ்து. வெள்ளியம்பலத்தினின்று சூக்ஷமரூபமாக வந்த கிறிஸ்து என்னும் இந்த மகாபுருஷனுக்கு இயேசு தம் சரீரத்தை உறைவிடமாகச்செய்து தாம் அதைவிட்டு விலகினார். இந்த வெள்ளியம்பல மகா புருஷனும் இம்மானிட சரீரத்தில் லோக க்ஷேமத்தின்பொருட்டு மூன்று வருஷம் தங்கினார். வானத்திலிருந்து புறாவடிவாக ஆவி இறங்கி இயேசுவின்மேல் அமர்ந்தது என்று கிறிஸ்தவநூலில் சொல்லியிருப்பது இச்சந்தர்ப்பம் பற்றியதே.

(8) அக்காலமுதல்தான் அவருக்கு இயேசுக்கிறிஸ்து என்று பெயர். இவர் ஆரம்பத்தில் தமது சங்கத்தைச் சேர்ந்த எஸ்ஸேனருக்கு ஞானோபதேசம் செய்தார். அப்பால் வெளியேறி பலநாடு நகரங்கள் சென்று போதித்துவந்தார். தமது திருநோக்காலும் திருவாக்காலும் திருக்கரத்தாலும் அநேக வியாதிகளைத் தீர்த்தார். தாம் முன்னேயடைந்திருந்த ஞானசித்திகளால் (Occult Powers) பல அற்புதங்களை நடத்தினார். முன் ஜென்ம தவபேற்றையுடைய சிஷர்களை சேர்த்துக் கொண்டு அவர்களுக்கு ஞானோபதேசம் செய்தார்.

(9) பூர்வ ஜென்மங்கள் உண்டென்பதும் புனர்ஜென்மங்கள் உண்டென்பதும் (Transmigration) இயேசு கிறிஸ்துவின் கொள்கை.

(10) கிறிஸ்துவின் உபதேசங்கள் சிறந்த ஞானதத்துவங்களுடையது. உலகப்பற்றுக்களைத் துறத்தல், மனச் சஞ்சலத்தை நீக்குதல், சத்தியத்தை நாடுதல், ஜீவ காருண்யம், மாசற்ற மனம், சன்மார்க்க நடை, ஈஸ்

வர புத்திரர்களைப்போல் நல்லொழுக்கமுடையவரா யிருத்தல், கோபம் தவிர்த்தல், டம்பமின்றி தானம் செய்தல், தம்மைப் பின்பற்றல்—இத்தியாதி சுகுண தர்மங்களைப்பற்றி இயேசுக்கிறிஸ்து போதித்த உபதேசம் மகா சிறந்தது. அவர் சென்றவிடமெல்லாம் ஞான வாசனை பரிமளித்தது, அன்பு பிரகாசித்தது.

(11) இவ்வாறு சங்கற்பித்த மூன்று வருஷங்களும் கழிந்தன. தாம் உறைவிடமாகக் கொண்டிருந்த சரீரத்தைவிட்டு பிரியும்காலம் சமீபித்தது. அவர் தமக்கு ஏற்பட்ட கடைசிநிமிஷம் வந்தபோது, ஒருவர் தம்அங்கியை கழற்றிவிடுவதுபோல தாம் மூன்று வருஷமாக அணிந்திருந்த சரீரத்தைக் கழற்றிவிட்டு, சூக்ஷ்ம சரீரியானார்.

(12) ஸ்தூல சரீரத்தைவிட்டு விலகினாலும் கிறிஸ்துவாகிய இந்த மகா புருஷன் சூக்ஷ்ம சரீரியாக ஐம்பது வருஷக்காலம் தம்மைச் சுற்றியிருந்த சிஷர்களுக்கும் பிறருக்கும் தரிசனமானார். அவர் சிஷர் பன்னிருவர். அவர்களில் ஜான் என்பவர் அவருக்கு மிகவும் ஆப்தர். அப்பால் கிறிஸ்து தமது சூக்ஷ்ம சரீரத்தோடு தாம் விட்டுவந்த வெள்ளியம்பல சபையை யடைந்தார்.

(13) பிற்காலத்தில் பலஸ்தீனாவிலுள்ள டையானு என்னும் ஸ்தலத்தில் அப்பலோனியஸ் என்ற பெரியோராக திரு அவதாரம் செய்தது இந்த கிறிஸ்துவே. அதற்குப்பின் பதினோராம் நூற்றாண்டிலே தென்னிந்தியாவில் தமிழ்நாட்டிலே விசிஷ்டாத்வைத மதஸ்தாபனாச்சாரியாராகிய ஸ்ரீராமானுஜாச்சாரியாராக ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்ததும் இந்த கிறிஸ்துவே. வெள்ளியம்பல மகா சபையின் முக்கிய அங்கங்களில் ஒருவராக இவர் இப்போது இருந்து, விசேஷமாக மேல்நாட்டாரின் வைதீக நெறிகளை அதர்சன ரூபியாய் மேற்பார்த்து வருகிறார்.

(14) தற்கால உலகத்தின் ரக்ஷணார்த்தத்தின் பொருட்டு அவர் திரும்பவும் உலகத்திற்கு வரவேண்டியகாலம் வந்துவிட்டது. மகாவிஷ்ணுவின் கடைசி யவதாரமாகிய கற்கியும், இனி யவதரிக்கப்போகிறதாக

பௌத்தமத நூல்கள் கூறும் போதிசத்வ மைத்திரேயரும் இந்த கிறிஸ்துவே. இவர் வருகைக்காக உலகம் ஆயத்தமாக வேண்டும். முன்னே இந்த கிறிஸ்து உறைவிடமாக தங்குகிறதற்கு இயேசுவின் மானிட சரீரத்தைத் தெரிந்துகொள்ளப்பட்டதுபோல இனிவரப் போகிற அதே கிறிஸ்து தங்குகிறதற்கு சென்னை ஜி. நாராயணசாமி ஐயருடைய குமாரனாகிய கிருஷ்ணமூர்த்தியின் சரீரம் ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணமூர்த்தியும் கிறிஸ்துவின் சூக்ஷ்மசரீரம் தன் ஸ்தூல சரீரத்தில் வந்து அமருமென்று ஐரோப்பாவில் காத்துக்கொண்டிருக்கிறார்.

மேற்கூறிய விஷயங்களே தியாசபிக்கல் சங்கத்தினர் இயேசுக் கிறிஸ்துவைப்பற்றிக் கொண்டிருந்த அபிப்பிராயமாகும். நாலு சுவிசேஷங்களிலும் அப்போஸ்தலர் வர்த்தமான புஸ்தகத்திலும் புதிய ஏற்பாட்டின் இதர நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களுக்கு எதிராக பிரமஞான சபையார் மேற்கூறிய வண்ணம் சாதிக்கிறதற்கு ஆதாரமாகவுள்ளது சரித்திர சார்ப்பான எந்த விஷயமும் அல்ல. பிரமஞானம் மிகுந்த சிலர் தங்களுடைய ஞானதிருஷ்டியினாலும் அபூர்வமான சித்திகளாலும் குப்த சாஸ்திர (Occult Science) வல்லமையினாலும் அறிந்துகொண்டவை யென்று அவர்கள் சொல்வது மற்ற எம்மதத்தினரும் ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல.

மேற்கூறிய கிருஷ்ணமூர்த்தியின் கல்வி விஷயம் லெட்பீட்டர் என்னும் மகானிடம் ஒப்புவிக்கப்பட்டதை ஆட்க்ஷேபித்து அனி பெஸண்ட் அம்மையார்மீது சென்னை ஹைகோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு சம்பந்தமாக எழுந்த பல விஷயங்கள் காரணமாக, இந்தியாவில் தியாசபிக்கல் சங்கத்தினுடைய உற்சாகமும் பிரஸ்தாபமும் சற்றே குறைவடைந்திருக்கிறது. மேலும் பிரமஞான சங்கத்தின் தலைவராகிய அனிபெஸண்ட் அம்மையார் ராஜீய விஷயங்களில் பிரதம கவனம் செலுத்தி வருகின்றமையால் சங்கத்தின் விஷயத்தில் செலுத்தப்படவேண்டிய கவனம் மிகவும் குறைவுபட்டிருக்கின்றது.

## 5. மதசம்பந்தமான இதர இயக்கங்கள்.

### 1. சிவநாராயண இயக்கம்.

சிவநாராயண பரமஹம்ஸா. இவரும் அலைந்து திரியும் ஓர் சந்நியாசி, தயானந்தரைப்போன்ற கொள்கையுடையவர். ஜாதியில் காசிபிராமணர், கல்வி சிறிதுமில்லாதவர். 12–ம் வயதில் தம் வீட்டைவிட்டு தமது மரணகாலமட்டும் அங்குமிங்கும் அலைந்து திரிந்தார். தமது கடைசி வருஷங்களை வங்காளத்தில் செலவிட்டார். இவர் ராமகிருஷ்ண பரமஹம்சரை சந்தித்தாராயினும் இவ்விருவருக்கும் சிநேகம் ஏற்படவில்லை. 1888–ஹு சாட்டர்ஜி என்ற ஒருவர் இவரைச் சந்தித்து தாம் அச்சிட்ட பகவத்கீதையை இவருக்குக் காண்பித்தார். உடனே சிவநாராயணர் அதற்கு வியாக்கியானம்கூற ஆரம்பித்தார். சாட்டர்ஜி அவ்வியாக்கியானக் குறிப்புகளைக் கொண்டு வங்காள ஹிந்தி இங்கிலீஷ் பாஷைகளில் ஓர் புஸ்தகம் எழுதினார். அதுமுதல் அவரின் பிரஸ்தாபம் அதிகமாயிற்று.

இவரின் உபதேசமாவது:—

1. ஒரே தெய்வமுண்டு.
2. விக்கிரகாராதனை வீண்.
3. விக்கிரகங்களை வணங்குவது தனித்தனி மனிதர்களையும் ஜாதிகளையும் இழிவாக்குகிறது.
4. மனுஷரை வணங்கலாகாது.
5. ஜாதிவித்தியாசம் புத்தியீனமானது.
6. சிசுவிவாகம் ஆகாது.
7. ஸ்திரீகளுக்குக் கல்விபுகட்டவேண்டும்.
8. புருஷரும், ஸ்திரீகளும் சமத்துவமுடையவர்.
9. இவர் மறுஜென்மகோட்பாட்டை ஆதரிக்கவில்லை.
10. வேதங்களில் தப்பிதமில்லை என்று கூறமுடியாது.
11. மனுஷசரீரம், மசனுஷ ஆத்துமாவுக்கு ஊழியஞ்செய்யவேண்டும்.

12. வெளிச்சம், சூரியன், சந்திரன் இவைகள் ஈஸ்வரனை வெளிப்படுத்துகின்றது.

இவரின் மரணத்திற்குப்பின் இவரது செல்வாக்கு வங்காளத்தில் அதிகமாகவிருந்தது.

## 2. ஆமதீய மதம்

இவ்வியக்கம் பஞ்சாபிலுண்டானது. இதை ஸ்தாபித்தவர் மிர்சா குலாம் ஆமது. இவரின் பிறப்பு வளர்ப்பு கல்வி முதலியவற்றைப்பற்றி அதிகம் தெரியவில்லை. இவர் 1879–ஞ உபதேசம் செய்ய ஆரம்பித்தார். இவரின் விசேஷ உபதேசங்களாவன:—

1. கிறிஸ்தவர்கள் மேசியா என்று எதிர்பார்ப்பவரும், மகமதியர் மாதி என்று எதிர்பார்ப்பவரும், ஹிந்துக்கள் ஈஸ்வரனின் கடைசி அவதாரமென எதிர்பார்ப்பவரும் தாமே என்பதே.

2. அவர் சொல்வது "நான் மகமதியரைமட்டும் சீர்திருத்தும்படி கடவுள் என்னை அனுப்பவில்லை. உலகத்தின் பெரிய மதத்தினராகிய இந்துக்கள், மகமதியர், கிறிஸ்தவர் என்ற மூன்று மதத்தினருக்கும் புது உயிரைக் கொடுத்து, அவர்களை முன்னேற்றும்படி கடவுள் என்னை அனுப்பியிருக்கிறார். இந்துக்களுக்கு நான் ஈஸ்வரனின் கடைசி அவதாரம். கிறிஸ்தவ மகமதியருக்கு நான் மேசியா; என்னில் கிறிஸ்து மதமும், இஸ்லாமிய மதமும் இணைக்கப்படுகிறது, நான் இயேசுக்கிறிஸ்துவின் ஆவியோடும், வல்லமையோடும் வந்திருக்கிறேன்" என்று கூறினார்.

3. கிறிஸ்து சிலுவையில் மரிக்கவில்லை; உயிரோடு எழுந்திருக்கவுமில்லை; பரமண்டலத்திற்கு எழுந்து போகவுமில்லை; அவர் அப்படிச்செய்திருந்தால், கிறிஸ்துமதம் உண்மையாயிருக்கும். நான் பொய்யனாவேன். மரியாளின் குமாரன் இயற்கையான மரணமடைந்தார். இயேசு சிலுவையிலறையப்பட்டது வாஸ்தவம். அவர் சிலுவையில் மயங்கிக் கிடந்தபோது அவர் இறந்துபோனாரென்று நினைத்து, அவரைச் சிலுவையிலிருந்து இறக்கிவிட்டார்

கள்.. அப்பால் ஸ்மரணை யடைந்தார். அவரின் காயங்கள் ஆறியபின் அவர் இந்தியாவுக்குவந்து, அநேக வருஷமிருந்து சாதாரண மனுஷரைப்போல காஷ்மீர் தேசத்தில் இறந்தார். இக்கோட்பாட்டுக்கு அவர் கூறும் காசனங்களாவன:—

(1) இயேசு சில மணிநேரம்தான் சிலுவையிலிருந்தார்.

(2) அவரின் கால்கள் ஒடிக்கப்படவில்லை.

"உயிரோடிருப்பவரை மரித்தோரிடத்தில் தேடுகிறது என்ன" என்று சொல்லப்படவில்லையா?

(3) இயேசு தம் சீஷருக்குத் தரிசனமானது வாஸ்தவம். ஆனால் அது சரீரத்தைவிட்டுப் பிரிந்த ஒரு ஆவியின் தரிசனமாயிராமல், ஜீவனுள்ள மனுஷனின் தரிசனமே.

(4) இயேசு தாமே யோனாவை தமக்கு மாதிரியாகச் சொல்லவில்லையா? யோனா திமிங்கிலத்தின் வயிற்றில் உயிரோடிருந்ததுபோல, இயேசுவும் பூமியின் வயிற்றில் உயிரோடிருந்து, அப்புறம் யோனாவைப்போலவே வெளியே வந்தார்.

(5) இயேசு சிலுவையில் சாகவில்லை என்பதற்கு பர்னபாவின் சுவிசேஷம் என்னும் புஸ்தகத்தை ஆதாரங் காட்டுகிறார். இப்புத்தகம் மத்திப காலங்களில் ஓர் மகமதியனால் எழுதப்பட்ட ஒரு கள்ளப் புஸ்தகம்.

(6) யூத, கிறிஸ்தவ, மகமதிய, வைத்திய சாஸ்திரிகள் எழுதிய புஸ்தகங்களில் இயேசுவின் தைலம் என்னும் ஒரு தைலத்தைப்பற்றி கூறியிருக்கின்றது.

4. இயேசு மூன்றும் நாள் தமக்கு வந்த மயக்கம் தெளியப்பெற்றார். அவரின் சீஷர் இத்தைலத்தை அவருக்குத் தடவி, அவரை 40 நாளுக்குள் சுகமாக்கினார்கள். **40**-ம் நாள் அவர் அந்நிய தேசத்திற்குப் பயணம் செல்லக்கூடியவராயிருந்தார்.

5. பரத்துக்கேறுதலின் அர்த்தம் யாதெனில் இயேசு தமது சீஷரினின்றும் பிரிக்கப்படுவதே. அவர் அப்பால் ஆப்கான்ஸ்தானம், காஸ்மீரம் என்னும் இடங்

களுக்கு வந்தார். இத்தேசத்தினர் தாம் காணுமற் போன பத்து கோத்திரத்தார். காஸ்மீரில் உள்ள ஸ்ரீந கரில் இயேசுவின் கல்லறை இன்றைக்கு மிருக்கிறது. அதற்கு ஏஸ் அசாப் என்று பெயர்.

குலாம் ஆமது. இயேசுக்கிறிஸ்து பரத்துக்கு எழுந் தருளவில்லை என்று சொல்வது மகமது மார்க்கத்திற்கு விரோதமான காரியம். ஏனெனில் கடவுள் இயேசு வைப் பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டாரென்றும் அவர் இப்போது பரலோகத்திலிருக்கிருர் என்றும் அந்திக்கிறிஸ்துவை அழிப்பதற்கு அவர் திரும்பவும் உலகத்திற்கு வருவார் என்றும் மகமதியர் நம்பு கிருர்கள்.

தான் மேசியா என்பதை ஸ்தாபிப்பதற்கு ஆமது பல பிரயத்தனம் செய்தார். எலியா திரும்பவும் வருவா ரென்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தாலும், அவர் நேரே வராமல் அவரின் ஆவியையும் வல்லமையும் பெற்ற யோவான் ஸ்நானகன் எவ்வாறு வந்தாரோ, அவ் வாறே கிறிஸ்து திரும்பவும் வருவார் என்று சொல்லப் பட்டிருந்தாலும் அவர் நேரே வராமல் அவரின் ஆவியை யும் வல்லமையையும் பெற்ற குலாம் ஆமது இப்போது வந்திருக்கிருர்.

இவர் அடிக்கடி எடுத்துக்கூறிய கொரான் வாக்கிய மாவது: "இஸ்ரவேல் புத்திரரே மெய்யாகவே, மெய்யா கவே எனக்கு முன்னே கொடுக்கப்பட்ட பிரமாணங் களை ஸ்திரப்படுத்தும்படிக்கும் ஆமத் என்னும் பெய ருடையவராய் எனக்குப்பின் வருகிற ஒரு அப்போஸ் தலனைப்பற்றி உங்களுக்கு அறிவிக்கவும் அனுப்பப்பட்ட கடவுளின் அப்போஸ்தலன் நான் என்று மரியாளின் குமாரனுகிய இயேசு சொன்ன வசனங்களை நினைத்துக் கொள்ளுங்கள்" என்பதே. இவர்தாம் மேசியா என்ப தற்கு இன்னொரு காரணம் கூறுகிருர். புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் வருஷம் ஒரு சந்திர வருஷம். இவ்வாறு கணக்கிடும்போது இப்போது 2000-ஞ ஆகி விட்டது. இது 3-ம் ஆயிரம், இதுவே தேவராஜ்ஜிய யுகம்.

இவர் தமக்கு தீர்க்கதரிசன வரமுண்டென கூறி ஜனங்களை ஏமாற்றியதாக சர்க்கார் அறிந்து, இவர் அவ்விதம் ஒன்றும் கூறக்கூடாதென்று கட்டளையிட்டனர்.

கிறிஸ்து மதத்திற்கும், இஸ்லாம் மதத்திற்கும் இடைப்பட்ட ஒரு புது மதத்தை உண்டுபண்ணவேண்டுமென்பதே இவரின் நோக்கம். இவர் ஆங்கிலத்திலும் சுய பாஷையிலும் சில பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் பிரசுரம்பண்ணினர். இவரின் சீஷர் மகமதியரை சேராமல் தனிப்பட்டவர்களாக விருந்து தங்கள் சமாஜத்தை நடத்துகின்றார்கள். 1908-ஆ விஷபேதியில் இவர் இறந்தனர்.

## 3. புதிய நசரேய சபை.

## The Nazarene New Church.

இச்சபை மிகுதியும் குலாம் ஆமதின் உபதேசத்தோடு சம்பந்தப்பட்டது. 1890-ஆ சர்க்கார் வேலைக்காரராகிய ஜே. எஸ். உவைட் துரை குலாம் ஆமதுவின் உபதேசத்தினால் ஒருவாறு இழுப்புண்டவராய் அச்சபையை ஆராய்ச்சி செய்து புதியநசரேய சபை என்னும் ஒரு சபையை ஸ்தாபித்தார். இஸ்லாம், கிறிஸ்து மதங்களில் எதெது நன்மை என்று நினைத்தாரோ அவற்றை எல்லாம் இம்மார்க்கத்தின் சட்டமாக்கிக் கொண்டார். ஓர் யூரோஷியர் இதின் விசேஷித்த குருவானார். கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினால் பூரணப்படுத்தப்பட்ட மோசேயின் நியாயப்பிரமாணமே இவர்களுக்கு வேதம். மத்தேயு சுவிசேஷத்தையும், புதிய ஏற்பாட்டின் வேறு சில பாகங்களையும் ஒப்புக்கொள்ளலாம். ஆனால் யோவான், பவுல் முதலியவர்களின் புஸ்தகங்களை ஒப்புக்கொள்ளப்படாது. கொரானை வாசிக்கவேண்டும். ஒவ்வொருவரும் நாசரேத்துக்குக் கட்டாயம் புண்ணிய யாத்திரை போகவேண்டும். இச்சபையைச் சேர்ந்தவர்கள் இன்னும் சிலர் இருக்கின்றனர், ஆயினும் இது வளரவில்லை.

## 4. சேத்ராம சபை.

பஞ்சாப் தேசத்தில் லாகூர் ஜில்லாவில் வைஷ்ணவ மதப் பெற்றோருக்கு செத்ராம் பிறந்தார். கல்வியறிவு இல்லாதவர், சீனயுத்தத்தில் ஒரு சேவகனாகச் சென்று அதிலிருந்து திரும்பிய பிறகு, ஒரு கடை வைத்து அதில் அபினும், சாராயமும் விற்றுவந்தார். இவரின் சாராயக்கடைக்கு அடிக்கடிவந்த ஓர் மகமதியன், இந்து மதம், கிறிஸ்துமதம், மகமதுமதம் என்னும் மூன்றையும் கலந்து இவருக்குப் போதிக்க, இவர் அவனுக்குச் சிஷ்யரானார். 4–வருஷம் கழித்து மகமதிய குரு இறந்தார். 3–வருஷங்களாக சேத்ராம் அக்கல்லறையை விட்டகலாமல் இரவும் பகலும் அங்கேயே இருந்தார். ஒரு நாளிரவில் அவருக்கு ஒரு தரிசனம் கிடைத்தது. இயேசுக்கிறிஸ்து அவருக்குத் தரிசனமானாராம். பௌர்ணமியன்று, நக்ஷத்திரங்கள் ஆகாய விளக்குகளைப்போல் அசைவாடிக் கொண்டிருந்தபோது வருணிக்க முடியாத ஒரு புருஷன் இரக்க முகமுடையவராய், மகிமையான ரூபத்தில் அவருக்கு தரிசனமானார். அப்புருஷரின் முகம் பூரண சந்திரன்போல அழகியது. அவரின் சத்தம் இனிமையாயிருந்தது, அவரின் முகம் தேவ சொரூபத்தைப்போலிருந்தது. முதலில் இவ்வுருவத்தைக்கண்டு அவர் திகைத்தார். அப்பால் தமக்கு ரக்ஷிப்புக் கொடுக்க கிறிஸ்து தாமே தரிசனமானார் என்று உணர்ந்தார். இது செத்ராம் கண்ட தரிசனம். இயேசு தமக்காக ஓர் ஆலயத்தைக் கட்டி அதில் ஒரு வேதாகமத்தை வைக்கும்படி கட்டளையிட்டாராம்.

இத்தரிசனம் 1869–வருஷம் நிகழ்ந்தது. அதுமுதல் செத்ராம் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு ஒரு விசேஷ ஆலயத்தைக் கட்டி அதில் ஒரு வேதாகமத்தை வைத்து கிறிஸ்துவின் நாமத்தினாலே சிஷ்யரைச் சேர்க்க ஆரம்பித்தார். இந்துக்களும் மகமதியருமான அநேகர் அவருக்குப் பின்சென்றார்கள். அவர் அங்குமிங்கும் அலைந்து திரிந்து இயேசுக்கிறிஸ்துவே ஈஸ்வரன் என்று பிரஸ்தாபித்தார். கிறிஸ்தவர்களின் சிநேகத்தை அவர் தேடினா

னும், தாம் அவர்களோடு சேர்ந்துகொள்ளவில்லை. அவர் 1894–ஹ இறந்தார். அவரின் சரீரம் தகனிக்கப்பட்டு எலும்புகள் அவரின் குருவுக்குப் பக்கத்தில் புதைக்கப் பட்டன. அவருக்குப் பிறகு அவரின் குமாரத்தி அவ ரின் ஸ்தானத்திற்கு வந்திருக்கிறாள். அவள் கன்னிகா ஸ்திரீ. இச்சபையாரின் விசுவாசப்பிரமாணம் செத்ரா மின் ஆசிரமத்தாரால் எழுதப்பட்டிருக்கிறது.

அது வருவாறு:—"மரியாளின் குமாரனாகிய இயே சுவே, பரிசுத்தாவியே, மேய்ப்பராகிய சர்வேசுவரனே, எங்களுக்கு உதவிசெய்யும். வேதத்தையும், சுவிசேஷங் களையும் உங்கள் ரக்ஷிப்புக்காக வாசியுங்கள்" இப்படிக்கு செத்ராமும், அவரின் சீஷரும்.

இவ்வகுப்பை ஒருவர் சேரும்போது ஞானஸ்நானம் பெறவேண்டும். குழந்தைகள் பிறந்தவுடன் காதில் அவர்களது விசுவாசப்பிரமாணத்தைக் கூறி 12 அப் போஸ்தலரின் பெயரை உச்சரிக்கவேண்டும். இவர்க ளுக்குள் அநேக சந்நியாசிகளிருக்கிறார்கள். இவர்கள் இந்துச் சந்நியாசிகளைப் போலவே கஞ்சா, அபின் சாப் பிட்டுக்கொண்டு, ஊரூராய்ச் சுற்றித்திரிகிறார்கள். இவர் களுக்குள் பஹிரங்க ஆராதனை கிடையாது. அது கட வுளால் ஏற்படுத்தப்படவில்லை எனக் கூறுவர். ஒவ்வொரு செத்ராமியனிடத்திலும் ஒரு பைபிள் உண்டு. சிலுவை யை வைத்து, அதற்கு தீபாராதனை நடத்துவார்கள். செத்ராமிகள் சாதாரணமாய் ஏழைகள், கல்வியறிவில் லாதவர்கள். இப்போது சுமார் 1000 பேர்தான் இருக் கிறார்கள்.

## 5. ஈசா மேசியா பந்தியர்

ஈசா மேசியா பந்தியர்.—இதற்கு மேசியாவாகிய இயே சுவின் அடியார் என்றர்த்தம். இவ்வகுப்பார் பீஹார் தேசத்தில் உளர். இவர்கள் மிகுதியும் சக்கிலியரும், ஆச்சாரியருமே. சில படிப்பாளிகளும் இவர்களைச் சேர்ந்து வேதத்தை வாசிக்கிறார்கள். கிறிஸ்துவின் ஜீவி யத்தையும், கிருஷ்ணனின் கதையையும், கொஞ்சம் கலந்துகொள்ளுகிறார்கள். கிறிஸ்துவின் உயிர்த்தெழுத

லைக்காட்டிலும், மரணம் விசேஷம். வெள்ளிக்கிழமைகளில் ஆராதனை நடத்துவார்கள். இவர்கள் தொகை தற்சமயம் 3000.

### 6. பாரத தர்ம மஹாமண்டலம்

கிறிஸ்துமதம் மகமதிய மார்க்கம் முதலிய அந்நிய மதங்களினலும், ஆரியசமாஜம் ராமகிருஷ்ணமிஷன் பிரஹ்மஞான சபை முதலிய நவீன இயக்கங்களினலும், ஹிந்துமார்க்கம்தாக்கப்படுகிறதை உணர்ந்து, அம்மதத்தைப் பாதுகாக்கும் பொருட்டு தேசத்தில் பற்பல சங்கங்களும் சபைகளும் தோன்றின. 1902–ஹு இவை அனைத்தையும் ஒன்ருய் இணைத்து இதற்கு பாரத தர்ம மஹாமண்டலம் என்று பெயரிட்டனர்.

ஹிந்துமதத்தைப் பாதுகாப்பதும், சமஸ்கிருத பாஷையையும் ஹிந்தி பாஷையையும் அபிவிர்த்தி பண்ணுவதும், ஹிந்து கல்வி ஸ்தாபனங்களுக்கு திரவியோபகாரம் செய்வதும், ஹிந்து புண்ணியஸ்தலங்களில் சாஸ்திர சம்மதமான சீர்திருத்தங்கள் செய்வதுமே இச்சங்கத்தின் நோக்கம்.

### 7. ஹிந்து மிஷனேரி சங்கம்

இது பம்பாய்ப் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. கிறிஸ்தவர்களையும் மகமதியர்களையும் ஹிந்துக்களாக்குவதே இச்சங்கத்தின் நோக்கம். பம்பாய் ஆலைப்பிரதேசத்தில் இவர்கள் வேலை அதிகம். ஓர் ஹிந்து யார் என்பதற்கு இச்சங்கம் ஒரு விநோதமான விடைகொடுத்திருக்கிறது. அது: யார் தன்னை ஒரு ஹிந்து என்று சொல்லிக்கொள்ளுகிருனே அவன் ஒரு ஹிந்துதான் என்பது.

### 8. அகில இந்திய சுத்தி சபா

இது பஞ்சாப் நாட்டில் உற்பத்தியானது. கிறிஸ்தவ மதத்தையாவது இஸ்லாம் மதத்தையாவது ஒரு ஹிந்து ஏற்றுக்கொள்ளும்பொழுது அவன் அசுத்தனுகிறபடியால், அவனை சுத்தஞ்செய்து திரும்பவும் ஹிந்துமதத்தில் சேர்த்துக்கொள்வதே இந்தச் சபையின் நோக்கம்.

9. ஹிந்து மஹா சபா

தற்காலத்தில் ஹிந்துமதத்தின் பிரதிநிதியாக இருக்கும் சங்கம் இந்த ஹிந்து மஹாசபைதான். தர்பங்கா மஹா ராஜவும் பண்டித மதனமோஹன மாளவியாவும் இதில் விசேஷித்தவர்கள்.

## 6. இதர இயக்கங்கள்

மேலே கூறியதெல்லாம் நேராக மதசம்பந்தமாய் உண்டான இயக்கங்கள். இவற்றைத் தவிர வேறு பல இயக்கங்களும் இக்காலத்தில் தோன்றின. இவற்றுள் பல நம் தேசத்தில் மிகுந்த செல்வாக்குச் செலுத்தி வந்திருக்கின்றன. இவற்றை விவரிக்கப்புகின் விரியுமாதலின் இவையாவை என்பதை மட்டும் குறிப்பிடுவோம்.

1. ஜாதீய சீர்திருத்த இயக்கங்கள்.—இந்தியாவிலுள்ள நூற்றுக்கணக்கான ஜாதிகளில் மிகுதியான ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் தங்கள் ஜாதிகளிலுள்ள குறைகளைத் தவிர்த்துக்கொள்ளும்படியாகவும், ஜாதிக்கட்டைப் பலப்படுத்திக் கொள்ளும்படியாகவும் ஆங்காங்கு மகாநாடு கூடி, முயற்சி எடுத்து வருகின்றார்கள். இவ்வித இயக்கங்கள் பிராமணர் முதல் புலையர் ஈறாகவுள்ள எல்லா ஜாதிகளிடம் நடைபெற்று வருகின்றன.

2. ஜனசமுதாய சீர்திருத்த இயக்கங்கள்.—பொதுவாக தேசத்தினருக்குள்ளிருக்கும் குறைகளை நீக்கிச் சீர்திருத்தஞ் செய்துகொள்வதற்கான இயக்கங்கள் பல வருஷங்களாக நடைபெற்று வருகின்றன. கல்வி முன்னேற்றம், பெண்கல்வி, சிசுவிவாக கண்டனம், குடும்ப சீர்திருத்தம், மறுவிவாகம் முதலிய அநேக துறைகளில் சீர்திருத்த முயற்சிகள் நடந்துவருகின்றன. இவற்றுள் சில இதற்குள் மிகுந்த சித்தி அடைந்தும் இருக்கின்றன.

3. தேசீய இயக்கங்கள்.—மேற்குத்திய கல்வியின் பலனாகவும் கடந்த யுத்தகாலத்து அனுபவங்களின் பலனாகவும் தேசிய இயக்கம் கடந்த இருபது வருஷங்களுக்குள் அதிகப்பட்டு வந்திருக்கின்றது. இதற்காக பல சங்கங்கள் நடைபெற்று வருகின்றன.

## 7. காந்தி இயக்கம்

காந்தீயம் எனப்படும் இவ்வியக்கமானது ராஜீய தேசீய ஜனசமுதாய சன்மார்க்காதி விஷயங்களையெல்லாம் சேர்த்திணைக்கும் ஓர் முயற்சியாகும். ராஜீயவிஷயத்தைத் தவிர்த்து, இதன் விசேஷ அம்சங்களாவன:

(1) ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை
(2) தீண்டாமை விலக்கு
(3) மது விலக்கு
(4) கதர் துணியும் இந்தியாவின் வறுமை நீக்கமும்,
(5) ஹிந்து பாஷையை அகில இந்திய பாஷையாக்கல்.

இத்யாதி முயற்சிகளில் அனுஷ்டிக்கப்பட வேண்டிய பிராமணங்கள் இரண்டு. அவை சத்தியாக்கிரகம் அஹிம்சா தர்மம் என்பன.

---

இவ்வாறு கடைசி இருநூறு வருஷங்களுக்குள் இந்தியாவிலுண்டான இயக்கங்கள் பல நூற்றுக்கணக்கானவை. இவற்றுள் சில பெரிய இயக்கங்கள்; நீண்டகாலம் செல்வாக்குச் செலுத்தக்கூடியவை. மேற்குத்திய கல்வி நாகரீகங்களும் கிறிஸ்துமத செல்வாக்குமே இந்த இயக்கங்களுக்கு காரணம். சில இயக்கங்கள் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்தான் தோன்றியவை. ஜாதியாசாரத்தையும் பார்ப்பனீயத்தையும்(பிராமணர் உயர்வையும்) அழித்து, சகல ஜனங்களுக்கும் சமத்துவம் உண்டுபண்ணும்படி தமிழ்நாட்டில் தோன்றியிருக்கும் சுயமரியாதைக் கிளர்ச்சி (Self-Respect Movement) இவ்வகை இயக்கங்களில் ஒன்று. இவ்வியக்கங்களின் அபிவிர்த்தியொல்லம் வேதச்சரித்திர மாணவர்கள் கவனித்து நோக்கத்தக்கன.

---

எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(திருவள்ளுவ நாயனார்)

# PART II

# ESSENTIALS OF HINDUISM

## ஹிந்துமத சங்கிரகம்

இரண்டாம் பாகம்

## ஹிந்துமத தத்வ ஸாரம்

# ஹிந்துமத தத்வ ஸாரம்

## முகவுரை

ஹிந்துமதம் என்பது இந்தியாவின் பிரதம மதத்துக்கு அந்நிய ஜாதியார் வழங்கும் பெயர். ஹிந்து பண்டிதர்கள் இம்மதத்தை ஆரிய மதம் என்றும் சநாதன தர்மம் என்றும் வழங்குவர். இம்மதத்தின் தத்வம் யாது என்பதை ஆராய்வது மிக்கக் கஷ்டமான விஷயம்.

ஹிந்துமதமானது தானுக வளரக்கூடிய தன்மையுடையதாயிருந்தும், இதன் அமைப்பின் தத்வமானது தனக்கடுத்துள்ள இதர மதங்களிலிருந்து இலேசாய்ப் பல விஷயங்களைக் கடன்பெறக் கூடியதாயிருந்தது. இவ்வாறே ஜைன பௌத்த மதங்களினின்றும், இந்தியாவின் பூர்வ குடிகளிடத்தினின்றும், கிறிஸ்தவ இஸ்லாம் மதங்களிடத்தினின்றும், பல விஷயங்களை ஹிந்துமார்க்கமானது வெகு தாராளமாய்ப் பெற்று, அவற்றைத் தன் இயல்புக்கிசைய அபிவிர்த்தி செய்துவந்திருக்கிறது. இவ்வித விகாச விருத்தியின் பலனுக, எத்தனையோ வித்தியாசமான கோட்பாடுகள் ஹிந்துமதத்தில் காணப்படுகின்றன. ஹிந்துமதத்தில் ஈச்சுரவாதம் (Theism,) ஏகேச்சுரவாதம் (Monotheism) சமயோசித ஏகேச்சுரவாதம் (Henotheism), அநேகேச்சுரவாதம் (Polytheism) துவைதம், அத்வைதம், லோகாயதம் (Materialism), சாக்தம் முதலிய எத்தனையோ மதங்கள் அடங்கியுள்ளன. இதனுல்தான் தாயுமானஸ்வாமிகள் "சமயகோடிகளெல்லாம் தன் தெய்வம் என் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றது எது?" என்று பாடியிருக்கின்றுர் போலும்.

இவ்விதம் இருப்பினும், ஆராய்ச்சி செய்துபார்க்கும்பொழுது வெவ்வேறுன மூன்று பார்வையால் அவ்

வாராய்ச்சியை நடத்தலாம் என்று தோன்றுகிறது. அவையாவன:

I வேதாந்த ஹிந்துமதம் (Pantheistic Hinduism.)

II சித்தாந்த ஹிந்துமதம் (Theistic Hinduism.)

III பாமர ஹிந்துமதம் (Polytheistic Hinduism.)

இனி இவை ஒவ்வொன்றையும் ஆராய்ச்சிசெய்து அவற்றுள் அடங்கியிருக்கும் விசேஷ தத்வங்கள் யாவை என்பதை நோக்குவோம்.*

---

* ஹிந்துமத தத்வங்களுக்கும் கிறிஸ்துமத தத்வங்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ச்சிசெய்வது மதச்சரித்திர மாணவர்களுக்கு மிகப்பெரிதும் பயன்படும். இவ்விஷயத்தில் யாம் இதுவரை செய்திருக்கும் ஆராய்ச்சிகளைத் திரட்டி புஸ்தகரூபமாய் எழுதிவருகின்றோம். ஹிந்து மதமும் கிறிஸ்து மதமும் (Hinduism and Christianity in Contact) என்னும் பெரிய இப்புஸ்தகம் கூடிய சீக்கிரம் வெளிவரும். இவ்விரண்டுமதங்களும் சரித்திர சார்பாய் ஒன்றுடனொன்று உரசுவதன் பலனாக, இந்திய கிறிஸ்தவ மதத்திலும் ஹிந்துமதத்திலும் தோன்றிய புதிய உணர்ச்சிகளை ஆராய்வதுடன், இவ்விரு மதங்களிலும் விசேஷமாய்ப் பாராட்டப்படுகின்ற மததத்வங்களும் கொள்கைகளும் எவை எவை என்று ஆராய்ந்து, இப்பிரதானமான கொள்கைகள் சம்பந்தமாக இவ்விரு மார்க்கங்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளும் செவ்வனே காட்டப்பட்டிருக்கின்றன.

# 1. PANTHEISTIC HINDUISM

# 1. வேதாந்த ஹிந்துமதம்

வேதாந்தம் என்னும் பதத்துக்கு வேதத்தின் முடிவு என்று பொருள். உத்தரமீமாஞ்சை என்னப்படுவதும் இதுவே, வேதாந்தத்துள் உணர்த்தப்படும் மதம் அத்வைதம் எனப்படும். பரப்பிரஹ்மம் தவிர வேறொன்றும் இல்லை என்பதே இந்தப் போதனை. "சர்வமும் பிரமம், தத்வம் அஸி, அகம் பிரமாஸ்மி" முதலிய மகா வாக்கியங்களால் இது உணர்த்தப்படும்.

வேத சங்கீதங்களில் இலைமறை காய்போல் குறிப்பிடப்பட்டிருக்கின்ற இவ்வுபதேசமானது பிராஹ்மண ஆரண்யங்கள் இயற்றப்பட்டகாலத்தில் சற்றே விருத்தியடைந்து, உபநிஷதங்கள் பாடப்பட்ட காலத்தில் அதி சிரேஷ்ட நிலைமையை எய்தியது. அப்பால் பகவத்கீதை முதலிய நூல்களில் இவ்வுபதேசம் மிக்க உயர்ந்த ஸ்தானம் பெற்றது. ஸ்மார்த்தமத ஸ்தாபகாச்சாரியாகிய சங்கரர் இந்த வேதாந்த உபதேசத்தை இன்னும் தெளிவாக்கினர். இதன் தாற்பரியத்தை உலகம் நன்றாய்த் தெரிந்துகொள்ளும் பொருட்டு வேதாந்த சூத்திரம் பகவத்கீதை முதலிய நூல்களுக்கு அத்வைத சார்பாக சிறந்த வியாக்கியானங்கள் எழுதினர். சங்கரருடைய செல்வாக்கு அவருக்குப் பின் தோன்றிய மத இயக்கங்களில் தெரிகின்றது. சைவ வைஷ்ணவாதி மதஸ்தாபகர்கள் சங்கரர் வியாக்கியானத்தின்படி அத்வைதத்தை ஒப்புக்கொள்ளாவிடினும், தங்கள் மதங்களில் வேதாந்தத்துக்கு பிரதம ஸ்தானம் கொடுத்திருக்கிறார்கள். பசு பதி பாசம் என்னும் மூன்று பதார்த்தங்கள் உள என்று தொடங்குகிற சைவசித்தாந்தமானது கடைசியில் வேதாந்த சார்பாகவே முடிகின்றது. பதிக்கும்

பசுவுக்கும் (பரமான்மாவுக்கும் ஜீவான்மாவுக்கும்) இடையிலிருக்கிற பாசமானது (பாலம்) தகிக்கப்பட்டுப் போகிறபோது, பசுவானது பதியில் மறைந்துவிடுகின்றது என்று சைவநூல்கள் சொல்லுவது வேதாந்தத்தின் ஓர் பிரதிரூபம் என்றே நினைக்கவேண்டும். அவ்வாறே வைஷ்ணவர்களும் ஈஸ்வரன் சித்து அசித்து என்னும் திரிபதார்த்தங்கள் உள என்று கூறினாலும், சித்தும் அசித்தும் (ஜீவான்மாவும் உலகமும்) ஈஸ்வரனுக்குச் சரீரமே என்று சொல்லும்பொழுது இது வேதாந்த உபதேசத்தைச் சிறிது வித்தியாசப்படுத்திக் கொண்டதேயாகும்.

> திட விசும்பு, எரி, வளி, நீர், நிலம் இவை மிசை
> படர்பொருள் முழுவது மாய் அவை யவைதொறும்
> உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் மறைந்துளான்
> சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே.

என்ற வைஷ்ண விசிஷ்டாத்வைத கொள்கையை நம்மாழ்வார் இந்த திருவாய்மொழிப் பாசுரத்தில் வெகு அழகாய் வர்ணித்திருக்கின்றார். இவ்வாறே சைவ வைஷ்ணவ சமய நூல்களாகிய பன்னிரு திருமுறைகளிலும், பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களிலும், நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலும், அத்வைதமத செல்வாக்கு மிக்கதூரம் சென்றிருப்பதை அறியலாம். அன்றியும் சமீபகாலத்தில் தோன்றிய மஹா புருஷனாகிய ராமகிருஷ்ண பரமஹம்சரும், அவரது சிஷ்யனாகிய ஸ்வாமி விவேகானந்தரும் இந்த வேதாந்த உபதேசத்தை இன்னும் தெளிவாக விளக்கி மானிட சகோதரத்துவத்துக்கு இதையே ஆதாரமாகக் காட்டியிருக்கின்றார்கள். இதன் விபரங்களை எல்லாம் முதல்பாகத்தில் ஆங்காங்கு கூறியிருக்கின்றோம். ஆங்கு கண்டுகொள்க.

இனி, ஹிந்துமதத்துக்கு ஜீவநாடிகளைப்போல் அம்மதத்தை ஊடும்பாவுமாகச் சென்றுகொண்டிருக்கும் இந்த வேதாந்த உபதேசத்தில் அமைந்துகிடக்கும் தத்வங்கள் யாவை என்பதைச் சிறிது ஆராய்ச்சி செய்வோம்.

1. தெய்வம் மனோவாக்குக் காயங்களுக்கு அதீத மானவர் (Transcendence of God). அவர் சுத்த நிர்க் குணமான பரதெய்வம்.

அத்துவித வஸ்துவைச் சொற்பிரகா சத்தனியை
அருமறைகள் முரசறை யவே
அறிவினுக் கறிவாகி ஆனந்த மயமான
ஆதியை அநாதி யேக
தத்துவ சொரூபத்தை மதசம்மதம் பெருச்
சாலம்ப ரகித மான
சாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபதவ் யோம நிலையை
நித்தநிர் மலசகித நிஷ்பிரபஞ் சப்பொருளை
நிர்விஷய சுத்தமான
நிர்விகாரத்தைத் தடத்தமாய் நின் ருெளிர்
நிரஞ்சன நிராம யத்தை
சித்தமறி யாதபடி சித்தத்தில் நின்றுலகு
திவ்யதே ஜோ மயத்தை
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை அஞ்சலி செய்வாம்

என்ற தாயுமானவர் பாடல் இங்கு நோக்கத்தக்கது.

2. இவ்வாறு திரிகரணாதீதராயிருப்பினும், அவர் இவ் வுலகத்துக்கு புறம்பானவர் அல்லர் (The Immanence of God). அண்டசராசரம் அனைத்தினும் அவர் அடங்கி இருக்கின்றார். மண்டக்ய உபநிஷதம்:

அக்னி அவருடைய சிரசு, சூரிய சந்திரர்கள் அவருடைய நேத்திரங்கள், ஆகாச வெளியே அவருடைய காதுகள், வெளிப்படுத்தப்பட்ட வேதங்களே அவருடைய சத்தம். காற்று அவருடைய சுவாசம், இந்தப் பிரபஞ்சம் அவருடைய ஹிருதயம், பூமி அவருக்கு பாதம், சர்வ வஸ்துக்களினும் இருக்கிற உள்ளான தத்வம் அவரே.

விறகில் தீயினன் பாலில்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணி ஜோதியான்
உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே
(திருமூலநாயனார் திருமந்திரம்)

(இதன் பொருள்)—விறகினிடத்தே நெருப்பானது அடங்கியிருத்தல்போலவும் பாலினிடத்தே நெய்யானது அடங்கியிருத்தல் போலவும், கடவுள் சர்வத்திலும் மறைந்து நிற்கின்றான். அவன் மகா ரத்தினம்போலும் ஜோதியான். அன்பு என்னும் கோலை நட்டு, உணர்வு (ஞானம்) என்னும் கயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்தால், (விறகிலிருந்து தீ தோன்றுவது போலும், பாலினின்று நெய் தோன்றுவது போலும்,) அவன் பிரத்தியக்ஷமாக முன்னாக நிற்பன்.

3. பொதுவாக ஹிந்துமார்க்கத்திலும் விசேஷமாக வேதாந்தமதத்திலும் முக்தி அல்லது மோக்ஷம் என்பது கடவுளோடு கலந்துவிடுவதே (Absorption). இந்தக் கலப்பு புதிதாய் உண்டாவதல்ல. பாபமானது (பாசம், மாயா) ஜீவான்மாவுக்கும் பரமான்மாவுக்கும் இடையில் நின்று இவ்விரண்டையும் மறைக்கின்றமையால் இவ்வொற்றுமையை அறியமுடியாமலிருக்கின்றது. இத்தடை நீங்கியவுடன் ஜீவான்மாவானது பரமான்மாவில் கலந்துவிடுகிறது. இதுவே முக்தி.

பரமான்மா ஜீவான்மா என்னும் இவ்விரண்டினது அத்துவிதமாகிய கலப்பின் தன்மையைப்பற்றிப் பலரும் பலவாறு கூறுவர். இப்பேதா பேதங்கள் பலவகை உதாரணங்களால் கூறப்படும். உதாரணம்: இராகமும்—ஓசையும், எள்ளும்—நெய்யும், தீயும்—சூட்டிரும்பும், ஜலமும்—உப்பும், ஆகாயமும்—காற்றும், உடலும்—உயிரும், முதலியன இதை

பண்ணிசைவெம் பரிதிமதி திலதயிலம் தீயிரும்பு
　　　　பாணி உப்பு
விண்ணநிலம் உடலுயிர்நீர் நிழலுச்சி பளிங்குபகல்
　　　　விளக்குப் பால்நீர்
கண்ணிரவி உணர்வொளிபோல் பிரிவரிய அத்துவிதக்
　　　　கலவி காட்டி
தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச் சிவாயகுரு
　　　　சரணம் போற்றி

சிவஞானசித்தியார் சுபக்க வுரை

என்பதாதிய செய்யுட்களால் அறிக. இவ்வாறு கூறப்படும் உதாரணங்களுக்குக் கணக்கில்லை. இவ்வுதாரணங்களால் உணர்த்தப்படும் விசேஷ கருத்துக்களும் வெவ்வேறாகும். இவ்வாறு கலந்துவிடுவதே முக்தி. இவ்வித

முக்திநிலையை அடைந்த ஜீவர்களிடத்தில் தெய்விக குணங்களே விளங்கும். இந்த முக்திநிலையை அடைந்ததுமுதல் ஆன்மா சரீரத்தைவிட்டு நீங்கும் காலம் வரையில் இவர்களுக்கு ஜீவன்முக்தர் என்று பெயர். ஜீவன்முக்தர் என்பதும் கிறிஸ்தவ சித்தாந்தத்தில் மீட்பகப்பட்டோர் என்பதும் ஒன்றே.

4. வேதாந்த மதத்தில் கடவுளுக்கு இயற்றவேண்டிய தொண்டு ஞானபூசை ஒன்றே. சற்குருவை அடைந்து ஞானோபதேசம் கேட்டு வேதாந்த ஞானத்தை அடைந்து அதன்படி ஒழுகுவதுமட்டுமே இம்மதத்தினர் இன்றியமையாது இயற்றவேண்டிய கடன். மற்றைய ஆலய வழிபாடு முதலிய விஷயங்களில் அவரவர் மனம்போல் நடந்துகொள்ளலாம் என்பது பொதுவான அபிப்பிராயம்.

# II. THEISTIC HINDUISM

## 2. சித்தாந்த ஹிந்துமதம்

சித்தாந்த ஹிந்துமதம் என்று கூறியது சைவ வைஷ்ணவாதி சமயங்களை. இவையெல்லாம் ஏகேச்சுரவாதம் என்னும் பகுதியுள் அடங்கும். ஏகேச்சுரவாதம் என்பது சர்வேஸ்வரன் ஒருவனே உளன் என்று நம்பி அவனை வழிபட்டு வருவது. சைவர்கள் வைஷ்ணவர்கள் மத்வர் முதலாயினோர் முப்பத்து முக்கோடி தேவர்கள் உண்டென நம்பவில்லையா, பல தெய்வங்களுக்குப் பூசை முதலிய இயற்றவில்லையா என்று கேட்டால், அவ்வாறு நம்பி பூசை இயற்றினாலும் இத்தேவர்களெல்லாம் ஆன்மாக்களே என்றும், இந்திராதி தேவர்களுள் யாருமே ஈஸ்வரன் என்றழைக்கப்படக்கூடியவர் இல்லையென்றும் அறிக. இந்திராதி தேவர்கள் பசுக்களே. அவர்கள் வேதனைப்படுவார்கள், இறப்பார்கள், பிறப்பார்கள். ஆகையால் பிறப்பிறப்பாதிய எவ்வித வேதனையும் இல்லாதவனாகிய சர்வேஸ்வரன் ஒருவனே பதியாவன். அந்த சர்வேஸ்வரனை சைவர்கள் பரமசிவன் என்பர், வைஷ்ணவர்கள் மஹாவிஷ்ணு என்பர். ஆகையால் சைவ வைஷ்ணவாதி சமயங்கள் ஏகேச்சுரவாதத்துட்பட்டன என்பது பொருந்தும்.*

வேதாந்த மார்க்கத்தில் வியார்த்தி செய்யப்படுகிற அத்வைதமத செல்வாக்கு சைவ வைஷ்ணவாதி சமயங்

* சிருஷ்டி ஸ்திதி சங்காரங்களுக்குத் தலைவனாகிய ஈஸ்வரன் ஒருவனே பதி யென்றும் மற்றைய தேவர்களெல்லாம் பசுக்கள் என்றும் கூறும்பொழுது, சைவ வைஷ்ணவர்கள் தேவர்களைக் கிறிஸ்தவ சித்தாந்தத்தில் அமரர் எனப்படும் தேவதூதர்களுக்கு (Angels, Arch-angels) சமானமாகவே கருதுகின்றார்கள். கிறிஸ்தவருள் ஒரு சாரார் இந்த சம்மனசுக்களுக்கும் பிரதம சம்மனசுக்கும் ஆராதனை நடத்துவதுபோலவே, சைவ வைஷ்ணவாதி சமயத்தினரும் மற்றைய தேவர்களுக்கு பூஜை நைவேத்தியம் முதலியவை நடத்தி வருகின்றார் என்பது அவரது அபிப்பிராயம்.

களில் நிரம்பச் சென்றிருக்கின்றது என்பதை ஆராய்ந்திருக்கிறோம். மேலும் இந்த அத்வைதமதத்தில் அடக்கமாயிருக்கின்ற அநேக தத்வங்களும் சித்தாந்த சமயங்களில் மிகுதியாய்ப் போற்றப்பட்டிருக்கின்றன. கடவுள் மானிடர்களின் மனோவாக்குக் காயங்களுக்கெட்டாத பரத்துவம் உடையரென்றும், இவ்வாறிருப்பினும் அவர் சர்வலோக அண்டங்களிலும், ஐம்பெரும் பூதங்களினும் நிரம்பி யிருக்கின்றார் என்றும், அப்பரமான்மாவோடு தனக்கிருக்கிற ஐக்கிய ஒற்றுமையை(அத்துவித தன்மையை) உணருகிறதே முக்தி என்றும், இந்த உணர்வைப் பெற்ற ஜீவன் முக்தர்கள் ஈஸ்வரனில் கலந்துவிடுகிறார்களென்றும், வேதாந்த மதத்தில் போதிக்கப்படுகிற விஷயங்களெல்லாம் சைவ வைஷ்ணவாதி சித்தாந்த மதங்களுக்கும் பொருந்தும்.

வேதாந்த மதத்துக்கும் சித்தாந்த சார்பான மதங்களுக்குமுள்ள முக்கிய வித்தியாசம் யாதெனில் வேதாந்தமதம் ஞானபூசையையே விசேஷித்துக்கொண்டிருக்க, சைவ வைஷ்ணவாதி மதங்கள் ஆலய வழிபாட்டை (திருவாராதனையை)யே விசேடிக்கும். தேவாலயத் திருவாராதனையே சைவ வைஷ்ணவாதி சமயங்களுக்கு மையம் என்னலாம். மதசம்பந்தமான பெரும்பான்மை விஷயங்கள் ஆலயவழிப்பாடு சம்பந்தமாகவே இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆலயங்களில் மையப்பொருளாய் நிற்பது விக்கிரகங்களே. ஆகவே விக்கிரகபூசையே இம்மதங்களில் விசேஷம். இதைச் சிவ பூசை சிவலிங்க பூசை என்பர் சைவர். இதைச் சூழ்ந்தே ஆலயத்தில் நடைபெறுகின்ற திருவாராதனையின் சகல அம்சங்களும் நிற்கும். ஆலய தரிசனம் ஆலய கைங்கரியம், திருவாராதனை, உற்சவாதி வைபவங்கள், புண்ணிய க்ஷேத்திர தரிசனம் முதலியனவெல்லாம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு ஆலய விக்கிரகத்தை அடுத்தே நிற்கின்றன. விக்கிரகத்தின் (சிவலிங்கம் முதலியன) தத்வத்தைப்பற்றிப் பல மதத்தினரும் பலவாறு கூறுவர். ஸ்வாமி விவேகானந்தர் சிக்காக்கோ நகரில் சர்வமத சங்கத்தில் செய்த பிரசங்கம் ஒன்றில்,

ஹிந்துமத விக்கிரகாராதனையை ஆதரித்துப் பேசும் பொழுது, "கிறிஸ்தவர்கள் எங்களை விக்கிரகாராதனைக் காரர் என்கிறார்கள். கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களுடைய ஆலயங்களில் விக்கிரகங்கள் இல்லையா? புரொட்டெஸ்டாண்டு கிறிஸ்தவர்கள் ஜெபம் பண்ணும்பொழுது அவர்களுடைய மனதில் அத்தனை சொரூபங்கள் (கடவுளை ஏதோ ஒரு ரூபத்தில் அமைத்துக்கொண்ட சொரூபங்கள்) இல்லையா? ஆயினும் ஹிந்துமார்க்கத்தில் கட்டாயமாக விக்கிரகாராதனை நடத்தவேண்டும் என்ற நியதியும் இல்லை" என்று சொன்னார்.

சைவ வைஷ்ணவாதி சமயங்களில் விசேஷமாகக் காணப்படுகிற பக்தியுங்கூட விக்கிரக சம்பந்தம் உடையதே. தேவார திருவாசகங்களும், நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாசுரங்களும், திவ்ய ஸ்தலங்கள்தோறும் எழுந்தருளியிருக்கின்ற சிவன் விஷ்ணு என்னும் தெய்வங்களை முன்னிலைப்படுத்தி பாடப்பட்ட பாசுரங்களே. பிந்திய காலங்களில் தோன்றின ராமானந்தர், துளசிதாசர், கபீர் முதலிய பக்திமத ஸ்தாபகர்கள் பிரஸ்தாபித்த பக்தி இவ்விதமாய் விக்கிரக சம்பந்தமுடையதாயிராமல், மானஸ தத்வமுடையது. ஆனால் சைவ ஸ்தலங்களிலும் வைஷ்ணவ திவ்ய க்ஷேத்திரங்களிலுமோவென்றால், அங்கு நிகழும் பக்தியுங்கூட விக்கிரக சம்பந்தமுடையதே. இம்மார்க்கங்களில் ஞானநிலையை அடைந்தவர்களும் தங்கள் ஞான பூசையோடு ஆலய வழிபாட்டையும் நடத்திவரவேண்டும். ஆயினும் நித்திரை செய்வோன் கையிலுள்ள வஸ்து அவனை அறியாமல் நழுவிவிழுகிறதுபோல், ஞானபூசையை அநுஷ்டிப்பவன் தன்னையறியாமல் நியம நிஷ்டைகளை நெகிழவிடுவானானால் அதனால் குற்றமில்லையென்று கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறு சிவலிங்க பூஜை முதலிய விக்கிரக பூசையானது சைவ வைஷ்ணவாதி சமயங்களுக்கு எத்துணை விசேஷம் என்று பார்க்கின்றோம்.

இனி இச்சித்தாந்த மார்க்கங்களில் காணப்படும் விசேஷ தத்வங்கள் யாதெனப் பார்ப்போம். வேதாந்த மதத்தால் வற்புறுத்தப்படுகிற அத்வைத கோட்பாடு

சித்தாந்த மதங்களிலும் பற்பல ரூபங்களில் சென்றிருப்பதால் வேதாந்த மத தத்வங்கள் ஓரளவு சித்தாந்த மதங்களினும் காணப்படுகின்றன. ஆகவே சித்தாந்த ஹிந்து மதத்தின் (Theistic Hinduism) விசேஷ தத்வங்களாவன:

(1) தெய்வம் ஒன்றே. உலகத்தின் சிருஷ்டி ஸ்திதி லயங்களுக்கு அவரே காரணர். தேவர்கள் என்னப்படும் மற்றையோர் உளரெனினும் அவர்கள் ஜனன மரணாதி துன்பங்களுக்குட்பட்டவர்களே. அவர்கள் சர்வேஸ்வரனுக்கு இணையாகமாட்டார்கள். ஆகவே ஏகேஸ்வரவாதம் (Monotheism) சித்தாந்த மதங்களின் விசேஷ தத்வம் என்று காண்கிறோம்.

(2) சர்வேஸ்வரனை வழிபடுகிறதற்கு ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் லிங்கம் விக்கிரகம் முதலியவைகளே சிறந்த சாதனமாம். ஆகையால் ஆலயவழிபாடு அவசியம்.

(3) பக்தியே கடவுளுக்கு யாம் இயற்றக்கூடிய பெரிய சேவை. பக்தி எனினும் அன்பு எனினும் ஒக்கும்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே.

(திருமந்திரம்)

(4) குருபக்தி. ஈஸ்வரனே குருவை அதிஷ்டித்து நின்று (நிலைக்களமாகக் கொண்டு நின்று) அனுக்கிரகிக்கின்றாராதலின், குருவை தெய்வமாகவே பாவித்து இறைஞ்சவேண்டும்.

(5) உலக ரக்ஷணார்த்தத்தின்பொருட்டு ஈஸ்வரன் இவ்வுலகத்தில் அவதரிக்கின்றார் (வைஷ்ணவம்.) அல்லது அடியார்க் கருள்செய்யும்பொருட்டு அவ்வப்பொழுது வேண்டிய உருவங்களெடுத்து அனுக்கிரகிக்கின்றார் (சைவம்).

# III. POLYTHEISTIC HINDUISM

## பாமர ஹிந்துமதம்.

வேதாந்த சித்தாந்த உபதேசங்களும் மிகவும் உயர்ந்த சமயநெறிகளும் சன்மார்க்கப் போதனைகளும் ஒருபுறம் விருத்தியாகிக்கொண்டே செல்ல, ஜனங்களில் பெரும்பான்மையோர் அநேக நூற்றுண்டுகளுக்கு முன்னே தாங்கள் வணங்கிவந்த பழம் தெய்வ வணக்கத்தை பழையபடியே அனுசரித்து வந்தனர். முன்னே நாம் இரண்டொரு இடங்களில் பார்த்தபடி உயர்தர ஹிந்து மார்க்கத்தில் கொண்டாடப்படும் சில தெய்வங்கள்கூட அதிபூர்வீக காலத்தில் பாமர ஜனங்களால் வணங்கப்பட்ட தேவதைகளே.

இந்தியாவிலுள்ள ஹிந்துக்களில் அநேக கோடி ஜனங்களின் உண்மையான மார்க்கம் இதுவே. தங்களுக்கு கஷ்டம் உண்டாகும் காலத்தில் உயர்தர மார்க்கத்தில் கூறப்படும் தெய்வங்களிடத்திற்கு இவர்கள் செல்லுகிறதில்லை. இக்கிராம தேவதைகளையே இவர்கள் ஆதரவாகக் கொள்கிறார்கள்.

பாமர தெய்வ வணக்கத்தைப்பற்றிச் சில பொதுவான விஷயங்களை அறிதல்வேண்டும்.

I. இதில் பிராமணர்களுக்கு சம்பந்தம் கிடையாது. இது மிகுதியாய் அநாரியர்களுக்கே உரியது. இதில் சம்பந்தப்பட்ட பூசாரிகள் திராவிடரே. ஆகையால் சமஸ்கிருத சம்பந்தமான மந்திர உச்சரிப்புகள் இதில் கிடையாது.

2. பாமர வணக்கத்திற்குரிய தெய்வங்களைப்பற்றி விஸ்தாரமான கதைகளாவது எழுதப்பட்ட புராண இதிகாசங்களாவது கிடையாது. இவர்களைப்பற்றிய

கதைகள் வெகு சொற்பம். அவை பாரம்பரியமாய் வாய்ப்பழக்கத்தில் வருகிறதேயொழிய மற்றப்படியல்ல.

3. தெய்வங்களுள் மிகுதியானவை பெண் தேவதைகள். ஆண் தெய்வங்கள் அத்தனை விசேஷமாய்ப் பாராட்டப்படுகிறதில்லை.

4. பாமர தெய்வவணக்கம் இடத்திற்கிடம் வித்யாசப்படும். இவைகளுக்கு ஓர் திட்டமான அமைப்பு கிடையாது.

5. பாமர தெய்வவணக்கத்தில் பக்தி என்பது அதிகமாய்ப் பாராட்டப்படுகின்றதில்லை. இங்கே காணப்படுகின்றவைகளில் விசேஷமாய்த் தோன்றுகின்றது பயமே. இந்த தெய்வங்களின் கோபத்தை வருவிக்கக்கூடாதென்னும் பயத்தினாலேயே ஜனங்கள் இத்தெய்வங்களை வணங்குகின்றார்கள். இவ்வணக்கத்தின் சகல அம்சங்களிலும் பயமே பிரதானமான விஷயமாய்த் தோன்றுகின்றது.

6. சேவல் ஆடு எருமைக்கடா பன்றி முதலிய மிருகங்கள் இத்தெய்வங்களுக்குப் பலியிடப்படுகின்றன.

7. இவைகளுக்குரிய ஆலயங்கள் வெகு சிறியவை, அத்தனை அலங்காரமற்றவை; சில விடங்களில் உரு அமைக்கப்பெறாத ஒரு கல்லே அந்தத் தெய்வமாகப் பாவிக்கப்பட்டு, அதைச் சூழவுள்ள நிலம் கோயிலாக பாராட்டப்படும்.

8. இவ்வகைத் தெய்வங்களின் தொகைக்கு கணக்கில்லை. கொலை முதலிய காரணங்களினால் புது தெய்வங்களும் உண்டாகிக்கொண்டு வருகின்றன. தமிழ்நாட்டில் வணங்கப்படும் தெய்வங்களில் ஐயனார், காளி, கருப்பணசாமி, காடன், மாடன், காட்டேரி, ஞாத்தேறி, சுடலை வீரன் மதுரைவீரன் பதினெட்டாம் படியான், சங்கிலி முனியன், பேய்ச்சி, பேயாண்டி முதலாக இத் தெய்வங்கள் விசேஷ எண்ணிக்கைக்கு உரியார்.

9. நாகம் முதலிய ஜெந்துக்கள் விருக்ஷங்கள் பட்சிகள் முதலியவைகளும் பாமர ஜனங்களால் மிகவும் பாராட்டி வணங்கப்படுகின்றன.

10. பாமர தெய்வ வணக்க சம்பந்தமாய் நாம் காணக்கூடிய ஒரு விசேஷ குறிப்பு யாதெனில் இதனுள் எவ்வித முன்னேற்றமும் இல்லை என்பதே. எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்ததுபோலவே இன்றைக்கும் இருக்கின்றது. ஏதோ சில புது தேவதைகள் தோன்றியிருக்கலாம். மற்றப்படி யாதொரு முன்னேற்றமும் காண்பதரிது. இதற்கொரு காரணம் கூறலாம். இவ்வித வணக்கத்தை அனுசரிக்கின்றவர்கள் சற்றே முன்னேற்றம் அடையும்பொழுது, அவர்கள் இவ் வணக்கத்தைப் பெரிதாய்ப் பாராட்டாமல், சைவ வைஷ்ணவ மதங்களில் தங்கள் கவனத்தைச் செலுத்தி, அம் மதானுஷ்டிகளாய் விடுகின்றார்கள்.

கிராம தேவதைகளின் வணக்கத்தில் மிகவும் பெரிதாய்ப் பாராட்டப்படும் இரண்டு காரியங்களாவன:

1. பயம்.—இத்தேவதைகள் சாதாரணமாய் துஷ்ட தேவதைகளாகவே பாவிக்கப்படுகின்றன. அத்தேவதைகளின் கோயிலண்டை இரவில் செல்ல பயப்படுவார்கள். பகலிலுங்கூட ஸ்திரீகள் செல்ல மிகவும் பயப்படுவார்கள்.

2. கோபசாந்தி.— இந்தத் தேவதைகளின் கோபம் தங்களுக்கு மிக்க தீமையைச் செய்யும் என்றும், இக் கோபம் காரணமாகவே அம்மை முதலிய நோய்கள் உண்டாகின்றன என்றும், பாமர ஜனங்கள் நம்பி தேவதைகளுக்கு கோபசாந்தி செய்கின்றார்கள். செம்மறி எருமைக்கடா சேவல் முதலியவற்றை அறுத்து பலியிடுகின்றார்கள். கோபசாந்தி (Propitiation) யாகிய இவ் விஷயம் பாமர தெய்வ வணக்கத்தில் மிக்க விசேஷமானது.

கிராம வேததை வணக்கம் என்றும் பாமர ஹிந்து மதம் என்றும் யாம் கூறிய இம்மதத்தை அநேகர் ஹிந்து மார்க்கத்தின் ஓர் அம்சமாக ஒப்புக்கொள்ளார். இது ஹிந்து மதத்தின் ஓர் அம்சம் அல்ல என்பது அவர்கள் துணிவு.

கருணாகரக் கடவுளாகிய சர்வேஸ்வரன் இப்பாமர தெய்வங்களைப்போன்ற துஷ்ட தேவதை அல்லர் என்று தாயுமானவர் பாடிய பாசுரம் இங்கு நோக்கத்தக்கது.

துள்ளுமறி யாமனது பலிகொடுத்தேன் கர்ம
துஷ்டதே வதைகள் இல்லை
துரியம்நிறை சாந்ததே வதையாம் உனக்கே
தொழும்பன் அன்பு அபிஷேகம் நீர்
உள்ளுறையில் என்னுவி நைவேத்தி யம்பிராணன்
ஓங்குமதி தூப தீபம்
ஒருகாலம் அன்று இது சதாகால பூஜையாய்
ஒப்புவித்தேன் கருணை கூர்
தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்ததே னேசீ னியே
திவ்யரசம் யாவும் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே
கள்ளனறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்ல உறவே
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

வேதாந்த சித்தானுஷ்டிகளான ஹிந்துக்கள் பாமர தெய்வ வணக்கத்தை மிகத் தாழ்வாகவே நினைக்கின்றார்கள் என்பது இதனால் தெளிவாகின்றது.

## முடிவுரை

மேலே நாம் கூறிய வேதாந்த ஹிந்தும[illegible] தாந்த ஹிந்துமதம் பாமர ஹிந்துமதம் என்[illegible] மூன்று வகைகளும் மூன்று வித்தியாசமான[illegible] ளிடத்து நின்று தோன்றியதாகத் தெரிகி[illegible] வேதாந்த ஹிந்துமதம் ஆரியரிடத்தினின்றும் சி[illegible] ஹிந்துமதம் திராவிடர் முதலிய பண்டைய [illegible] பெற்றிருந்த ஜாதிகளிடத்தினின்றும் பாமர [illegible] மதம் பூர்வ அநாகரீக ஜாதிகளிடத்தினின்றும் [illegible] யிருப்பதாகச் சரித்திராசிரியர்கள் உரைக்கி[illegible] தற்காலத்தில் ஹிந்துமதம் என்று நாம் சொல்[illegible] பூது நமது மனதிலுள்ள கருத்து இம்மூன்றின[illegible] கையே.

ஹிந்துமத தத்வ ஸாரம் என்னும் பெயா[illegible] இரண்டாம் பாகத்தில் சொல்லியிருக்கிற வி[illegible] வெகு சுருக்கமாக, ஓர் விஷய சூசிகைபோன்று [illegible] பட்டிருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் பெ[illegible] யம். விவரிக்கப்புகின் மிகப் பெருகுமாதலின் [illegible] விபரியாது விடுத்தனம்.

காயிலே உதிர்ந்தகனி சருகுபுனல் மண்டிய
    கடும்பசி தனக் கடைத்தும்,
கார்வரையின் முழையில் கருங்கல்போல் அசையாது
    கண்மூடி நெடிதிருந்தும்,
தீயினிடை வைகியும், தோயமதில் மூழ்கியும்,
    தேகங்கள் என்பெலும்பாய்
தெரியநின் றும்சென்னி மயிர்கள்கூடாக் குருவி
    தெற்ற வெயிலூ டிருந்தும்,
வாயுவை அடக்கியும், மனதினை அடக்கியும்,
    மவுனத்திலே இருந்தும்,
மதிமண் டலத்திலே கனல்செல்ல அமுதுண்டு
    வனமூ டிருந்தும், அறிஞர்
ஆயுமறை முடிவான அருள்நாடினர்! அடிமை
    அகிலத்தை நாடல் முறையோ!
அண்ட பகிரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
    ஆனந்தமான பரமே.

DIOCESAN PRESS, MADRAS—1934. B 44